# ZION

# INTERNATIONAL SEMINARY

MATURE AND SERVE

## B.Th., & M.Div.,

## நவீனகால தவறான உபதேசங்கள்

V Semester

ziontheology@gmail.com 9994172553

# ZION

# INTERNATIONAL SEMINARY

MATURE AND SERVE

# B.Th., & M.Div.,

## ஆய்வுக் கட்டுரைகள்

## நவீனகால தவறான உபதேசங்கள்

1. "தவறான உபதேசங்கள் உருவாகும் விதங்கள் மற்றும், தவறான உபதேசங்களை உபதேசித்த பரிசுத்தவான்கள்" என்கிற தலைப்புகளின் அடிப்படையில் நான்கு பக்கங்களுக்கு மிகாமல் ஆய்வு கட்டுரை எழுதுக.

2. "யெகோவா சாட்சிகளின் தோற்றம் & வேத கைப்பிரதிகழகம் தோற்றுவிக்கப்படுதல் மற்றும் யெகோவா சாட்சிகளின் முக்கிய கொள்கைகள்" என்கிற தலைப்புகளின் அடிப்படையில் நான்கு பக்கங்களுக்கு மிகாமல் ஆய்வுக்கட்டுரை எழுதுக.

# நவீனகால தவறான உபதேசங்கள்

## பாடம் - 1

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகளே உங்கள் அனைவருக்கும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த பாடத்திலிருந்து நாம் நவீனகால தவறான உபதேசங்கள் என்கிற தலைப்பில் பாடங்களை கற்றுக்கொள்ளப்போகிறோம்.

வேத வசனத்திற்கு முரண்பாடான ஒரு காரியத்தையோ, வேதத்தில் இல்லாத ஒரு கருத்தையோ போதிக்கும்போது, அது தவறான உபதேசமாகிவிடும். தவறான உபதேசங்கள் மூலம் தேவனையும், அவருடைய சபையையும் சாத்தான் தாக்குகிற இன்னொரு பகுதியாக இருக்கிறது. சாத்தான் பலவிதங்களில் சபையை தாக்குவதற்கு முயற்சிக்கிறான். அதில் ஒன்றுதான் இந்த தவறான உபதேசங்கள். தவறான உபதேசங்கள் எப்படி உருவாகிறது என்ற கேள்விக்கு நாம் எளிதில் பதிலளித்துவிட முடியாது என்ற போதிலும், இதைக்குறித்த சரியான வேத மற்றும் இறையியல் அறிவினை நாம் பெற்றுக்கொள்வது மிகவும் அவசியமாகும். புதிய ஏற்பாட்டு சபையின் ஆரம்பகாலம் முதல் தவறான உபதேசங்கள் சபைக்குள் நுழைந்துவிட்டன. இன்னும் சொல்லப்போனால், அப்போஸ்தலர்கள் காலம் முடிவதற்கு முன்பே தவறான உபதேசங்கள் முளைத்துவிட்டன. விதை விதைக்கும் எல்லா இடங்களிலும், களைகளும் முளைக்கும் என்று சொல்வார்கள். வாழ்நாள் முழுவதும் சபைகளுக்கு சென்றாலும் எது சரியான உபதேசம் என்று விளங்காத விசுவாசிகள் கூட்டம் ஏராளம் இருப்பதை நாம் காணமுடியும். வேத வசனங்களை தெளிவாக தெரிந்த, புரிந்துகொண்டிருக்கிற ஒருவர் உபதேசங்களை எளிதாக புரிந்துகொள்ள வாய்ப்பிருக்கிறது. வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்திலும்கூட, துர்உபதேசங்கள் சபைகளில் இருப்பதை ஆண்டவர் சுட்டிக்காட்டுவதை நாம் காணமுடியும். கிறிஸ்துவின் சரீரமாகிய சபையிலுள்ள ஒவ்வொரு ஆவிக்குரிய விசுவாசிகளும் வேதவசன தெளிவுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

இதிலே இன்னொரு அதிர்ச்சியான காரியத்தையும் நாம் புரிந்துகொள்ள வேண்டியது அவசியமாய் உள்ளது. நல்லவர்களும் தவறாய் போதிக்கும் ஆபத்துக்கள் உண்டு. தேவனால் வல்லமையாய் பயன்படுத்தப்படும் போதகர்களும் தவறாய் போதிக்கும் ஆபத்துக்கள் உண்டு. ஒருவர்மூலம் அற்புத அடையாளங்கள் நடைபெறும்போது, அவர் போதனை யாவும் சரி என்று மக்கள் எளிதில் நம்பிவிடுகின்றனர். இது இப்போது வழக்கமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. தவறான போதனை எவரிடமிருந்தும் வரலாம் என்பது சற்று அதிர்ச்சியளிக்ககூடிய கசப்பான ஒரு உண்மைதான். ஆனபடியால் எல்லோருமே தவறான போதனையைத்தான் செய்கிறார்கள் என்று தவறாய் எண்ணிவிடவும்

கூடாது. எவரும் தவறுசெய்ய முடியுமென்ற ஆபத்து உள்ளது என்பதையே இங்கே வலியுறுத்த விரும்புகிறோம்.

பிரியமானவர்களே, தீர்க்கதரிசனம், வெளிப்பாடு போன்ற ஆவியின் வரங்கள் கிரியை செய்யும் ஊழியராக இருந்தால், அவர் சொல்வதெல்லாம் சரியென்று நம்புவதற்கு ஏராளமான மக்கள் இருக்கிறார்கள். பொதுவாக அற்புதங்கள் அடையாளங்கள் ஆவிக்குரியவர்களின் கண்களை மங்கச்செய்து நிதானிப்பை மழுங்கச் செய்கின்றன என்பது உண்மை. சபை சரித்திரத்திலிருந்தும், இன்றைய அனுபவங்களிலிருந்தும் இதை தெளிவாக அறியலாம். ஒருவர் தேவனுக்கு தன்னை ஒப்புக்கொடுத்து, தேவசமூகத்தில் காத்திருந்து ஜெபிக்கும்போது, தேவன் அவரை கிருபையாக பயன்படுத்த ஆரம்பிக்கிறார். அவருக்கிருக்கிற திறமைகளின் நிமித்தமாகவோ அல்லது அவர் அதிக வசனம் தெரிந்தவர் என்பதினாலோ அல்ல, கிருபையினால் மாத்திரமே தேவன் ஒருவரை பயன்படுத்துகிறார். மேலும் வஞ்சிக்கப்பட்ட ஒரு கூட்ட மக்கள் இப்போதும் தவறான போதனைகளில் மயங்கி மற்றவர்களையும் வஞ்சிக்கும்படி காத்துக்கொண்டிருக்கின்றனர். இப்படியானவர்களிடமிருந்து சபையை பாதுகாத்துக்கொள்ள வேண்டியது இன்றியமையாதது.

**<u>தவறான உபதேசங்களை போதித்த சில பரிசுத்தவான்கள்:</u>**

1. **எபியோனைட்ஸ் (2-ம் நூற்றாண்டு)**

கிறிஸ்தவர்கள் யூத நியாயப்பிரமாணத்தையும் கைக்கொள்ள வேண்டும் என்று யூத கிறிஸ்தவர்கள் சிலர் போதித்தனர். இயேசுகிறிஸ்து தெய்வீகமானவரல்ல, அவர் ஞானஸ்நானம் பெற்று பரிசுத்த ஆவியானவர் இறங்கினபோது, இயற்கைக்கு மேற்ப்பட்ட வல்லமையை பெற்றார், அவ்வளவே என்று போதித்தார் இந்த எபியோனைட்ஸ் என்பவர்.

2. **ஏரியனிசம் (கி.பி. 2 மற்றும் 3-ம் நூற்றாண்டு)**

ஏரியஸ் அலெக்ஸாண்டிரியாவில் சபை தலைவராக இருந்தவர். கிறிஸ்து, பிதாவுக்கு கீழானவர். கிறிஸ்து நித்தியமானவர், அவருக்கு ஆரம்பம் உண்டு. முதலாவது இயேசு சிருஷ்டிக்கப்பட்டார். அவர் மூலம் மற்றவைகள் சிருஷ்டிக்கப்பட்டன. இயேசுவுக்கு முடிவு உண்டு என்று போதித்தார். இந்த போதனையை எதிர்த்தவர் அத்தேனேசியஸ் ஆவார். இவருடைய விசுவாச பிரமாணம் தென்னிந்திய திருச்சபையின் ஜெப புத்தகத்தில் இருப்பதை நாம் காண முடியும்.

3. **அப்பொல்லோனியஸம்**

அப்பொல்லோனியஸ் என்பவர் லவோதிக்கேயா சபையின் பிஷப்பாக இருந்தவர். இயேசு மனிதத்தன்மையுடன் பிறக்கவில்லை, மனித உருவில் வந்தார் என்று போதித்தார். இயேசுவிலிருந்த மனுஷீகத்தை மறுதலித்தார்.

### 4. நெஸ்டோரியனியஸிம்

இயேசு என்ற மனிதனில் லோகோஸ் என்ற தெய்வீகம் இணைந்தது என்று போதித்தார். கிறிஸ்துவின் தெய்வீகத்தை இவர் மறுதலித்தார்.

### 5. பெலேஜியனிஸம்

பெலேஜியன் என்பவர் ஒரு துறவறம் கொண்ட போதகர். மனிதன் ஆதாமிடமிருந்து பாவ சுபாவத்தை பெறவில்லை. ஒவ்வொரு மனிதனும் புது ஆத்துமாவாய் சிருஷ்டிக்கப்படுவதால் ஆதாமின் பாவத்துடன் தொடர்புடையவர் அல்ல. மனிதன் ஜென்ம பாவம் உடையவனல்ல, அவன் கர்ம பாவம் மட்டும் உடையவன் என்று போதித்தார். இதை எதிர்த்தவர் புகழ்பெற்ற வேத பண்டிதர் அகஸ்டின் ஆவார்.

### 6. யூடிசியன்ஸ்

கிறிஸ்து முற்றிலும் தெய்வீகமானவர், அவருடைய சரீரமும் தெய்வீகமானது என்று யூடிசஸ் போதித்தார். இவர் இயேசுகிறிஸ்துவின் மனுஷீகத்தை மறுதலித்தார்.

### 7. நாஸ்டிசிஸம் (ஞானவாத கொள்கை)

இதில் மூன்று பிரிவினர் காணப்பட்டனர்.

1) இயேசு மனிதர்போல் தோற்றமளித்தார், ஆனால் மனிதனல்ல.
2) இயேசுவின் சரீரம் சாதாரண மனித சரீரமல்ல.
3) இயேசு மனிதர் - கிறிஸ்து ஆவியானவர். இயேசு ஞானஸ்நானம் பெற்றபோது, அவர்மேல் கிறிஸ்து இறங்கினார். இயேசு சிலுவையில் அறையப்பட்டபோது, கிறிஸ்து மறைந்து போனார்.

மேற்கூறிய உபதேசங்களில் ஒருவேளை சில உங்களுக்கே தவறாக தெரியாமலிருக்கலாம். ஆனால் இவை பிழையான போதனைகள். இவைகளைப் போதித்தவர்கள் பரிசுத்தவான்கள்தான். ஆனால் அவர்கள் வேத வசனங்களை சரியாக ஆராயாமல் தங்கள் கருத்துக்களை உபதேசங்களாக போதித்தனர். இவர்கள், அவர்கள் வாழ்ந்த நாட்களிலேயே கடிந்துகொள்ளப்பட்டனர். சிலர் சபைக்கு புறம்பாக்கப்பட்டனர். வேத வசனங்களை முழுவதும் தெளிவாக அறிந்துகொள்ளாத பரிசுத்தவான்களும் உண்டு என்பதை இது காட்டுகிறது.

தவறான உபதேசங்கள் எப்படி உருவாகின்றன? என்பதை நாம் தொடர்ந்து பார்ப்போம். ஐந்து காரியங்களைப் பற்றி நாம் விரிவாக கற்றுக்கொள்வோம்.

### 1. வேதவசனங்களை தவறாக புரிந்துகொண்டு அதற்கேற்ப உபதேசித்தல்

நான் பிடித்த முயலுக்கு 3 கால்கள்தான் என்று வாதம் செய்பவர்களை பார்த்திருக்கிறீர்களா? இவர்களும் அப்படிப்பட்டவர்கள்தான். வேதவசனத்தின் உண்மையான பொருளை விளங்கிக்கொள்ளாமல், இவர்களின் மனதில், சிந்தையில் உதிப்பது எதுவோ, அதையே உபதேசமாக்குகின்றனர். தமது மூளை அறிவைக்கொண்டு உபதேசத்தை போதிக்கின்றனர். இப்படிப்பட்ட தவறான புரிந்துகொள்ளுதலுக்கு பல உதாரணங்களை நாம் வேதாகமத்திலிருந்தும், சரித்திரத்திலிருந்தும் உதாரணமாக கூறலாம். உதாரணமாக, பவுலின் மனைவி சீலா என்றும், பவுலும், சீலாவும் சிறைச்சாலையிலிருந்தபோது, பிறந்தவன்தான் ஒநேசிமு என்றும் போதிப்பவர்கள் பலருண்டு. ஏனெனில் பிலேமோன் 1:1-ல் நான் கட்டப்பட்டிருக்கையில் நான் பெற்ற மகனாகிய ஒநேசிமு என்று பவுல் குறிப்பிடுகிறார். பவுல் என் குமாரனாகிய தீமோத்தேயு என்று பலமுறை குறிப்பிடுகிறார். எனவே தீமோத்தேயு பவுலின் மகன் என்று போதிக்கிறவர்கள் உண்டு. சீலா ஆண் என்பதும், பவுலின் உடன் ஊழியன் என்பதும், ஒநேசிமு, தீமோத்தேயு ஆகியோர் பவுலின் மூலம் கிறிஸ்துவுக்குள் வந்த ஆவிக்குரிய பிள்ளைகள் என்பதும் வசனம் தெரிந்தவர்களுக்கு தெரியும்.

அடுத்ததாக அந்திகிறிஸ்து என்பதற்கு சிலர் கூறும் தவறான விளக்கம் என்னவெனில், அந்தி - என்றால், மாலைவேளை. கடைசி காலத்தில் எழும்பும் கிறிஸ்துதான், அந்திகிறிஸ்து என்று போதிப்பவர்கள் உண்டு. ஆங்கிலத்தில் Anti-Christ என்று வருகிறது. இதை அப்படியே தமிழில் அந்திகிறிஸ்து என்று தமிழாக்கம் செய்துள்ளனர். கிறிஸ்துவுக்கு எதிரானவன் என்றுதான் அந்திகிறிஸ்துவுக்கு பொருள். இதுபோல் ஏராளமான உதாரணங்களை கூறலாம். வசனங்களை சரியாய் புரிந்துகொள்ளாவிடில் தவறான போதனைகள் தோன்றும். இப்படிப்பட்ட குழப்பங்கள் தவறான உபதேசங்கள் என்றும், அரசியலில் சர்வசாதாரணமாக நடக்கிறது பிரியமானவர்களே. அவைகளை நாம் ஒருக்காலும் கண்டுகொள்ளவோ, பின்பற்றவோ கூடாது.

### 2. தங்கள் சுயகருத்தை வலியுறுத்த அதற்கேற்ற வசனங்களை எடுத்து உபதேசித்தல்

போதிப்பவர் எப்போதும் வேதாகமத்தின் கருத்தையே வலியுறுத்தி போதிக்க வேண்டும். தன் சொந்த கருத்தை நிலைநிறுத்துவதற்காக ஒருவர் வேதத்தை பயன்படுத்தினால் அது தவறான உபதேசத்தில் அவரை கொண்டுபோய் விட்டுவிடும். பொதுவாக, மேலைநாடுகளில் பாவத்தை, பாவம் என்று கண்டிக்காத புதிய நூதன உபதேசங்கள் பரவி வருகிறது. அங்கே ஒரு போதகர், இப்படியாக சொன்னார், ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து அனைத்து பாவங்களுக்காகவும் மரித்துவிட்டார். அதாவது நாம் செய்த, செய்துகொண்டிருக்கிற, செய்யப்போகிற பாவங்கள் எல்லாவற்றிற்காகவும் அவர் சிலுவையில் கிரையம் செலுத்திவிட்டார். ஆகவே நாம் நம் இஷ்டப்படி வாழலாம்,

பாவத்தை அறிக்கை செய்ய வேண்டிய அவசியமில்லை என போதனை செய்தார். இந்த காரியத்தைக் குறித்து நாம் வருகிற பாடங்களிலே விரிவாக கற்றுக்கொள்ள இருக்கிறோம். இன்னும் ஒருசில உதாரணங்களையும் உங்கள் முன்பாக வைக்க விரும்புகிறோம். உதாரணமாக, குடும்ப வாழ்க்கை தாம்பத்திய உறவு தவறு என்ற கருத்தை உடையவர்கள், ஆதாம், ஏவாள் நன்மை, தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை புசித்தது என்பது உடலுறவு கொண்டதைத்தான் குறிக்கிறது என போதிக்கின்றனர்.

நீங்கள் பலுகிப்பெருகி பூமியை நிரப்புங்கள் என்று தேவன் அவர்களை ஆசீர்வதித்ததாக ஆதி.1:28-ல் கூறப்பட்டுள்ளதே. எனவே தாம்பத்திய உறவை அதாவது, கணவன் மனைவிக்குள் தேவன் அங்கீகரித்தார் என்பது அவர்கள் கண்களுக்கு மறைக்கப்பட்டுள்ளது. பறித்தாள், புசித்தாள், புருஷனுக்கும் கொடுத்தாள் என்று கூறப்பட்டுள்ளதே. அதற்கும், பாலுறவுக்கும் என்ன சம்பந்தம்? இதைப்போலவே சபை ஆராதனைகளில் கலந்துகொள்ள வேண்டாம் என்ற கருத்துள்ளவர்கள் 1 யோவான் 2:27-ல் 'ஒருவரும் உங்களுக்கு போதிக்கவேண்டியதில்லை. அந்த அபிஷேகம் சகலத்தையும் குறித்து உங்களுக்கு போதிக்கிறது என்ற வசனத்தை மேற்க்கோள் காட்டி, ஆட்களை திசைதிருப்புகிறார்கள். வானத்தையும், பூமியையும் உண்டாக்கின இயேசுகிறிஸ்துவே, அபிஷேக நாதரே வாரந்தோறும் தவறாமல் ஜெப ஆலயத்திற்கு போனார் என்று வேதம் கூறுகிறது. எபிரெய ஆக்கியோனும், எபி.10:25-ல் 'சபை கூடிவருதலை சிலர் விட்டுவிடுகிறதுபோல, நாமும் விட்டுவிடாமல் ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்' என்று சொல்லுகிறார். ஆவியின் அபிஷேகம் பெற்றவர் ஒருவரும் சொல்லாமலேயே ஒழுங்காக ஆராதனைக்கு போவார்கள், அவர்கள் பெற்ற அபிஷேகம் சரியாக இருந்தால், அது ஆராதனைக்கு போகத்தான் போதிக்குமேயொழிய, போகாதே என்று போதிக்காது. உண்மை, கிறிஸ்தவனாய் இருக்கிற ஒருவரால், ஆராதனைக்கு போகாமலிருக்க முடியாது பிரியமானவர்களே.

### 3. ஒரு வசனத்தை மட்டும் எடுத்து ஒரு உபதேசத்தை உறுதிப்படுத்த முயற்சிப்பது

இதற்கும் பல உதாரணங்களை வேதத்திலிருந்தே நாம் சொல்ல முடியும். உதாரணமாக, ஆதி.41:44-ல் 'பார்வோன் யோசேப்பை நோக்கி எகிப்திலுள்ளவர்களில் ஒருவனும் உன் உத்தரவில்லாமல், தன் கையையாவது, காலையாவது ஆட்டக்கூடாது என்றான்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதை அப்படியே எடுத்துக்கொள்ள முடியுமா? முடியாதே. ஸ்திரீயை தொடாமலிருக்கிறது மனுஷனுக்கு நல்லது என்று 1 கொரி.7:1-ல் கூறப்பட்டிருக்கிற வசனத்தை எடுத்துக்கொண்டு, திருமணம் கூடாது என்று போதிப்பது அதிக ஆக்கினையை அடைவோம் என்று அறிந்து, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக என்று தவறாய் போதிப்பது. யாக்கோபு 3:1-ல் இந்த கருத்து சொல்லப்பட்டிருக்கிறது.

அதைப்போல லூக்கா 16:8-ல் 'அநீதியுள்ள உக்கிராணக்காரனை எஜமான் மெச்சிக்கொண்டான்' என்று எழுதப்பட்டிருப்பதை வாசித்துவிட்டு, அநீதி செய்வது நல்லது என்று எடுக்க முடியுமா? இதுபோன்ற நூற்றுக்கணக்கான வசனங்களை கூறலாம். இப்படி ஒரு வசனத்தை எடுத்துக்கொண்டு அதை உபதேசமாக்க கூடாது. வேத வசனங்களின் அடிப்படை போதனையை கவனிக்க வேண்டும் பிரியமானவர்களே.

### 4. சொப்பனங்கள், தீர்க்கதரிசனங்கள், வெளிப்பாடுகளை தங்கள் உபதேசங்களுக்கு அடித்தளமாக்குதல்

பரிசுத்த வேதாகமமே எந்த கிறிஸ்தவ உபதேசத்துக்கும் அடிப்படையாக இருக்க வேண்டும். மாறாக தாங்கள் கண்ட சொப்பனங்கள், தரிசனங்கள், வெளிப்பாடுகளின் அடிப்படையில் வேதாகமத்திற்கு புதிய விளக்கம் கொடுக்க முயல்வது என்றுமே ஆபத்தானது ஆகும், அது தீமையை விளைவிக்கும். தேவன் மனிதனுக்கு சொல்லவேண்டிய நற்செய்தியை ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் சொல்லிவிட்டார். பரிசுத்த ஆவியானவர் பல ஆவிக்குரிய இரகசியங்களை நிரூபங்களில் எழுதியுள்ளார். இதற்கு மாறாக, கர்த்தர் எனக்கு புதிதாக வெளிப்படுத்தினார் என்று யாராவது கூறினால், அது வேதத்திற்கு ஒத்திருக்கிறதா? என்று ஒப்பிட்டு பார்ப்பதுதான் நாம் செய்யவேண்டிய முதலாவது வேலை. தேவன் ஒருபோதும் மாறாதவர். அவர், தாம் எழுதிக்கொடுத்த வேதாகமத்திலிருப்பதற்கு மாறாக எதையும் கூறுவது இல்லை. தேவ வார்த்தைகள் என்றுமே மாறாதவைகள். ஒருவேளை சிலர் வாழ்க்கையில் சில காரியங்களை செய்யும்படி கர்த்தர் கூறலாம். அது அவர்களுக்கும், தேவனுக்குமிடையே உள்ள காரியம், அதையே உபதேசங்களாக்க கூடாது.

ஒரு சகோதரன் தன் தலைமுடியை அதிக நேரமெடுத்து அலங்காரம் செய்வாராம். ஒருநாள் கர்த்தர் அவரை மொட்டையடிக்க சொன்னாராம். அவர் மொட்டையடித்து விட்டார். அவர் சுவிசேஷ வேலை செய்து வந்தார். அது அவருக்குள்ள தனிப்பட்ட பிரச்சனை. இதையே உபதேசமாக்கி எல்லோரையும் மொட்டையடிக்க சொல்லி, உபதேசிக்க முடியாது. தங்கள் நகைகளை கழற்றினால், கர்த்தர் தங்களை பரிசுத்த ஆவியினால் நிரப்புவதாக சொன்னதாகவும், அதன்படி நகைகளை கழற்றினபோது, கர்த்தர் தங்களை அபிஷேகித்ததாக சிலர் சொல்ல கேட்டிருக்கிறேன். இதுவும் ஒருவரின் தனிப்பட்ட காரியம். நகைகள் அணிந்திருக்கிற எத்தனையோ பெண்களையும் கர்த்தர் பரிசுத்த ஆவியினால் நிரப்பியுள்ளாரே. எனவே தனிப்பட்ட சிலருக்கு கொடுக்கப்பட்ட சொப்பனங்கள், வெளிப்பாடுகளை எல்லோருக்கும் பொதுவான உபதேசங்களாக்க கூடாது. இதில் நாம் கவனமாய் இருக்க வேண்டும்.

### 5. தனிப்பட்டவர்களின் அனுபவங்களை வேத உபதேசம்போல போதித்தல்

தேவன் சிலரை ஒருசில குறிப்பிட்ட அனுபவங்கள் மூலமாக நடத்துகிறார். அதற்காக அவர்கள் அதையே உபதேசமாக்கிவிட முடியாது. வழிச்செலவுக்கு பணத்தை எடுத்துச்செல்ல வேண்டாம் என்று இயேசு சீஷர்களிடம் கூறினார். அவர்கள் இஸ்ரவேல் மக்களிடம் போனதால் அவர்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படும் என்று சொன்னார். இதையே பொது உபதேசமாக எடுத்துக்கொண்டு, பேருந்து மற்றும் இரயில் பிரயாணத்திற்கு பணம் எடுத்துக்கொண்டு போகாமல் வண்டி ஏறினால், விளைவுகளை சந்திக்க வேண்டியது ஏற்படும். பேதுரு தண்ணீரில் விசுவாசத்துடன் நடந்தான், நாமும் நடப்போம் என்று கொரியா தேசத்தில் பெருக்கெடுத்து ஓடின ஆற்றை கடக்க முயன்ற பல பெண்கள் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டு உயிரிழந்தனர் என்பதை கேள்விப்பட்டிருக்கிறோம். மாற்கு *16:18*-ன்படி சர்ப்பங்களை எடுப்பீர்கள், சாவுக்கேதுவான யாதொன்றை குடித்தாலும் அது அவர்களை சேதப்படுத்தாது என்ற வசனத்தை வைத்து, பாம்பை பிடித்து கடிபட்டவர்கள் விஷத்தை அருந்தி, மரித்து போனவர்களையும் கேள்விப்பட்டிருப்பீர்கள். எனவே ஒருவரின் தனிப்பட்ட அனுபவத்தை வைத்து உபதேசமாகக்க முடியாது பிரியமானவர்களே. அது ஆபத்தில் போய் முடிந்துவிடவும் வாய்ப்பிருக்கிறது.

பிரியமானவர்களே, நாம் இதுவரையிலும் கற்றுக்கொண்ட எல்லாவற்றையும் வேத வசனங்களுடன் ஒப்பிட்டு பாருங்கள். வேத வசனங்களுக்கு புறம்பாக நானோ அல்லது பரலோகத்திலிருந்து வரும் தேவதூதனோ சொன்னாலும் ஏற்றுக்கொள்ளாதிருங்கள். நீங்கள் கேட்கும் போதனைகளை வேதத்தின் அடிப்படை உபதேசங்களுடன் ஒப்பிட்டு சரியானவைதானா? என்பதை உறுதிசெய்துகொள்ளுங்கள். ஒருவேளை தேவனால் பயன்படுத்தப்படும் தேவ ஊழியராய் இருந்தாலும் நீங்கள் உங்கள் உபதேசத்தை குறித்து எச்சரிப்பாய் இருங்கள். நீங்கள் சரியாக விளங்கிக்கொள்ளாமல் உபதேசிக்கிறதின் மூலம் ஆயிரக்கணக்கானோர் தவறான உபதேசத்தில் வழிநடத்தப்படுவார்கள் என்பதை மனதில் வைத்துக்கொள்ளுங்கள். உங்கள் சொந்த கருத்து வித்தியாசமாக இருக்கலாம், அது உபதேசமாகது, உங்கள் விசுவாசம் வேறுபட்டதாக இருக்கலாம், அது உங்கள் தனிப்பட்ட காரியம், அதை உபதேசமாக்காதிருங்கள். எல்லோரும் வேத வசனத்தை எடுத்துதான் போதிக்கிறார்கள். அந்த வசனத்தை அவர்கள் எப்படி விளங்கிக்கொண்டார்கள் என்பதை பொறுத்தே அவர்களின் போதனை இருக்கும். வேதத்தை அறிந்த மனிதன் எல்லாவற்றையும் நிதானித்து அறிந்து செயல்படுவான். தேவனைப் பற்றிய சரியான அறிவும் வேதாகம அடிப்படை அறிவும் இருந்தால் நாம் எத்தகைய உபதேசங்களையும் இனங்கண்டுகொள்ள முடியும் பிரியமானவர்களே.

இந்த பாடத்தில் நாம் தவறான உபதேசங்கள் எப்படி உருவாகின்றன என்பதை கற்றோம். கர்த்தர்தாமே உங்களை அபரிவிதமாக ஆசீர்வதிப்பாராக! ஆமென்!!

## கேள்விகள்

1) தவறான உபதேசம் என்பது யாது?
2) தவறான உபதேசங்கள் ஏற்படுத்துவதற்கான காரணங்களை சற்று விளக்கமாக கூறுக?
3) தவறான உபதேசங்களை போதித்த ஏழு பேர்களை குறித்தும், அவர்கள் போதித்த தவறான உபதேசங்கள் குறித்தும் விளக்கமாக கூறுக?
4) தவறான உபதேசங்கள் உருவாகுவதற்கான வேதாகம உதாரணங்களை விளக்கமாக கூறுக?
5) வசனங்களை விளக்கப்படுத்தலில் உள்ள மூன்று வகைகளை கூறுக?
6) கள்ள உபதேசங்களுக்கு எவ்வாறெல்லாம் கவனமாக இருக்க வேண்டும் என்பதனை குறித்து வசன ஆதாரங்களுடன் விளக்கமாக கூறுக?

# நவீனகால தவறான உபதேசங்கள்

## பாடம் - 2

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகளே உங்கள் அனைவருக்கும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். நாம் இந்த பாடத்தில் துர்உபதேசங்களின் தன்மைகள் என்பது பற்றி சற்று விரிவாக கற்றுக்கொள்வோம்.

**துர்உபதேசங்களின் தன்மைகள்:**

தேவசத்தியத்தை தலைகீழாக மாற்றும் பயங்கரமான ஒரு காலகட்டத்தில் கிறிஸ்தவர்கள் வாழ்கிறார்கள். அமெரிக்க ஐக்கிய நாட்டிலிருந்தும் மற்ற உலக நாடுகளிலிருந்தும் வேகமாய் பரவிவரும் துர்வசனக் கூட்டங்களை ஒவ்வொரு கிறிஸ்தவனும் தெரிந்து கொள்ளாது போனால் ஆபத்து பயங்கரமாய் இருக்கும். இக்கடைசி நாட்களில் சபை மக்கள் தங்களைத் தெளிவுபடுத்திக்கொண்டு விழிப்பாயிருப்பது மிக அவசியம்.

### 1. வேறே சுவிசேஷம் (Different Gospel)

துர்வசனக் கூட்டத்தார் பொதுவாகவே அடிப்படை வசனத்திலிருந்து விலகி வேதத்தை பிரசங்கிப்பவர்கள். இவர்களின் செய்திகளில் 'வேறே சுவிசேஷம்' காணப்படுகிறது. இதைப் பவுல் கலாத்தியருக்கு எழுதும்போது கூறியிருக்கின்றான்.

'உங்களைக் கிறிஸ்துவின் கிருபையினாலே அழைத்தவரை நீங்கள் இவ்வளவு சீக்கிரமாய் விட்டு, வேறொரு சுவிசேஷத்திற்கு திரும்புகிறதைப்பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன். வேறொரு சுவிசேஷம் இல்லையே, சிலர் உங்களைக் கலகப்படுத்தி, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்களேயல்லாமல் வேறல்ல. நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்' (கலா.1:6-8).

பவுல் கலாத்தியருக்கு எழுதின கடிதம் கி.பி.55-க்கும் 56-க்குமிடையேயுள்ள ஆண்டுகளில் எழுதப்பட்டது. அப்படியானால் முதல் நூற்றாண்டின் மையப் பகுதியிலேயே வேறொரு சுவிசேஷம் சபைக்குள் வந்து விட்டது. அப்போஸ்தலரால் சொல்லப்பட்ட சுவிசேஷமேயன்றி வேறே சுவிசேஷம் இல்லை. அப்படியொரு சுவிசேஷத்தை வானத்திலிருந்து ஒரு தூதன் வந்து சொன்னாலும் அவன் சபிக்கப்பட்டவன் என்றான் பவுல்.

துர்உபதேசக்கூட்டம், மக்களைக் களங்கப்படுத்தி அவர்கள் மனதைக் கெடுத்தும் குழப்பியும் தங்கள் பக்கம் இழுக்கும்போது, கிருபையைவிட்டு விலகுகிறவர்கள் அந்தக்

கூட்டங்களோடு சேர்ந்துவிடுகின்றனர். எனவே பவுல் 'நான் போன பின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளை போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன்' என்று சொன்னான் *(அப்.20:29-30)*. அவர்கள் சீஷர்களை இழுத்துக்கொள்ள மாறுபாடானவைகளை போதிப்பார்கள். என்ன போதிப்பார்கள்? வேறே சுவிசேஷத்தை போதிப்பார்கள்.

சுவிசேஷம் என்பது எது? தேவகுமாரனான இயேசு கிறிஸ்துவின் கன்னிப்பிறப்பு, அவரது அற்புதமான ஊழியம், அவரது சிலுவை மரணம், அவரின் வல்லமையான உயிர்த்தெழுதல், அவரின் இரண்டாம் வருகை, அவரோடு பரலோகத்தில் நித்திய வாழ்வு இவைகள் அனைத்தும் அடங்கியதே சுவிசேஷம் என்றழைக்கப்படுகின்றது. ஆனால் இந்த வேறே சுவிசேஷம் என்பது என்ன? சரியான சுவிசேஷத்தில் வரும் மூல உபதேசங்களை மாற்றி திரித்து, வேறுபடுத்தி இயேசுவோடு சம்பந்தப்படுத்திக் கூறுவதே வேறே சுவிசேஷம்.

இன்றும் உலகில் கன்னிப்பிறப்பை மறுதலிக்கும் கிறிஸ்தவர்களுக்கும் உயிர்த்தெழுதலை விசுவாசியாத கல்விமான்களும் இருக்கிறார்கள். இவர்களெல்லாம் அந்த வேறே சுவிசேஷத்திற்கு செவிசாய்ப்பவர்கள். கன்னிப்பிறப்பே சுவிசேஷத்தின் வேர். இதையும் அடியோடு மறுதலிப்பவர்கள் வேறே சுவிசேஷக் கூட்டத்தார். அவர்களின் துர்உபதேச இயக்கங்களும் இதை வெகுவாக மறுதலிக்கின்றன.

## 2. வேறே இயேசு (Different Jesus)

பவுல் கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் கடிதத்தில் இவைகளைத் தெளிவாக்குகிறான் 'எப்படியெனில் உங்களிடத்தில் வருகிறவன் நாங்கள் பிரசங்கியாத வேறொரு இயேசுவைப் பிரசங்கித்தானானால், அல்லது நீங்கள் பெற்றிராத வேறொரு ஆவியையும், நீங்கள் ஏற்றுக்கொள்ளாத வேறொரு சுவிசேஷத்தையும் பெற்றீர்களானால், நன்றாய் சகித்திருப்பீர்களே' *(2 கொரி..11:4)*.

பவுல் கொரிந்து சபைக்கு எழுதிய இரண்டாம் கடிதத்தில், நாங்கள் பிரசங்கியாத வேறொரு இயேசு, நீங்கள் பெற்றிராத வேறே ஆவி, நீங்கள் ஏற்றுக்கொள்ளாத வேறொரு சுவிசேஷம் ஆகிய இம்மூன்றும் துர்உபதேசக் கூட்டத்தினரால் போதிக்கப்படுபவை வேறே இயேசு என்றால் வேதம் கூறும் இயேசுவை வேதப்படி கூறாது வேறு விதமாய் கூறுவதாகும். இயேசு வந்த நோக்கம் முழுவதையும் மாற்றி வேறுவிதமாய் போதிப்பதாகும். இயேசு செய்த ஊழியத்தை வேறு விதமாய் சித்தரிப்பதாகும்.

யெகோவா சாட்சிகள் (Jehovah's Witnesses) கூட்டத்தார் இயேசு தேவனுடைய நித்திய குமாரனல்ல. அவர் தேவனுடைய முதல் சிருஷ்டி பிரதான தூதனான மிகாவேலைப்போல இயேசுவும் ஒருவர் என்கின்றனர். மோர்மன் சபையார் (mormones) இயேசுவைத் தெய்வீகமானவராக ஏற்றுக்கொள்வதில்லை. பல கடவுள்களில் இவரும் ஒருவர். வானலோகத் தகப்பனுக்கும், வானலோகத் தாய்க்கும் பாலுறவு முறையில் உற்பவித்துப் பிறந்த ஆவியின் முதல் குழந்தை இயேசு, லூசிபருக்கு ஆவியின் சகோதரன் என்கின்றனர்.

### 3. வேறே ஆவி (Different Spirit)

உலகத்தில் அநேகங்கள்ளத் தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால் நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்...மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கை பண்ணுகிற எந்த ஆவியும் தேவனால் உண்டாயிருக்கிறது. மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கைபண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல என்று யோவான் தனது முதல் நிருபத்தில் மூல அறிவிப்பாய் கூறியிருக்கின்றான் *(1 யோவான் 4:1-3)*.

இயேசுவை அறிக்கைபண்ணாத வேறே ஆவிகள் உலகத்தில் கிரியை செய்கின்றன. அவைகள் அந்திக்கிறிஸ்துவின் ஆவிகள் என்றே அழைக்கப்படுகின்றன. இவ்வித ஆவிகள் இயேசு கிறிஸ்துவுக்கு விரோதமாக செயல்படுகின்றன. அந்திக்கிறிஸ்துவும் அந்த ஆவியையே பெற்று இயேசு கிறிஸ்துவுக்கு விரோதமாய் செயல்படுவான்.

### 4. புதிய சத்தியம் (New Truth)

அனைத்து கள்ள உபதேச இயக்கங்களும் தங்களுக்கு புது வெளிப்பாட்டைக் கடவுள் கொடுத்தார் என்றே கூறுகின்றன. அந்த உபதேச செய்திகளை தேவனிடமிருந்தும் பிரசித்தி பெற்ற தேவமனிதர்களிடமிருந்தும் பெற்றுக்கொண்டனர் என்றும் சொல்கின்றனர். ஆனால் அந்தச்செய்திகள் மிகவும் மாறுபாடானதாகவும் சந்தேகப்படக்கூடியதாகவும் சிந்தித்துப் பார்த்தால் நாம் கிரகிக்கக்கூடாத அளவு விகற்பானதாகவும் இருக்கின்றன.

சன் மங் மூன் என்பவர் மூனிஸ் என்னும் இயக்கத்தின் ஸ்தாபகர். 'கிறிஸ்துவும் கிறிஸ்துவின் கூட்டத்தைச் சார்ந்தவர்களும் தங்களுடைய சேவைகளை முற்றும் முடிய செய்யாது பாதியிலேயே விட்டுச் சென்று விட்டார்கள். இயேசு விட்டுச் சென்ற சேவையை செய்து முடிக்கும் பொறுப்பு தங்களிம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்று மூன் கூறினார். ஒற்றுமைப்படுத்தும் சபை (Unification Church) என்னும் அந்தக்கூட்டத்தைச் சேர்ந்தவர்கள்,

கடவுள் இதற்கு முன் வெளிப்படுத்தாத உண்மைகளையும், ஆழ்ந்த சத்தியத்தையும், போதகர் மூன் வெளிப்படுத்தினார் என்று கூறுகின்றனர்.

'இயேசுவின் இருதயத்தையும் இயேசுவின் வேதனையையும் இயேசுவின் நம்பிக்கையையும் எங்களால் மாத்திரமே அறிந்து புரிந்துகொள்ள முடியும்' என்று மூன் கூறியிருக்கிறார்.

இவ்வித இயக்கங்கள் எல்லாம் வேத அடிப்படையும் ஒழுங்கும் கிரமமுமின்றி, அவ்வப்போது புதிய சத்தியங்களை வெளிப்படுத்திக் கொண்டேயிருக்கின்றன. அவர்களது சொந்தக் கருத்துக்களும் சுய வெளிப்பாடுகளும் வசன ஆதாரமற்று பிரசங்கிக்கப்படுகின்றன. கற்பனையான வெளிப்பாடுகளை வசனத்தோடு ஒப்பிட்டு தங்கள் இயக்கக் கொள்கைகளாக இவர்கள் வெளியிடுகிறார்கள்.

### *5. தவறான வியாக்கியானம் (Wrong Interpretation)*

சில துர்உபதேச இயக்கங்கள் வேதத்திலிருந்து பல புதிய வியாக்கியானங்களைக் கொடுக்கின்றன. ஆவிக்குரிய வட்டாரத்தினர் ஒத்துக்கொள்ள முடியாத, தேவமனிதர்கள் ஏற்றுக்கொள்ள முடியாத வகையில் வசனத்தை வியாக்கியானம் செய்கின்றனர். அவர்கள் சொல்லுவதே உறுதியானதும், இறுதியானதுமாக நினைத்து சத்தியத்தின் கருத்துக்களை புறம்பே தள்ளுகின்றனர்.

ஆவிக்குரிய திருச்சபைகளும் ஆவிக்குரிய மக்களால் அங்கீகரிக்கப்பட்ட சபைகளும் ஏற்றுக்கொண்டிருக்கும் மூல உபதேசங்களை இச்கூட்டத்தினர் தவறென்று கணிக்கின்றார்கள். வேத வசனத்தை மற்றவர்களெல்லாம் தவறாகப் படித்து புரிந்து கொண்டதாயும், இவர்கள் மாத்திரமே சரியாய் படித்து போதிப்பதாயும் உரைக்கின்றனர்.

ஹெர்பர் ஆம்ஸ்ட்ராங் என்பவர், 'இன்றைய பிரபலமான முக்கிய சபைகள் போதிப்பதும் செயல்படுவதும் எதுவுமே வேத அடிப்படையானதல்ல. இவர்கள் எதையோ படித்து எவைகளையோ போதனை செய்து கொண்டிருக்கிறார்கள்' என்று கூறுகிறார். சாதாரணமாக வேத அடிப்படைக் கருத்துக்களுக்கே தவறான விளக்கம் கொடுப்பதால் இவர்கள் துர்உபதேசக் கூட்டத்தைச் சேர்ந்தவர்களென்று அறிந்துகொள்ள முடியும். குறிப்பாக சில இறையியல் கல்லூரிப்பாடங்களும் இதற்கு உதவி செய்கின்றன. இவ்விதக் கள்ள ஊழியர்கள் வேதவிசுவாச்சைக் கெடுக்க முயற்சி செய்யும் ஊழியத்தைச் செய்து வருகின்றனர்.

### 6. திருச்சபைகளைப் புறக்கணித்தல் (Neglecting the churches)

துர்உபதேச இயக்கங்கள் சமநிலையுள்ள பாரம்பரிய திருச்சபைகளையும், ஆவிக்குரிய திருச்சபைகளையும் அறவே வெறுக்கின்றன. நமது ஆலய ஆராதனை ஒழுங்குமுறைகளையும் குற்றஞ்சாட்டுகின்றன. மறுபிறப்பு, ஞானஸ்நானம், ஆவியின் நிறைவு, தொழுகை, வரங்கள் இவைகள் முக்கிய மற்றவை எனக்கூறி அப்புறப்படுத்துகின்றனர். பாரம்பரிய திருச்சபைகளையும் அவர்களது கூட்டத்தினர் வெறுக்கின்றனர்.

ஆவிக்குரிய திருச்சபைகள் அனைத்துமே தேவதிட்டத்தோடும் அங்கீகாரத்தோடும் நடக்கின்றன. எந்தத் திருச்சபையையும் ஆவியானவரின் அங்கீகாரம், தேவமக்களின் அனுமதி ஆகிய இரண்டையும் பெறும்போது சரியான சபைக்குரிய இடத்தைப் பெறுகின்றது.

துர்உபதேசக் கூட்டத்தினர் இப்படிப்பட்ட எந்த சபையையும் ஏற்க மறுக்கிறார்கள். காரணம் இவர்கள் சொல்லும் புதுமையான மாறுபாடான உபதேசத்திற்கு நமது சபைகள் இசைவதில்லை. அவர்களின் கருத்துக்களைப் புறம்பே தள்ளி சபை மக்களைப் பாதுகாப்பதால் சரியான சபைகள் மீது இக்கூட்டத்தினர் கோபமும், பொறாமையும் கொள்கின்றனர்.

தேவனை ஆராதித்து தொழுகை நடத்துதலை இவர்கள் விரும்புவதில்லை. ஆனால் இவர்கள் நடத்தும் தொழுகை மிகவும் வித்தியாசமானதாகவே இருக்கின்றது. தொழுகையில் நல்ல பாடல்களையோ தேவனை மகிழ்விக்கும் கீதங்களையோ சேர்ப்பதில்லை. ஆராதனையில் இவர்களுக்கு தேவ செய்தியைக் கொடுக்கும் நபர் நல்ல பரிசுத்தவானாக இருக்கமாட்டார். சிலரது ஆராதனையில் அப்பம் பிட்கும் கர்த்தருடைய பந்தி என்பது கிடையாது. ஆவியின் நிறைவு, அந்நிய பாஷை பேசுதல், ஆவிக்குரிய வரங்களின் கிரியைகள் ஆகியவற்றை துர்உபதேசக் கூட்டத்தினர் ஒருபோதும் மதிப்பதில்லை.

எனவே இப்படிப்பட்ட நியமங்களைக் கடைபிடிக்கும் சபைகளைப் பார்த்து இவர்கள் குறைகூறுகிறார்கள். அந்த சபைகளுக்கு விரோதமாய் செயல்படுகிறார்கள். சபையின் ஆட்களை வஞ்சித்து தங்கள் கூட்டத்தில் சேர்த்துக் கொள்கிறார்கள். எதைச் செய்தாலும் திரித்துவத்தை நம்பும் சபைகளுக்கு எதிராகவே செய்கின்றார்கள். அதே நேரத்தில் இவர்களின் ஆராதனைகள் பெரும்பாலும் அந்தரங்கமான இடங்களிலேயே நடத்தப்படுகின்றன. தங்கள் அங்கத்தினரைத் தவிர மற்றவர்களை அத்தனை எளிதில் இவர்கள் உள்ளே அனுமதிப்பது இல்லை.

### 7. இரட்டைப் பேச்சு (Double Talk)

துர்உபதேசக் கூட்டங்களில் 'இரட்டை உபதேசங்கள்' நிறைந்திருக்கின்றன. அவர்கள் நம்மோடு பேசுவது ஒன்று. ஆனால் மனதில் வைத்துக்கொண்டிருக்கும் கருத்து வேறொன்று. இரட்டைச் செய்திகளும், இரட்டைக் கருத்துக்களும் ஒவ்வொருவரிடமும் காணப்படுகின்றன. உண்மையான சத்தியத்தில், ஆழ்ந்த சரியான நம்பிக்கையுள்ளவர்கள் போல வெளித்தோற்றத்தில் காணப்பட்டாலும் விசுவாசத்தின் எவ்வித அடிப்படை அம்சமும் உள்ளத்தில் இருப்பதில்லை.

தங்களை நல்ல கிறிஸ்தவர்களாய்க் காட்டிக்கொண்டு மக்களுக்கு முன் விசுவாசிகள் போல் நடிக்கிறார்கள். மக்கள் அவர்களோடு நெருங்கிப்பழகிய பிறகுதான் அவர்கள் உள்ளத்தில் கொண்டுள்ள கருத்துக்களையும் தவறான விசுவாச நம்பிக்கைகளையும் புரிந்துகொள்ள முடிகின்றது.

மோர்மன் சபையார் இதற்கு ஒரு உதாரணம். 'பிற்கால பரிசுத்தர்களின் இயேசு கிறிஸ்து சபை' தனது செய்தி ஒன்றில் 'அவருடைய குமாரனான இயேசு கிறிஸ்துவை நாங்கள் விசுவாசிக்கிறோம்' என்று எழுதியிருந்தார்கள். இந்த அறிக்கையைப் படிக்கும் மக்கள், இது கிறிஸ்தவ மக்கள் பங்கேற்கும் திருச்சபைகளில் ஒன்று என நினைக்கத் தோன்றும். ஆனால் உண்மையென்னவென்றால் அவர்கள் சொல்லும் செய்திகளின் மறுபக்கம் விசுவாச துரோகமே அடங்கியிருக்கிறது.

இவ்வித இயக்கங்களின் உறுப்பினர்கள் தங்களையும் கிறிஸ்தவர்கள் என அழைத்துக் கொள்ளத் தயங்குவதில்லை. கிறிஸ்தவர்கள் போல் பேசிப்பழகி கடைசியில் தாங்கள் சார்ந்து வாழும் உபதேச இயக்கங்களோடு மற்றவர்களையும் இணைத்து விடுகிறார்கள்.

### 8. தேவத்தன்மைகளை மறுத்தல்

பிதா, குமாரன், பரிசுத்தாவி என்னும் மூன்றுபேரும் ஒருவரே. இவர்கள் தனித்தனி காலகட்டங்களில் செயல்பட்டவர்கள். பழைய ஏற்பாட்டுக்காலம் பிதாவின் காலம், புதிய ஏற்பாட்டுக் காலம் இயேசு கிறிஸ்துவின் காலம். நாம் வாழ்ந்துகொண்டிருக்கும் இந்தக்காலமோ ஆவியானவரின் காலம். ஆனால் இம்மூவரும் ஒருவரே என்று கிறிஸ்தவர்கள் நம்புவதுபோல இவ்வியக்கத்தார் நம்புவதில்லை. தேவனது இந்த திரித்துவ தெய்வத்தன்மைகளை அடியோடு மறுக்கின்றனர். 'யெகோவா சாட்சிகள்' கூட்டத்தார் 'தேவனுடைய வார்த்தையில் திரித்துவத்திற்கான எவ்வித ஆதாரங்களுமில்லை' என்கின்றனர்.

'கிறிஸ்தவம் தோன்றின காலத்தில் கடவுள் மூன்று விதங்களில் செயல்படுகிறார் என்ற கருத்து இருந்தது. ஆனால் இதே கருத்து கிறிஸ்தவம் தோன்றிய நாட்களிலிருந்து

பழம்பெரும் மதங்களிலும் இருந்தது. அந்த மதங்கள் கடவுள் மூன்று தன்மைகளிலிருந்தும் அதற்கு மேலும் செயல்படுகிறார் என்று கூறின. பாபிலோனியர் இவ்வித மூன்றில் ஒன்று என்னும் தன்மையைக்கொண்ட கடவுளை வழிபட்டனர். அந்நாட்களில்தான் இக்கொள்கை நவீன விசுவாசிகளின் சின்னமாகிவிட்டது' என்று உலகளாவிய வழி என்னும் கூட்டத்தார் திரித்துவத்தைக் குறித்து கூறுகின்றனர்.

## <u>கேள்விகள்</u>

1) வேத வசனங்களின் முக்கியத்துவங்களை குறித்து சற்று விளக்கமாக கூறுக?
2) தவறான உபதேசக்காரர்களில் கள்ள தீர்க்கதரிசிகளை குறித்து வசன ஆதாரங்களுடன் விளக்கமாக கூறுக?
3) தவறான உபதேசக்காரர்களின் நாமங்களை வசன ஆதாரங்களுடன் வரிசைப்படுத்தி கூறுக?
4) தவறான உபதேசக்காரர்களின் செயல்பாடுகளை குறித்து வசன ஆதாரங்களுடன் விளக்கமாக கூறுக?

# நவீனகால தவறான உபதேசங்கள்

## பாடம் - 3

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகளே உங்கள் அனைவருக்கும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். இந்த பாடத்தில் நாம் கள்ளப்போதகர்களின் செய்தியும், செயலும் பற்றி அறிந்துகொள்வோம். இது மிகவும் முக்கியமான காரியமாக இருக்கிறது. ஏனெனில் கள்ளப்போதகர்கள் செய்யும் போதகங்களில் இடம்பெற்றுள்ள செய்தியை நாம் கூர்ந்து கவனித்தால்தான், அவற்றிலிருக்கிற சூழ்ச்சிகளையும், ஏமாற்றுகளையும் நன்கு அறிந்துகொள்ள முடியும். ஆகவே மிகவும் கவனமுடன் தொடர்ந்து இந்த பகுதியில் உங்களது ஆர்வத்தை முக்கியப்படுத்துங்கள்.

**மூல உபதேசங்களை மாற்றுதல்**

வேதாகமம் கூறியுள்ள உபதேசங்கள் அடிக்கடி மாறக்கூடிய, மாற்றக்கூடிய உபதேசங்கள் அல்ல. அது என்றும் நிலைத்திருக்கக்கூடிய ஒரே தன்மையைக்கொண்டுள்ளது. ஆனால் துர்உபதேசக்கூட்டத்தாரோ, தங்கள் செய்திகளையும் வியாக்கியானங்களையும், உபதேசங்களையும் அடிக்கடி மாற்றிக்கொண்டிருப்பவர்கள். இவர்களில் எவரும் மக்களை ஒரே நோக்கத்திற்காக வழி நடத்துவது கிடையாது. மறுவாழ்க்கையின் நிச்சயம் இவர்கள் எல்லோரிடத்திலும் ஒரே விதமாக இல்லை. இவர்கள் ஒரு வெளிப்பாட்டிலிருந்து இன்னொரு வெளிப்பாட்டிற்கு அடிக்கடி தாவும் வழக்கமுள்ளவர்களாய் இருக்கிறார்கள். யொகோவா சாட்சிகள் கூட்டத்தார். ஆண்டவர் இயேசுவின் பகிரங்க வருகை *1874*-ல் இருக்குமென அறிவித்தார்கள். அறிவித்தபடி நடக்கவில்லை. பல வருடங்களுக்கு முன் இக்கூட்டத்தார் கிறிஸ்துமஸ் பண்டிகையைக் கொண்டாடிக்கொண்டிருந்தனர். இப்பொழுதோ அதை நிறுத்திவிட்டார்கள். முன்பெல்லாம் இக்கூட்டத்தாருக்கு பரலோகம் செல்லும் நம்பிக்கையிருந்தது. இப்பொழுதோ *144,000* பேர் மட்டுமே கிறிஸ்துவோடு பரலோகம் செல்லுவார்கள் என்று கூறுகின்றனர்.

ஒரே கொள்கையும் ஒரே உபதேசமும் இப்படிப்பட்ட கூட்டத்தைச் சார்ந்த எவருக்கும் இல்லை. தலைவர்கள் மாறும்போது போதனைகளும் மாறுகின்றன. போதனைகளை மாற்றிவிட்டு மக்களையும் குழப்புகின்றனர். இவர்கள் காலத்திற்கேற்றவாறு தங்களையும் தங்கள் கொள்கைகளையும் மாற்றிக்கொள்ளக் கூடியவர்களாயிருக்கின்றனர்.

மோர்மன் சபையாரும் வெகு சாதாரணமாய் தங்கள் செய்தியை மாற்றிக்கொள்ளுகிறவர்கள். ஒரு செய்தியை அறிவிப்பார்கள், சில நாட்களுக்குப்பின் தாங்கள் அறிவித்தவைகளையே மாற்றிக்கூறுவார்கள், அல்லது கைவிடுவார்கள். ஆகவே

இவர்களும் இவர்களைப் பின்பற்றுவோரும் நிகழ்காலத்து விசுவாசமோ எதிர்காலத்து நம்பிக்கையோ இல்லாமல் காற்றில் அடிபட்டு அலையும் மேகம்போல் புறப்பட்ட இடம் தெரியாமலும் போய்ச்சேரும் இடம் அறியாமலும் இருக்கின்றனர்.

**வலுவான தலைமைத்துவம்**

துர்உபதேச இயக்கங்களின் ஸ்தாபகர்களும் அதனை முன்னின்று நடத்தும் தலைவர்களும், தங்களைப் பிரசித்தி பெற்ற தேவனுடைய அறிவிப்பாளர்கென்றும் மக்களை நம்ப வைக்கின்றனர். இவர்கள் தேவனுக்கு விசேஷித்தவர்களாகவும், தேவ வெளிப்பாடு பெற்றவர்களாகவும் அம்மக்களால் கருதப்படுகின்றனர். இவ்வியக்கத்தலைவர்கள் பல்வேறு திறமைகளில் கைதேர்ந்தவர்கள்.

இந்த தலைவர்கள் கூறும் அனைத்தையும் அவர்களுக்கு கீழிருக்கும் மக்கள் அப்படியே ஏற்றுக்கொள்கின்றனர். இவர்களில் சிலர் தங்களையே மேசியாவாகவும் வெளிக்காட்டிக்கொள்வதால், வசதிபடைத்த மக்களும் இவர்களைப்பின்தொடர முன்வருகிறார்கள். ஒற்றுமைப்படுத்தும் சபை, அகில உலக வழி, உலகளாவிய தேவசபை போன்ற இயக்கங்களின் தலைவர்கள் இதற்கு உதாரணம்.

தலைவர்கள் தங்களின் வழிநடப்போருக்கு தங்களின் நம்பிக்கைகளையும் தங்களின் உபதேசங்களையும் வியாக்கியானங்களையும் சொல்லி அவர்களை அதன்படி நடக்க வைக்கிறார்கள். வேதத்தைத் தங்களுக்கேற்றாற்போல படித்து, அதற்கு சுயமாக விளக்கங்களையும் எழுதுகின்றனர். ஒருவேளை தங்கள் தலைவர் ஏதோ ஒன்றில் தவறிப்போய்விட்டாரானால் அதற்கும் நல்ல காரணம்காட்டி தலைவரின் தவறுகளை மூடி மறைத்து விடுகிறார்கள்.

இவ்வித தலைவர்களின் வீட்டிலும் அலுவலகங்களிலும் நடக்கும் காரியங்கள் வெளி உலகுக்கு தெரிவதில்லை. மிகப்பெரிய திட்டங்களெல்லாம் இரகசியமாகவே நடக்கும். இவர்களில் சிலர் அடிக்கடி தாங்கள் கூடும் இடங்களை மாற்றிக்கொண்டேயிருப்பார்கள். அத்தனை சுலபமாக இவர்கள் தங்கள் இரகசியங்களை வெளியிடுவதில்லை. இரகசிய திட்டங்களுக்குப்பின்னே அக்கூட்டத்தின் பணியாளர்கள் செயல்படுகிறார்கள். கடவுளின் பிள்ளைகள் இயக்கம் இதற்கு ஓர் உதாரணம்.

**கிரியைகளால் இரட்சிப்பு**

கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள் என்கிறது தேவனுடைய வார்த்தை. ஆனால் எல்லா துர்உபதேசக்கூட்டங்களுமே இந்த வசனத்தை மறைத்து இவ்வசனத்தோடு ஏதாவது கூட்டியோ குறைத்தோ தவறுதலாகப் போதித்து வருகின்றன.

'கிருபையால் இரட்சிப்பு' என்ற சத்தியத்தை இவர்களில் பெரும்பாலானோர் ஏற்றுக்கொள்வதில்லை. கிரியைகள் செய்வதே இரட்சிப்பு. யாரையாவது பின்பற்றுதலே இரட்சிப்பு, ஞானஸ்நானம் எடுத்து விட்டாலே இரட்சிப்பு சுவிசேஷத்திற்கும் நியாயப்பிரமாணத்திற்கும் கீழ்ப்படிவதே இரட்சிப்பு என்றெல்லாம் சத்தியத்திற்கு விளக்கம் கொடுக்கிறார்கள். **ஹெர்பட் W ஆம்ஸ்ட்ராங்** என்பவர், இரட்சிப்பு என்பது ஒரு தொடர் செயல்முறை. ஆனால் எந்தச்செயலும் செய்யாமல் இயேசுவை மட்டும் ஏற்றுக்கொண்டால் போதுமானதென்று இந்த உலகத்தின் தேவனானவர் உங்களையெல்லாம் வஞ்சித்து உங்கள் கண்களை குருடாக்கப்பார்க்கிறான்... ஆனால் இதுவரை யாருமே இரட்சிக்கப்படவில்லை என்று வேதம் சொல்லுகிறது என்று தன் உபதேசத்தில் கூறுகிறார்.

'இரட்சிப்பு எதற்காகவென்றால் சரியான மனித வாழ்க்கை வாழவும், உரிமையோடும் செழிப்போடும் இந்த பூமியில் வாழ்வதற்காகவுமே...உண்மையான, சரியான, மதிப்புள்ள மனித வாழ்க்கை இப்போதும் இந்த பூமியில் நமக்கு காத்திருக்கிறது' என்று யெகோவா சாட்சிகள் கூட்டத்தார் கூறுகின்றனர்.

இவ்வுலகில் இயேசுகிறிஸ்துவின் கிருபையால், விசுவாசத்தால் மட்டும் இரட்சிப்பு வருகிறதென்பதை மறுக்கின்ற எவருமே இரட்சிக்கப்படாதவர் என்பதே பொருள். இரட்சிக்கப்படாதவர் எவருமே நரகம் செல்லுவர் என்பதே வேத போதனை. இயேசுவை மறுப்போர், அவரின் இரட்சிப்பை மறுப்போர் பரலோகத்தை இழப்பர் என்பது உறுதி.

**கள்ளத் தீர்க்கதரிசனம்**

கள்ள உபதேச இயக்கங்களில் அதிகப்படியாக இடம் பெறுவது பொய்த்தீர்க்கதரிசனமே. இந்த இயக்கங்களின் தலைவர்கள் தங்களை தேவன் அனுப்பிய தீர்க்கதரிசிகளாகவும் தேவனுடைய வெளிப்பாட்டை பெற்றவர்களாகவும் சொல்லிக் கொள்கின்றனர். இவர்கள் உலகத்தில் நடக்கப்போகின்ற காரியங்களை முன்னறிவிக்கின்றனர். ஆனால் இவர்கள் முன்னறிவிக்கின்ற ஒன்றும் நடந்ததாகவே தெரியவில்லை. எந்தவொரு தீர்க்கதரிசனமும் சொல்லியபடியே நடக்கவில்லையேல் அது பொய் தீர்க்கதரிசனம்தானே?

சார்லஸ் டி. ருசல் என்பவர் யேகொவா சாட்சிகள் கூட்டத்தின் ஸ்தாபகரும், முதல் தலைவருமாவார். இவர் தன்னை தேவனுடைய தீர்க்கதரிசியாக அழைத்துக்கொண்டார். அவரை தேவ வெளிப்பாடு பெற்ற தலைவராக ஏற்றுக்கொண்டு மக்கள் அவர் பின்னால் சென்றனர். சார்லஸ் ருசல் 1914-ம் ஆண்டு உலகம் முடிந்துவிடும் என்று முன்னறிவித்தார். ஆனால் சொன்னவரது வாழ்க்கை முடிந்துவிட்டது. உலகமோ அப்படியே இருக்கிறது. இவ்வாறு அவர்கள் சொல்லும் தீர்க்கதரிசனம் நிறைவேறுவதில்லை. இயேசுவின்

இரண்டாம் வருகையை, நாள், மாதம், வருடத்தோடு உரைத்தார்கள். ஆனால் அப்படி நடக்கவில்லை. காரணம் இவர்கள் தங்கள் சொந்த ஏவுதலினால் வேதத்திற்கு புறம்பாக தீர்க்கதரிசனம் உரைத்தவர்கள். இவர்கள் கூறுவது நடவாதபடியால் இவர்களை கள்ளத்தீர்க்கதரிசிகள் என்றே அழைக்க வேண்டியிருக்கின்றது.

**வளமான பொருளாதாரம்**

எந்தவொரு துர்உபதேசக் கூட்டத்திற்கும் பணம் ஒரு பிரச்சினை அல்ல. போதுமான அல்லது தேவைக்கு மிஞ்சிய பணம் அவர்களுக்கிருக்கிறது. இவர்கள் பணத்தை வைத்து ஜனத்தைப்பிடிக்க ஆயத்தமாக இருக்கிறார்கள். இந்த இயக்கங்கள் தங்கள் அங்கத்தினர்களை பணம்கொடுக்கும்படி கேட்பதால் எல்லாரும் தாராளமாகக் கொடுக்கின்றனர். தங்களுடைய சேமிப்புகளையும் வீடுகளையும் சொத்துக்களையும் இயக்கத்திற்குக் கொடுப்பதற்கும் அங்கத்தினர்கள் தயங்குவதே இல்லை.

இயக்கத்திற்குப் பணத்தையும் பொருளையும் கொடுப்பவர்கள் தேவனுடைய ஊழியத்திற்காக கொடுப்பதாய் நினைத்துக்கொள்கிறார்கள். ஆனால் இயக்கங்களின் தலைவர்கள், முக்கிய உறுப்பினர்கள் எல்லோரும் நல்ல வசதியான சுகபோக வாழ்க்கையே வாழ்கின்றனர். ஒவ்வொருவருக்கும் வீடும், வாகனமும், இதரச் செலவுகளுக்குப் பணமும் கொடுக்கப்படுகிறது. சிலருக்கு உணவு, உடை, உறைவிடம்கூட இலவசமாகக் கொடுக்கப்படுகிறது.

பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. போதுமென்ற மனதுடனே கூடிய தேவ பக்தியே மிகுந்த ஆதாயம் என்று வேதம் சொல்லுகிறது. ஆனால் இவ்வித இயக்கங்களுக்குப் பணஆசையும், பொருளாசையும், சுகபோகப்பிரியமும், வீண் ஆடம்பரமும் அதிகம். இந்தப்பூலோக வாழ்வை சிற்றின்பத்துடனும் மற்ற உலக இன்பத்தோடும் அனுபவிக்கப் பணம் இவர்களுக்கு உதவுகிறது. பலர் பணத்தின்மேல் ஆசை வைத்து, பல இன்பங்களையும் வசதிகளையும் அனுபவிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் இவ்வியக்கங்களுடன் இணைகின்றனர். பணமில்லா ஏழைகளும் பணத்திற்காக இவ்வியக்கங்களில் சிக்கிவிடுவது பரிதாபத்திற்குரியது.

இவ்வித துர்உபதேசக்கூட்டத்தாரின் சொல்லும், செயலும் விசுவாச வாழ்விற்கு முரண்பாடாகவே இருக்கின்றன். இவர்கள் கூறும் புது சத்தியம், தவறான வியாக்கியானம் ஆகியவை ஆத்துமாக்களைப் பாதிக்கின்றது. நல்ல ஆவிக்குரிய திருச்சபைகளை இவர்கள் புறக்கணிப்பதால் தவறான கோட்பாட்டிற்கும் போதனைக்கும் தங்கள் மக்களை வழிநடத்திச் செல்கின்றனர். பாவத்தையும் பணத்தையும் சார்ந்துகொள்வதால் விசுவாசத்தை அப்பியாசிக்க முடியாது வாழ்கின்றனர். இவர்களின் கனிகளைக்கொண்டே இவர்களின் தன்மைகளை அறிந்துகொள்ளலாம்.

# <u>கள்ளப் போதகர்களின் செயலும் செய்தியும்</u>

1. **பக்தியில்லாதவர்கள்:** தேவனைப்பற்றிய பயமோ, விசுவாசமோ, அவரது நாமத்துக்குக் கீழ்ப்படிய மனமோ இல்லாதவர்கள், தங்கள் இருதயத்தில் சிறிதேனும் கர்த்தருக்குமுன் பக்தியுள்ள பரிசுத்தமுள்ள மனிதராய் வாழவேண்டுமென்ற எண்ணமில்லாதவர்கள். தேவபக்திக்குரிய இரகசியம் யாவரும் ஒப்புக்கொள்ளும்படி மகாமேன்மையுள்ளது. ஆனால் இவர்களுடைய பக்தியாவராலும் ஒப்புக்கொள்ள முடியாது. தேவபக்தியை மகா மேன்மையுள்ளதாய் இவர்கள் நினையாதவர்கள் *(யூதா 4).*
2. **இயேசு கிறிஸ்துவை மறுதலிப்பவர்கள்:** இயேசு கிறிஸ்து அல்ல என்றும், கிறிஸ்து தேவகுமாரன் இல்லை என்றும் மறுதலிப்பவர்கள். இயேசுவின் கன்னிப்பிறப்பு, அவரின் மரணம், உயிர்த்தெழுதல், பரமேறுதல் இவைகளை முழுவதுமாய் மறுக்கிறவர்கள். இயேசுவை தேவனுடைய ஒரே பேறான குமாரன் என்பதை ஒத்துக் கொள்ளாதவர்கள் *(1 யோவான் 2:22).*
3. **இயேசுவை அறிக்கைபண்ணாதவர்கள்:** மாம்சத்தில் வந்த இயேசுவை ஒருபோதும் அறிக்கைபண்ணாதவர்கள். இயேசுவின் நாமத்தில் எதையும் பிதாவினிடத்தில் கேட்கமாட்டார்கள். பேசும்போதும், பிரசங்கிக்கும்போதும், ஜெபிக்கும்போதும் இயேசு கிறிஸ்துவே என்று தங்கள் வாயினால் அறிக்கை செய்ய மாட்டார்கள். மாம்சத்தில் வந்த இயேசுவை அறிக்கைபண்ணாதவர்கள் அந்திக்கிறிஸ்துவும் அந்திக்கிறிஸ்துவின் ஆவியை உடையவர்களுமாய் இருக்கின்றனர் என்று வேதம் கூறுகின்றது *( 1 யோவான் 4:2, 3, 2 யோவான் 7).*
4. **கர்த்தத்துவத்தை அசட்டைபண்ணுகிறவர்கள்:** தேவன் ஒருவரே மெய் தேவனானவர். அவர் மூன்று நிலைகளில் கிரியை செய்கிறார். பிதா, குமாரன், பரிசுத்தாவி என்னும் மூன்று பேரும் ஒருவரே என்ற திரித்துவக் கோட்பாட்டை இவர்கள் அசட்டை செய்வார்கள். திரித்துவத்தின் மகிமையை அவமாய்ப் பேசுவார்கள். இயேசுவையும் ஆவியானவரையும் இகழ்வார்கள். தேவத்துவத்தை அவமதித்து பரிகசிப்பார்கள் *(2 பேதுரு 2:10).*
5. **சுவிசேஷத்தைக் களங்கப்படுத்துகிறவர்கள்:** இயேசு பாவிகளுக்காய் இந்த உலகத்தில் வந்தார். பாவத்திற்காய் இரத்தம் சிந்தி மரித்தார். மூன்றாம் நாள் உயிரோடு எழுந்தார். அவர் திரும்பவும் வருவார் என்னும் நற்செய்தியின் முக்கிய நிகழ்ச்சிகளை இவர்கள் மறுத்து மாற்றித் திரித்துக் கூறுவார்கள். சுவிசேஷத்தைத் தவறாய்ப் பிரசங்கித்து, இரட்சிப்பின் வசனத்தைத் தவறாய்ப் போதிப்பார்கள். சரியான உண்மையான செய்திகளை அப்படியே மறுத்து மாற்றிக் கூறுவார்கள் *(கலாத்தியர் 2:7).*

6. **வேறே சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பவர்கள்:** வேறே சுவிசேஷம் என்பது பிசாசின் செய்தியாகவும் அவர்களது தலைவர்களின் அறிவுப்பூர்வமான செய்தியாகவும், மனித மூளையிலிருந்து பெற்ற செய்தியாகவும் இருக்கும். ஆனால் அவைகள் தேவவசன அடிப்படையில் இருக்காது. நல்ல பிரசங்கிமார்களைப்போல நல்ல செய்திகளை அவர்கள் பிரசங்கிப்பார்கள். முடிவு அது இயேசுவின் நற்செய்தியாயிராமல் சாத்தானின் துர்உபதேசமாகவே இருக்கும் *(கலாத்தியர் 1:8-9)*.

7. **நானே 'கிறிஸ்து' என்பவர்கள்:** இப்படிப்பட்ட இயக்கங்களின் தலைவர்களை, அந்தக்கூட்டத்தின் மக்கள் வரப்போகும் மேசியா என்றும், கிறிஸ்து என்றும் அறிவிப்பார்கள். அவர்களைக் குறித்து எழுதுவார்கள். சில தலைவர்கள் தங்கள் வார்த்தைகளாலே, தாங்கள் கிறிஸ்து என்றும் அறிவித்தார்கள். இவர்களை நம்பும் மக்களும் அப்படியே சொல்லுவார்கள். அதற்காகவே உழைப்பார்கள் *(மாற்கு 13:6)*.

8. **நல்ல ஆடுகளைப்போல் நடிப்பவர்கள்:** இவர்கள் ஓநாய்கள். ஆனால் ஆடுகளைப்போல வேடமிட்டு வருபவர்கள். ஆட்டுத்தோலைப் போர்த்திக்கொண்டு மற்றவர்களை ஏமாற்றி, அவர்களைத் தங்கள் துர்உபதேச வலையில் விழத்தள்ளுவார்கள். வெளியில் இவர்களை மக்கள் விசுவாசிகள் என்று நினைப்பார்கள். உள்ளத்திலோ இவர்கள் விசுவாச துரோகிகள் *(மத்தேயு 7:15)*.

9. **மக்களைக் குழப்புகிறவர்கள்:** இவர்களுக்கும் வேதாகமம் நன்றாய்த் தெரியும். வேதத்தை வைத்துக்கொண்டே இவர்களின் சொந்தக்கருத்துக்களை சொல்லித் திரிவார்கள். இவர்கள் வேதத்தைப்படிப்பது ஆத்துமாவின் வளர்ச்சிக்கல்ல. மக்களிடம் கேள்விகள் கேட்டு, அதற்கு இவர்களுடைய 'தவறான பதில்களை' சொல்லுவதற்காகவும், வாக்கு வாதங்களும் விளக்கம் கொடுப்பதற்காகவுமே வசனத்தைப்படிப்பார்கள். இந்த துர்உபதேசக் கூட்டத்தார் தெளிந்த தண்ணீராய் இருக்கும். ஆத்துமாக்களின் மனதைக்குழப்பும் குழப்பவாதிகள் *(கலாத்தியர் 5:12)*.

10. **மனசாட்சியில்லாத பொய்யர்கள்:** மனசாட்சியின்றி எல்லாக் காரியங்களிலும் பொய்யாய் நடந்துகொள்ளும் எத்தர்களாயிருப்பார்கள். தாங்கள் பேசுவதும், செயல்படுதும் வேதத்தின்படி சரியானதாவென்று நிதானிக்க மாட்டார்கள். பொய்ப்போதகத்தோடு போலி வாழ்க்கையும் வாழ்வார்கள். உள்ளதை உள்ளபடியே சொன்னால் அதற்கு சத்தியம் என்று பெயர். இவர்களோ இருக்கிறதை இல்லாததாயும், இல்லாததை இருக்கிறதாயும் சொல்வதால் இவர்களுக்குப் பொய்யர் என்று பெயர் *(1 தீமோ.4:13)*.

11. **வஞ்சகம் நிறைந்தவர்கள்:** பேசுவதும் பழகுவதும் உண்மையான அன்பைப் போலவும் அல்லது அதைவிட அதிகமாகவும் இருக்கும். உதவி செய்வதற்குத் தயங்கமாட்டார்கள். எந்த உதவி வேண்டுமானாலும் செய்ய முன்வருவார்கள். அவர்களின் ஒவ்வொரு செயலின் பின்னாலும் வஞ்சகம் இருக்கும். பிறரை

எப்படியாவது அவர்களின் கூட்டத்தில் சேர்த்துவிட, எதையும் செய்யும் நண்பர்களாய் பழகுவார்கள் *(மாற்கு 13:5)*.

12. **பக்கவழியாய் வருபவர்கள்:** மேய்ப்பனில்லாதபோது ஆடுகளை கொள்ளையடிக்கும் பழக்கமுள்ளவர்கள். ஆவிக்குரிய நல்ல திருச்சபைகளுக்குச் செல்ல மாட்டார்கள். விசுவாசிகளின் ஐக்கியத்தில் பங்கு வைத்துக்கொள்ளாது, அந்நியோந்நியத்திலும் அப்பம் பிட்குதலிலும் கலவாது இருப்பார்கள். இவர்கள் எங்கேயிருந்து எப்படி செயல்படுகிறார்கள் என்பது யாருக்கும் தெரியாது. ஆனால் குறுக்கு வழியே வந்து சபையின் ஆத்துமாக்களைக் கெடுத்துப்போடுவார்கள். வாசல்வழியே வராது, வேறு வழியே ஏறிவருவதால் இவர்கள் கள்ளர்கள், கொள்ளையர்கள், திருடர்கள் *(யூதா 4, யோவான் 10:1)*.
13. **இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவர்கள்:** தங்களுக்கு ஏதாகிலும் இலாபம் வருமானால், எதையும் செய்யத் துணிபவர்கள். எல்லாவற்றிலும் உதவி செய்து தாங்குபவர்கள், நமது தேவைகளை சந்திப்பவர்கள் என்ற எண்ணத்தை போலியாக உண்டுபண்ணுபவர்கள். பணமும், வெளிநாட்டு உறவும் கிடைக்குமென்பதற்காக என்ன சொன்னாலும் செய்யக்கூடிய இழிவான ஆதாயத்தை இச்சிப்பவர்கள் *(தீத்து 1:11)*.
14. **உல்லாசமாய் வாழ்பவர்கள்:** தானும், தன் கூட்டத்தைச் சேர்ந்தவர்களும் நன்றாய் வாழ்ந்தால் போதும் என்ற எண்ணமுடையவர்கள். வசதியற்ற ஏழைகளை நாடிப்போக மாட்டார்கள். ஏழ்மையில் அவதிப்படுவோரைக்கண்டு மனம் பதறுவதுபோல காண்பிப்பார்கள். கிறிஸ்தவர்களையே சுற்றிச்சுற்றி வருபவர்கள். இதர மதமக்களோடு அதிக உறவு கொள்ளார்கள். அழியும் ஆத்துமாவின் மேல் கரிசனையில்லாத இவர்கள் சுயநலமாய் வாழும் உல்லாசப்பயணிகள் *(2 பேதுரு 2:13, தீத்து 1:11)*
15. **விபச்சாரம் செய்பவர்கள்:** இவ்வித கூட்டத்தைச் சேர்ந்த மக்கள் மத்தியில் பொதுவாகக் காணப்படுவது விபச்சாரமே. இவர்களுக்கு விபச்சாரம் பாவமாகத் தோன்றாது. ஒரு புருஷன், ஒரு மனைவி என்ற தேவ நியமனத்தை ஏற்றுக்கொள்ளாது வாழ்க்கை நடத்துவார்கள். அதைப் பாவமாகப் போதியாதவர்கள், விபச்சார மயக்கத்தால் நிறைந்தவர்கள். அசுத்த இச்சைகளோடு மாம்சத்திற்கேற்றபடி வாழ்பவர்கள். நமது வேதம், விபச்சாரத்தையும் வேசித்தனத்தையும் கண்டிப்பதால் வேதத்தைப் பரிசுத்தமுள்ள புத்தகமாக இவர்கள் அங்கீகரிப்பதில்லை *(2 பேதுரு 2:14, யூதா 4)*.
16. **இவர்களும் ஊழியம் செய்வார்கள்:** நல்ல ஊழியனைப்போலவே இவர்களும் பிரசங்கிப்பார்கள். இவர்களின் பிரசங்கங்களும் போதனைகளும் நலமாயிராது. சாத்தானின் உபதேசமாய் இருக்கும். இவர்களுடைய கனிகளைக்கொண்டே இவர்கள்

எப்படிப்பட்டவர்களென நாம் அறிந்துகொள்ளலாம். நல்ல மரம் நல்ல கனி கொடுக்கும். மனந்திரும்புதலுக்கேற்ற கனிகளைக்கொடுக்க வேண்டியது வேதகட்டளை. மனந்திரும்பாத இவர்கள் எப்படி நல்ல கனிகளைக் கொடுக்க முடியும்? எனவே இவர்களின் ஊழியமும் கனியற்ற ஊழியமாய் இருக்கும். வேதபுரட்டர்கள் என்றும் இவர்கள் அழைக்கப்படுகிறார்கள் *(கலா.1:9, 2 பேதுரு 3:16).*

மேலே சொல்லப்பட்ட அத்தனை செயல்களும் ஒரே கூட்டத்தைச் சேர்ந்த செய்திகளல்ல. துர்உபதேசத்தைப் போதிக்கும் பல இயக்கங்களின் செயல்களும் செய்திகளும் இதில் அடங்கும். இவர்கள் தாங்கள் செய்வது இன்னதென்று அறிந்தே செய்கிறார்கள். இப்படிப்பட்ட மக்களோடு கிறிஸ்தவர்கள் எவ்வளவு கவனமாய் இருக்க வேண்டுமோ, அவ்வளவு கவனமாயும் எச்சரிப்போடும் இருக்கவேண்டும். ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஜாக்கிரதையாக இல்லையென்றால், இவ்வித ஓநாய்களிடம் அகப்படுவது நிச்சயம்.

எனவே இந்த பாடத்திலே நாம் இந்த தவறான உபதேச கூட்டத்தாரின் தன்மைகள், அவர்களுடைய செய்தி, செயல்பாடு, தேவன் அவர்களுக்கு இட்ட பெயர், சவுல் அவர்களுக்கு இட்ட பெயர், யோவான், யூதா இவர்களுக்கு இடம் பெயர் என்ன என்பதை நாம் கற்றுக்கொண்டோம். நாம் இவர்களிடத்திலே கவனமாய் இருக்கவேண்டியது அவசியம். இந்த தவறான உபதேச கூட்டத்தார் நல்மனச்சாட்சியை தள்ளிவிடுகிறார்கள். சாத்தானை பின்பற்றி போகிறவர்கள் பணத்தை இச்சித்து வழுவிப்போகிற ஒரு கூட்டத்தார் பொய்யான கொள்கைகளை ஏற்றுக்கொள்கிறற ஒரு கூட்டத்தார் வசனத்தை கலப்பாய் பேசுகிறவர்கள், வேறுவிதமாக நடக்கிறார்கள். இதேபோல எண்ணம் செயல்பாடுகளை உடையவர்களாக இவர்கள் இருக்கிறார்கள். இவ்களிடத்திலிருந்து ஆவிக்குரியவர்கள் பிரித்து வாழ வேண்டியது அவசியமாய் இருக்கிறது. தேவனிடத்தில் ஆவிகளை பகுத்தறியக்கூடிய வரத்தை அதிகமாக கேட்டு, அதற்கு ஜெபித்து இவர்களை நாம் அடையாளம் கண்டுகொள்ள வேண்டியது அவசியமாக இருக்கிறது.

தொடர்ந்து வருகிற பாடத்திலே ஒவ்வொரு தவறான உபதேச கூட்டத்தாரை குறித்து அவர்கள் என்ன சொல்கிறார்கள்? வேதம் என்ன சொல்கிறது? என்பதையும் நாம் கற்றுக்கொள்ள இருக்கிறோம். கர்த்தர்தாமே உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக! ஆமென்!!

**<u>கேள்விகள்:</u>**

1) தவறான உபதேசக்காரர்களின் தன்மைகளை வரிசைப்படுத்தி விளக்கமாக கூறுக.
2) தவறான உபதேசக்காரர்களின் செய்திகளையும் அதனோடு தொடர்புடைய செயல்பாடுகளையும் குறித்து விளக்கமாக கூறுக.

# நவீனகால தவறான உபதேசங்கள்

## பாடம் - 4

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் அன்பின் வாழ்த்துகள். இந்த பாடத்தில் ஒரு தவறான உபதேச கூட்டத்தாரைக் குறித்து நாம் கற்றுக்கொள்ள இருக்கிறோம். அது யெகோவா சாட்சிகள் (Jehovah witness) என்பதாகும். இந்த தவறான உபதேச கூட்டத்தாரை குறித்து நாம் கற்றுக்கொள்ள இருக்கிறோம்.

2500 ஆண்டுகளுக்கு முன்பாக தீர்க்கன் ஏசாயா கூறிய வார்த்தையை மையமாக வைத்துக்கொண்டு கடந்த 19, 20, மற்றும் 21-ம் நூற்றாண்டுகளில் அதிவேகமாகவும் சுறுசுறுப்பாகவும் பரவிவரும் துர்உபதேசக் கூட்டங்களில் யெகோவா சாட்சிகள் என்னும் கூட்டமும் ஒன்றாகும். ***நானே தேவன் என்பதற்கு நீங்கள் எனக்கு சாட்சிகள் என்று கர்த்தர் சொல்லுகிறார்*** என்று ஏசாயா 43:10-ல் வாசிக்கிறோம். இந்த வசனத்தைப் பற்றிக் கொண்டு தேவனாகிய யெகோவாவுக்கு மட்டும் சாட்சிகளாய் திரியும் ஒரு கூட்ட மக்களே இந்த யெகோவா சாட்சிகள் என்னும் தவறான உபதேச கூட்டத்தார். யார் இந்த யெகோவா சாட்சிகள்? முதலாவது ஒன்றை நாம் புரிந்து கொள்ள வேண்டும், இவர்கள் கிறிஸ்தவர்கள் அல்ல. இயேசு கிறிஸ்துவை இவர்கள் விசுவாசியாதவர்கள், இவர்கள் இயேசுவை நம்புவது இல்லை. இயேசு கிறிஸ்து மாம்சத்தில் வெளிப்பட்ட தேவன் என்பதை நம்புகிறவர்களே கிறிஸ்தவர்கள். ஆனால் இந்த யெகோவா சாட்சிகள் இதை ஏற்று கொள்வது இல்லை, இதை அவர்கள் நம்புவது இல்லை.

**<u>யெகோவா சாட்சிகள் இயக்கத்தின் தோற்றம்:</u>**

வாட்ச் டவர் வேதம் மற்றும் கைப்பிரதி சங்கம் என்றும் உலக மாணவர்கள் சங்கம் என்றும் புருக்ளின் தேவாலய பீடம் என்றும் பிரதான நகருக்குரிய பிரசங்க பீடம் என்றும் பெயர்களை வகுத்து வந்த இவ்வியக்கம் தற்போது யேகோவாவின் சாட்சிகள் என்று அழைக்கப்படுகிறது. ஆரம்பத்தில் இவர்கள் இப்படித்தான் அழைக்கப்பட்டார்கள். 1852 பிப்ரவரி 16-ம் நாள் அமெரிக்காவிலுள்ள பெனிசில்வேனியாவில் பிறந்த சார்டஸ்டாஸ் ரசல் என்பவரே அதன் ஸ்தாபகர். இவர் பல ஜவுளிக்கடைகளுக்கு உரிமையாளர், எனினும் சமய காரியங்களில் நுழைய ஆசைப்பட்டார். தனக்கு சரியான ஒரு வேதப்பயிற்சி இல்லாதிருந்தும், அடிப்படையான இறையியல் கல்லாதிருந்தும், 1870-ம் ஆண்டிலிருந்து வேதபாட வகுப்புகளை துவங்கி நடத்தி வந்தார். இவருடைய மாணவர்களால் இவர் போதகர் என்று அழைக்கப்பட்டார். இவர் காங்கிரிகேஷனல் சபையை சார்ந்தவர். சபையில் பின்பற்றப்பட்ட விசுவாச பிரமாணங்கள் சிலவற்றைக் குறித்து இவருக்கு சந்தேகங்கள் வந்தது. அதனால் மற்ற மார்க்க கொள்கையை கற்க ஆரம்பித்தார், வேதத்தையும் கற்க ஆரம்பித்தார். தானியேல் மற்றும் வெளிப்படுத்தின

விசேஷம் புத்தங்களை ஆராய்ச்சி செய்தார். வில்லியம் மில்லர் என்பவரின் எழுத்துக்களால் கவரப்பட்டார்.

இவருக்கு ஆரம்ப நாட்களில் நரகத்தை குறித்தும், பிசாசுகளை குறித்தும் அச்சம் இருந்தது. இவர் ஒரு நாத்திகரோடு பழகி இருந்ததால் நரகத்தை குறித்த பயம் இவரை விட்டுப்போய் விட்டது. அதற்கு பிறகு நரகம் இல்லை என்று பிரசங்கிக்கும் அளவுக்கு இவர் மாறிவிட்டார். இவர் வேத அடிப்படையிலான திருச்சபைகளை தனது கருத்துக்களை கொண்டு தாக்கியும், கண்டனம் செய்தும், குறை கூறியும் வந்தார். ஒரு முறை ஹம்மில்டன் நீதிமன்றத்தில் இவரை கேள்வி கேட்கும் நேரம் வந்தது. வழக்கறிஞர் தனது விசாரணையைத் துவங்கும் முன் இவரிடம் சத்தியவாக்கு கேட்கையில் உனக்கு கிரேக்க மொழி தெரியுமா? என்றார். சார்லஸ் ஓ! தெரியுமே என்றார். அப்பொழுது வழக்கறிஞர் சரி, இந்த கிரேக்க புதிய ஏற்பாட்டை படித்துக் காட்டு என்று கொடுத்தபோது, அதிலிருந்த நெடுங்கணக்கில் முதலெழுத்தைக் கூட படிக்க தெரியாதவராயிருந்தார். வழக்கறிஞர், உனக்கு கிரேக்க பாஷை நல்ல பழக்கம் தானே என்று கேட்டபோது, வெட்கப்படாமல் இல்லை என்றார். ஆனால் இறையியலில் இவர் எந்தவித பயிற்சியும் எடுக்கவில்லை.

**<u>சார்லஸ் ரசலின் குடும்ப வாழ்வு:</u>**

சார்லஸ் ரசலுக்கு குடும்ப வாழ்விலும் நிம்மதி இருந்ததில்லை. அவரது திருமண வாழ்க்கை விவாகரத்தில் முடிந்தது. இவர் சபையின் பெண்களுடன் தவறாக பழகுகிறார் என்று இவரது மனைவி 1909-ல் நீதிமன்றத்தில் 5 முறை வழக்கு தொடர்ந்திருக்கிறார். இவரின் விவாகரத்து இவருடைய பெயருக்கு ஒரு பெரிய இழுக்காகவே அமைந்தது. தான் விவாகரத்து செய்த மனைவிக்கு மாதம் 8 பவுன்ஸ் ஜீவனாம்சம் கொடுக்க வேண்டுமென்று நீதிமன்றம் உத்தரவிட்டது. இப்படி இவர் தன் வாழ்வில் அநேக காரியங்களில் உண்மையில்லாதவராக இருந்தார். 1879-ம் ஆண்டு வாட்ச் டவர் என்னும் பத்திரிக்கையை ஆரம்பித்தார். தனது சொந்தக் கருத்துகளை வெளியிட்டு வந்தார். பின்பு வேதங்களிலிருந்து பாடங்கள் எழுதும் தலைப்பில் 7 தொகுப்புகளை கொண்ட புத்தங்களை எழுதினார். அதன் முதல் தொகுப்பு 1886-ல் வெளியிடப்பட்டது. கடைசித் தொகுப்பு இவருடைய மரணத்திற்குப் பின் ஓர் ஆண்டு கழித்து 1917-ல் வெளியிடப்பட்டது. 60 ஆண்டுகளில் 2 கோடி புத்தகங்கள் விநியோகிக்கப்பட்டன.

**<u>வேத கைப்பிரதிக்கழகம் ஸ்தாபிக்கப்படுதல்:</u>**

வாட்ச் டவர் வேத கைப்பிரதிக் கழகம் என்னும் அமைப்பை ஏற்படுத்தி, அதன் ஸ்தாபகராகவும் தலைவராகவும் இருந்த சார்லஸ் ரசல், 1916-ல் மரணமடைந்தார். இவருடைய ஊழியத்தில் அநேக பொய் தீர்க்கதரிசனங்களை சொல்லியிருக்கிறார். 1914-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் திருச்சபைகளும் பள்ளிகளும் வங்கிகளும் அரசாங்கங்களும் ஒன்றுவிடாமல் அழிந்து விடும் என்று சொன்னார். பின்பு இது

நடக்கவில்லை என்பதால், அடுத்த தேதியைக் கொடுத்து உலக அழிவு 1925-ல் நடக்குமென்றார் (Volume – 4, Page 622). 1915-ல் பொய்க் கிறிஸ்தவம் முழுமையாக அழித்துவிடும் என்று கூறினார். இப்படி பல பொய் தீர்க்கதரிசனம் சொன்னார், சொன்னது நடத்ததோ, நடக்கவில்லையோ 1916-ல் ரசல் மரித்தார்.

**ஜோசப் பிராங்கிளின் ரூதர் போர்டு**

சார்லஸ் டாஸ் ரசல் மறைந்த சில மாதங்களுக்குப் பின் வர்ட்ச் டவர் சங்கத்தின் சட்ட ஆலோசகராகவும் ஜோசப் பிராங்கிளின் ரூதர் போர்டு என்பவர் 2-ம் தலைவராக பொறுப்பேற்றார். இவர் 1892-ல் வழக்கறிஞராக தன்னை பதிவு செய்து கொண்டவர், 1906-ல் இந்த இயக்கத்தில் சேர்ந்தார். 1931-ம் ஆண்டு ரூதர் போர்டின் நாட்களில் கலிபோர்னியாவிலுள்ள ஓஹியோ என்னுமிடத்தில் உள்ள வாட்ச் டவர் சங்கத்திற்கு யேகோவா சாட்சிகள் என்று பெயர் சூட்டப்பட்டு, அது ஒரு இயக்கமாக மாற்றப்பட்டது. இவர் காலத்தில் இது நடந்தது. யேகோவா சாட்சிகள் இயக்கத்தின் தலைமைச் செயலகம் புரூக்ளின் நகருக்கு மாற்றப்பட்டது. அதன்பின் இந்த இயக்கத்தின் கொள்கைகளும் கட்டுப்பாடுகளும் இன்னும் அதிகமாய் சேர்த்து அமைக்கப்பட்டது. ரசலின் கொள்கைகள் இறையியலோடு சமபந்தப்படுத்தப்பட்டு, புதிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. பாஸ்டர் ரசலின் கருத்துகளை உலகமெங்கும் போதிக்கப்போவதாக இயக்கத்தின் ஊழியங்களில் தீர்மானம் இயற்றி செயல்படத் துவங்கினார்கள்.

இந்த நீதிபதி ரூதர் போர்டு, தனது தலைவர் ரசலின் மறைவுக்குப்பின் பதினொரு வருடங்கள் கழித்து எழுதிய சிருஷ்டிப்பு என்னும் புத்தகத்தில் ஆண்டவர் சார்லஸ் ரசலை புத்தகங்கள் எழுதவும், வெளியிடவும் வேதபாடங்களிலிருந்து செய்திகளை சொல்லவும் தமது தெய்வீக சித்தத்தோடு எடுத்துப் பயன்படுத்தினார். அவர் வேதத்தை விளக்கி எழுதிய புத்தகங்களை அழிக்க சாத்தான் எவ்வளவோ முயற்சித்தான் என்று எழுதியிருக்கிறார். இவருடைய புத்தகங்கள் எண்பது மொழிகளுக்கு மேல் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. உலக அறிவு சம்பந்தமாக ரசல் எழுதிய முக்கிய தெய்வீகமானது என்று அழைக்கப்படும். ஆறு பக்கங்களைக் கொண்ட செய்தியை ரூதர் போர்டு கொஞ்சம் மறுக்கவும், மாற்றவும் ஆரம்பித்தார். அப்படியே ரசலின் தவறான போதகங்களை திருத்தி கூறவும் ஆரம்பித்தார். ரூதர் போர்டு செய்த இந்த காரியங்கள் இயக்கத்தை சேர்ந்த பலருக்கு பிடிக்கவில்லை. இவ்வியக்கத்தின் இரண்டாம் தலைவரான ரூதர் போர்டு, 1942-ல் மரணமடைந்தார்.

**நாதன் நோர்**

சார்லஸ் டாஸ் ரசல், ரூதர் போர்டு ஆகிய இருவருக்கும் பின், மூன்றாம் தலைவராக இயக்கத்தின் முக்கிய பொறுப்பெடுத்தவர் நாதன் நோர். இவரது பதவி காலத்தில் இயக்கம் பரந்து விரிந்து வளரத் தொடங்கியது. இவர் 1905-ல் பிறந்தார். 1961-ம் ஆண்டில் இவர்களுக்கென்று தனியாக பரிசுத்த வேதாகமங்களில் புதிய உலக

மொழிப்பெயர்ப்பு என்னும் ஆங்கில வேதம் தயாரிக்கப்பட்டது. வீடு வீடாக சென்று சாட்சி பகர வேண்டுமென்று வலியுறுத்தியவர் இவர் தான். இவர் நாட்களில் இந்த இயக்கம் அதிவேகமாக பரவியது, வளர்ந்தது. வேதாகமம் வெளியிடுவதோடு நின்றுவிடாது, இவ்வியக்கத்தார் இலக்கியப்பணியிலும் அதிக வேகம் காட்டத் துவங்கினார்கள். இயக்கங்களின் எழுத்துக்களை அச்சடித்து வெளியிடத் தேவையான பணிகள் துரிதமாக செயல்படுத்தப்பட்டன. *1952*-ல் ரூதர் போர்டின் புத்தகங்கள் மட்டும் *2,22,13,639* பிரதிகள் விற்கப்பட்டன. பத்து வருடங்களுக்குள் *130,000,000* பிரதிகள் விற்று தீர்க்கப்பட்டன. இப்படி இலட்சகணக்கில் இவர்கள் புத்தகங்கள், கைபிரதிகள் விற்கப்பட்டன என்று பார்க்கிறோம். *1977*ம் ஆண்டு நாதன் நோர் மரணமடைந்தார்.

**ப்ரெட்ரிக் ப்ரென்ஸ்**

அதன்பின்பு ப்ரெட்ரிக் ப்ரென்ஸ் என்பவர் இந்த இயக்கத்தின் தலைவரானார். இவர் நாதன் நோர் விட்டு சென்ற பணியை அப்படியே தொடர்ந்தார். இவரே மொழிபெயர்ப்பு குழுவின் பிரதிநிதியாகவும், பேச்சாளராகவும் இருந்தார். இவர்களுடைய அலுவலக பிரிவுகள் மிகவும் நேர்த்தியாக செய்யப்பட்டிருக்கிறது. மேலிடத்தில் வாரிய இயக்குனர்களும், அடுத்து மத ஊழியர்களும் மண்டல பிரிவு ஊழியர்களும் செயல்பட்டார்கள். சிறு குழுக்களின் தலைவர்களை உதவியாளர் அல்லது கூட்டாளிகள் என்றும், இவர்கள் கூடி வரும் இடத்தை இராஜ்ஜிய வளாகம் Kingdom Hall என்றும் அழைக்கின்றனர். ஒவ்வொரு குழுவுக்கும், தலைவர் ஊழிய இயக்குனராக பொறுப்பு வகித்த பின்பு, மண்டல பிரிவு இயக்குனராக பொறுப்பேற்பார், ஊழிய கமிட்டியுடன் இவர் செயல்படுவார். வெளி ஊழியத்தை மறு அமைப்பு என்று சொல்லுகிறார்கள். மேலிருந்து கீழ் வரை கோபுரம் போல அமைப்பு கொண்ட இதில் ஒவ்வொருவரும் தங்கள் தலைவருக்கு கேள்வி கேட்காமல் கீழ்படிகின்றார்கள். இந்த கூட்டத்தார் இப்படித்தான் செயல்படுவார்கள். இவர்களுக்கு என்று முக்கியமான ஒன்பது கொள்கைகள் உண்டு இந்த ஒன்பது கொள்கைகளை பிரதானப்படுத்தி வைத்திருக்கிறார்கள்

**யெகோவா சாட்சிகளின் முக்கிய கொள்கைகள்:**

1. **யெகோவாவே தேவன்.**

   இயேசுகிறிஸ்து யெகோவாவால் சிருஷ்டிக்கப்பட்டவர். இப்படிச் சொல்வதின்மூலம் இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத்தை மறுதலிக்கிறார்கள். இவர்கள் இதற்காக தவறாக பயன்படுத்தும் வேத வசனங்கள் ஆறு.

*1)* யோவான் *14:28* என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார்.

*2)* லூக்கா *18:19* நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனும் இல்லையே.

*3) 1 கொரி.11:3* கிறிஸ்துவுக்கு தேவன் தலையாயிருக்கிறார்.

*4) 1 கொரி. 15:28* குமாரன் தேவனுக்கு கீழ்ப்பட்டிருக்கிறார்.

*5) வெளி 3:14* தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியானவர் இயேசு

*6) கொலோ. 1:15* தேவனுடைய சிருஷ்டிக்கு முந்தினவர் இயேசு.

இந்த வசனங்களின்படி இயேசு கிறிஸ்து தேவனால் சிருஷ்டிக்கப்பட்டவர், தேவனுக்கு கீழானவர் என்று நம்புகின்றனர். இது தவறான போதனை என்பது நம் கொள்கை. இதற்கு நாம் பதிலளிப்போம்.

<u>இயேசுகிறிஸ்துவைப் பற்றி வேதம் கூறுவதென்ன?</u>

*ஏசாயா 7:14 மத்தேயு 1:23* கன்னிகையின் மைந்தன் இம்மானுவேல் என்றழைக்கப்படுவார். இம்மானுவேல் என்றால் தேவன் நம்முடனிருக்கிறார்.

- *ஏசாயா 9:6*
  நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்... அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனை கர்த்தர், வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதான பிரபு.
- *யோவான் 1:1, 2, 14*
  ஆதியிலே வார்த்தை இருந்தது அந்த வார்த்தை தேவனாயிருந்தது அவர் ஆதியிலே தேவனோடிருந்தார்
- அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார் அவருடைய மகிமையைக் கண்டோம் அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது.
- *யோவான் 5:17,18*

இயேசு அவர்களை நோக்கி: என் பிதா இதுவரைக்கும் கிரியைசெய்துவருகிறார். நானும் கிரியைசெய்துவருகிறேன் என்றார்.

அவர் ஓய்வுநாள் கட்டளையை மீறினதுமல்லாமல், தேவனைத் தம்முடைய சொந்தப் பிதா என்றுஞ்சொல்லித் தம்மை தேவனுக்குச் சமமாக்கினபடியினாலே, யூதர்கள் அவரைக் கொலைசெய்யும்படி அதிகமாய் வகைதேடினார்கள்.

- *யோவான் 10:30*

நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் என்றார்.

- *யோவான் 10:33*

உன்னை தேவன் என்று சொல்லுகிறாயே என்று மக்கள் கூறினர்.

"யூதர்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: நற்கிரியையினிமித்தம் நாங்கள் உன்மேல் கல்லெறிகிறதில்லை நீ மனுஷனாயிருக்க, உன்னை தேவன் என்று சொல்லி இவ்விதமாக தேவதூஷணஞ் சொல்லுகிறபடியினால் உன்மேல் கல்லெறிகிறோம் என்றார்கள்."

**யோவான் 14:9-11** என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்.

அதற்கு இயேசு: பிலிப்புவே, இவ்வளவுகாலம் நான் உங்களுடனேகூட இருந்தும் நீ என்னை அறியவில்லையா? என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான் அப்படியிருக்க, பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று நீ எப்படி சொல்லுகிறாய்?

நான் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறதை நீ விசுவாசிக்கிறதில்லையா? நான் உங்களுடனே சொல்லுகிற வசனங்களை என் சுயமாய்ச் சொல்லவில்லை. என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளைச் செய்துவருகிறார்.

நான் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறதை நம்புங்கள் அப்படியில்லாவிட்டாலும் என் கிரியைகளினிமித்தமாவது என்னை நம்புங்கள்.

**யோவான் 20:28**

தோமா அவருக்குப் பிரதியுத்தரமாக: என் ஆண்டவரே! என் தேவனே! என்றான்.

**கொலோ.1:15**

அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபம். அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்.

**கொலோ. 2:9**

ஏனென்றால், தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது.

**1 தீமோ.3:16**

தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார். குமாரனை நோக்கி தேவனே உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது.

"அன்றியும், தேவபக்திக்குரிய இரகசியமானது யாவரும் ஒப்புக்கொள்ளுகிறபடியே மகா மேன்மையுள்ளது. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார், ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார், தேவதூதர்களால் காணப்பட்டார், புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார், உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார், மகிமையிலே ஏறெடுத்துக்கொள்ளப்பட்டார்."

1 யோவான் 5:20 இயேசுகிறிஸ்து மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமாயிருக்கிறார்.

"அன்றியும், நாம் சத்தியமுள்ளவரை அறிந்துகொள்வதற்கு தேவனுடைய குமாரன் வந்து நமக்குப் புத்தியைத் தந்திருக்கிறாரென்றும் அறிவோம்' அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து என்னப்பட்ட சத்தியமுள்ளவருக்குள்ளும் இருக்கிறோம்' இவரே மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமாயிருக்கிறார்."

புதிய ஏற்பாட்டில் இயேசுகிறிஸ்து கர்த்தர் என்று 663 இடங்களில் என்று வருகிறது. கர்த்தர் என்பதற்கு கிரேக்க மொழியில் கூரியோஸ் (Kurios) என்று வருகிறது. புதிய ஏற்பாடு கிரேக்க மொழியில் எழுதப்பட்டது, பழைய ஏற்பாடு எபிரேய மொழியில் எழுதப்பட்டது. எபிரேய மொழியில் வரும் "யெகோவா" என்பதும் கிரேக்க மொழியில் கூரியோஸ் என்பதும் ஒரே கருத்தில்தான், கர்த்தர் என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. எனவே இயேசுகிறிஸ்துவே யெகோவா.

**<u>இயேசுகிறிஸ்து தெய்வீகமானவர்:</u>**

இயேசுகிறிஸ்துவின் தெய்வீகத்தை விளக்கும் சில வசனங்கள்:

"பிதாவானவர் தம்மில்தாமே ஜீவனுடையவர். குமாரனும் தம்மில் தாமே ஜீவனுடையவர்" அதாவது இயேசுவை யாரும் சிருஷ்டிக்கவில்லை என்பது இதன் பொருள். (யோ.5:26). "நானே ஜீவன்" (யோ.14:6).

"அவருக்குள் ஜீவன் இருந்தது. அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது" (யோ.1:4). "என் ஜீவனை கொடுக்கவும் எனக்கு அதிகார முண்டு. அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு" (யோ. 10:18).

தேவன் சர்வ வல்லவர், சகலத்தையும் அறிந்தவர். எங்கும் எப்போதும் இருக்கக்கூடியவர், மாறாதவர் பாவத்தை மன்னிக்கிறவர், சிருஷ்டிக்கிறவர். இத்தனை தெய்வீகத் தன்மைகளையும் இயேசுகிறிஸ்துவிடம் காண்கிறோம்.

**<u>இயேசுகிறிஸ்து சர்வவல்லவர்:</u>**

"வானத்திலும் பூமியிலும் சர்வ அதிகாரமும் எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது" (மத்.28:18).

இயேசுகிறிஸ்துவே சர்வ வல்லமையுள்ள கர்த்தர், மரணத்தின்மேலும், பாதாளத்தின் மேலும் அதிகாரமுடையவர்" (வெளி.1:18).

இயேசுகிறிஸ்து சகலத்தையும் அறிந்தவர்:

"நாத்தான்வேலை பார்த்து நீ அத்திமரத்தின் கீழிருக்கும்போது உன்னை கண்டேன் என்றார்" (யோவா. 1:48).

மனுஷருடைய எண்ணங்களையெல்லாம் அவர் அறிந்திருந்தார்" (யோ.2:25).

இயேசுகிறிஸ்து எங்கும், எப்போதும் இருக்கக்கூடியவர். இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்" *(மத்.18:20).* "இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்"

**இயேசுகிறிஸ்து மாறாதவர்:**

"இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர்" *(எபி.13:8).*

**இயேசுகிறிஸ்து பாவத்தை மன்னிக்கிறார்:**

"உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது'' *(மாற்கு 2:5-12).*

**இயேசுகிறிஸ்து சிருஷ்டி கர்த்தர்:**

"சகலமும் அவர் (இயேசுகிறிஸ்து) மூலமாய் உண்டாயிற்று" *(யோ.1:3,10)*

அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது. சகலமும் அவரைக்கொண்டும் அவருக்கென்றும்சிஷ்டிக்கப்பட்டது" *(கொலோ.116 எபே. எபி.1:2,10).*

**இயேசுகிறிஸ்துவை தொழுது கொண்டனர்:**

குஷ்டரோகி இயேசுவைப் பணிந்துகொண்டான்" *(மத்.8:2),*

"தலைவன் இயேசுவைப் பணிந்துகொண்டான்" *(மத்.9:18),*

"படவிலிருந்தவர்கள் அவரைப் பணிந்து கொண்டார்கள்'' *(மத்.14:33),*

"ஒரு பெண் இயேசுவைப் பணிந்துகொண்டாள்" *(மத்.15:25),*

செபதேயுவின் குமாரனுடைய தாய் அவரைப் பணிந்துகொண்டாள்'' *(மத்.20:20)*

"சீஷர்கள் அவர் பாதங்களைத் தழுவி அவரைப் பணிந்துகொண்டார்கள்" *(மத்.28:9,37),*

மேற்கூறிய வசனங்களின் ஆதாரத்துடன் இயேசு கிறிஸ்துவே மாம்சத்தில் வெளிப்பட்ட தேவன் என்பதை தெளிவாக அறிந்துகொள்ள இயலும்.

**<u>2. இயேசு சரீரத்தில் மரித்தார், ஆவியில் உயிர்ப்பிக்கப்பட்டார்.</u>**

இயேசு கிறிஸ்துவின் சரீர உயிர்த்தெழுதலை இவர்கள் மறுதலிக்கிறார்கள்.

வேத வசனங்களை ஆராய்வோம்:

இயேசு தாமே அவர்கள் நடுவிலே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார். அவர்கள் கலங்கி, பயந்து, ஒரு ஆவியைக் காண்கிறதாக நினைத்தார்கள். அவர் அவர்களை

நோக்கி: நீங்கள் ஏன் கலங்குகிறீர்கள் உங்கள் இருதயங்களில் சந்தேகங்கள் எழும்புகிறதென்ன? நான்தான் என்று அறியும்படி என் கைகளையும் என் கால்களையும் பாருங்கள். என்னைத் தொட்டுப் பாருங்கள் நீங்கள் காண்கிறபடி, எனக்கு மாம்சமும் எலும்புகளும் உண்டாயிருக்கிறதுபோல, ஒரு ஆவிக்கும் இராதே என்று சொல்லி, தம்முடைய கைகளையும், கால்களையும் அவர்களுக்குக் காண்பித்தார், பின்பு புசிக்கிறதற்கு ஏதாகிலும் உண்டா? என்று கேட்டு பொரித்த மீன் கண்டத்தையும், தேன்கூட்டுத் துணிக்கையையும் வாங்கிப் புசித்தார் (லூக்.24:36-44).

சிறு பிள்ளையும் விளங்கக்கூடிய அளவில் இங்கே தெளிவாக கூறப்பட்டுள்ளது, யெகோவா சாட்சிகளுக்கு ஏன் விளங்காமல் போனது.

### 3. <u>யெகோவா சாட்சிகள் திரித்துவத்தை நம்புவதில்லை:</u>

யெகோவா தேவன், இயேசு சிருஷ்டிக்கப்பட்டவர், பரிசுத்த ஆவி ஆள்த்துவமுடையவரல்ல, காண இயலாத ஒரு சக்தி அவ்வளவு தான் என்று போதிக்கின்றனர். இந்த கொள்கையும் தவறானதாகும். திரித்துவத்தை விளக்குவது கடினமான காரியம் என நமக்கு நன்கு தெரியும். திரித்துவத்தைப் பற்றி தெளிவாக யாரும் விளக்கிவிட முடியாது என்பது உண்மை, நம்மால் விளக்க முடியாததால் வேத சத்தியம் தவறானதல்ல.

"தேவன்" என்பதற்கு எபிரேய வார்த்தை "எலோகிம்". இதை அப்படியே மொழி பெயர்த்தால் தேவர்கள் என்று வரும். ஆனால் வினைச்சொல் ஒருமையிலேயே வருகிறது. உதாரணமாக (ஆதி.11 ஆதியிலே தேவர்கள் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார் என்று கூறலாம். சிருஷ்டித்தார் என்பது ஒருமையில் தான் வருகிறது. எனவே தேவன் ஒன்றுக்கு மேற்ப்பட்ட ஆள்த்துவமுடையவர் என்ற கூற்று புலனாகிறது.

இயேசு... ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார். நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம் (யோவான் 14:23). பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் மூவர், பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்பார்களே. இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள் (1யோவான் 5:7).

லூக்கா 3:21,22-ல் இயேசுவின் ஞானஸ்நானத்தில் பரிசுத்த ஆவியானவர் புறா ரூபங்கொண்டு அவர் இறங்கினனதயும் பிதா பரலோகத்திலிருந்து பேசுவதையும் காண்கிறோம்.

மத். 28:19-ல், பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே ஞானஸ்தானம் கொடுக்கும்படி இயேசு கட்டளையிட்டார்.

2 கொரிந்தியரில், ஆசீர்வாத ஜெபத்தில் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவையும், தேவனையும் பரிசுத்த ஆவியையும் காண்கிறோம்.

"கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்."

தேவனையும், பரிசுத்த ஆவியையும் காண்கிறோம் மூன்று தேவர்களல்ல, தேவன் ஒருவரே, ஒரே தேவனில் மூன்று ஆள்த்துவம் இருக்கிறது. இதை எளிதில் விளங்கிக் கொள்ள முடியவில்லை, ஆனாலும் ஆதிகாலமுதல் இந்த உபதேசம் அடிப்படையானதாக சபைத் தலைவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு வந்துள்ளது.

கி.பி.1914ல் இயேசுகிறிஸ்து வந்துவிட்டார். நாம் இப்போது ஆயிர வருட ஆட்சியில் இருக்கிறோம். யெகோவா தன் ராஜ்யத்தை உலகத்தில் நிறுவி விட்டார் என்பது இவர்கள் கொள்கை.

ஆயிர வருட ஆட்சியில் பிசாசு பாதாளத்தில் கட்டி வைக்கப்படுவான் என்று கூறப்பட்டுள்ளது. (வெளி.201,2). இப்போது அதிக வேகத்தோடு அல்லவா வேலை செய்து கொண்டு இருக்கிறான். கட்டப்படவில்லையே அது தான் உண்மை.

**இயேசு எருசலேமை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்வார் (வெளி. 20:4: எரே.23:5,6).**

"அன்றியும், நான் சிங்காசனங்களைக் கண்டேன் அவைகளின்மேல் உட்கார்ந்தார்கள் நியாயத்தீர்ப்புக் கொடுக்கும்படி அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. இயேசுவைப்பற்றிய சாட்சியினிமித்தமும் தேவனுடைய வசனத்தினிமித்தமும் சிரச்சேதம்பண்ணப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களையும், மிருகத்தையாவது அதின் சொரூபத்தையாவது வணங்காமலும் தங்கள் நெற்றியிலும் தங்கள் கையிலும் அதின் முத்திரையைத் தரித்துக்கொள்ளாமலும் இருந்தவர்களையும் கண்டேன். அவர்கள் உயிர்த்து கிறிஸ்துவுடனேகூட ஆயிரம் வருஷம் அரசாண்டார்கள்."

"இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது தாவீதுக்கு ஒரு நீதியுள்ள கிளையை எழும்பப்பண்ணுவேன் அவர் ராஜாவாயிருந்து, ஞானமாய் ராஜரீகம்பண்ணி, பூமியிலே நியாயத்தையும் நீதியையும் நடப்பிப்பார்.

அவர் நாட்களில் யூதா இரட்சிக்கப்படும், இஸ்ரவேல் சுகமாய் வாசம்பண்ணும் அவருக்கு இடும் நாமம் நமது நீதியாயிருக்கிற கர்த்தர் என்பதே."

பூமியெங்கும் அவர் ஒருவர்தான் ராஜாவாயிருப்பார் (சகரியா 14:9. சங். 72:6-11). இன்று யேசபேல், ஆகாப் போன்றவர்களல்லவா ஆட்சி செய்கிறார்கள்!

அப்பொழுது கர்த்தர் பூமியின்மீதெங்கும் ராஜாவாயிருப்பார் அந்நாளில் ஒரே கர்த்தர் இருப்பார், அவருடைய நாமமும் ஒன்றாயிருக்கும்.

"புல்லறுப்புண்ட வெளியின்மேல் பெய்யும் மழையைப்போலவும், பூமியை நனைக்கும் தூறலைப்போலவும் இறங்குவார்.

அவருடைய நாட்களில் நீதிமான் செழிப்பான் சந்திரனுள்ளவரைக்கும் மிகுந்த சமாதானம் இருக்கும்.

ஒரு சமுத்திரந்தொடங்கி மறுசமுத்திரம்வரைக்கும், நதிதொடங்கி பூமியின் எல்லைகள் வரைக்கும் அவர் அரசாளுவார்.

வனாந்தரத்தார் அவருக்கு முன்பாகக் குனிந்து வணங்குவார்கள், அவருடைய சத்துருக்கள் மண்ணை நக்குவார்கள்.

தர்ஷீசின் ராஜாக்களும் தீவுகளின் ராஜாக்களும் காணிக்கைகளைக் கொண்டுவருவார்கள், ஷேபாவிலும் சேபாவிலுமுள்ள ராஜாக்கள் வெகுமானங்களைக் கொண்டுவருவார்கள்.

சகல ராஜாக்களும் அவரைப் பணிந்துகொள்வார்கள், சகல ஜாதிகளும் அவரைச் சேவிப்பார்கள்.''

***மரித்த பரிசுத்தவான்கள் உயிர்த்து இயேசுவுடன் ஆட்சி செய்வார்கள் (வெளி.20:4.6 2 தீமோ.2:11).***

முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான், இவர்கள்மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை. இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக, ஆசாரியராயிருந்து, அவரோடேகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள்.

இந்த வார்த்தை உண்மையுள்ளது என்னவெனில், நாம் அவரோடேகூட மரித்தோமானால், அவரோடேகூட பிழைத்துமிருப்போம்.

***இஸ்ரவேலர் எல்லாரும் இயேசுவை ஏற்றுக்கொள்வார்கள் (சகரியா 12:10-13 ஏசாயா 66:8).***

நான் தாவீது குடும்பத்தாரின்மேலும் எருசலேம் குடிகளின்மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன். அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப் பார்த்து, ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்.

அந்நாளிலே மெகிதோன் பட்டணத்துப் பள்ளத்தாக்கின் ஊராகிய ஆதாத்ரிம்மோனின் புலம்பலைப்போல எருசலேமின் புலம்பல் பெரிதாயிருக்கும்.

தேசம் புலம்பிக்கொண்டிருக்கும் ஒவ்வொரு வம்சமும் தனித்தனியாகப் புலம்பும் தாவீது குடும்பத்தார் தனியேயும், அவர்கள் ஸ்திரீகள் தனியேயும், நாத்தான் குடும்பத்தார் தனியேயும், அவர்கள் ஸ்திரீகள் தனியேயும்,

லேவி குடும்பத்தார் தனியேயும், அவர்கள் ஸ்திரீகள் தனியேயும், சீமேயி குடும்பத்தார் தனியேயும், அவர்கள் ஸ்திரீகள் தனியேயும்,''

இப்படிப்பட்டவைகளைக் கேள்விப்பட்டது யார்? இப்படிப்பட்டவைகளைக் கண்டது யார்? ஒரு தேசத்துக்கு ஒரேநாளில் பிள்ளைப்பேறு வருமோ? ஒரு ஜாதி ஒருமிக்கப் பிறக்குமோ? சீயோனோவெனில், ஒருமிக்க வேதனைப்பட்டும் தன் குமாரரைப் பெற்றும் இருக்கிறது.

**இயற்கையில் மாற்றமுண்டாகும். வளப்பமுண்டாகும். (சகரியா 14:4-10 ஏசா 35:1-5)**

அந்நாளிலே அவருடைய பாதங்கள் கிழக்கே எருசலேமுக்கு எதிரே இருக்கிற ஒலிவமலையின்மேல் நிற்கும், அப்பொழுது மகா பெரிய பள்ளத்தாக்கு உண்டாகும்படி ஒலிவமலை தன் நடுமையத்திலே கிழக்கு மேற்காய் எதிராகப் பிளந்துபோம். அதினாலே, ஒரு பாதி வடபக்கத்திலும், ஒரு பாதி தென்பக்கத்திலும் சாயும்.

அப்பொழுது என் மலைகளின் பள்ளத்தாக்கு வழியாய் ஓடிப்போவீர்கள், மலைகளின் பள்ளத்தாக்கு ஆத்சால்மட்டும் போகும். நீங்கள் யூதாவின் ராஜாவாகிய உசியாவின் நாட்களில் பூமியதிர்ச்சிக்குத் தப்பி ஓடிப்போனதுபோல் ஓடிப்போவீர்கள், என் தேவனாகிய கர்த்தர் வருவார் தேவரீரோடே எல்லாப் பரிசுத்தவான்களும் வருவார்கள்.

அந்நாளில் வெளிச்சம் இல்லாமல், ஒருவேளை பிரகாசமும் ஒருவேளை மப்புமாயிருக்கும்.

ஒருநாள் உண்டு, அது கர்த்தருக்குத் தெரிந்தது அது பகலுமல்ல இரவுமல்ல. ஆனாலும் சாயங்காலத்திலே வெளிச்சமுண்டாகும்.

அந்நாளிலே ஜீவத்தண்ணீர்கள் எருசலேமிலிருந்து புறப்பட்டு, பாதி கிழக்குச் சமுத்திரத்துக்கும், பாதி மேற்குச் சமுத்திரத்துக்கும் போய், மாரிகாலத்துக்கும் கோடைகாலத்துக்கும் இருக்கும்.

அப்பொழுது கர்த்தர் பூமியின்மீதெங்கும் ராஜாவாயிருப்பார், அந்நாளில் ஒரே கர்த்தர் இருப்பார், அவருடைய நாமமும் ஒன்றாயிருக்கும்.

தேசமெல்லாம் கேபா தொடங்கி எருசலேமுக்குத் தெற்கே இருக்கிற ரிம்மோன்வரைக்கும் சமபூமியாகத் திருத்தப்படும். எருசலேமோ உயர்ந்ததாகி, தன் ஸ்தானத்திலே பென்யமீன் வாசல்தொடங்கி முதல்வாசலென்கிற ஸ்தலமட்டும் கோடிவாசல் வரைக்கும், அனானெயேல் கோபுரம் துவக்கி ராஜாவின் திராட்ச ஆலைகள்மட்டும் குடியேற்றப்பட்டிருக்கும்.

வனாந்தரமும் வறண்ட நிலமும் மகிழ்ந்து, கடுவெளி களித்து, புஷ்பத்தைப்போல செழிக்கும்.

அது மிகுதியாய்ச் செழித்து பூரித்து ஆனந்தக்களிப்புடன் பாடும், லீபனோனின் மகிமையையும் கர்மேல் சாரோன் என்பவைகளின் அலங்காரமும் அதற்கு அளிக்கப்படும் அவர்கள் கர்த்தருடைய மகிமையையும், நமது தேவனுடைய மகத்துவத்தையும் காண்பார்கள்.

தளர்ந்த கைகளைத் திடப்படுத்தி, தள்ளாடுகிற முழங்கால்களைப் பலப்படுத்துங்கள்.

மனம் பதறுகிறவர்களைப் பார்த்து: நீங்கள் பயப்படாதிருங்கள், திடன்கொள்ளுங்கள் இதோ, உங்கள் தேவன் நீதியைச் சரிக்கட்டவும், உங்கள் தேவன் பதிலளிக்கவும் வருவார். அவர் வந்து உங்களை இரட்சிப்பார் என்று சொல்லுங்கள்.

அப்பொழுது குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டுபோம்."

மிருகங்கள் தீமை செய்யாது, ஒற்றுமையாக இருக்கும். ஓநாய் ஆட்டுக்குட்டியோடே தங்கும். புலி வெள்ளாட்டுக்குட்டியோடே படுத்துக் கொள்ளும், கன்றுக்குட்டியும், பாலசிங்கமும், காளையும், ஒருமித்திருக்கும் (ஏசா11:6)

பசுவும், கரடியும் கூடிமேயும்" ஏசா.11:7.

"சிங்கம் மாட்டைப்போல் வைக்கோல் தின்னும்" ஏசா.11:7.

ஆயுசு நாட்கள் நீடித்திருக்கும். 100 வயதுள்ளவனும் வாலிபன் என்று எண்ணப்படுவான் (ஏசா.65:20).

**இயேசுகிறிஸ்துவின் தியாகபலி மட்டும் நம்மை இரட்சிக்கப் போதுமானதல்ல.**

ஆதாமின் பாவத்திற்கு பரிகாரம் இயேசு கிறிஸ்துவின் மரணத்தால் உண்டாகியிருக்கிறது.

மனித இரட்சிப்புக்கு இயேசுகிறிஸ்துவின் பலி போதுமானதல்ல. ஒருவன் யெகோவாவிற்கு உண்மையாயிருந்து, வசன போதனை, பிரசங்கங்களை கேட்டால்தான் இரட்சிக்கப்படுவான் என்று நம்புகின்றனர்.

வேதம் இதற்கு பதில் கூறுவது:

- கிருபையினாலே இரட்சிக்கப்படுகிறோம் (எபே.2:8,9).
- கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவன் புது சிருஷ்டியாயிருக்கிறான் (2 கொரி.5:17)
- இயேசுவை விசுவாசித்தால் இரட்சிப்பு கிடைக்கிறது (அப்.16:31).
- குமாரனை உடையவன் நித்திய ஜீவனை உடையவன் (1 யோ.5:12)
- இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும் (1யோ1:7)

**ஆத்துமா நித்தியமானதல்ல, ஆக்கினைத் தீர்ப்பும் நித்தியமல்ல.**

வேதம் கூறுவது என்ன?

***மத்தேயு 24:41,46***

நித்திய அக்கினி, நித்திய ஆக்கினை பாவிகளின் பங்கு.

***வெளி.20.15***

ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டவனாகக் காணப் படாதவனெவனோ, அவன் அக்கினிக்கடலிலே தள்ளப்படுவான்

மத்தேயு 10:28:

இவ்வசனத்தை ஆதாரமாகக் கொண்டு பாவிகளின் ஆத்துமா அழிக்கப்படும். நித்திய ஆக்கினையடைய மாட்டார்கள் என நம்புகின்றனர். அப்படியானால் வெளி.20:12-ல் மரித்தோராகிய சிறியோரையும், பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக் கண்டேன் என்று யோவான் சொல்வது எப்படி? அழிக்கப்பட்டுவிட்டால் எப்படி இங்கே நிற்பார்கள்!

**வெளி.14:1-5-ல் கூறப்பட்டுள்ள 1,44,000 நாங்கள் தான் என்கிறார்கள்**

பிரச்சனை இங்கே தான் ஆரம்பமாகிறது. ஏழாம் நாள் ஓய்வுக்காரரும் நாங்கள் தான் இந்தக் கூட்டம் என்கிறார்கள். தமது அருமை நண்பர்கள் இலங்கை (CPM) பெந்தெகொஸ்தேகாரரும் நாங்கள் தான் இவர்கள் என்கிறார்கள்.

யூதர்களில் கோத்திரத்திற்கு 12,000 வீதம் 12 கோத்திரத்தாரும் உபத்திரவ காலத்தில் (வெளி. 7 முத்திரை போடப்பட்டு (வெளி.14) பரலோகத்தில் காணப்படுகிறார்கள் என்றும் நாம் நம்புகிறோம்.

**மற்ற எல்லாருக்கும் மறுபடியும் ஒரு வாய்ப்புக் கொடுக்கப்படும். மற்ற எல்லாருக்கும் ஒரு பரீட்சை (Test) கொடுக்கப்படும். அதில் யெகோவாவிற்கு கீழ்படிகிறவர்களுக்கு நித்திய ஜீவன் கொடுக்கப்படும் என்பது இவர்களின் கொள்கை.** நம் சபையார்களுக்கு இது ஆறுதலாகத் தெரியலாம். அப்படியானால் இங்கே இப்போது எப்படியும் வாழலாம் என்ற தைரியம் வந்துவிடும். ஆனால் வேதம் என்ன கூறுகிறது?

எபி.9:27-ல் "ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும் (பரீட்சை வைப்பது அல்ல) மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது"

**அரசாங்கம் நீதியான, நேர்மையான, உண்மையான நீதிபரிபாலனம் செய்யவில்லை. எனவே நமது அரசாங்கத்திற்கு கீழ்ப்படிய வேண்டாம் என்பது இவர்களது கொள்கை.**

**வேதம் கூறுவது என்ன?**

மேலான அதிகாரமுள்ளவர்களுக்கு கீழ்ப்படிய வேண்டும். தேவனாலேயே எல்லா அதிகாரமும் உண்டாயிருக்கிறது. அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்பது தேவனுக்கு எதிர்த்து நிற்பதாகும் *(ரோமர் 13:1-7)*. ஒழுங்காக வரி கட்டவேண்டும், தீர்வை கட்ட வேண்டும். பயப்பட வேண்டியவனுக்கு பயப்படுங்கள். கனம்பண்ண வேண்டியவனை கனம் பண்ணுங்கள். ராஜாக்களுக்கும், அதிகாரிகளுக்கும் கீழ்படிய வேண்டும் *(1 பேது. 2:13-17)*, ஒரு மெய் கிறிஸ்தவன் தேசத்தின் நல்ல பிரஜையாயிருக்க வேண்டும் என்று தான் வேதம் நமக்கு கற்றுக் கொடுக்கிறது. இவர்கள் இதை ஏற்றுக் கொள்வதில்லை. இன்னொரு பாடத்தில் இந்த *1,44,000* பேருக்கான விளக்கம் பற்றிய விளக்கத்தை கற்றுக்கொள்வோம். இவர்களுடைய வார்த்தைகளை எல்லாம் நாம் கவனமாக கவனிக்க வேண்டும். இயேசுவின் தெய்வீகம் சரியானது அல்ல, உயிர்த்தெழுதல் வரை இயேசு தெய்வீகமானவர் அல்ல, சரீரம் மரணத்திலிருந்து எழும்பவில்லை. இரண்டாம் வருகை *கி.பி.1874*-ல் வரும் பரிசுத்தவான்கள் உயிரோடெழும்புவது. *கி.பி.1878*-ல் வரும் இயேசு இப்பொழுது ஆவியின் வடிவமாகவே இருக்கிறார். *கி.பி.1878*-ல் முதல் கிறிஸ்தவ சபை தேவனால் புறக்கணிக்கப்பட்டது. துன்மார்க்கருக்கும் மறுவாழ்வு உண்டு, தேவன் அன்புள்ளவரானபடியால் துன்மார்க்கரை தண்டிக்காமல் மன்னித்து அனுப்பி விடுவார். நித்திய தண்டனை என எதுவும் கிடையாது, நரகம் என்பதே இல்லை போன்ற பல்வேறு உபதேசங்களை மக்கள் மத்தியில் பரப்பி, அவர்களை கிறிஸ்துவின் சுத்த சுவிசேஷத்திலிருந்து இவ்வியக்கம் மக்களை திசை திருப்பி வருகின்றது. குறிப்பாக இக்கூட்டத்தினர் கிறிஸ்தவர்களையே இலக்காக கொண்டு செயல்படுகின்றனர். உலகம் முழுவதிலும் உள்ள துர்உபதேச கூட்டத்தில் யெகோவா சாட்சிகள் இயக்கம் மிகப் பிரபலமான மற்றும் வசதியான இயக்கமாக இருக்கிறது. இந்த இயக்கத்தின் உறுப்பினர்கள் ஆட்டுத்தோலை போர்த்திக்கொண்டு திரியும் ஓநாய்போல் செயல்படுகிறார்கள். இவர்களின் கூட்டத்தில் இழுப்புண்டு போனவர்களை கிறிஸ்துவினிடம் திரும்பி வர நாம் ஜெபிக்க வேண்டும். அதற்கான முயற்சிகள் எடுத்து அவர்களோடு பேசி சத்தியத்தை அறிந்து கொள்ள நாம் உழைக்க வேண்டும். சத்தியத்தில் கவனம் செலுத்தும் நம் சபை தலைவர்களும் போதகர்களும் விசுவாசிகளும் இதிலும் சற்று கவனம் செலுத்தி ஆத்துமாக்களை மீட்டுக்கொள்ள வேண்டும். இந்த யெகோவா சாட்சிகள் இயேசுவையும் திரித்துவத்தையும் நம்புவது கிடையாது. இவர்களிடத்தில் கவனமாக இருக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. அடுத்த பாடத்தில் இன்னொரு உபதேசத்தை நாம் கற்றுக் கொள்வோம் கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பராக! ஆமென்!!

**<u>கேள்விகள்:</u>**

1) யெகோவா சாட்சிகளின் இயக்கம் உருவான விதம் குறித்தும் அவ்வியக்கத்தின் தலைவர்கள் மற்றும் அவர்களின் செயல்பாடுகள் குறித்தும் சற்று விளக்கமாக கூறுக.
2) யெகோவா சாட்சிகளின் இயக்கத்தினுடைய அலுவலக பிரிவுகள் குறித்து கூறுக.
3) யெகோவா சாட்சிகளின் இயக்கத்தின் முக்கியமான ஒன்பது கொள்கைகளின் தலைப்புகளை கூறுக.
4) யெகோவா சாட்சிகளின் இயக்கத்தின் முக்கியமான ஒன்பது கொள்கைகளை வரிசைப்படுத்தி கூறுக.

# நவீனகால தவறான உபதேசங்கள்

## பாடம் - 5

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே அன்பின் வாழ்த்துக்கள். இந்த பாடத்தில் நாம் ஏழாம் நாள் ஓய்வுக்காரர் குறித்து கற்றுக்கொள்ள இருக்கிறோம். எப்போதும் நாம் இந்த தவறான உபதேசங்களை கற்றுக் கொள்ளும்போது, மனதிலே இருக்க வேண்டிய ஒரு காரியம், உபதேசங்களிலே வித்தியாசமானவர்கள் யாவரும் நமக்கு விரோதிகள் அல்லர்.

நாம் ஏழாம் நாள் ஓய்வுக்காரர்களை நேசிக்கிறோம். அவர்களுக்காக ஜெபிக்கிறோம், அவர்கள் செய்யும் பொதுப்பணிகளான சேவைகளை பாராட்டுகிறோம். ஆனால் அவர்களின் போதனைகளை ஏற்றுக்கொள்ள முடியாது. தவறான உபதேசங்கள் எப்படி உருவாகின்றன என்று நாம் கடந்த பாடத்திலே கற்றிருக்கிறோம். தனிப்பட்ட சொப்பனங்களை, வெளிப்பாடுகளை, தீர்க்கதரிசனங்களை தங்கள் உபதேசங்களாக அடித்தளமாக்குதல்தான் இந்த நண்பர்களுக்கு ஏற்ப்பட்ட சோதனை. ஓய்வு நாள் ஆசரிப்புக்காரர்கள், கிறிஸ்டியன் சயன்ஸ் மற்றும் தியோசோபி ஆகிய கொள்கைகள் யாவும் விசித்திரமான பெண்களால் உருவாக்கப்பட்டவைகள். இந்த பெண்கள் நரம்புத்தளர்ச்சியும், அவ்வப்போது சுயபுத்தியை இழந்தவர்களுமாய் இருந்தார்கள் என்று இர்வின் என்பவரும் ரெட்உட் என்பவரும் எழுதுகின்றனர். (இதைக்குறித்து யாரும் வருத்தப்பட வேண்டாம், இவைகள் எழுதப்பட்ட புத்தகத்திலிருந்து மேற்க்கோள் மட்டுமே காட்டப்பட்டிருக்கிறது).

**ஏழாம் நாள் ஓய்வுக்காரரின் தோற்றம்:**

ஏழாம் நாள் ஓய்வு ஆசரிப்பு உபதேசத்தை நிறுவியவர், திருமதி எல்லன் ஓயிட் என்ற பெண். இந்தப் பெண், வில்லியம் மில்லர் போதனைகளை வெகுவாகப் பின்பற்றினார். ஏழாம் நாள் ஓய்வுக்காரர் நடத்தும் மருத்துவமனையில் தலைமை மருத்துவராக இருந்த டாக்டர் வில்லியம் ரசல் என்பவர் நீண்ட காலமாக ஏழாம் நாள் ஆசரிப்பை பின்பற்றினார். அவர் இந்த ஸ்தாபனத்தை நிறுவின திருமதி. எல்லன் ஓயிட்டைப் பற்றி கி.பி 1869-ல் எழுதும்போது, "அந்த அம்மாவுக்கு மூளையிலும் நரம்புகளிலும் பாதிப்பு இருந்தது. அடிக்கடி தரிசனம் காண்பதாக கூறுவார்கள். அது வியாதியினால் உண்டானது" என்று எழுதியுள்ளார்

அதே மருத்துவமனையில் நீண்ட காலம் மருத்துவராயிருந்த டாக்டர் பேர்பீல்ட் கி.பி.1887-ல் இவ்விதம் எழுதினார்... "திருமதி. எல்லன் ஓயிட் நரம்புத் தளர்ச்சியினால் ஏற்பட்ட கோளாறினால் அடிக்கடி எதையாவது தரிசனத்தில் கண்டதாக கூறுவார்கள். ஆனால் வியாதி குணமானபோது சரியாகி விட்டார்". ஓய்வுநாள் கொள்கையை பின்பற்றினவர்தான் இந்த டாக்டர் பேர்பீல்ட். இந்த அம்மா எழுதின "தி கிரேட்

கான்ட்ரோவர்ஸி" (The Great Controversy) (இதன் பொருள் மகா பெரிய முரண்பாடு) என்ற புத்தகம் இவர்களுடைய கொள்கைக்கு அடித்தளமாயிருக்கிறது. இதில் எழுதப்பட்டுள்ள அநேக காரியங்கள் இந்த பெண்ணுக்கு வெளிப்பாடாக கிடைத்தது என்று ஒரு சாரார் கூறினாலும், இவர் எழுதின அநேக சரித்திர நிகழ்ச்சிகள் கீழ்க்காணும் புத்தகங்களிலிருந்து காப்பியடிக்கப்பட்டவை என்று கலிபோர்னியா மாநிலத்திலுள்ள போதகர் குழு ஒன்று இதைக் குறித்து ஆராய்ந்து ஒரு அறிக்கை வெளியிட்டது. அந்த புத்தகங்கள் இவைதான்:

ஓய்வு நாள் சரித்திரம் - ஆசிரியர் ஆண்டரூஸ்

வால்டன்சஸ் சரித்திரம் - எழுத்தாளர் வில்லி

மில்லன் வாழ்க்கை - எழுதியவர் ஓயிட்

புரட்சி எண்ணங்கள் - ஆக்கியோன் ஸ்மித்

ஏழாம் நாள் ஓய்வுக்காரர் கீழ்க்காணும் உபதேசங்களை நம்புகிறோம் என்று கூறுகின்றனர்:

- பரிசுத்த வேதாகமம் தேவ ஆவியானவரால் ஏவப்பட்டு எழுதப்பட்டது.
- தேவன் ஒருவரே
- கிறிஸ்துவின் தெய்வீகம்
- இயேசுவின் கன்னிப் பிறப்பு
- இயேசுவின் அற்புதங்கள்
- இயேசுவின் பாவமற்ற வாழ்க்கை
- இயேசுவின் சரீர மரணம், உயிர்த்தெழுதல்
- இயேசுவின் இரண்டாம் வருகை

இவைகளை இவர்கள் நம்புவதற்காக தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம். ஆனால் நல்ல குடிநீரை தந்து, அதில் சில சொட்டு விஷத்தைக் கலப்பதுபோல, இவர்களின் தவறான சில போதனைகள் இவர்களை தவறான பட்டியலுக்கு கொண்டு வந்துவிட்டது. அது தான் ஒரு கசப்பான உண்மை.

**<u>ஏழாம் நாள் ஓய்வுகாரரின் தவறான போதனைகளில் முக்கியமானவைகள்:</u>**

மனிதனின் பாவமன்னிப்பிற்கு இயேசு கிறிஸ்துவின் பரிகாரப்பலி மட்டும் போதுமானதல்ல. இதை விளக்க சற்று விபரமாக எழுத வேண்டியுள்ளது, பொறுமையுடன் வாசியுங்கள். திருமதி. எல்லன் ஓயிட் தன் குருவாக வில்லியம் மில்லரை மதித்தார். இவர் தானியேல் 8:13,14 வசனங்களை அடிப்படையாகக்கொண்டு இயேசுவின் வருகையை கணக்கிட்டார். எருசலேம் எடுப்பித்து கட்டுவதற்கான கட்டளை வெளிப்பட்டது. தானி. 9:25 கி.மு 457-ல் என்றும்

அதிலிருந்து தானி. 8:14-ல் சொல்லப்பட்டுள்ள நாட்கள் என்பது தீர்க்கதரிசனமாக 2300 வருடங்களைக் குறிக்கிறது என்றும் எனவே இந்த கணக்குப்படி இயேசுகிறிஸ்து கி.பி.1844-ல் வருவார் என்றும் எழுதி இருந்தார். தன் குருவானவர் எழுதினது பொய்யாய்ப் போயிற்று என்று கண்ட திருமதி. எல்லன் ஒயிட், அதற்கொரு புது விளக்கத்தை உருவாக்கினார். தி கிரேட் காணட்ரோவர்சி என்ற புத்தகத்தில் கீழ்க்காணும் காரியத்தை திருமதி.எல்லன் ஒயிட் எழுதியுள்ளார் (பக் 329-422):

வில்லியம் மில்லர் இன்னும் 25 ஆண்டுகளில் இயேசுகிறிஸ்து வருவார் என்று எழுதினார். அவர் அப்படி எழுதின ஆண்டு கி.பி.1818. எனவே கி.பி 1844-ல் இயேசு கிறிஸ்து வருவார் என்றும், எந்த தேதியில் வருவார் என்பதை ஆராய்ந்து அக்டோபர் 22-ல் வருவார் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. கிறிஸ்து வரவில்லை, எதிர்ப்பார்த்த மக்கள் ஏமாந்தனர், இதற்கு வேறு விளக்கம் என்ன என்று ஆராயப்பட்டது. அதன் பலனாக கண்டது என்னவென்றால், பூமியிலுள்ள ஆலயத்தில் பரிசுத்த ஸ்தலம், மகா பரிசுத்த ஸ்தலம் என்ற இரண்டு பகுதிகள் இருக்கிறது. இயேசு கிறிஸ்து பரமேறின பின்பு 18 நூற்றாண்டுகளும் பரலோகத்தில் உள்ள பரிசுத்த ஸ்தலத்தில் தான் இருந்தார். கி.பி.1844-ல் தான் பரிசுத்த ஸ்தலத்தை விட்டு மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் போய் பணிவிடை செய்து கொண்டிருந்ததுபோல, இயேசுவும் பரலோக பரிசுத்த ஸ்தலத்தில் பணிவிடை செய்து கொண்டிருந்தார் என்று இந்த The Great controversy புத்தகத்தில் திருமதி.எல்லன் ஒயிட் எழுதிக் கொண்டு வந்தார்கள். இயேசு கிறிஸ்துவின் இரத்தம் மனந்திரும்பினவர்களுக்காக பரிந்து பேசிக்கொண்டிருக்கிறது. பிதாவாகிய தேவன் பாவங்களை மன்னித்துவிட்டார், ஆனாலும் இன்னும் பரலோக புத்தகத்தில் அது அழிக்கப்படவில்லை. இதனால் பரலோக பரிசுத்த ஸ்தலத்தில் பாவமிருக்கிறது. இயேசு கிறிஸ்து கி.பி 1844-ல் பரலோக பரிசுத்த ஸ்தலத்தை சுத்திகரிக்க ஆரம்பித்துள்ளார். யார் யார் பாவத்தை பரலோக புத்தகத்திலிருந்து நீக்கலாம்? என்று இயேசு கிறிஸ்து ஆராய்ந்து கொண்டிருக்கிறார். இப்படி திருமதி. எல்லன் ஒயிட் எழுதியுள்ளார்கள்.

இந்த புத்தகத்தின் தலைப்பு (The Great controversy) அதன் பொருள் மகா பெரிய முரண்பாடு, சரியாகத்தான் அம்மா பெயர் வைத்துள்ளார்கள். மேலே கூறப்பட்டுள்ள காரியங்களை வாசிக்கும்போது, அழவா? சிரிக்கவா? தலையை பிய்த்துக் கொண்டு ஓடவா? என்று தோன்றலாம். இந்த கொள்கையை நம்புகிறவர்களுக்காக ஜெபியுங்கள். என்ன அர்த்தம் எடுப்பது என்பது புரியாத காரியமாக இருக்கிறது, இப்படி முரண்பாடாக திருமதி. எல்லன் ஒயிட் எழுதியுள்ளார்கள். வேத வசன ஆதாரமில்லாத இந்தப் போதனை, சொப்பனத்தில் கடவுள் காட்டினார் என்ற பெரிய பொய்யுடன் நுழைத்துவிட்டது. இன்றும் கூட வசனத்திற்கு முரண்பட்ட சொப்பனங்களை, வெளிப்பாடுகளை நம்புகிற பேதைகளின் கூட்டத்தார் ஆவிக்குரிய சபைகளிலும் இருக்கிறதை நாம் பார்க்க முடிகிறது.

**இந்த பாடத்தை கவனிக்கிற உங்களுக்கு:**

ஒருவர் மரித்தோரை உயிரோடே எழுப்பக்கூடிய வல்லமையுடையவராக இருந்தாலும், அவர் போதனை வசனத்திற்கு முரண்பட்டது என்றால், அதை ஏற்றுக்கொள்ள வேண்டாம். ஒருவர் மூலம் நடக்கும் அற்புத அடையாளங்கள், அவர் சரியான போதனையுள்ளவர் என்பதற்கு முத்திரைகள் அல்ல. இது சாதாரண மக்களுக்கும் ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்துள்ள அநேகருக்கும் விளங்காமலிருக்கிறதே. கழுதை மூலம் கர்த்தர் பிலேயாமுடன் பேசினார் என்பதற்காக கழுதையை வைத்து நான்கு நாள் பிரசங்கம் பண்ண வைக்க முடியாது.

இயேசு கிறிஸ்து சிலுவையில் இரத்தம் சிந்தி மரித்தபோது, தமது இரத்தமாகிய கிரயத்தை கொடுத்து மனுக்குலத்திற்கான இரட்சிப்பின் கிரியை முடிந்தது என்று சொல்லிவிட்டார். இயேசு கிறிஸ்து 18 நூற்றாண்டுகளும் முதல் அறையிலிருந்து கி.பி 1844-ல் இரண்டாம் அறைக்குள் போயிருக்கிறார் என்று கூறுகிற பொய்யை நம்ப முடியாதபடி இருக்கிறது. இயேசு கிறிஸ்துவே என் பாவங்களை மன்னியும், என் உள்ளத்தில் வாரும் என்று ஜெபிக்கும் போதே, இயேசு நமது பாவங்களை மன்னித்து நமது உள்ளத்தில் வந்து வாழ்கிறாரே. அதன் பின்பு புத்தகத்திலிருக்கும் பாவத்தை அழிக்காமல் இருக்கிறாரென்றால், என்ன காரணம்? இயேசுவின் இரத்தம் தானே பாவத்தைப் போக்குவது, அது சிந்தப்பட்டு சுமார் 20 நூற்றாண்டுகளாயிற்றே, இன்னும் இயேசு பாவத்தை அழிக்க முயற்சித்து, தேடிக்கொண்டிருக்கிறார் என்று கதை விட்டால் எவன் நம்புவான்? சுயபுத்தியை இழந்தவர்கள் போதனையை பின்பற்றும் கூட்டத்தினருக்காக ஜெபியுங்கள்.

**போக்காடு என்பது சாத்தானைக் குறிக்கிறது என்று நம்புகின்றனர்:**

லேவி. 16:8,10 வசனங்களில் போக்காடு என்ற வார்த்தை வருகிறது. அந்த இரண்டு வெள்ளாட்டுக்கடாக்களையுங்குறித்து கர்த்தருக்கென்று ஒரு சீட்டும், போக்காடாக விடப்படும் வெள்ளாட்டுக்கடாவுக்கென்று ஒரு சீட்டும் போட்டு, கர்த்தருக்கென்று சீட்டு விழுந்த வெள்ளாட்டுக்கடாவைப் பாவநிவாரணபலியாகச் சேரப்பண்ணி, போக்காடாக விடப்படச் சீட்டு விழுந்த வெள்ளாட்டுக்கடாவை, அதைக்கொண்டு பாவநிவிர்த்தி உண்டாக்கவும், அதைப் போக்காடாக வனாந்தரத்திலே போகவிடவும், கர்த்தருடைய சந்நிதியில் உயிரோடே நிறுத்தி இஸ்ரவேலின் பாவ நிவாரணத்திற்காக இரண்டு வெள்ளாட்டுக்கடாக்கள் கொண்டுவரப்பட்டன. ஒன்றை பலி செலுத்தினார்கள், மற்றொன்றின் மேல் கைகளை வைத்து அதின் மேல் இஸ்ரவேலருடைய சகல அக்கிரமங்களையும் மீறுதல்களையும் அறிக்கையிட்டு அதை ஒரு ஆள்வசம் கொடுத்து, வனாந்தரத்திற்கு அனுப்பினார்கள். அவன் அதை மக்கள் குடியில்லாத வனாந்தரத்திலே விட்டுவிட்டு வருவான். பழைய ஏற்பாட்டில் அநேக காரியங்கள் மக்களுக்கு விளங்கிக் கொள்ளக்கூடிய அளவிலே செயல்படுத்தப்பட்டது அவை வருங்காலத்திற்குரிய சத்தியங்களுக்கு நிழலாட்டமாய் செய்யப்பட்டு வந்தன

பண்டிகைகளும் பலிமுறைகளும் சடங்காச்சாரங்கள் பலவும் இந்தக் கருத்துடையவைகள். இஸ்ரவேலருடைய பாவங்களை அவர்களை விட்டு கர்த்தர் நீக்கினார் என்பதற்கு அடையாளமாகவே இந்த போக்காடு யாவரும் காணக்கூடிய அளவிலே அனுப்பப்பட்டது.

திருமதி. எல்லன் ஒயிட்டின் விளக்கமென்னவென்றால், கிறிஸ்து பலியாடு அப்படியானல் போக்காடு சாத்தான். அவன் தான் பாவத்தை சுமந்து செல்கிறான். பிரதான ஆசாரியன் பாவ நிவாரணபலியின் மூலம் மக்களின் பாவங்களை நீக்கி, பரிசுத்த ஸ்தலத்தை சுத்திகரித்து, போக்காடின் மேல் பாவம் முழுவதையும் சுமத்தினதுபோல, இயேசு கிறிஸ்து தமது இரத்ததினாலே பரலோக பரிசுத்த ஸ்தலத்தை சுத்திகரித்த பின்பு கடைசியில் சாத்தான் மேல் எல்லா பாவத்தையும் சுமத்திவிடுவார் சாத்தான் மறுபடியும் திரும்பி வராத இடத்திற்கு போய்விடுவான் என்று திருமதி. எல்லன் ஒயிட் அவர்களின் மகா முரண்பாடு புத்தகத்தில் எழுதி வைத்துள்ளார்கள். உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி என்று இயேசு அல்லவா அழைக்கப்பட்டுள்ளார். யோவான் *1:29* போக்காடு சாத்தான் என்றால், அதை வனாந்திரத்திற்கு கூட்டிக்கொண்டு போனது யார்? அவன் அதை விட்டுவிட்டு தன்னை சுத்திகரித்துக் கொண்டு திரும்பி வந்ததாக சொல்லப்பட்டுள்ளதே! அது என்ன வேத வசனங்களை வியாக்கியானப்படுத்த ஒழுங்குகளும் விதிமுறைகளும் உண்டு. வசனத்திற்கு முரண்பட்ட சொப்பனங்களையும் வெளிப்படுத்தல்களையும் ஒதுக்கித் தள்ளுங்கள். கள்ளத்தீர்க்கதரிசிளும் ஜனங்களுக்குள்ளே இருந்தார்கள். அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப்போதகர்கள் இருப்பார்கள் *(2* பேதுரு *2:1)*. இயேசு கிறிஸ்துவே நமது பாவங்களை சுமந்து, தமது இரத்தத்தின் வல்லமைமையினால் நம்மைச் சுத்திகரித்திருக்கிறார் என்பதற்கு ஏராளமான வசனங்கள் உண்டு. சிலவற்றை மட்டும் இங்கே குறிப்பிடுகிறேன் *1* பேதுரு *1:19*, *2:24*, எபே *2:13*, ரோமர் *3:24*, *1* யோவான் *1:7*.

**<u>இயேசு கிறிஸ்து பாவத்தன்மையுடன் இவ்வுலகில் இருந்தார் என்று போதிக்கின்றனர்:</u>**

இதைக்கேட்கும் அநேகருக்கு அதிர்ச்சியுண்டாகலாம், இயேசு இந்த உலகத்தில் எல்லாரையும் போலவே பாவத்தன்மையுடன் தான் பிறந்து வளர்ந்தார். பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க அவரும் அவர்களைப் போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரனார். எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாக வேண்டியிருந்தது. ஆதலால் அவர் சோதிக்கப்பட்டு பாடுபட்டதினாலே அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கிறார் *(*எபி *2:14,17,18)*. இந்த வசனங்களை மேற்க்கோள் காட்டி இயேசு பாவத்தன்மையுடனிருந்தார் என்று கூறுகின்றனர். இல்லாவிட்டால் அவருக்கும் விழுந்துபோன மனுக்குலத்திற்கும் எவ்விதத் தொடர்பும் இருந்திருக்காது என்றும் போதிக்கின்றனர். இது மிகத் தவறான போதனை. வேத வசனம் சொல்வதை கவனிப்போம். இயேசு கிறிஸ்து பாவம் செய்யவில்லை என்பது மட்டுமல்ல, அவர்

பாவத்தன்மையற்றவராகவே இருந்தார். எனவே தான் அவர் மனுகுலத்தின் பாவத்தை தன் மேல் சுமக்கவும், தமது இரத்தத்தினால் பாவப் பரிகாரமும் உண்டுபண்ணவும் முடிந்தது. அவர் நம்முடைய பாவங்களை சுமந்து தீர்க்க வெளிப்பட்டாரென்று அறிவீர்கள், அவரிடத்தில் பாவமில்லை *(1 யோவான் 3:5)*.

இந்த உலகத்தின் அதிபதி வருகிறான் அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை *யோவான் 14:30.* தேவன் தம்முடைய குமாரனைப் பாவ மாம்சத்தின் சாயலாகவும் பாவத்தை போக்கும் பலியாகவும் அனுப்பினார் *ரோமர் 8:3* (சாயலாக மட்டுமே, பாவத்தன்மையுடன் அல்ல என்பதை கவனிக்கவும்). எல்லாவிதத்திலும் நம்மைப் போல சோதிக்கப்பட்டும் பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார் *(எபி. 4:15)*. இயேசு பரிசுத்தரும் குற்றமற்றவரும் மாசில்லாதவருமான பிரதான ஆசாரியர் *(எபி. 7:26)* என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக் கூடும் *(யோவான் 8:46)* என்று இயேசு சவால் விட்டார். பரிசுத்தஆவி உன் மேல் வரும் உன்னதமானவருடைய பலம் உன் மேல் நிழலிடும். ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும் *(லூக்கா 1:35)*. இயேசு பாவத்தன்மையுடன் இருந்திருப்பாரென்றால், இப்படி பிறக்க வேண்டிய அவசியமேயில்லை. எல்லாரையும் போல சாதாரண நிலையில் பிறந்திருப்பார் அப்படி எல்லாரையும் போல் அவர் பாவத்தன்மையுடன் இருந்திருப்பாரென்றால் அவர் மனுக்குலத்தின் பாவங்களை சுமந்து தீர்த்திருக்க முடியாது, தீர்க்கதரிசிகளில் ஒருவராக மட்டுமே இருந்திருப்பார். ஆனால் வேதம் கூறுவதென்ன? அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமானவர் *(கொலோ. 1:15)*, அதாவது அவரே மாம்சத்தில் வெளிப்பட்ட தேவன் ஆமென்!

**மரணத்திற்கு பின் ஆத்துமா தூங்குகிறது என்று போதிக்கின்றனர்.**

திருமதி. எல்லன் ஓயிட் அவர்கள் எழுதும் அடுத்த துர்உபதேசம் இது: பூமியின் தூளிலே நித்திரை பண்ணுகிறவர்களாகிய அநேகர் விழித்து எழுந்திருப்பார்கள் தானி. *12:2)* "மனுஷன் படுத்துக்கிடக்கிறான்... நித்தி தெளிந்து விழிக்கிறதும் இல்லை" *(யோபு 14:12)*.

"அவனுடைய ஆவி பிரியும், அவன் தன் மண்ணுக்குத் திரும்புவான். அந்நாளிலே அவன் யோசனைகள் அழிந்துபோம்" *(சங்.146:4)*.

"மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்" *(பிர.9.5)*

"லாசரு நித்திரையடைந்திருக்கிறான்" *(யோவான் 3:15)*

இதுபோன்ற வசனங்களை ஆதாரமாகக்கொண்டு, மரணத்திற்குப் பின் ஆத்துமா தூங்குகிறது. அதற்கு எந்த உணர்வும் கிடையாது என்று போதிக்கிறாரகள். ஒரு காரியத்தை உபதேசமாக்க வேண்டுமானால், அது சம்பந்தமான முழு வேத

பகுதிகளையும் ஆராய வேண்டும். மேற்கூறிய உபதேசம் தவறு என்பதை கீழ்க்காணும் வசனங்கள் மூலம் நிரூபிக்கலாம்.

லூக்கா 16-ம் அதிகாரத்தில் லாசரு - ஐசுவரியவானின் நிகழ்ச்சியை நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து விளக்குகிறார்:

அ. தரித்திரன் மரித்தான். ஆபிரகாமுடைய மடியிலே கொண்டு போய் விடப்பட்டான் தரித்திரனின் மரித்த ஆத்துமா தூங்கிக்கொண்டிருந்தால் அவன் ஏன் தூங்குகிற ஆபிரகாமின் மடியிலே கொண்டு போய் விடப்பட வேண்டும்.

ஆ. ஐகவரியவான் மரித்து பாதாளத்திலே அவன் வேதனைப்பட்டான்.

இ. தன் கண்களை ஏறெடுத்தான். பார்த்தான்.

ஈ. ஆபிரகாமை நோக்கி கூப்பிட்டான்.

உ. நாவை குளிரப்பண்ண தண்ணீர் கேட்டான்.

ஊ. ஆபிரகாம் ஐசுவரியவானுடன் பேசினான்.

எ. ஐசுவரியவான் உலகிலுள்ள தன் ஐந்து சகோதரர்களை நினைவு கூறுகிறான். இதன்மூலம் மேற்கூறிய உபதேசம் சரியல்ல என்பது தெளிவாகிறது.

2. மரித்தோரின் உயிர்த்தெழுதலை நம்பாத சதுசேயர், ஏழு பேரை திருமணம் செய்த பெண் மறுமையில் யாருடைய மனைவியாக அவள் இருப்பாள் என்று இயேசுவிடம் குறும்புத்தனமான கேள்வியைக் கேட்டனர். இயேசு அவர்களுக்கு விளக்கம் கூறினார்:

தேவன் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபின் தேவனென்று அழைக்கப்படுகிறார். அவர் மரித்தோரின் தேவனாயிராமல் ஜீவனுள்ளோரின் தேவனாயிருக்கிறார் என்றார். அதாவது இவர்களெல்லாரும் இன்னும் உயிரோடு இருக்கிறார்கள் என்றார் (லூக். 20:28-38).

3. நரகம் நித்தியமானதல்ல என்பது மற்றொரு இவர்களின் போதனை: முடிவில் பாவ ஆத்துமாக்கள் அழிக்கப்படுவார்கள். தேவன் அவர்களை நித்திய நித்தியமாய் நரகத்தில் வேதனைப்பட அனுமதிக்கமாட்டார். இரக்கமுள்ள தேவனுடைய தன்மையை கொடூரமாக்குவது நித்திய நரக போதனை என்பது இவர்களின் கூற்று.

இந்த போதனைக்கு அவர்கள் எடுத்துக்காட்டும் வசனங்கள் பல.

பாவம் செய்கிற ஆத்துமா சாகும்" (அல்லது அழியும்) (எசே.18:4),

"ஆத்துமாவையும் சரீரத்தையும் அழிக்க வல்லவர்" (மத்.10:28).

"பக்தியில்லாதவர்கள் அழிந்துபோவார்கள்" (2 பேதுரு 3:7), ஒரு காரியத்தை புரிந்துகொள்ள வேண்டும்.

பாவிகள் தொடர்ந்து நரகத்தில் வேதனைப்பட வேண்டும் என்று நாம் யாரும் விரும்பவில்லை. ஆனால் வசனங்கள் அப்படிப் போதிக்கின்றதே"

"நரக அக்கினியிலே அவர்கள் புழு சாவாமலும் அக்கினி அவியாமலுமிருக்கும்" (மாற்கு 9:46,48).

"பாவிகளை நித்திய அக்கினியிலே போடுங்கள் என்பார்" (மத்.25:41) "பாவிகள் நித்திய ஆக்கினை அடைவார்கள்" (மத்.25:46).

"அவர்களுடைய வாதையின் புகை சதாகாலங்களிலும் எழும்பும். இரவும் பகலும் இளைப்பாறுதலிராது" (வெளி.14:11),

நரகத்தில் நித்தியமாய் வேதனைப்படுவது என்பது கொடூரமானதாகவே இருக்கின்றது. ஆனால் வசனம் போதிப்பதை நாம் மாற்றக்கூடாதே!

4. ஏழாம் நாளை ஓய்வுநாளாக ஆசரிப்பதை மிக அதிகம் வலியுறுத்துகின்றனர்.

இவர்கள் அதிகம் வலியுறுத்துவதால் இந்தப் பெயரில் அழைக்கப்படுகின்றனர் ஏழாம் நாள் ஓய்வுக்காரர் என்று இதை அதிகம் வலியுறுத்த ஆரம்பித்ததற்கும் அடிப்படையாயிருந்தது ஒரு சொப்பனம்தான். திருமதி. எல்லன் ஓயிட் ஆரம்ப நாட்களில் இதை அதிகம் வலியுறுத்தவில்லை. எல்டர் பேட்ஸ் என்பவர் ஏழாம் நாளை அதிக முக்கியப்படுத்தும்படி கேட்டுக்கொண்டதாகக் கூறப்படுகிறது.

எல்லன். ஓயிட் அம்மாவுக்கும், அதற்கும் உதவியாக ஒரு சொப்பனம் வந்தது. சொப்பனத்தில் திருமதி, எல்லன் ஓயிட் அவர்கள் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டதாகவும், அங்கே பரிசுத்த ஸ்தலத்திலிருந்த உடன்படிக்கை பெட்டியை மூடின திரையை இயேசு நீக்கினபோது, பத்துக் கட்டளைகள் அடங்கிய கற்பலகைகளைக் கண்டதாகவும், அதில் நான்காம் கட்டளை (ஓய்வு நாள்) அதிகப் பிரகாசமாக காணப்பட்டதாகவும் எழுதியுள்ளார்கள்.

கிறிஸ்தவர்கள் மோசேயின் பிரமாணங்களுக்கு உட்பட்டவர்கள் தான் என்றும், அதில் சிறிதான ஒன்றையும் மீறக்கூடாது என்றும், ஓய்வுநாளை ஆசரிப்பது முற்றிலும் சரியானதே என்றும் போதிக்கின்றனர். இதற்கான பதிலை சுருக்கமாக பார்ப்போம்

அதாவது ஓய்வுநாளைப் பற்றி ஆதி. 2:2, 3 வசனங்களில் பாக்கிறோம். தேவன் தம்முடைய கிரியைகளை ஆறு நாட்களிலும் நிறைவேற்றி ஓய்ந்திருந்தார். அவர் களைப்படைந்ததினால் அல்ல, செய்ய வேண்டிய எல்லாவற்றையும் பூரணமாய் செய்து முடித்துவிட்டார் என்பதைக் காட்டுவதே ஏழாம்நாள் ஓய்வு செயல்பாடுகளில் குறையற்றவர் என்பதை இது காட்டுகிறது. ஏழாம் நாளை ஆசீர்வதித்தார், பரிசுத்தப்படுத்தினார். ஆறுநாளும் வேலை செய்கின்ற ஒருவன் ஏழாம் நாளில் ஓய்வு

எடுப்பது சரீரத்திற்கும் மனநிலைக்கும் ஆரோக்கியமானது தான் இது சரீரப் பிரகாரமான ஓய்வு.

இது இஸ்ரவேலருக்கும் தேவனுக்குமுள்ள அடையாள உடன்படிக்கை யாத்.31:12, 13 எசேக். 20:12,20

பத்துக் கட்டளைகளும் அடையாளமாக கூறப்பட்டுள்ளது. எனவே இது யூதர்கள் கைக்கொள்ள வேண்டிய பல பண்டிகைகளில் ஒன்றாக கொடுக்கப்பட்டது (லேவி. 23:1-3).

**ஓய்வுநாட்களில் பல பிரிவுகள் இருந்தன:**

1. வாரத்தின் ஏழாம் நாள்

2. ஏழு வாரம் முடிந்து 50-வது நாள் ஒரு ஓய்வுநாள்

3. ஏழாவது வருடம் ஓய்வு வருடம்

4. 50-வது வருடம் (யூபிலி) ஓய்வு வருடம்

ஓய்வைக் கைக்கொள்ள வேண்டுமானால், இவை எல்லாவற்றையும் கைக்கொள்ள வேண்டும். இதில் ஏழாம்நாள் ஓய்வை மட்டும் கைக்கொண்டால் போதும் எப்படி? இவை யாவும் யூதருக்கு கொடுக்கப்பட்டவை, கிறிஸ்தவர்களுக்கல்ல.

**ஓய்வுநாளில் செய்ய வேண்டியவைகள்:**

1. ஓய்வுநாளில் 12 அப்பங்களை பரிசுத்த ஸ்தலத்திலுள்ள மேஜையில் இரண்டு அடுக்காக அடுக்கி வைக்க வேண்டும் (லேவி. 24:5-8 1 நாளா.9:12)

2. ஓய்வுநாளில் சர்வாங்க தகனபலி செலுத்த வேண்டும் (எண். 28:10 2 நாளா. 8:13 31:3)

3. ஓய்வுநாளில் விருத்தசேதனம் செய்து வந்தார்கள் (யோவான் 7:22,23)

4. ஒவ்வொரு ஓய்வுநாளிலும் மோசேயின் ஆகமங்கள் ஜெப ஆலயங்களில் வாசிக்கப்பட வேண்டும். (அப். 13:27 15:21)

**ஓய்வுநாளில் செய்யக் கூடாதவைகள்:**

1. விறகு பொறுக்கக் கூடாது (எண். 15:32-36)

2. அடுப்பில் நெருப்பு மூட்டக்கூடாது (யாத். 35:3)

3. தனக்கு விருப்பமானதை செய்யக்கூடாது (ஏசாயா 58:13)

4. தன் சொந்த பேச்சை பேசக்கூடாது (ஏசாயா 58:13 56:2, 6-8)

5. வேலை செய்யக்கூடாது, மீறினவன் கொலை செய்யப்பட வேண்டும் (யாத். 34:21)

*6. விதைக்கவோ, அறுக்கவோ கூடாது (யாத். 31:14-16)*

*7. வீடுகளிலிருந்து சுமையை வெளியே கொண்டு போகக்கூடாது, உள்ளேயும் கொண்டு வரக்கூடாது (ஏரே. 17:21,22)*

*8. பிந்திய நாட்களில் ஓய்வுநாள் தூரம் என்ற ஒரு பிரமாணமும் உண்டாயிற்று, அதாவது ஒரு நாளை ஆசீர்வதித்தார், பரிசுத்தப்படுத்தினார். ஆறு நாளும் வேலை செய்கின்ற ஒருவன் ஏழாம் நாளில் ஓய்வெடுப்பது சரீரத்திற்கும் மனநிலைக்கும் ஆரோக்கியமானது தான், இது சரீரப் பிரகாரமான ஓய்வு.*

*பிரமாணங்களில் ஒன்றாக வருகிற ஓய்வுநாளைப் பார்ப்போம்.*

*பத்துகட்டளைகளும் அடையாளமாக சொல்லப்படாமல் இது மட்டுமே அடையாளமாக கூறப்பட்டுள்ளது. எனவே இது யூதர்கள் கைக்கொள்ள வேண்டிய பல பண்டிகைகளில் ஒன்றாக கொடுக்கப்பட்டுள்ளது (லேவி. 23:1-3)*

*குறிப்பிட்ட தூரத்திற்குமேல் நடக்க பிரயாணம் பண்ணக்கூடாது என்ற பிரமாணத்தை யூத போதகர்கள் கொண்டுவந்தனர். அது 2000 முழம் தூரம் சுமார் 3000 அடி (சுமார் ஒரு கிலோ மீட்டர்). ஏழாம் நாளை ஆசரிக்கின்றவர்கள் இதை ஏன் ஆசரிப்பதில்லை? இதுபோலவே ஏழாம் வருட ஓய்விற்கும் 50 வருட (யூபிலி) ஓய்விற்கும் பல பிரமாணங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இஸ்ரவேலர்கள் ஒரே ஜாதியாக, தேவனுடைய உடன்படிக்கையின் மக்களாக இருந்தார்கள். இவர்களுக்கிருந்த அரசர்களும் தேவனுடைய பிரமாணங்களுக்கு கட்டுப்பட்டு ஆட்சி செய்தனர். எனவே இந்த பிரமாணங்களை தனிப்பட்ட நிலையிலும், குடும்ப நிலையிலும் நாட்டின் அளவிலும் கைக்கொள்ள வசதிகள் இருந்தது. உலகமெங்கும் பல கலாச்சாரங்கள் அரசாங்கங்கள், ஆளுகைகள் உள்ள நிலையில் கிறிஸ்தவர்கள் உலகமெங்கும் பரவியுள்ள சூழலில் இவை கைக்கொள்ளப்பட இயலாதவை, பொருத்தமற்றவை. முஸ்லீம் நாடுகளில் வெள்ளிக்கிழமை தான் விடுமுறை நாள், ஆராதனை நடத்துகிறார்கள். சனிக்கிழமை வேலைக்கு வரமாட்டேன், ஒரு கிலோ மீட்டருக்கு மேல் நடக்க மாட்டேன் என்று சொன்னால், இன்றுள்ள நிலையில் இது நடைமுறைக்கு ஒத்துவராது. நம்முடைய தேசத்திலே ஞாயிற்றுக்கிழமை ஏழாம் நாள் ஓய்வு, நித்திய உடன்படிக்கை (யாத். 31:6) என்று கூறப்பட்டுள்ளது. (ஆதி. 17:7, 13) ஆசாரிய ஊழியம் நித்தியம் என்று கூறப்பட்டுள்ளது (யாத். 40:15), போஜனபலி (எசே. 46:14), தீட்டு கழிக்கும் ஜலம் (எண். 19:21-22) இவை யாவும் நித்திய உடன்படிக்கை என்றுதான் கூறப்பட்டுள்ளது. ஆனால் இன்று இவை மாறிப்போய்விட்டது என்பதை நாம் அறிவோம்.*

**<u>புதிய ஏற்பாடு:</u>**

*நாம் வாழ்வது புதிய ஏற்பாட்டுக் காலம். நியாயப்பிரமாண காலமல்ல. நியாயப்பிரமாணம் நம்மை கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது.*

விசுவாசம் வந்தபின்பு நாம் உபாத்திக்கு கீழானவர்களல்லவே, *(கலா.3:24).* இப்போது நியாயப் பிரமாணத்திற்கு கீழ்ப்பட்டவர்கள் அல்ல, கிறிஸ்துவின் மேலான, உயரிய பிரமாணத்திற்கு கீழ்ப்பட்டவர்கள்.

**இயேசுகிறிஸ்துவும், ஓய்வுநாளும்**

இயேசுகிறிஸ்து தமது போதனையில் கிறிஸ்தவர்கள் எங்கும் ஓய்வுநாளை கைக்கொள்வதை பற்றி குறிப்பிடவே இல்லை. அது இயேசுவின் சீஷர்களுக்குரிய பிரமாணமல்ல என்பது அவருக்குத் தெரியும். இயேசு ஓய்வு நாளில் ஜெப ஆலயத்திற்கு போனார் என்பது அதை கைக்கொள்வதற்காக அல்ல, கூடிவந்த யூதர்களுக்கு, சத்தியத்தை போதிக்கப் போனார். இதைத்தான் அப்போஸ்தலரும் செய்தனர். இயேசு ஓய்வுநாளை மீறினார் என்று தான் குற்றம் சாட்டப்பட்டார். சூம்பின கையையுடையவனை குணமாக்கினார். அதனால் பரிசேயர் அவரை கொலை செய்ய வகை தேடினர். மாற்கு *3:1-6* லூக்கா *6:6-14.).*

ஓய்வுநாளில் *18* வருடம் கூனியாயிருந்தவளை குணமாக்கினார் *(*லூக். *13:10 -17),* நீர்க்கோவை வியாதியுள்ளவனை ஓய்வு நாளில் குணமாக்கினார் *(*லூக்கா *14:1-6) 18* வருடம் வியாதியாய் படுத்து இருந்தவளை ஓய்வுநாளில் குணமாக்கினார் *(*யோவான் *5:3-18)* பிறவிக்குருடனை ஓய்வு நாளில் குணமாக்கினார் *(*யோவான் *9:1-16).* இத்தனை அற்புதங்களை இயேசு செய்து உதவினதற்காக சந்தோஷப்படாமல் ஓய்வுநாளை மீறினதாக இவர்கள் எண்ணியது குருட்டாட்டத்தின் பிணியாளிகளுக்கு ஓய்வுநாளில் நன்மை செய்வது நியாயம் தான் என்று இயேசு சொன்னார். நன்மையான எந்த செயலையும் ஓய்வுநாளில் செய்வது தவறல்ல தீமையானதைத்தான் ஓய்வுநாளில் செய்யக்கூடாது (அதை தான் எந்த நாளிலும் செய்யக்கூடாதே) இயேசு சொன்னதின் பொருள் என்ன? சட்டத்தை போட்டு குட்டையை குழப்பாதே, ஒழுங்கானவற்றை நேர்மையானவற்றை, அவசியமானவற்றை பிறரையும் செய்யவிடு.

எனவே நம் வாழ்நாளில் ஒவ்வொரு நாளும் ஆராதனை நாள், எல்லா நாளும் தேவனை ஆராதிக்க வேண்டும். முதல் நாள் மாத்திரம் அல்ல, ஏழாம் நாள் மாத்திரமல்ல, எல்லா நாளும் நாம் கர்த்தரை ஆராதிப்பதற்கு கடமைப்பட்டிருக்கிறோம். வாரத்தில் நாமெல்லாரும் சபையாக ஒன்று கூடி தேவனை ஆராதிப்பது முக்கியம். எந்த நாளிலே நாம் கூடுகிறோம் என்பது முக்கியமல்ல, நாம் கூடி தேவனை ஆராதிக்கிறோம், அவருடைய சமூகத்தை தேடுகிறோம், நன்மை செய்கிறோம், நன்மையாய் வாழ்கிறோம், அதுதான் முக்கியம். எனவே இந்த ஏழாம் நாள் ஒய்வுகாரர்கள் இப்படி இயேசு பாவ தன்மையுடன் இருந்தார், போக்காடு என்பது சாத்தானை குறிக்கிறது. பாவமன்னிப்பிற்கு இயேசு கிறிஸ்துவின் பரிகார பலி போதுமானது அல்ல. மரணத்திற்கு பிறகு ஆத்துமா தூங்குகிறது, ஆத்துமா நித்தியமானது இல்லை என்று சொல்லி இவர்கள் பல காரியங்களை முரண்பாடாக பேசியபடியால், இவர்கள் தவறான உபதேசக் கூட்டத்தாரின் பட்டியலிலே

சேர்க்கப்படுவதை தவிர வேறு வழி இல்லை. இந்த ஏழாம்நாள் ஒய்வுக்காரருக்கு நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. எனவே நாம் எந்த நாளிலும் தேவனை ஆராதிக்கலாம் என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டிய அவசியமாக இருக்கிறது. நாம் பிரமாணத்திற்கு கீழ்ப்பட்டவர்கள் என்ற எண்ணம் நம் மனதில் இருக்க வேண்டும். நாம் வாழ்வது புதிய ஏற்பாட்டு காலம் அதையும் நாம் மனதிலே கொள்ளவேண்டும். கர்த்தர் தாமே ஒவ்வொருவரையும் அவர் ஆசீர்வதிப்பராக! ஆமென்!!

## <u>கேள்விகள்:</u>

1) தவறான உபதேசக்காரர்களோடு நமக்கு இருக்க வேண்டிய உறவின் தன்மைகள் எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்பதனை குறித்து சற்று விளக்கமாக கூறுக?
2) ஏழாம்நாள் ஒய்வுக்காரர்களின் இயக்கம் உருவான விதத்தை குறித்தும் அவ்வியக்கத்திம் வளர்ச்சியடைந்த விதம் குறித்தும் சற்று விளக்கமாக கூறுக.
3) ஏழாம்நாள் ஒய்வுக்காரரின் இயக்கத்தினுடைய தவறான போதனைகளையும் அதற்கான வேதாகம பதில்களையும் வரிசைப்படுத்தி விளக்கமாக கூறுக.
4) ஒய்வுநாளைக் குறித்து வேதாகம் கூறியுள்ளவைகளை தலைப்பு வாரியாக தொகுத்து சற்று விளக்கமாக கூறுக.
5) இயேசு கிறிஸ்து ஒய்வுநாளில் என்னென்ன செய்தார் என்பதைனையும் சற்று விளக்கமாக கூறுக?

# நவீனகால தவறான உபதேசங்கள்

## பாடம் - 6

கிறிஸ்துவுக்குள் அன்பான உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். இந்த பாடத்திலும் தவறான உபதேசங்கள் என்கிறதான தலைப்பிலே இன்னொரு தவறான உபதேசம் பற்றி கற்றுக்கொள்ளப்போகிறோம். அது என்னவென்றால் மணவாட்டி சபை நாங்களே என்ற கொள்கை உடையவர்கள் என்பதாகும்.

நாங்கள் மட்டுமே உண்மையான பெந்தேகொஸ்தே சபை என்று ஒரு கூட்டத்தினர் கூறி வருகின்றனர். ஆவிக்குரிய வாழ்க்கையில் நன்கு வளர்ச்சியடைந்த எந்த ஒரு பரிசுத்தவானும் நான் மட்டுமே பரிசுத்தவான் என்று கூறமாட்டான். அப்போஸ்தலரில் பிரதானமான பவுலே பாவிகளிலே பிரதான பாவி நான் என்று தன்னைத் தாழ்த்துகிறார். உங்களில் முதன்மையாயிருக்க விரும்புகிறவன் எல்லோருக்கும் பணிவிடை செய்யக்கடவன் என்று இயேசு கூறுகிறார். நம்முடைய சிறப்பைக் குறித்து பிறர் புகழ வேண்டுமேயல்லாமல், நாமே நம்மை எல்லோரையும் விட மேலானவர்கள் என்று எண்ணினால் நம்மிடம் இருக்க வேண்டிய நற்பண்புகளில் பிரச்சனைகள் இருக்கிறது என்பது தெளிவு.

1. நாங்கள் மட்டுமே மெய்யான அப்போஸ்தல பிரதிஷ்டை ஊழியம் செய்கிறோம்.

2. நாங்களே பரலோக சீயோனிலிருக்கும் 1,44,000 பேர்

3. நாங்களே மெய்யான மணவாட்டி.

4. நாங்களே உண்மையான பெந்தேகொஸ்தே சபை. இந்தக் கொள்கைகளுக்கு ஆதாரமாக (வெளி 14:1-5) வசனங்களையும் புதிய ஏற்பாட்டில் பல வசனங்களையும் ஆதாரமாக்கியிருக்கின்றனர். இவைகள் வேத வசனத்துக்கு புறம்பானவை என்பதை வேத வசனங்களைக் கொண்டே விளக்க விரும்புகிறோம். கடந்த வகுப்பிலே நாம் Scripure interprets Scripture என்று கற்றோம் அல்லவா? அதைப்போல் வசனத்தை விளக்குவது வசனமே.

### நாங்களே அப்போஸ்தல பிரதிஷ்டை ஊழியக்காரர்

அப்போஸ்தலர் என்றால் திருமணமானவர்கள் என்பதும், கர்த்தருக்காக எல்லாவற்றையும் விட்டவர்கள் என்பதும் இவர்கள் கொள்கை. எனவே இந்த மிஷினிலுள்ள ஊழியக்காரர்கள் திருமணமாகாதவர்கள். ஏற்கனவே திருமணமாகியிருந்தால், மனைவியை விட்டுப் பிரிந்து விடுகிறார்கள். இவர்கள் கொள்கை சரியானது தானா? என்பதை வசன ஆதாரங்களுடன் ஆராய்ச்சி செய்வோம்.

*1.* அப்போஸ்தலர் திருமணமாகதவர்கள் என்று வேதம் கூறுகிறது. *1* கொரி *9:5*-ல் மற்ற அப்போஸ்தலரும் கர்த்தருடைய சகோதரரும் கேபாவும் (பேதுரு) செய்கிறதுபோல மனைவியாகிய ஒரு சகோதரியைக் கூட்டிக்கொண்டு திரிய எங்களுக்கும் அதிகாரமில்லையா? என்று பவுல் கேட்கிறார் - இதிலிருந்து நாம் எதை தெரிந்து கொள்கிறோம்?

*1.* அப்போஸ்தலரும் இயேசு கிறிஸ்துவின் சகோதரரும் பேதுருவும் திருமணம் பண்ணியிருந்தார்கள்.

*2.* ஊழிய நாட்களிலும் தொடர்ந்து குடும்ப வாழ்க்கை நடத்தினார்கள்.

*3.* அதுமட்டுமல்ல, ஊழியங்களுக்குப் போகின்ற இடங்களுக்கெல்லாம் மனைவியைக் கூடவே கூட்டிக் கொண்டு சென்றார்கள்.

**மணவாட்டி சபை சொல்வதென்ன?**

மனைவியாக இருந்தவளை சகோதரியாகத் தான் நடத்தினார்கள். அதனால் தான் மனைவியாகிய சகோதரி என்று கூறப்பட்டுள்ளது என்று விளக்கம் கூறுகிறார்கள். இது புத்தியீனமான விளக்கம் என்று தான் சொல்ல வேண்டும். பவுல் மற்றவர்களுடைய மனைவியைப் பற்றி எழுதும்போது, மனைவியாகிய சகோதரி என்று தானே எழுத முடியும். இவர்கள் கருத்துப்படி மனைவியாக இல்லாத ஒரு பெண்ணை எந்த ஊழியக்காரரும் எங்கும் கூட்டித் திரியலாமா? யாரும் கேட்டால், என் மனைவி இல்லை, ஆனால் ஊழியத்திற்கு உதவியாக வருகிறாள் என்று ஊர் ஊராய் ஒரு சகோதரியை கூட்டித் திரிந்தால் எப்படி இருக்கும்? அந்த ஊழியரை யாராவது ஏற்றுக் கொள்வார்களா? அப்போஸ்தலர்களை இப்படியா அவமானப்படுத்துவது?

அப்போஸ்தலர்கள் தங்கள் சாட்சி கெட்டுவிடக் கூடாதென்றும், தாங்கள் திருமணம் பண்ணி ஒழுங்காய் குடும்ப வாழ்க்கை நடத்துகிறோம் என்பதை மற்றக் குடும்பங்களுக்கு உணர்த்தவும், எந்த வீட்டிலும் நம்பிக்கையுடன் தங்களை ஏற்றுக் கொள்ளவும் ஊழியத்திற்குச் சென்ற இடங்களுக்கு மனைவியை கூடவே கூட்டிச் சென்றிருக்க வேண்டும்.

*2.* மனைவியை வெறுப்பது என்பது அவர்களை விட்டுவிடுவதில்லை என்பதாகும். இதோ எல்லாவற்றையும் விட்டு உம்மை பின்பற்றினோமே எங்களுக்கு என்ன கிடைக்கும்? என்று பேதுரு கேட்டதற்கு இயேசு மத். *19:29* மாற்கு *10:29*, *30* லூக்கா *18:29* ஆகிய மூன்று இடங்களிலும், என் நாமத்தினிமித்தம் சுவிசேஷத்தினிமித்தம் தேவனுடைய இராஜ்ஜியத்தினிமித்தம் வீட்டையாவது பெற்றோரையாவது, சகோதரரையாவது, நிலங்களையாவது, மனைவியையாவது, விட்டுவிட்ட எவனும் மறுமையிலே நித்திய ஜீவனையும் அடைவான் ... என்று பதிலளிக்கிறார்.

தகப்பனை, தாயை, மனைவியை, பிள்ளைகளை, சகோதரரை, சகோதரிகளை தன் ஜீவனை வெறுக்காவிட்டால் எனக்கு சீஷனாயிருக்கமாட்டான் என்று இயேசு சொன்னார். வெறுத்தல் என்பது விடுதல் அல்ல, ஏனெனில் தன் ஜீவனையும் விடுதல் என்று எடுத்துக் கொள்ள முடியுமா? அப்படியானால் ஒருவனும் உயிரோடிருக்க முடியாதே. அப்படியானால் அதன் விளக்கமென்ன?

*1.* இயேசு கிறிஸ்துவை விட இவைகள் ஒன்றையும் அதிகமாக நேசிக்கக்கூடாது.

*2.* கிறிஸ்துவுக்காக இவைகளை விட்டவன் என்பதின் விளக்கத்தைப் பாப்போம்.

கிறிஸ்துவைப் பின்பற்ற விரும்புகிற ஒருவனுக்கு அவரைப் பின்பற்ற இவைகள் தடையாக இருக்கும்போது, இவைகளை நிர்ப்பந்த சூழ்நிலையில் விட்டவர்களுக்குக் கர்த்தர் ஆறுதலாக இவைகளைக் கூறுகிறார். ஊழியம் செய்கிறவர்களுக்கு மட்டுமல்ல, மெய்கிறிஸ்தவனான இயேசுவைப் பின்பற்ற விரும்புகிற யாவருக்கும் இவை தடையாக இருந்தால், அவர்களைவிட்டு வெளியேற வேண்டியது வரலாம். சகோதர, சகோதரிகளோ, மனைவியோ, பிள்ளைகளோ தடையாக இருந்தால் அவர்களை விடவேண்டிய சூழ்நிலை ஏற்படலாம். கிறிஸ்தவனானால் அல்லது ஊழியத்திற்குப் போனால் உனக்கு வீடோ சொத்தோ கிடையாது என்று பெற்றோருக்கும் மற்றவர்களுக்கும் சொன்னபோது, அவைகளை விட்டு கிறிஸ்துவைப் பின்பற்றினவர்கள் ஏராளமுண்டு. ஆனால் பெற்றோரோ மனைவியோ தடையில்லை என்றால் அவர்களை ஏன் விட வேண்டும்? மனைவியும் இரட்சிக்கப்பட்டு அபிஷேகம் பெற்று ஊழியத்திற்கு வர ஆயத்தமாயிருக்கிறாள். அப்படிப்பட்ட மனைவியையும் பிள்ளையையும் விட்டுப் பிரிந்து போகிறவன் குடும்பத்திற்கும் இயேசுவுக்கும் துரோகம் செய்கிறான். இப்படிப்பட்ட குடும்பத்தைப் பிரிக்கும் சபையார் கிறிஸ்துவுக்கும் துரோகம் செய்கின்றனர்.

II. கர்த்தருக்கு பிரியமாய் நடக்க விரும்புகிற ஊழியக்காரன், திருமணம் செய்யக் கூடாதென்று *1* கொரி. *7:32,33*-ஐ அடிப்படையாக்கிக் கூறுகின்றனர்:

பவுல் விளக்கம் கொடுக்கிறார் இப்போதுள்ள துன்பத்தினிமித்தம் திருமணம் பண்ணாமலிருப்பது மனுஷனுக்கு நல்லதாயிருக்குமென்று எண்ணுகிறேன் என்கிறார் *(1*கொரி *7:26)* இது சபையாருக்கு எழுதப்பட்ட நிருபம் என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

தீமோத்தேயுக்கும் தீத்துவுக்கும் எழுதின மூன்று நிருபங்களும் ஊழியருக்கு எழுதப்பட்டவை அதில் ஊழியருக்கு பவுல் என்ன ஆலோசனை கூறுகிறார் என்று கவனியுங்கள்.

*1.* கண்காணியானவன் *(*ஊழியகாரர்*)* ஒரே மனைவியையுடைய புருஷனாக இருக்க வேண்டும் *1* தீமோ. *3:2* ஆலோசனை அல்ல, அதை கண்டிப்பாக கூறுகிறார்.

ஒன்றுக்கும் அதிகமாக மனைவிகள் இருக்கக் கூடாது என்று கூறுகிறாரேயல்லாமல், ஒரு மனைவியும் கூடாது என்று கூறவில்லை.

2. ஊழியக்காரன் தன் சொந்தக் குடும்பத்தை நன்றாக நடத்துகிறவனும் தன் பிள்ளைகளை சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்படியப் பண்ணுகிறவனுமாயிருக்க வேண்டும். ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்? 1 தீமோ. 3:4,5.

பவுல் ஊழியருக்கு எழுதும்போது மனைவி வேண்டாம், மனைவி இருந்தால் அவளை விட்டு பிரிந்து வாருங்கள் என்று அல்லவா எழுதியிருக்க வேண்டும்? அப்படி எழுதவில்லையே! அப்படியானால் ஊழியக்காரனின் தகுதி என்ன?

1. திருமணமாகி ஒரு மனைவியுடன் இருக்க வேண்டும்.

2. தன் சொந்தக் குடும்பத்தை நன்றாக நிர்வாகம் பண்ண வேண்டும்.

3. தன் பிள்ளகைளை ஒழுக்கமுள்ளவர்களாக வளர்க்க வேண்டும்.

4. பல குடும்பமுள்ள சபையை சரியாக விசாரிக்க (நிர்வாகம் பண்ண) ஊழியர்காரனின் குடும்பம் முன் மாதிரியாக இருக்க வேண்டும்.

பவுல் தீத்துவுக்கு எழுதின நிருபத்திலும் இதையே வலியுறுத்துகிறார் தீத்து 1:5-9. அது மட்டுமல்ல ஊழியக்காரன் திருமணத்திற்கு விரோதமாக பேசுகிறவர்களைக் குறித்து பவுல் எச்சரிப்பதை கவனியுங்கள்.

1தீமோ 4:2ல் விவாகம் பண்ணாதிருக்கவும் என்பது மட்டும் ஒரு வசனமாக எழுதப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது இப்படி ஊழியன் திருமணத்தை எதிர்ப்பவர்களைப் பற்றி பவுல் விளக்கம் கொடுக்கிறார் விவாகம் பண்ணாதிருக்க கட்டளை கொடுப்பவர்கள் எப்படிப்பட்டவர்கள் 1தீமோ 4:1-3 வாசியுங்கள் அவர்கள்

1. மனச்சாட்சியிலே சூடுண்ட பொய்யர்

2. மாயம் பண்ணுகிறவர்கள்

3. வஞ்சிக்கிற ஆவிகளுக்கு செவி கொடுக்கிறவர்கள்

4. பிசாசின் உபதேசங்களுக்கு செவிக் கொடுக்கிறவர்கள்

5. விசுவாசத்தை விட்டு விலகிப் போனவர்கள்

6. பொய்யர்

1 கொரி. 7-ம் அதிகாரத்தையும் 1 தீமோத்தேயு நிருபத்தையும் மனதில் கொண்டு தர்க்கம் பண்ண விரும்பினால், விசுவாசி திருமணம் பண்ணாமலிருப்பது நல்லது என்றும்

ஊழியர்கள் கண்டிப்பாய் திருமணம் பண்ண வேண்டும் என்றும் தர்க்கம் பண்ணலாம், ஆனால் நாம் அப்படி செய்யப் போவதில்லை.

**திருமணம் பண்ணாமல் ஊழியம் செய்யக் கூடாதா?**

திருமணம் செய்யலாம், திருமணம் பண்ணாமல் ஊழியம் செய்யும் பரிசுத்தவான்கள் அநேகருண்டு. அவர்களை மதிக்கிறோம், திருமணம் செய்து நல்ல ஒழுக்கமுள்ள குடும்பம் நடத்தி ஊழியம் செய்கிறவர்கள் ஏராளமுண்டு, அவர்களையும் மதிக்கிறோம். திருமணம் செய்யாமலிருப்பதை மேலான பிரதிஷ்டை என்று வேதத்தில் எங்கும் சொல்லப்படவில்லை. அப்போஸ்தலர்களே திருமணமானவர்களாயிருந்தார்கள், குடும்பம் நடத்தினார்கள். ஊழியங்களுக்கு போகுமிடமெங்கும் தங்கள் மனைவியை அழைத்துச் சென்றார்கள் என்று தெளிவாய்ச் சொல்லியிருக்கிறது.

**அப்படியானால் அப்போஸ்தலர் பிரதிஷ்டை ஊழியம் எது?**

திருமணமாகி ஒரு மனைவியுடன் ஒழுங்காய் வாழ்ந்து குழந்தைகளை நல்லொழுக்கமுள்ளவர்களாக வளர்த்து தங்கள் குடும்பத்தை சபைக்கு முன்மாதிரியாக்கி ஊழியம் செய்கின்றவர்களே சரியான பிரதிஷ்டை ஊழியக்காரர். இலங்கை பெந்தெகொஸ்தே மிஷனின் ஸ்தாபகரும், தலைமைப் போதகருமாயிருந்த பாஸ்டர். பால் அவர்களே திருமாணமானவர் தான். அவருடைய மகன் பாஸ்டர். பிரட்ரிக் பாலும் இந்த ஸ்தாபனத்திற்கு பல்லாண்டுகள் தலைவராயிருந்தார். எனவே இவர்களின் தவறான உபதேசத்தினால் தங்கள் தலைவரையே குறை சொல்லுகிற நிலைக்கு தள்ளிவிட்டனர்.

**III. நாங்கள் தான் பரலோக சீயோனிலிருக்கும் 1,44,000 பேர் என்று போதிக்கின்றனர்:**

சீயோன் என்ற வார்த்தை ஆங்கிலத்தில் sion என்றும் Zion என்றும் எழுதப்பட்டுள்ளது "sion" என்ற கிரேக்க வார்த்தையின் பொருள் "உயர்ந்து நிற்பது"

- உபா *8:48*-ல் இது எர்மோன் மலை உச்சியைக் குறிக்கிறது.
- சீயோன் பட்டணமென்பது எருசலேமை குறிக்கும் மத். *27:5* யோவான் *12:15* ரோமர் *9:33*, *11:26*, *1* பேதுரு *2:6*, வெளி *14:1* ஆகிய ஏழு வசனங்களில் இதைக் காண்கிறோம்
- Zion என்ற எபிரேய வார்த்தையின் பொருள் கோட்டை. இது எருசலேம் பட்டணத்தின் தென் மேற்கிலுள்ள சிறிய குன்றைக் குறிக்கின்றது. இந்தப் பொருளில் *2* சாமு. *5:7* முதல் சகரியா *9:13* வரை *148* இடங்களில் வருகிறது.

  வெளி *14:1-5* வசனங்களில் கூறப்பட்டுள்ள சீயோன் மலையின் மேல் நிற்கும் *1,44,000* பேரும் நாங்களே என்று இவர்கள் சொல்லக் காரணம், குறிப்பாக வெளி. *14:4*-ல் கூறப்பட்டுள்ள சில காரியங்களே.

- ஸ்தீரிகளால் தங்களைக் கறைபடுத்தாதவர்கள் இவர்களே.
- கற்புள்ளவர்கள் இவர்களே.

இதற்கு வேதத்தின் மூலம் பதில் காண்போம்.

ஸ்தீரிகளால் தங்களைக் கறைபடுத்துதல் என்பது திருமண உறவு என்று இவர்கள் தப்பாக எண்ணுகிறார்கள். திருமண உறவு கறைப்படுத்தும் அனுபவம் என்று எடுத்துக் கொண்டால் திருமண உறவை ஏற்படுத்திய தேவனை குறை கூறுவது போலாகும். எபி.13:4-ல் "விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும் விவாகமஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக. வேசிக்கள்ளரையும் விபச்சாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார்." (அதாவது விசுவாசி ஊழியக்காரர் பிஷப் உட்பட யாவருக்குள்ளும்) விவாக மஞ்சம் (பாலுறவு) அசுசிப்படாததாயும் இருப்பதாக. தேவனுடைய கரத்தினால் நேரடியாக உருவாகப்பெற்று, அவருடைய சாயலையும், அவருடைய ஜீவ சுவாசத்தையும் பெற்ற ஆதாமைப்போல பரிசுத்தவான் யாரும் இருக்க முடியாது. அவன் தினமும் நேரடியாக தேவனோடு உறவாடினாலும், இந்த தனிமை நல்ல தல்ல என்று கண்ட தேவன் ஒரு சகோதரனையோ சகோதரியையோ துணையாகக் கொடாமல், ஒரு மனைவியை கொடுத்தாரே, அவனை கறைபடுத்தவா அதைச் செய்தார்? ஆதாம் பாவம் செய்யும் முன்பாகவே நீங்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள் என்று தேவன் அவர்களை ஆசீர்வதித்தாரே! பாவத்திற்கு முன்பாகவே விவாகம் வந்தது (ஆதி. 1:28). விவாக உறவை தரக்குறைவாக எண்ணியிருந்தால், இயேசு தமது முதலாம் அற்புதத்தைச் செய்ய கானாவூர் திருமண வீட்டைத் தெரிந்தெடுத்திருப்பாரா? அவர் தெரிந்தெடுத்தது ஒரு திருமண வீட்டைத்தான்.

ஆ) ஆபிரகாம், ஈசாக்கும், யாக்கோபும், மோசேயும், சாமுவேலும், தீர்க்கதரிசிகளும் கறைப்பட்டவர்களா?

இ) பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும் கறைப்பட்டவர்களா? தேவனே குறை சொல்லாத திருமண உறவை கறைப்படுத்தும் அனுபவம் என்று சொல்லுகிறவர்கள், தேவனையும் அவருடைய வார்த்தையையும் மிஞ்சினவர்களாவர். இந்த தவறான உபதேசம் இலங்கையிலிருக்கும் புத்தமதக் கொள்கையிலிருந்து எடுத்தாளப்பட்டதாகும். அதுதான் உண்மை.

ஈ) இந்த 1,44,000 பேரைத் தவிர பரலோகத்தில் இருக்கும் மற்றவர்களெல்லாம் ஸ்திரீகளால் கறைப்பட்டவர்களா? இந்த உபதேசத்தைக் கேட்கும் இந்த சபை விசுவாசிகளெல்லாம் திருமணமானவர்கள் தானே! இவர்களெல்லாம் கறைபட்டவர்களா?

நமது தேசத்தில் திருமணம் பண்ணாமலிருக்கும் சன்னியாசிகளுக்கும் சாதுகளுக்கும் மதிப்புக் கொடுக்கப்படுகிறது. சபையின் பிந்தைய காலத்தில் இந்த அஞ்ஞானப் போதனை சபைக்குள் வந்துவிட்டது. ஒருவர் திருமணம் பண்ணாமலிருந்தால் அதைக்

குறை கூறவில்லை, ஆனால் அதுவே மேலான பரிசுத்தம் என்று எண்ணுவது கிறிஸ்தவமல்ல, அது புறஜாதி மார்க்கம். வேதத்திற்குப் புறம்பான இந்த நிலையை பிரதிஷ்டை என்று கூறுதல் தவறு. இந்த 1,44,000 பேர் நாங்கள் தான் என்று மூன்று கூட்டத்தினரும் போட்டியிடுகின்றனர்.

1. **<u>ஏழாம் நாள் ஓய்வுக்காரர்:</u>**

நாங்கள் தான் ஓய்வுநாளைக் கைக்கொள்ளுகிறோம். ஏசாயா 56:3-7 வசனங்களின்படி நாங்கள் தான் இந்த சிறப்புக் கூட்டம் என்கிறார்கள்.

2. **<u>யெகோவா சாட்சிகள்:</u>**

மெய்யான யெகோவா தேவனின் சாட்சிகள் நாங்களே. நாங்கள் தான் இந்தக் கூட்டம் என்கிறார்கள்.

3. **<u>தி பெந்தெகோஸ்தே ஊழியரும் நாங்கள் தான் அவர்கள் என்கின்றனர்.</u>**

ஆனால் இவர்கள் ஒருவரும் இந்த எண்ணிக்கையில் கிடையாது என்பதை அறிய வேண்டும். வெளி.7:3-8 வசனங்களில் உபத்திரவக் காலத்தில் கர்த்தருக்கு உண்மையாயிருந்த யூதர்களில், கோத்திரத்திற்கு 12,000 பேர் வீதம் முத்திரை போடப்பட்ட 1,44,000 பேரை காண்கிறோம். இவர்கள் தான் வெளிப்படுத்தல் 14-ல் சீயோன் மலையில் நிற்கிறார்கள். இதில் எந்த கோத்திரம் இவர்கள்? பூலோகத்திலிருந்த 1,44,000 பேர் வேறு, சீயோனில் இருக்கும் 1,44,000 பேர் வேறு, என்று தெளிவில்லாத விளக்கம் தருகிறார்கள்.

## <u>IV. நாங்களே மணவாட்டி என்கிறார்கள்</u>

நாங்களே கற்புள்ளவர்கள் (வெளி. 14:4) அதாவது திருமணம் செய்யாத கன்னிகைகள் நாங்களே, எனவே நாங்களே மணவாட்டி என்கிறார்கள். ஆனால் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்ட அத்தனை பேரும் இயேசுவின் மணவாட்டியாகிய திருச்சபையைச் சேர்ந்தவர்களே. இந்த மணவாட்டி என்பது ஆவிக்குரிய பொருளில் அவருடைய சரீரமாகிய திருச்சபைகளைக் குறிக்கிறது.

## <u>V. திருமணமாகாமலிருக்க சிலர் வரம் பெற்றிருக்கலாம் (மத்.19:11)</u>

திருமணமாகாமலிருந்து ஊழியம் செய்கின்ற ஊழியர்கள் எல்லா ஸ்தாபனங்களிலும் இருக்கிறார்கள். ஆனால் ஊழியத்திற்கு வருகிற எல்லாரும் திருமணம் பண்ணக்கூடாது என்று கட்டாயப்படுத்துவது மனிதச் சட்டமேயல்லாமல், வசனச் சட்டமல்ல. ஊழியத்திற்கு உதவியாயிருக்கிற மனைவியை விட்டுப் பிரிந்துபோய் ஊழியம் செய்கிறவர்கள் மனைவிக்குத் துரோகம் செய்கிறார்கள். சபைக்கு முன்மாதிரியாக இல்லாத அவர் சபை நடத்த தகுதியற்றவர். மனைவிகளுள்ளவர்கள்

மனைவிகள் அல்லாதவர்கள் போல இருக்க வேண்டும் என்று விசுவாசிகளுக்குப் போதிக்கின்றனர் *(1 கொரி. 7:29)*.

ஒன்றை உபதேசமாக ஸ்தாபிக்க பல வசனங்களையும் வேதத்தின் அடிப்படை சத்தியங்களையும் நன்கு ஆராய்ந்து உறுதி செய்ய வேண்டும். ஏதோ நம் கருத்துக்கு ஒத்து வருகிற வசனங்களை மட்டும் எடுத்துக்கொண்டு அடிப்படை சத்தியத்தை விட்டுவிடக்கூடாது.

## VI. பெண்கள் கறைப்படுத்துகிறவர்களல்ல என்பதை அறிந்துகொள்ள வேண்டும்:

அப்படியானால் ஜெப வீட்டிலே எதற்கு பெண்கள்? சாப்பாடு சமைப்பதையும், உடைகளை சுத்தம் செய்வதையும், வீட்டை சுத்தம் செய்வதையும், வீடு சந்திப் பதையும் ஆண்களே செய்யலாமே! அப்படியானால் விசுவாசிகளுக்கும் திருமணம் நல்லதல்லவே! அவர்கள் கறைபட்டால் பரவாயில்லையா? குடும்ப வாழ்க்கை செய்யும் விசுவாசிகளெல்லாம் கறைபட்டவர்கள், இப்படிப்பட்ட போதனைகளைக் கேட்டும் உணர்வில்லாமல் சபைக்கு போகின்ற விசுவாசிகள் அந்த சபையில் இருப்பது ஆச்சரியமே. இது புத்தமதக் கொள்கைகளை பின்னணியமாகக் கொண்டதாகும்.

### *1. ஸ்திரீகளால் தங்களைக் கறைபடுத்தாதவர்கள் என்பதன் விளக்கம்?*

வேத பண்டிதர்களுடைய விளக்கங்களை இங்கு நாம் பார்ப்போம். இந்த *1,44,000* பேர் முத்திரை போடப்பட்ட காலம், உபத்திரவ காலம் என்பதை மனதில் கொள்ள வேண்டும். அந்த நாட்களிலிருக்கும் நிலையை வெளி.*17*-ல் காண்கிறோம். வெளி.*17:1-18* வசனங்களில் மிருகத்தின்மேல் ஏறியிருக்கும் ஸ்திரீயைப் பற்றி பார்க்கிறோம். அவள் வேசித்தனமான அருவருப்புகளாலும் அசுத்தத்தாலும் நிறைந்த பொற்பாத்திரம் வைத்திருந்தாள். இவள் மகா பாபிலோன் என்றும், வேசிகளுக்கும் பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாய் என்றும் குறிப்பிடப்படுகிறாள். அவள் ஏழு மலைகளின்மேல் உட்காரந்திருக்கிறவள். இந்த ஸ்திரீ பூமியின் ராஜாக்கள் மேல் இராஜ்ஜியபாரம் பண்ணுகிற மகா நகரம் என்று கூறப்பட்டுள்ளது.

இங்கே வசனத்தில் இது ஒரு நகரத்தைக் குறிக்கிறது என்று சொல்லப்படாவிட்டால், ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக இதை வியாக்கியானப்படுத்தி இருப்பார்கள். ஏழு மலையின் மேல் கட்டப்பட்டுள்ள நகரம் எது? எந்த நகரம் அந்த நாட்களில் உலகத்தை ஆண்டது? ரோமாபுரி. இந்த பட்டணத்தை மையமாகக் கொண்டு எழும்பும் துர்உபதேசங்களையே ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டில் பல இடங்களில் கர்த்தரை விட்டு விலகுவதை வேசித்தனமாக, விபச்சாரமாக விவரிக்கப்பட்டுள்ளது *(எரே. 3:1-11)*.

உலகிலுள்ள யாவரும் அந்திக்கிறிஸ்துவையே வணங்க வேண்டும் என்பது போன்ற பல துர் உபதேசங்கள் உபத்திரவ காலத்தில் வலியுறுத்தப்படும். இங்கே ஸ்திரீ

என்பது இயேசுவின் வருகையில் கைவிடப்பட்ட போலி சபை. இந்த ஆவிக்குரிய வேசித்தனத்தினால் தங்களை கறைப்படுத்தாதவர்கள் தான் உபத்திரவ காலத்தில் முத்திரையிடப்பட்ட 1,44,000 பேர்.

2. ஸ்திரீகள் என்று வருகிற வசனமெல்லாம் பெண்களைக் குறிக்கிறது என்று எடுத்துக் கொள்ளக்கூடாது.

1. பட்டணங்கள் பெண்களாக உருவகப்படுத்தி கூறப்பட்டுள்ளது (புலம்பல் 1:1,2 2:1).

2. ஏற்பாடுகள் ஸ்திரீகளாக விவரிக்கப்பட்டுள்ளது, உடன்படிக்கைகள் இரண்டு ஸ்திரீகளாக விளக்கப்படுத்தப்பட்டுள்ளது (கலா.4:24-26).

3. உபதேசங்கள் (போலி சபை) ஸ்திரீகளாக விளக்கப்பட்டுள்ளன (வெளி.2:20-23 17:1-18).

4. மக்கள் பெண்களாக கூறப்பட்டுள்ளனர் (எரே.3:1-11) மக்கள் (இஸ்ரவேல், யூதா)

வசனத்தின் உட்கருத்தைப் புரிந்துகொள்ள வேண்டும், வசனத்தின் கருத்தைக் கவனித்து அதன்படி விளங்கிக் கொள்ள வேண்டும். உதாரணங்கள் சில பார்ப்போம்:

1. "தாவீதின் குமாரன் இயேசுகிறிஸ்து" (மத்.1:11) இப்படிக் கூறுவதால் இயேசுகிறிஸ்து சாலொமோனுக்கு சகோதரன் என்று எடுத்துக்கொள்ள மாட்டோம். தாவீதின் வழி வந்தவர் என்று பொருள்.

2. பவுல் குமாரனென்று தீமோத்தேயுவை அழைப்பதினால் பவுலுக்குப் பிறந்தவன் தீமோத்தேயு என்று சொல்வதில்லை. பவுலின் ஆவிக்குரிய குமாரன் என அறிகிறோம்.

இதுபோல நூற்றுக்கணக்கான வசனங்களை எடுத்துக்காட்டலாம். இதுபோல வேசித்தனம், விபச்சாரம், கறைபடுதல், சோரம் போகுதல் போன்ற பல வார்த்தைகள், பல இடங்களில் ஆவிக்குரிய பொருளில் சொல்லப்பட்டுள்ளன. அவைகளை வசனத்தெளிவுடன் விளங்கிக் கொள்ள வேண்டும்.

## VIII. நாங்கள் மட்டும் உண்மையான பெந்தெகொஸ்தே என்று பெயர் வைத்துக்கொள்வது சரியல்ல (THE) PENTECOSTAL MISSION).

உண்மையான பரிசுத்தவான், நானே பரிசுத்தவான் என்று கூறமாட்டான். உண்மையான தாழ்மையுள்ளவன், நான் மட்டுமே தாழ்மையுள்ளவன் என்று பறைசாற்ற மாட்டான். பரிசுத்தவான்கள் ஒதுங்கி வாழமாட்டார்கள்: நாம் பாவத்தைவிட்டுப் பிரிந்து வாழ வேண்டும். மற்ற பரிசுத்தவான்களைவிட்டு ஒதுங்கி வாழக்கூடாது. வானத்தையும், பூமியையும் படைத்த பரிசுத்த இயேசுவே எல்லாரோடும் பழகினார், ஐக்கியம் கொண்டார். அதன் மூலம் தமது அன்பை வெளிப்படுத்தினார். நான் மிஞ்சின பரிசுத்தவான் என்று ஒருவரோடும் சேராமல் ஒதுங்கி வாழ்கிறவன் சரியான மனநிலையிலுள்ள பரிசுத்தவானில்லை.

இப்படிப்பட்ட குறுகிய மனப்பான்மையுள்ள அருமையான சகோதர, சகோதரிகளுக்காய் ஊழியருக்காய் ஜெபிப்போம். திருச்சபை உருவாகி சுமார் ஆயிரம் வருடங்கள் கடந்த பின்புதான், நமது முழுநேர ஊழியம் செய்கின்றவர்கள் திருமணம் பண்ணக்கூடாது என்ற மனித சட்டம் சபைக்குள் நுழைந்தது, என்பதை சபை சரித்திர ஆதாரத்துடன் இதுவரை கற்றிருக்கிறோம்.

தேவனுடைய ஊழியக்காரர் திருமணமாகி சபைக்கு முன்மாதிரியாக குடும்பம் நடத்தி ஊழியம் செய்வதே சரியான அப்போஸ்தல பிரதிஷ்டை ஊழியம். பவுல் சனெகரீப் என்ற யூத ஆளுகை சங்கத்தில் அங்கத்தினராக இருந்ததால் நிச்சயம் திருமணம் பண்ணியிருக்க வேண்டும் என்பது பொதுவான நம்பிக்கை. ஏனெனில் சனெகரீப் சங்கத்தில் பொதுவாக திருமணமாகி *30* வயதிற்கு மேற்பட்டவர்கள்தான் அங்கத்தினர்களாக இருந்தனர் என்று கூறப்படுகிறது. ஆனால் பவுலின் எழுத்துக்களிலிருந்து அவருடைய மனைவி இறந்திருக்கலாம் என எண்ணுகிறார்கள் *(1 கொரி.7:8)*.

இயேசு திருமணம் செய்யவில்லை. அதனால் நாங்களும் திருமணம் செய்யவில்லை என்று வாதம் செய்தால், இயேசு *33*-வது வயதில் மரித்தார். நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் என்று கேட்க தோன்றுகிறது. இயேசு திருமணம் செய்யாவிட்டாலும் அப்போஸ்தல ஊழியத்திற்கு திருமணம் ஆனவர்களைத்தான் அழைத்தார். அந்த நாட்களில் திருமணமானவர்களையே, யூத சமுதாயம் பொறுப்பு வகிக்கத் தகுந்தவர்கள் என்று மதித்தது. பாபிலோனிய பழக்கவழக்கங்களை அடிப்படையாகக் கொண்டு ஊழியக்காரர் திருமணம் செய்யக் கூடாது என்ற கொள்கை சபைக்குள் இடையில் திணிக்கப்பட்டது. இந்து மதமும், புத்த மதமும் திருமண உறவை தாழ்வாக எண்ணுவதுபோல கிறிஸ்தவம் தாழ்வாக எண்ணவில்லை,

தவறான உபதேசங்களைத் தவிர்த்து வேதாகம அடிப்படை உபதேசத்தில் நம்மை உறுதிப்படுத்த வேண்டுமெனில் வேத வசனங்களை தெளிவாகக் கற்றுக்கொள்வதுடன் பிறமார்க்க கலப்பு சிந்தனைகளுக்கு இடங்கொடாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். ”மணவாட்டி சபை நாங்களே” என்னும் தலைப்பில் இங்கு நாம் கொடுத்துள்ள அனைத்து கருத்துக்களுமே, இன்று பெந்தெகொஸ்தே மற்றும் பூரண சுவிசேஷ சபை விசுவாசிகளும், போதகர்களும், தலைவர்களும் நிதானித்து அறிந்து தங்களை வேத சத்தியத்தில் காத்துக்கொள்ள உதவும் உபதேச விளக்கங்களாகும்.

சமநிலை விசுவாச வாழ்க்கைக்கு “உயர்வு மனப்பான்மை” மற்றும் “தாழ்வு மனப்பான்மை” ஆகிய இரண்டுமே தவிர்க்கப்பட வேண்டியவை ஆகும். மணவாட்டி சபை நாங்களே என்போர், உயர்வு மனப்பான்மை என்னும் கண்ணியில் அகப்பட்டு வழி விலகிப் போயினர். தங்களைப்போல எவரும் இல்லை என தங்களை உயர்த்திக் கொண்டுள்ளனர். இது ஆவிக்குரிய வளர்ச்சியையும், அவர்களது சபை வளர்ச்சியையும் மிகப்பெரிதும் பாதித்துள்ளது என்பது நாம் கண்கூடாகக் காணும் உண்மையாகும்.

உண்மை விசுவாசிகள் இந்நிலைக்குத் தப்பி விசுவாச வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்பதே நமது ஆலோசனையும் ஜெபமும் ஆகும். எனவே இரட்சிப்பட்ட ஒவ்வொருவருமே தேவனுடைய மணவாட்டி சபையாக இருக்கிறார்கள். எனவே நாங்கள் மட்டும் தான் மணவாட்டி சபை, நாங்கள் தான் திருமணம் ஆகாமல் ஊழியம் செய்கிறோம். எனவே நாங்கள் கறைபடாதவர்கள், நாங்கள் தான் பரலோக சீயோனில் இருக்கிற *1,44,000* பேர். இந்த மாதிரி காரியங்களை நாம் நம்ப வேண்டாம், இவர்களுக்கு நம்மை நாம் கவனமாக காத்து கொள்ள வேண்டியது அவசியமான ஒன்றாக இருக்கிறது. எனவே இந்த உபதேசத்தையும் நாம் இந்த பாடங்களிலே கற்றுக் கொள்ள தேவன் நமக்கு உதவி செய்தார். கர்த்தர் தாமே உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பராக ஆமென்.

**<u>கேள்விகள்:</u>**

1) மணவாட்டி சபை நாங்களே என்று கூறுகிறவர்களின் கருத்துக்கள் என்னென்ன என்பதனையும், அதற்கான வேதாகம பதில்களையும் குறித்து விளக்கமாக கூறுக?
2) திருமணம் செய்யாமல் ஊழியம் செய்யலாமா என்ற கேள்விக்காக பதிலாக வேதாகமம் கூறுகின்றவைகளை ஆதாரங்களுடன் சற்று விளக்கமாக கூறுக?
3) *1,44,000* பேர் நாங்களே என்று போராடுகிற மூன்று கூட்டத்தினரை குறித்து சற்று விளக்கமாக கூறுக.
4) ஸ்திரீகளால் கறைபடாத *1,44,00* பேர்களை குறித்து வேதாகம மற்றும் வரலாறு சான்றுகளை குறித்து விளக்கமாக கூறுக.

# நவீனகால தவறான உபதேசங்கள்

## பாடம் - 7

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் அன்பின் வாழ்த்துகள். இந்த பாடத்தில் நாம் கிறிஸ்தவ அறிவியல் என்று அழைக்கப்படுகிற தவறான கொள்கைகளையுடைய ஒரு கூட்டத்தாரைப் பற்றி கற்றுக்கொள்வோம்.

**கிறிஸ்தவ அறிவியல்**

மனநிலை வைத்தியத்தை மையமாகக் கொண்டு தவறான கொள்கைகளை தேவவசனத்தோடு இணைத்து எழுந்த இயக்கமே 'கிறிஸ்தவ அறிவியல்'. சுகமாக்கும் ஊழியத்தை வற்புறுத்திப்பேசி வருவதால் இவ்வியக்கம் அநேக செல்வந்தர்களையும் வசதிபடைத்த பெரும் புள்ளிகளையும், நடுத்தரவர்க்க மக்களையும் கவர்ந்திழுத்துக் கொண்டது. 'கிறிஸ்தவ அறிவியல் சமய வழிபாட்டுக் கொள்கையோடு இணைந்து சுகமாக்குதற்குரிய புதிய கருத்துக்களையும், வழிமுறைகளையும் சொல்லுகிறது. 'மனநிலை சுகம்' (Mind Healing) என்னும் போதனையே இவ்வியக்கத்தின் ஆணிவேர்.

கிறிஸ்தவ அறிவியல் என்பதால் இது கிறிஸ்தவர்களுக்குரியதென்றும் கிறிஸ்தவத்தைச் சார்ந்ததென்றும் நினைக்க வேண்டாம். இது கிறிஸ்துவையும் அவரின் தெய்வீகத்தையும் மறுக்கும் இயக்கம். தேவனுடைய திரித்துவக் கொள்கையையும், இயேசுவின் புனிதத் தன்மையையும் ஆவியானவரின் செயல்களையும் அறவே ஒத்துக்கொள்ளாத இயக்கம் இது.

இது 'கிறிஸ்தவ அறிவியல்' என்று அழைக்கப்படுவதால் இவ்வியக்கம் விஞ்ஞான முறையைக் கையாளும் அறிவியலைச் சார்ந்ததென்றும் நினைத்துவிட வேண்டாம். இது அறிவியலையும் அறிவியலைச் சார்ந்த மருத்துவத்தையும் ஏற்பதில்லை. 'வியாதியுள்ளவர்கள் மருந்தோ, மாத்திரையோ, ஊசியோ எந்த மருத்துவ சிகிச்சையோ எடுக்கக்கூடாது. வியாதியுள்ளவர்கள், வியாதியை வித்தியாசமாக 'எதிர்மறையில் 'நினைத்தாலே வியாதி சுகமாகிவிடும்' என்பதே இவ்வியக்கத்தின் போதனையாகும்.

**இவ்வியக்கத்தின் தோற்றம்:**

கிறிஸ்தவ அறிவியல் என்னும் இயக்கம் 1966-ம் ஆண்டு திருமதி, மேரி மோர்ஸ் பேக்கர் என்பரால் தோற்றுவிக்கப்பட்டது. இவரின் முழுப்பெயர் மேரி அன் மோர்ஸ் பேக்கர் குலோவர் பேட்டர்சன் எடி (Mary Ann Morse Baker Clover Paterson Eddy) என்பதாகும். இவ்வியக்கத்தின் தலைவியான இவர் திருமதி மேரி பேட்டர்சன் என்றும் மேரி பேக்கர் எடி என்றும் சுருக்கமாக அழைக்கப்பட்டார்.

திருமதி மேரி மேட்டர்சன் எடி கி.பி.1821-ம் ஆண்டு மாற்கு என்பவருக்கும் அபிகாயில் பேக்கர் என்பவருக்கும் மகளாக நியூ ஹாம்ஷைர் நகரில் போ (Bow) என்னும் இடத்தில் பிறந்தவர். தன் சிறுவயதிலிருந்தே உணர்வுகளுக்கு அதிக இடம் கொடுத்தவர். உடல் ரீதியாகவும் அடிக்கடி சுகவீனமாகிவிடுவார்.

இளம் மேரி பேக்கர் தனது 22-ம் வயதுவரை அடிக்கடி சுகவீனப்பட்டு உணர்ச்சியளவிலும் பாதிக்கப்பட்டவராய் இருந்தார். 1843-ம் ஆண்டு டிசம்பரில் திரு. ஜார்ஜ் குலோவர் என்ற ஒரு வியாபாரியை இவர் மணந்தார். ஆனால் அவர் திடீரென மஞ்சள் காமாலை ஜுரத்தால் பாதிக்கப்பட்டு மரித்துப்போனார். அந்த துக்க உணர்ச்சிகளை மறக்க மேரி பேக்கர் அடிக்கடி மார்.்பின் என்னும் மருந்தை எடுக்கலானார். (The Truth and Tradition. New York Knoff 1932 PP 41, 42, 151, 445). 10 ஆண்டுகள் கழித்து மறுபடியும் டாக்டர் டேனியல் எம். பேட்டர்சன் என்ற பல் வைத்தியரை 1853 ஜுன் 21-ல் மணம் புரிந்தார். ஆனால் அத்திருமணமோ விவாகரத்தில் முடிந்தது. மூன்றாம் முறையாக ஆசா. ஜி. எடி என்பவரை 56 வது வயதில் மணம் புரிந்தார். அவரும் இருதய வியாதியினால் மரித்துப்போனார்.

திருமதி மேரி, டாக்டர் பேட்டர்சன்னுடன் வாழ்ந்து கொண்டிருந்தபோது ஒருநாள், மேரிக்கு முதுகெலும்பில் அதிகமான வலி ஏற்பட்டது. இந்த சுகவீனமே மேரியின் வாழ்க்கையை திசை திருப்பிவிட்டது. தான் குணமாக வேண்டுமென்பதற்காக இவர் வைத்தியரிடம் சென்றார். அந்நாட்களில் வியாதிகளை வித்தியசமாக சுகப்படுத்தும் பி.பி. கியூம்பை (Phineas Parkhurst Quimby) என்பவர் மிகவும் பிரபலமாயிருந்தார். இவரிடம் சென்று மேரி தனது சுகவீனத்தைச் சொன்னார்.

பி.பி கியூம்பை எந்த வியாதிக்கும் மருந்தோ மாத்திரையோ கொடுத்ததில்லை. எல்லாம் மனதில்தான் (Mind) இருக்கிறது. வியாதிகளை மனதிற்குள் செலுத்தவும் முடியும், மனதிலிருந்து வெளியே எடுக்கவும் முடியும். மின்சார பரிமாற்றத்தால் நோய்களை குணமாக்கி அதை அழித்து விடவும் முடியும் என்னும் கொள்கையைக் கொண்டவரே வைத்தியர் பி.பி. கியூம்பை. (The Christian Science way of life. by De Witt. John PP 142, 143). பிரபலமான இந்த வைத்தியரின் நம்பிக்கையை ஆதரித்து அதன்படி செல்லும் ஒரு கூட்டம் அந்நாட்களில் இருந்தது. இவ்விதக்கூட்டத்தின் கொள்கையும் செயலும் திருமதி மேரியைக் கவர்ந்திழுத்து, அக்கொள்கையைப் பின்பற்ற வைத்தது.

இவைகளுக்குப் பின் 1866-ம் ஆண்டில் திருமதி மேரி கீழே விழுந்து, அதிக காயமடைந்தார். இந்தக் காயத்தோடு இவர் படுத்துக்கொண்டிருந்தபோது, வேதத்திலுள்ள மத்தேயு 9-ம் அதிகாரத்தில் திமிர்வாதக்காரன் சுகம் அடைந்ததைப் படித்து சிந்தித்துக் கொண்டிருந்தார். வேதத்தில் இயேசுகிறிஸ்து சுகமாக்கின இந்த

சம்பவத்தை அறிவுப்பூர்வமாய் மாற்றிக்கொண்டு வந்தார். பரிசுத்த வேதத்தில் இந்த பகுதியைப்படித்து மூன்று நாட்கள் கழித்து சுகம் பெற்றேன் என்று சாட்சி கூறினார்.

இச்செயலுக்குப் பின் வேதத்திலுள்ள சுகமாக்கும் சம்பவங்களையெல்லாம் படிக்க ஆரம்பித்தார். தன்னுடைய சிந்தையில் வந்த எண்ணங்களையெல்லாம் ஒன்று சேர்த்தார். இவைகளோடு பி.பி. கியூப்பையின் கொள்கைகளையும் விளக்கங்களையும் சேகரித்தார். இப்படி மூன்று விதங்களில் சேகரிக்கப்பட்டு ஒரு கூட்டுத் தொகுப்பாய் தவறான கொள்கைகளாய் வெளிவந்த போதனைகள் நாளடைவில் வளர்ந்து 'கிறிஸ்தவ அறிவியல்' (Christian Science) என்னும் இயக்கமாக உருவெடுத்தது.

திருமதி மேரி எடி தனது செய்திகளை சிறிது சிறிதாய் உலகிற்கு வெளியிடத் தொடங்கினார். தான் சொல்லும் செய்திகளால் மக்களைக் கவர்ந்திழுத்தார். அநேகர் சுகமும் அடைந்தார்கள். இவர் பி.பி. கியூம்பையிடம் கற்றுக்கொண்ட வித்தைகளைக் கொஞ்சம் வித்தியாசமாக செய்து காட்டினார். மக்களைத் தன்வசம் இழுப்பதற்காக பி.பி. கியூம்பையின் கொள்கைகளையும் செயல்களையும் மாற்றியும் மறைத்தும் பேசலானார். மேரி, கியூம்பைக்கு எதிரிடையாகப் பேசினாலும் 'கியும்பேயிசம்' என்று அழைக்கப்படும் அந்த வைத்தியச் செயல்களை இவரும் செய்து வந்தார். இப்படிச் சொல்லியும் செயல்பட்டும் வந்த காரியங்களை ஒரு புத்தகமாக வெளியிட்டார்.

கடவுள், கிருபையாக என்னை பல ஆண்டுகள் ஆயத்தப்படுத்தி விஞ்ஞான முறைப்படியாக மனநிலை வைத்தியருக்குரிய இந்த தெய்வீக சட்டத்தை என் கரங்களில் கொடுத்தார் என்று திருமதி எடி கூறினார், (Science and Health 107:1-6). *1875*-ல் கிறிஸ்தவமும் ஆரோக்கியமும் (Science and Health) என்ற நூலை வெளியிட்ட இவர், *1883*-ல் 'வேதத்தின் திறவுகோல்' (Key to the Scripture) என்னும் நூலையும் வெளியிட்டார். இவை அனைத்துமே தெய்வீக வெளிப்பாடுகள் அடங்கியவை என்று எடி கூறினார்.

திருமதி மேரி எடியினால் குணமடைந்தவர்கள் அடிக்கடி சந்தித்துப் பேச இடம் தேவைப்பட்டதால், இவர்களுக்கு வசதியாக பல ஸ்தலங்கள் அமைக்கப்பட்டது. நாளடைவில் அவைகள் சபைகளாக மாறின. *1892*-ல் 'கிறிஸ்தவ விஞ்ஞானிகள் சபை' (Church of Christian Scientists) என்ற பெயரில் ஆலயம் அமைக்கப்பட்டது. *1895*-ல் 'தாய்சபை குறிப்புப்புத்தகம்' (Manuel of the Mother Church) சபையின் சட்ட நூலாகவும், கையேடாகவும் பிரசுரிக்கப்பட்டது).

ஒவ்வொரு நகரத்திலும் அமைக்கப்பட்டுள்ள இவர்களது நேர்த்தியான ஆலயங்களும், கவர்ச்சிகரமான புத்தகங்களும், வழிப்போக்கர் எவரையும் கவர்ந்திழுத்தது. 'மனமே எல்லாம், பொருள் என்பது ஒன்றுமல்ல' என்ற கொள்கையைக் கொண்ட இவ்வியக்கம் அண்ட சராசரத்தில் உள்ள அனைத்துப் பொருட்களும் உருவமும்

தோற்றமும் ஒன்றுமல்ல என்று கூறுகின்றது. (Mind is all, Matter is Naught. There is nothing material in the Universe).

இவர்கள் தங்களின் சபைகளைக் குறித்த குறிப்புகளை வேறெங்கும் வெளியிடுவதில்லை. தற்போது எவ்வளவு பேர் சபை அங்கத்தினர்கள் என்பதையும் அறிவிப்பதில்லை. சபைகள் எத்தனை வளர்ந்தாலும் மேரி எடி ஆரம்பித்த முதல் சபையே பெரிய சபை என்றும், அதையே 'தாய் சபை' என்றும் இவர்கள் அழைக்கின்றனர். மற்றவையெல்லாம் கிளை சபைகளாகும். இவர்களுக்கென்று தினசரி பத்திரிக்கையும் இருக்கிறது. 'கிறிஸ்டியன் சயன்ஸ் மானிடர்' (Christian Science Monitor) என அழைக்கப்படும் அந்த பத்திரிக்கை தரமானதாகவும் கவர்ச்சியானதாகவும் வெளிவருகிறது.

மேரி எடி மக்கள் நலங்கருதுகின்றவர், சமுதாயத்திற்காக உழைக்கின்றவர், கரிசனையும் இரக்கமும் நிறைந்தவர் என்று சிலர் நினைத்தபடியால் இவருக்கு உதவிகள் செய்வதற்கு தாராளமாய் முன்வந்தனர். செல்வந்தர்களும், அரசியல் புள்ளிகளும் இவ்வியக்கத்திற்கு உதவி செய்து வந்தனர். தேவைக்கு மிஞ்சிய பணம் வந்து குவிந்தது.

திருமதி எடி தனது உபதேசங்கள் வேத அடிப்படையிலானவை, வேதமே தன் உபதேசத்திற்கு உறுதியான ஆதாரமானது என்று கூறினாலும், இவரது கொள்கைகள் வேதத்திற்கு புறம்பாகவே இருக்கின்றன. மட்டுமல்ல, இவர் தனது வெளிப்பாடுகள் வேதவசனங்களைவிட உயர்ந்தவை என்று கூறுவதால் இவ்வுபதேங்கள் துர்உபதேசம் என்பது தெளிவாக விளங்குகின்றது. வேத புத்தகமும் நமது நல்வாழ்விற்கு முக்கியம் வாய்ந்ததல்ல என்று திருமதி எடி ஓர் இடத்தில் குறிப்பிட்டுள்ளார். (Mary Baker Eddy – Miscellaneous Writings 1833-1896 P.170:19-21)

மட்டுமல்ல, திருமணத்தை தேவன் பரிசுத்தம் என்று கருதி அதை மனிதர்களுக்கு அமைத்திருந்தும், இவர் அதன் புனிதத்தன்மையை மறுக்கிறவராகவே இருந்தார். 'திருமணம் என்பது இந்த அழிந்துபோகும் மனதின்மேல் நம்பிக்கை இருக்கும் வரை கடவுள் தந்த ஒரு தற்காலிகப் பிணைப்பே' என்று கூறினார்.

'கிறிஸ்தவ அறிவியல்' இயக்கத்தின் தாய் சபை இயக்குனர்கள் 1943 ஜூன் மாதம் 5-ம் தேதி தங்கள் இயக்கத்தின் ஸ்தாபகரான திருமதி எடியைக் குறித்து அறிக்கை ஒன்றைப் பின்வருமாறு வெளியிட்டுள்ளனர். 'வேதத்தின் தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றும்படியாக திருமதி எடியின் ஸ்தாபனத்தில் இருக்கும் கிறிஸ்தவ அறிவியல் இயக்கத்தின் தாய்சபை இதன்மூலம் அறிவிப்பதாவது:

1) திருமதி எடி இன்றைய காலத்திற்குரிய கிறிஸ்துவின் வெளிப்பாட்டாளராக தேவனால் வேறு பிரிக்கப்பட்டவர். முன்குறிக்கப்பட்ட தேற்றரவாளனை உலகிற்கு கொண்டு வந்தவர் அவரே என்பதை அவர் தெளிவாக அறிந்துள்ளார்.

2) சத்தியத்தின் பூரணமான கடைசி வெளிப்பாட்டை உலகிற்கு கொண்டுவரக் காரணமானவர் இவரே. எனவே இவரது பணிகள் கிறிஸ்துவுக்குப் புகழ்ச்சியைக் கொண்டுவரக் காரணமானவைகள்.

3) இயேசுகிறிஸ்து கடவுளின் தகப்பன் தன்மையை வெளிப்படுத்தியதுபோல, திருமதி எடி வெளிப்பாட்டின் பெண்மணியாக எழுத்தின்படி 'இக்காலத்திற்கென தேவனால் நியமிக்கப்பட்ட, தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்ட தெய்வீகத்தூதுவர் என மேரி எடி தன்னைக் குறித்து அறிந்திருந்தார். இப்படி அவரைப்பற்றி அவரது சீஷர்கள் அறிந்து வைத்திருக்கும் அறிவே இவ்வியக்கத்தின் வளர்ச்சிக்கும் ஸ்திரத்தன்மைக்கும் காரணமாக இப்போதுள்ள கிறிஸ்தவ விஞ்ஞானிகளின் சந்ததிக்கும் இனிவரும் தலைமுறைக்கும் ஆதாரமாக இருக்கின்றது' என்று இவ்வியக்கத்தினர் கூறுகின்றனர்.

இப்படியாக திருமதி எடியை இயேசு கிறிஸ்துவுக்கு சமமாக்கி அவர் கடவுளின் தெய்வீக வெளிப்பாட்டைப் பெற்றவர் என்று இவ்வியக்கத்தினர் உறுதியாக நம்புகின்றனர்.

**<u>வேத புத்தகம் குறித்து திருமதி எடி கூறுவது:</u>**

1) வேத புத்தகமே என்னுடைய வழிகாட்டி (Science and Health. P.20)

2) வேதத்திலுள்ள வெளிப்பாடுகளையே நாங்கள் போதிக்கிறோம் (SH. P.93).

3) வேத புத்தகம் நம் சுகவாழ்வுக்கு முக்கியமான ஒன்றல்ல. அமெரிக்க ஐரோப்பிய நாடுகளின் சரித்திரம் நம் சுகவாழ்விற்கு எதைச் செய்யக்கூடுமோ அதைத்தான் வேதமும் செய்கிறது.

4) ஆதி.2:7 மெய்யா? பொய்யா? அது சத்தியமா அல்லது மனிதனையும் கடவுளையும் குறித்த ஒரு பொய்யா? ஆதி.2:7-ம் வசனம் பொய்யே. ஏனெனில் கடவுள் பூமியையே தற்போது சார்ந்திருக்கிறார் (SH. 45).

5) ஆதியாகமத்தின் புத்தகம் 2-ம் அதிகாரத்திலுள்ள காரியங்கள் அனைத்துமே விஞ்ஞான உண்மைக்குப் புறம்பானவை (SH. P.521, 1905 Edi) ஆவியான கடவுள் பொருட்களை சிருஷ்டிக்கவில்லை.

6) புதிய ஏற்பாட்டிலுள்ள 3 இலட்சம் வேதபகுதிகளும், பழைய ஏற்பாட்டிலுள்ள 30,000 வேதபகுதிகளும் தெய்வீகப் பதிவேட்டினுள் கடந்து சென்ற, அழிந்து போகக்கூடிய மனித உணர்வுகளே. எனவே இவைகள் வேதத்தின் முக்கிய வெளிப்பாடுகளை மறைத்துவிட்டன. எனவே வேதம் முழுவதுமாக நம்பக்கூடிய ஒரு புத்தகம் அல்ல (ibid.P. 139).

7) வேதத்தைவிட அதிக வெளிப்பாடுகள் அடங்கிய ஒரு புத்தகம் உண்டு. அது சத்தியம், அன்பு என்னும் வல்லமையால் எனக்கு கிடைத்த தெய்வீக வெளிப்பாடு. அதை எழுத நான் வெட்கப்படவில்லை. ஏனெனில் அதன் ஆக்கியோன் மனிதல்ல கடவுளே. அது எனக்குக் கடவுளால் வெளிப்படுத்தப்பட்டது. 'விஞ்ஞானமும் சுகமும்' (Science and Health) என்பதே அந்தப் புத்தகம்.

**<u>தேவனைக் குறித்து இவர்கள் கூறுவது:</u>**

1) பாகால், மோளேகைப்போல, யேகோவாவும் இஸ்ரவேலரால் வணங்கப்பட்டு வந்த ஒரு பழமையான தெய்வமே (SH. P.517-610).
2) உருவமற்ற, தெய்வீகமான, மேலான முடிவற்ற ஒன்றே கடவுள். கடவுள் என்பது மனம், ஆத்துமா, கொள்கையே தவிர வேறல்ல. அவர் ஓர் உருவமும் அல்ல. ஒரே நபரோ ஆள்தத்துவமுள்ளவரோ அல்ல.
3) தேவன் இயற்கைக்கு ஒப்பானவர் (SH. P. 13).
4) தேவன் என்பது ஒரு கொள்கையே. அவர் ஒரு நபரல்ல (SH.P.317)
5) தேவன் எல்லாவற்றிலும் எல்லாமுமாயிருக்கிறார் (SH.113:16)
6) தேவன் ஆவியாக எங்கும் இருப்பவர். பொருள் என்பது ஒன்றுமே இல்லை. (SH. 113:18).
7) தேவன் முடிவற்றவர். முழு உலகத்தின் ஞானமும் அவரே.
8) தேவன் தாயும் தகப்பனுமாவார். கிறிஸ்து என்னும் குமாரத்துவம் ஒரு ஆவிக்குரிய கற்பனையே. பரிசுத்த ஆவியானவர் என்பது 'தெய்வீக அறிவியலே' (SH.331.26-31).
9) தேவன் என்பது ஆள்தத்துவமுடைய ஒருவரால்ல, அது ஒரு கொள்கையே.

**<u>தேவனைக்குறித்து வேதம் கூறுவது:</u>**

ஆதி.1:1, 26, 14:22, 17:1, உபா.33:27, யோபு 31:14, ஏசா.45:22, 2 கொரி.1:3, எபே.2:12, 1 பேதுரு 3:12).

**<u>இயேசுவைக் குறித்து இவர்கள் கூறுவது:</u>**

1) 'இயேசு' ஒரு மனிதனே. 'கிறிஸ்து' என்பது ஒரு தெய்வீக சிந்தை (SH. 473:15-16)
2) இவ்விதமான ஒரு கலிலேய தீர்க்கதரிசி உலகில் இல்லாதிருப்பாரானால், அது என்னிலே எந்த வித்தியாசத்தையும் உண்டாக்கியிருக்காது (First Church of Christ Scientsts & Miscs. PP 318-319).

3) கன்னித்தாய் 'தேவனின் சிந்தையைக்' கருத்தரித்து அதற்கு இயேசு என்று பெயரிட்டாள். மரியாளின் சுயசிந்தை தேவனோடு கொண்ட உறவின் மூலம் பிறந்தவரே இயேசு கிறிஸ்து (SH. 29:17-18, 32:30:1).

4) மனிதனான 'இயேசு' நித்தியமானவராயிருந்ததும் இல்லை, இருப்பதுமில்லை. அவர் தேவனோடு ஒருவராயும் இல்லை. அவர் மாம்சீகமானவர். ஆனால் 'கிறிஸ்துவே' மெய்யான சத்தியம், தெய்வீக சிந்தை, தேவனை பிரதிபலிப்பவர். இயேசு கிறிஸ்துவுக்கு இப்படியாக 'இயேசு' 'கிறிஸ்து' என்ற இரு தன்மைகள் இருந்தன. அவர் பூமியை விட்டுக் கடந்து செல்லுகையில் இயேசுவானவர் மறைந்துவிட்டார். ஆனால் கிறிஸ்துவோ 'தெய்வீக விஞ்ஞானம்' என்னும் நித்திய வரிசையில் உலகத்தின் பாவங்களை எடுத்துப் போடுகிறவராக என்றும் வீற்றிருக்கிறார் (SH. 334:10-20).

5) கடவுளின் ஒரு பகுதி மனிதனுக்குள் பிரவேசிக்க முடியாது. மட்டுமல்ல, கடவுளின் முழுமையையும் ஒரு தனிமனிதனால் பிரதிபலிக்க முடியாது. அப்படி இருக்குமானால், கடவுள் அநித்தியமானவராகி விடுவார். கடவுள் என்னும் நிலைக்கு கீழானவராகிவிடுவார் (ibid. P.336).

6) இயேசு கிறிஸ்து இந்த பூமியில் அவரது பிதாவின் பணி செய்தபோது, அவரது சரீரத்தில் ஓடிய இரத்தம் சபிக்கப்பட்ட சிலுவை மரணத்தில் சிந்தப்பட்டதால் விசேஷித்த இரத்தமாக மாறிவிடவில்லை. எனவே சிலுவை மரத்தில் சிந்தப்பட்ட இரத்தத்திற்குப் பாவங்களைக் கழுவும் வல்லமை புதிதாக வந்துவிடவில்லை (SH. P.25).

7) கல்லறையில் வைக்கப்பட்ட இயேசு கிறிஸ்து மரித்துவிட்டார் என்று அவரது சீஷர்கள் நம்பினார்கள். ஆனால் அவர் மரிக்கவில்லை, அவர் கல்லறைக்குள் மறைத்து வைக்கப்பட்டு இருந்தார். அங்கு அவர் உயிரோடுதான் இருந்தார். அழிந்து போகின்றவைகளின் மேல் ஆவியின் வல்லமையையும், அதன் செயல்பாட்டையும் விளக்கிக் கொண்டிருந்தார். சிலுவையில் அறையப்பட்ட இயேசு கிறிஸ்து மரிக்கவில்லை என்பதை அறியும் வரை அவரது சீஷர்களால் எந்த அற்புதத்தையும் செய்ய இயலவில்லை. (SH. PP.45, 46, ibid. P.44).

**இயேசுவைக்குறித்து வேதம் கூறுவது**

*மத்.3:17, யோவான் 1:1, 12, 13, 18, 33, 34, ரோமர் 5:6, 5:8-10, 6:4, 8:3, 1 கொரி.15:20, 1 தீமோ.3:16, 1 யோவான் 2:22).*

**D. பரிசுத்த ஆவியானவரைக் குறித்து இவர்கள் கூறுவது:**

1) தெய்வீக அறிவியல் அல்லது கிறிஸ்தவ விஞ்ஞானமே தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவி (SH. P. 22:27).

2) பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுதல் என்பது கிறிஸ்தவ விஞ்ஞானத்தைக் குறித்து விரிவாக அறிந்துகொள்ளுதலே (SH.P. 361).

3) பரிசுத்த ஆவி என்பது கிறிஸ்தவ விஞ்ஞானமே (SH. P.167).

4) எனவே ஒரு கிறிஸ்தவ விஞ்ஞானி பரிசுத்த ஆவியானவரின் ஆள் தத்துவம் குறித்தும், தெய்வீகத்தன்மை குறித்தும் வேதம் கூறும் ஏராளமான நிரூபணங்களை ஒதுக்கி விடுவான். ஏனெனில் அவர் ஆள்தத்துவம் உடையவர் அல்லவே.

5) ஆழத்தின் மேல் இருள் இருந்தது. தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக்கொண்டிருந்தார். ஆம், கிறிஸ்தவ விஞ்ஞானமே ஜலத்தின்மேல் அசைவாடிக்கொண்டிருந்தது. அதாவது தவறுகளின்மேல் கர்த்தரின் வார்த்தை உண்டாகி தேவனே எல்லாவற்றிலும் எல்லாமுமாய் இருக்கிறார் என உரைத்தது (SH. 503:12-14).

**பரிசுத்த ஆவியானவரைக் குறித்து வேதம் கூறுவது:**

*லூக்கா 12:12, யோவான் 14:26, 16:7-11, அப்.8:28-29, அப்.16:7, அப். 1:8, ரோமர் 8:11, மத்தேயு 28:19).*

**E. திரித்துவத்தைக் குறித்து இவர்கள் கூறுவது:**

*1)* ஒருவரில் மூவர் என்னும் கொள்கை கிறிஸ்தவத்திற்குரியது அல்ல. அது புறஜாதிகளுக்குரியது (SH.P.152).

*2)* அது 'பலகடவுள்' கொள்கையை அடிப்படையாகக் கொண்டது. மாறாக அது எப்போதும் பிரசன்னராக இருக்கும் நானே (I AM) என்ற கடவுளைக் குறிக்கும் சொல்லல்ல (ibid.P.256).

*3)* பத்துக் கற்பனையில் முதலாவது கற்பனையை விசுவாசிக்கும் கிறிஸ்தவன் 'ஒரே கடவுள்' என்ற நம்பிக்கையுடையவன்.

*4)* ஜீவன், அன்பு, சத்தியம் இம்மூன்றும் இணைந்ததே கடவுள். (ibid. 331)

**திரித்துவத்தைக் குறித்து வேதம் கூறுவது:**

*மாற்கு 1:9-11, யோவான் 14:16, 18, 23, 26, ரோமர் 8:9-11, 2 கொரி.13:14.*

**F. மனிதனைக் குறித்து இவர்கள் கூறுவது:**

*1)* மனிதன் ஒரு பொருளல்ல (Man is not a Matter), அவன் எலும்பு, மூளை இன்னும் பலவற்றால் உருவாக்கப்பட்ட ஒரு வஸ்து அல்ல. அவன் ஒரு ஆவியே.

*2)* மனிதன் ஆவிக்குரியவன். அவன் கடவுளைப்போலவே ஆவிக்குரியவன், பூரணமானவன் (M.W.P.79).

3) மனிதன் நித்தியமானவன், எனவே அவன் கடவுளைப் போன்றவன். அன்பு, சத்தியம், ஜீவன் இவற்றின் மறு உருவானவன்.
4) மனிதன் பூமியின் தூளிலிருந்து உருவாக்கப்படவில்லை.
5) மனிதனுக்கு பிறப்பு, இறப்பு என்பது கிடையாது. அவன் நித்தியமானவன் (P.140).
6) மனிதனுக்கு ஆத்துமா இருக்கிறது என்பது மெய்யல்ல. மனிதன் தான் ஆத்துமா. அவனுக்கு சரீரம் இருக்கிறது என்பதும் பொய்த் தோற்றமே. மனிதன் என்பது ஒரு தோற்றம்தான். மனிதன் என்பது வெறும் எண்ணமே. அவன் ஒரு சரீரத்தை உடையவனல்ல. சிந்தையே மெய். சரீரம் என்பது பொய் (SH.P.475.)

**மனிதனைக் குறித்து வேதம் கூறுவது:**

ஆதி.1:27, 6:5, யோவான் 28:3-4, சங்.8:41, பிர.3:20-21, மத்.1:21, ரோமர் 6:4, 7:24,

## G. பாவத்தைக் குறித்து இவர்கள் கூறுவது:

1. பாவம் என்பது மனதின் எண்ணமேயொழிய வேறல்ல (P.311).
2. பாவம் என்ற ஒன்று உலகில் இல்லை (P.447-17th Ed).
3. பாவம் என்பது வெறும் கற்பனையே (P.107).
4. மனிதனால் பாவம் செய்ய இயலாது (P.475).
5. பாவம், வியாதி, மரணம் என்பவை தவறுகளாலும், தவறான எண்ணங்கள் நம்பிக்கைகளாலும் வந்தது. அந்தத் தவறான நம்பிக்கைகளை அழிக்கவே கிறிஸ்து வந்தார் (ibid. P.473).
6. பிசாசு என்பது பொய். பாவத்தின் மேலும், வியாதி மரணத்தின் மேலும் உள்ள நம்பிக்கையே பிசாசு (P.584).

**பாவத்தைக் குறித்து வேதம் கூறுவது:**

ஆதி.6:5, சங்.3:21, ஏசா.1:18, எசே.18:4, மத்.18:4, மத்.1:21, ரோமர் 3:19, 23, 1 யோவான் 1:7-8, 10, 3:4, 5:17.

## H. இவர்களது பிற போதனைகள்:

1) கடவுள் மனிதனின் ஜெபத்தைக் கேட்டு அசைபவரல்ல.
2) அவர் ஏற்கனவே செய்ததைத் தவிர புதிதாக எதையும் மனிதனின் ஜெபத்தைக் கேட்டு செய்யமாட்டார். அவர் ஒரு விசை செய்தது, செய்ததுதான். அதை மாற்றமாட்டார் (P.307-308).

3) சத்தமாக செய்யப்படும் ஜெபம் சோதனைக்குள்ளாக்கும். பிரயோஜனமான எல்லாக் காரியங்களும் சிந்தையிலேயே இருக்கும்போது, ஜெபம் எதற்கு? (P.317).

4) ஜெபிப்பதால் மனிதனின் பாவம் அகற்றப்படுகிறது. வெறும் ஜெபத்தால் மனிதன் நல்லவனாக மாற்றப்படுகிறான் என்றால் அப்படிப்பட்ட ஜெபம் பிசாசுக்கடுத்தது. (P.5).

5) தேவன் ஆள்தத்துவமற்றவர். எனவே அவரிடம் ஜெபம் செய்வது வீண்.

6) திருமதி எடியால் மாற்றப்பட்ட கர்த்தரின் ஜெபம் அவர்களது கூடுகையில் இப்படியாக சொல்லப்படுகிறது. 'தகப்பனும் தாயுமான கடவுளே! எல்லா விதத்திலும் இசைவானவரே, ஆராதிக்கப்படக் கூடியவரே, உம் அரசு வருக. நீர் எப்போதும் இருப்பவர், பரலோகத்தில் இருப்பதுபோல இந்த பூமியிலேயும் தேவன் சர்வ வல்லவர், உயர்ந்தவர் என்று நாங்கள் அறியும்படி செய்யும். இன்று வேண்டிய கிருபையைத் தாரும். எங்களின் பாசமுள்ள தேவைகளைப் போஷியும். அன்பு அன்பிலே வெளிப்படுகிறது. எங்களை சோதனைக்கு உட்படப்பண்ணாதேயும். பாவம், வியாதி, மரணத்திலிருந்து விடுவியும். ஏனெனில் தேவனே நித்தியமானவர். சர்வவல்லவர், சர்வஜீவன், சத்தியம், அன்பு எல்லாவற்றிலும் எல்லாம் அவரே".

7) தெய்வீக சட்டப்படி பாவம், பாடுகள் எல்லாம் மனந்திரும்புவதாலும் பாவ மன்னிப்பாலும் நீக்கப்படுவதில்லை (ibid).

8) இரட்சிப்பு என்பது பாவம், தீமை இவற்றிலிருந்து கிடைக்கும் தனிப்பட்ட விடுதலை அல்ல. கடவுளின் சிந்தையான மனிதன் ஏற்கனவே நித்திய இரட்சிப்பினால் இரட்சிக்கப்பட்டு விட்டான்.

9) மனிதன் ஒருபோதும் வியாதிப்படுவதில்லை (1906-Edi.P.393).

10) வாழ்வு என்பது நிஜம், சாவு என்பது பொய் (P.428).

11) பாவம், வியாதி, மரணம் அழிந்துபோகும் மனதால் உண்டாகின்ற பிரம்மையே (1906 Edi.P.283).

12) மனிதன் மரணமடைய முடியாது (1906 Edi. P.475).

13) வியாதியை ஒரு உண்மைப் பொருளென நினைப்பதும், அதைக் காண்பதும், சரீரத்தில் உணர்வதும் மனதின் முதிர்ச்சியற்ற நிலையையே காட்டுகின்றது (P.395).

14) கடவுள் ஆவியாய் இருக்கிறார். ஆவி பொருளுக்கு எதிர்மாறானது. எனவே ஆவிக்கு எதிர்மாறான பொருளை தேவன் சிருஷ்டிக்கவில்லை.

15) ஆவி ஒருபோதும் பொருளை உண்டாக்கவில்லை.

16) பொருள் என்பது மனிதனின் நம்பிக்கையே (P.335-469).

17) அன்பு, சத்தியம், ஜீவன் இவை மூன்றும் எல்லாவற்றையும் விட உன்னதமானது என்று அறிந்துகொள்வதும், செயல்படுத்திக் காட்டுவதுமே இரட்சிப்பாகும்.

இரட்சிப்பு என்பது பாவம், வியாதி, மரணம் இவைகள் அழிக்கப்பட்டு விட்டன என்று உணர்ந்து கொள்வதாகும் (SH.593, 20-22).

18) கிறிஸ்தவ அறிவியல் மூலம் பாவத்தை வெல்லலாம். எப்போதென்றால் பாவத்திற்கு வல்லமை, வேதனை, அழுத்தம் தரக்கூடிய சக்தி உண்டென்பதை மறுக்கும்போதே, இப்படிப்பட்ட தவறுகளை மறுப்பதால் நாம் ஜெயம் கொள்ளலாம் (SH. 339.28-31).

19) இயேசு வாழ்வின் வழியை செயல்படுத்திக் காட்டினார். ஆனால் பரலோகம்போக ஒரே வழிதான் உண்டு. தெய்வீக விஞ்ஞானப்படியான கிறிஸ்துவே அந்த வழி (SH.242:9-10).

20) பொய்யை உருவாக்கக்கூடிய தவறுகள், இச்சை, கோபம், வெறுப்பு, மனுஷீக நம்பிக்கை, பழிவாங்குதல், பாவம், வியாதி இவைகளையே அல்லாமல் நரகம் என்பது வேறொன்றுமல்ல (SH.588:1-4).

21) முடிவான நியாயத்தீர்ப்பு என்ற ஒன்று இல்லை. ஞானமான நியாயத்தீர்ப்பு நாளின் ஒவ்வொரு மணித்துளியும் தொடர்ச்சியாக வந்துகொண்டுதான் இருக்கிறது (SH.291:28-29).

22) பாவம் தனக்குச் சொந்தமான நரகத்தை உருவாக்கி விடுகிறது. நன்மை தனக்குச் சொந்தமான பரலோகத்தை உருவாக்கி விடுகின்றது (SH.196:18-19).

23) சரீரம் மரிக்க முடியாது. ஏனெனில் பொருளுக்கு உயிரில்லை. பொருளாகிய சரீரத்திற்கும் உயிர் இல்லை. அது மரணத்தின் மூலம் ஒப்புக்கொடுக்கும்படியாக அதற்கு உயிர் என்ற ஒன்று இல்லை.

24) முழு உலக இரட்சிப்பு வளர்ச்சியிலும், பயிற்சியிலும்தான் இருக்கிறது (SH. 291:12).

25) திருமதி எடி ஆதி சபையின் நாட்களிலிருந்து காணாமற்போன குணமளிக்கும் வல்லமையைத்தான் மீண்டும் கண்டுபிடித்துவிட்டதாகவும், கிறிஸ்தவ அறிவியல் (Christian Science) மூலம் பலவிதமான கேன்சர் வியாதிகளையும், டிப்தீரியா, காசநோய் போன்றவற்றையும் குணமாக்கியதாகவும் கூறியுள்ளார். ஆனால் அவர் அப்படி குணமாக்கியதற்கு எந்தவிதமான ஆதாராங்களையும் அவர்கள் கூட்டத்தினரால் கொடுக்க இயலவில்லை. கிறிஸ்தவ விஞ்ஞான சபையின் நிர்வாகியும், பிரதிநிதியுமான திரு. ஆல்ப்ரட் பார்லோ தன் வாழ்நாளில் உடல் உறுப்புகள் சம்பந்தமான எந்த வியாதியையும் திருமதி எடி குணமாக்கியதை தான் காணவில்லை என்று ஒரு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். ஒரேயொரு விசை 'மடக்க முடியாத கால் வியாதி' உடைய ஒருவரை மாத்திரம் திருமதி. எடி குணமாக்கியிருக்கிறார் என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

கிறிஸ்தவ விஞ்ஞானம் மூலம் சுகமளித்தலைப் போதிக்கின்ற இவ்வியக்கத்தின் தலைவியான திருமதி. எடி பலமுறை அறுவை சிகிச்சை செய்ததற்கும், பல்

வைத்தியர்களையும், எலும்பியல் நிபுணர்களையும் சந்தித்து சுகம் பெற்றதற்கும் இவ்வியக்கத்தினரே சாட்சி கூறுகின்றனர். திருமி எடியின் சொந்தப் பேத்தியும், அவரது சகோதரன் சாமுவேலின் மனைவியும் அவரது நெருங்கிய நண்பரான ஜோசப் ஆர்ம்ஸ்ட்ராங்கும் கேன்சர், நிமோனியா, ப்ளூரஸி போன்ற வியாதிகளால் மரித்துவிட்டனர். ஆனால் திருமதி. எடியின் கிறிஸ்தவ விஞ்ஞானத்தால் அவர்களைக் குணப்படுத்த இயலவில்லை.

அற்புதங்களைச் செய்கின்ற எத்தனையோ பொல்லாத சக்திகள் இவ்வுலகில் உண்டென நாம் அறிந்துள்ளோம். இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத் தன்மையையும், பாடு, மரணம், உயிர்த்தெழுதலையும் மறுதலிக்கும் ஒரு கூட்டம் எப்படி மெய்யான அற்புதங்களைச் செய்ய முடியும்? எனவே 'கிறிஸ்தவ அறிவியல்' ஒரு துர்உபதேசக் கூட்டம் என்பது அவர்களது ஒவ்வொரு உபதேசத்தின் மூலமும் தெள்ளத் தெளிவாக விளங்குகின்றது. இவ்வித துர்உபதேசங்களையெல்லாம் இக்கூட்டத்தைச் சேர்ந்த மக்கள் நம்பியும், அவைகளைப் போதித்தும் வருகிறார்கள். மிக அடிப்படை உபதேசங்களிலேயே இவர்கள் வேத வசனத்திற்கு விரோதமாய் நிற்கிறார்கள்.

1. தேவனைக் குறித்த தவறான விளக்கம்.
2. இயேசுவை முழுவதும் மறுதலித்தல்.
3. திரித்துவத்தை மறுதலித்தல்.
4. பரிசுத்தாவியை அசட்டை செய்தல்.
5. வியாதியை நம்பாதிருத்தல்.
6. மரணத்தை நம்பாதிருத்தல்.
7. சாத்தானை நம்பாதிருத்தல்.
8. சிருஷ்டிப்பை மறுத்தல்.
9. மோட்சம், நரகம் இரண்டையும் மறுத்தல்.
10. பாவம் என்பது இல்லையென மறுத்தல்.
11. இரட்சிப்பு என்பது அவசியமில்லையென போதித்தல்.
12. உயிர்த்தெழுதலில் நம்பிக்கை கிடையாது என விசுவாசித்தல்.

இப்படிப்பட்ட நம்பிக்கைகளைக் கொண்டதொரு கூட்டம் இன்றைய மக்களை வஞ்சித்துக்கொண்டு வருகின்றது. உலகம் முழுவதும் 60 நாடுகளில் 4000 சபைகளுக்கு மேல் இவ்வியக்கத்திற்கு சொந்தமாக இருக்கின்றது. அமெரிக்காவில் அனைத்து பெரிய நகரங்களிலும் இவர்களின் சபைகள் இருக்கின்றன. ஒரு கிரீடம் சூட்டிய சிலுவை கொண்ட முத்திரையே இவர்கள் இயக்கத்தின் சின்னம். இவர்களின் தாய் சபை என்று அழைக்கப்படும் தலைமை சபை Boston, Massachusetts, U.S.A-ல் இருக்கிறது.

ஆம் பிரியமானவர்களே, இப்படிப்பட்ட தவறான போதனைகள் நம் மத்தியிலே அதிகமான நபர்களால் நம்பப்படுகிறது, அதனால் மோசம்போகிறவர்களாகவும் காணப்படுகிறார்கள் என்பது ஒரு வருத்தமான காரியமாகத்தான் இருக்கிறது. ஆகவே,

இவற்றை கற்றுக்கொண்ட நாம் மிகவும் கவனமாக இருந்து, சத்தியத்தின்படி வாழ்ந்து, தேவனுக்கு சாட்சியாக கனிகொடுக்க வேண்டியது என்பது அவசியமாக இருக்கிறது. கிறிஸ்தவ அறிவியல் என்ற உபதேசமானது முற்றிலும் தவறான ஒன்றாக காணப்படுகிறது. இவர்களோடு நாம் நெருங்காமலிருக்க தேவன் நமக்கு உதவி செய்வாராக. எனவே நாம் இவர்களுக்கு எச்சரிக்கையாகயிருந்து, நம்மை நாமே காத்துக்கொள்ள வேண்டியது அவசியமாக இருக்கிறது.

அடுத்த பாடத்தில் இன்னொரு உபதேசத்தை நாம் கற்றுக் கொள்வோம். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பராக! ஆமென்!!

**<u>கேள்விகள்:</u>**

1) கிறிஸ்தவ அறிவியலைக்குறித்து நமக்கிருக்கவேண்டிய அடிப்படையான புரிந்துகொள்ளுதலைக்குறித்து சற்று விளக்கமாக கூறுக.
2) கிறிஸ்தவ அறிவியலின் தோற்றம் குறித்தும், அதன் கருத்துக்கள் மற்றும் போதனைகள் குறித்தும் விளக்கமாக கூறுக.
3) கிறிஸ்தவ அறிவியல் இயக்கத்தின் தாய் சபை இயக்குநர்கள் தங்கள் இயக்கத்தின் ஸ்தாபகரான திருமதி எடியைக் குறித்து கூறிய அறிக்கையை எழுதுக.
4) வேதாகமத்தை குறித்து கிறிஸ்தவ அறிவியல் இயக்கத்தின் தலைவர் திருமதி எடி அவர்கள் கூறும் தவறான கருத்துக்களை சற்று விளக்கமாக கூறுக.
5) பிதாவாகிய தேவனைக்குறித்து, குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை குறித்து, பரிசுத்த ஆவியானவரைக் குறித்தும் திருமதி எடி அவர்களின் தவறான கருத்துக்களையும் அதற்கான வேதாகம பதில்களையும் குறித்து விளக்கமாக கூறுக.
6) மனிதனைக்குறித்தும், பாவத்தைக்குறித்தும் திருமதி எடி அவர்களின் தவறான போதனைகளையும், வேதாகமம் கூறும் சரியான போதனைகளையும் குறித்து விளக்கமாக கூறுக.
7) ஜெபத்தைக்குறித்த திருமதி எடி அவர்களின் தவறான கருத்துக்களையும், அவர்களால் இயக்கப்பட்ட தவறான ஜெபக்குறிப்புகளை குறித்தும் சற்று விளக்கமாக கூறுக.
8) இரட்சிப்பு, வியாதி, மரணம் மற்றும் உயிர்த்தெழுதல், பரலோகம், மற்றும் நரகம் குறித்து திருமதி எடி அவர்களின் தவறான உபதேசங்களை சற்று விளக்கமாக கூறுக.
9) திரித்துவத்தை குறித்து திருமதி எடி அவர்களின் தவறான போதனைகளை சற்று விளக்கமாக கூறுக.

# நவீனகால தவறான உபதேசங்கள்

## பாடம் - 8

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் அன்பின் வாழ்த்துக்கள். இந்த பாடத்தில் நாம் தவறான உபதேசங்கள் என்ற தலைப்பிலே மற்றொரு தவறான உபதேசமாகிய பிரன்ஹாம் நற்செய்திச் சங்கம் என்பதைப் பற்றி கற்றுக்கொள்வோம்.

## பிரன்ஹாம் நற்செய்திச் சங்கம் (உரைக்கப்பட்ட வார்த்தை)

இவர் முதன் முதலில் தன்னையொரு கிறிஸ்தவனாகவும், பின்பு ஒரு விசுவாசியாகவும், அதன்பின் ஒரு போதகனாகவும் நாளடைவில், தான் இந்தக் கடைசி காலச் சபையின் அதாவது லவோதிக்கேயா சபை காலமான தற்போதைய காலத்தின் தீர்க்கதரிசி என்றும் கூறிவந்த வில்லியம் பிரன்ஹாம், தன்னுடைய மக்களால் 'கிறிஸ்து பிரன்ஹாம்' என்று அழைக்கப்படுகின்றார்.

இன்றைய நாட்களில் எங்கு பார்த்தாலும் இவ்வியக்கத்தார் 'வருகிற கிறிஸ்து பிரன்ஹாம்' என்று சுவர்களில் எழுதியும், கைப்பிரதிகளைக் கொடுத்தும் இலவசமான புத்தகங்களை வழங்கியும் மக்களைக் குழப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

இயேசு ஒருவரே கிறிஸ்துவாய் இருக்கிறார். அவரே மேசியாவாகவும், இரட்சகராகவும் அங்கீகரிக்கப்பட்டு இருக்கிறார். அப்படியிருக்கும்போது, எதன் அடிப்படையில் பிரன்ஹாம் 'கிறிஸ்து பிரன்ஹாம்' என்று அழைக்கப்படுகின்றார் என்பது புரியாத ஒரு காரியம்.

இயேசு கிறிஸ்து தமது கடைசி காலச்செய்தியை சீஷர்களுக்குக் கூறியபோது, ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். ஏனெனில் அநேகர் வந்து என் நாமத்தைத் தரித்துக்கொண்டு, நான் கிறிஸ்து என்று சொல்லி அநேகரை வஞ்சிப்பார்கள் என்று கூறினார் (மத்தேயு 24:4-6). அவர் கூறியபடி பார்த்தால், இன்று இவ்வியக்கத்தார் வில்லியம் பிரன்ஹாமை கிறிஸ்து என்று கூறுவது மக்களை வஞ்சிப்பதேயன்றி வேறென்ன? இவர்கள் மக்களை வஞ்சிக்கிறார்கள். இப்படி இந்த பிரன்ஹாம் போல் வரப்போகிற கிறிஸ்து நானே என்று சொல்லிய ஊழியர்கள் வரலாறும் இருக்கிறது.

### யார் இந்த பிரன்ஹாம்?

கி.பி.1909-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9-ம் தேதியன்று மிகவும் இளமையான தம்பதிகளுக்கு கென்டக்கியிலுள்ள பர்க்ஸ்வில் (Burksvile) என்னுமிடத்தில் ஏழ்மையான ஒரு மரக்குடிலில் இவர் பிறந்தார். இவரின் முழுப்பெயர் வில்லியம் மரியன் பிரன்ஹாம்

என்பதாகும். இவர் பிறந்த இரண்டுநாள் வரைக்கும், இவரின் பதினைந்து வயது தாயாரும், பதினெட்டு வயது தந்தையும், இவரைப்பார்க்க வந்தவர்களும், குழந்தையான இவரை ஜன்னல் வழியாக உள்ளே பார்த்தபோது, ஒரு மங்கலான பொன்னிற ஒளி குழந்தையின் தலைக்குமேல் நின்று கொண்டிருப்பதைக் கண்டார்களாம்.

இவருக்கு ஏழு வயதாகும்போது, ஒருநாள் தன் தந்தைக்காக தண்ணீர் சுமந்து வருகையில் சிறிதுநேரம் ஒரு மரத்தடியில் இளைப்பாறினாராம். அப்பொழுது அந்த மரத்தின் இலைகளின் வழியே காற்றடிக்கிற ஒரு சத்தம் வருவதைக்கேட்டு அவர் திகைத்துப்போனாராம். நிமிர்ந்து மேலே பார்த்தபோது, இவைகளின் அசைவு ஒன்றும் காணப்படவில்லையாம். பின்பு அந்த மரத்தடியிலிருந்து புறப்பட்டுச் சென்றபோது, அதே சத்தம் மறுபடியும் உண்டானதாம். ஆனால் அம்முறை அந்த சத்தம் முன்பைவிட அதிகமாய் இருந்ததாம். அவர் திரும்பவும் மேலே பார்த்தாராம்.

அப்பொழுது அந்த மரத்தில் ஒரு சுழல்காற்றைக் கண்டாராம். அந்தக் காற்றில் அவர் காதில் மட்டும் கேட்கக்கூடிய ஒரு சத்தம் உண்டானதாம். அது 'புகை பிடிக்காதே, மது அருந்தாதே. உன் சரீரத்தை எவ்விதத்திலும் தீட்டுப்படுத்தாதே. நீ பெரியவனாகும்போது, நீ செய்ய வேண்டிய பணி ஒன்றுண்டு' என்றதாம். வில்லியம் பிரன்ஹாம் மிகவும் பயந்து வீட்டிற்குள் ஓடிவந்து விட்டாராம். இதை ஒருவரிடத்திலும் சொல்லவும் இல்லையாம். வில்லியம் பிரன்ஹாமின் பெற்றோர் ஒரு நல்ல கிறிஸ்தவக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களல்ல. அவர்கள் ஆவிக்குரிய செயல்களில் அத்தனை ஈடுபாடில்லாதவர்களாய் காணப்பட்டார்கள். அவரது தந்தை கள்ளச்சாராயம் காய்ச்சி விற்று வந்தார். இதனால் பிரன்ஹாம் மற்ற நண்பர்களோடு மது அருந்தவும் வற்புறுத்தப்பட்டார். ஆனால் அவரோ அவைகளையெல்லாம் தொடவில்லையாம். இதை வரலாறு சொல்கிறது.

இரண்டு முறை சோதிடர்கள் அவரை அணுகி, பிரன்ஹாம் நீ ஒரு அடையாளத்தின் கீழ் பிறந்துள்ளாய். அந்த மரத்தையும், பிறந்த ராசியையும் விளக்குகிறோம் என்று கூறினார்களாம். ஆனால் இவரோ அதைத் தடுத்து விட்டாராம்.

இவருக்கு ஏறக்குறைய பதினெட்டு வயதானபோது, மாட்டுப்பண்ணையில் வேலை செய்ய, இவர் வசித்து வந்த ஊரிலிருந்து மேற்குப் பகுதிக்குச் சென்றார். இவர் சென்றதும் இவரின் சகோதரன் மரணமடைந்தார் என்ற மரண செய்தி இவரை சென்றடைந்தது. இந்த மரணச்செய்தியால் ஏற்ப்பட்ட துக்கத்தாலும் சோகத்தாலும் இவருக்கு நரம்புத்தளர்ச்சி ஏற்ப்பட்டது. மேலும் குடல்வால் நோயும் (Appendicitis) உண்டானது.

இந்த வியாதி வந்தபடியால், அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய நிர்பந்தமும் வந்தது. மருத்துவமனையில் அறுவை சிகிச்சையின்போது, இவர் மயக்கத்தில் இருந்தார். அவ்வேளையில் இவருடைய உயிர் இவரின் உடலை விட்டுப்பிரிந்து

போவதை உணர்ந்தாராம். கொஞ்சநேரம் இவரின் உடல் உயிரற்று இருந்தபோது, மருத்துவர்கள் இவரது உயிருக்காக போராடினார்களாம். இந்த நேரத்தில் பிரன்ஹாம் பரலோகம், பாதாளம் இவைகளின் தரிசனங்களைக் கண்டாராம். இவர் தேவனிடம் மன்றாடி, தேவன் தனக்கு மீண்டும் உயிர் கொடுப்பாரானால், அவரைத்தேடி அவரைச் சேவிப்பதாக வாக்களித்தாராம். அதன்பின்பு இவருக்கு உயிர் மீண்டும் வந்ததாம், மருத்துவர்கள் அதிர்ச்சியடைந்தார்களாம்.

1933-ம் ஆண்டு ஜூன் மாதம் ஒருநாள் காலையில் ஓய்வுநாள் பள்ளி வகுப்பிற்குப் போதனை செய்ய ஆயத்தப்பட்டுக்கொண்டிருக்கும்போது, இவர் 7 முக்கியமான தரிசனங்களைக் கண்டாராம். இந்த தரிசனங்கள் உலக நடப்புகளோடு சம்பந்தப்பட்டிருக்கின்றனவாம். அப்படிக் கண்ட தரிசனங்களாவன:

1. இத்தாலி நாட்டின் சர்வாதிகாரி பெனிடோ முசோலினியைக் குறித்து.
2. ஆஸ்திரியா நாட்டின் அடோல்ப் ஹிட்லரை தலைமையாகக் கொண்டு ஜெர்மனி அமெரிக்காவுடன் போரிடும் என்பது.
3. ஜனாதிபதியான ரூஸ்வெல்ட் ஜெர்மனியுடன் போர்தொடுப்பார் என்பது.
4. உலகில் பாசிசம், நாசிசம், கம்யூனிசம் என்னும் மூன்று கொள்கைகள் இருந்தாலும் முதல் இரண்டு கொள்கைகளும் அழிந்து கம்யூனிசமே நிலைத்து நிற்கும் என்பது.
5. உலகில் தொழில்நுட்பம் அதிகமாக வளரும், அறிவு பெருகும் என்பது.
6. இரு ஸ்திரீகளைக் குறித்த தரிசனம். ஒருவள் அதிகம் கெட்டு விடுவதும், அடுத்தவள் அழகாய்த் தோற்றமளிக்கும் தரிசனம்.
7. அமெரிக்கா தேசம் முழுவதும் அணுகுண்டால் அழிந்து பாழகி சிதைந்துவிடும் என்ற தீர்க்கதரிசனங்கள்.

மேலே கூறப்பட்ட வருங்கால நிகழ்ச்சிகளின் முன்னறிவிப்பைக் குறித்து கூறியவைகளில் ஒன்றிரண்டு தவிர மற்றவைகள் எதுவும் நிறைவேறவில்லை. இது மட்டுமின்றி வெளிப்படுத்தின விசேஷத்தில் 5 முதல் 8 அதிகாரங்களையும் அவைகளின் இரகசியங்களையும் தேவன் அக்கினி ஸ்தம்பத்திலிருந்து தனக்கு வெளிப்படுத்தினார் என்று தன் குழுவினரிடமும் கூறியிருக்கிறார்.

பிரன்ஹாமின் தரிசனத்தையும் வெளிப்பாடுகளையும் கேள்விப்பட்டு மற்ற இடங்களில் ஊழியம் செய்து வரும் நல்ல தேவ ஊழியர்கள் அவரைக் கண்டித்தனர், பலர் அவரை எச்சரித்தனர். இந்த முன்னறிவிப்புகளும் தரிசனங்களும் சுகமாக்குதலும் தேவனால் உண்டாகவில்லை என்று மற்ற ஊழியர்கள் சொன்னபோது, இவர் கொஞ்சம் கலக்கமடைந்தார்.

சில ஆண்டுகள் கடந்தன. அதன்பின் இவர் மேய்ப்பராகவும் ஊழியராகவும் ஊழியம் செய்யும்போது, இந்தியானா அரசால் வேட்டை அதிகாரியாகவும் நியமிக்கப்பட்டார். 1946-ம் ஆண்டு மே மாதம் 7-ம் தேதி இவரும் இவரது நண்பரும்

வேட்டைக்குப் புறப்பட்டனர். அப்போது வீட்டின் வெளியிலுள்ள மேப்பில் மரத்தைக் கடந்தபோது, அந்த மரத்தின் உச்சியிலிருந்து ஒரு பலத்த காற்று புறப்பட்டு வந்ததாம். அந்தக் காற்று அந்த மரத்தை சாய்த்துவிடுவதுபோல் இருந்ததாம். வீசப்பட்ட அந்தக் காற்றினால் இவர் தள்ளாடினாராம். இதைப் பார்த்த பிரன்ஹாமின் மனைவி அவரிடம் ஓடிவந்தபோது, 'கடந்த 20 வருடங்களாக என்னனைக் குறித்தோ அல்லது இந்த ஊழியத்தைக் குறித்தோ என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இப்படியே நான் தொடர்ந்துபோக முடியாது. இதற்கான பதிலை நான் அறிந்தாக வேண்டும். இது தேவனால் உண்டானதா? இதெல்லாம் என்ன? நான் அறிந்ததே தீரவேண்டும். இதற்கு பதில் கிடைக்கும் மட்டும் நான் உன்னிடமோ நம் குழந்தையிடமோ திரும்பிவர மாட்டேன் என்று பிரன்ஹாம் சொல்லிவிட்டுச் சென்றுவிட்டார்.

பிறகு தூரமாக வெகு இரகசியமான ஓரிடத்திற்குத் தனிமையில் சென்று, தேவனைத்தேடி, இதற்கான பதிலைப்பெற்று, தனக்கு அமைதியைத் தேட வேண்டுமென தீர்மானித்தார். இவர் கடவுளை நோக்கிக் காத்துக்கொண்டிருந்தபோது, சுமார் 1 மணி அளவில், ஒரு மென்மையான ஒளி தோன்றுவதைக் கண்டாராம். அங்கு பிரகாசமான ஒரு நட்சத்திரம் தொங்கிக் கொண்டிருந்ததாம், அந்த நட்சத்திரத்திற்கு முனைகள் இல்லையாம், அதுவொரு தீப்பந்தம்போல இருந்ததாம்.

அதற்குப்பின் யாரோ நடந்து வருவது போன்ற காலடி ஓசையைக் கேட்டாராம். அப்போது இவரை நோக்கி ஒரு பெரிய மனித உருவம் நடந்து வந்ததாம். அந்த உருவம் சுமார் 25 பவுண்டு எடை உள்ளதாய் இருந்ததாம். அது கருப்பு நிறம் கொண்டதாயும், தலைமுடி தோள்வரை தொங்குவதாயும் இருந்ததாம். அந்த உருவத்தின் முகத்தில் தாடி இல்லையாம். பயங்கரமான இந்த உருவத்தை பிரன்ஹாம் கண்டதும் பயந்து போனாராம். அந்தக் கருப்பு மனித உருவமோ அவரைப் பார்த்து, 'பயப்படாதே, உன் விசித்திரமான வாழ்க்கையும் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டுள்ள உன் வழிகளும், நீ உலகிலுள்ள மக்களிடம் சுகமாக்கும் வரத்துடன் தேவனால் அனுப்பப்பட்டவன் என்பதற்கு எடுத்துக்காட்டாக உள்ளன என்பதை நீ அறிந்துகொள்ளவே நான் சர்வ வல்லமை கொண்ட தேவனுடைய சமூகத்திலிருந்து அனுப்பப்பட்டேன். நீ மட்டும் உத்தமனாயிருந்து ஜனங்கள் உன்னை நம்பும்படி செய்தால், உன் ஜெபத்திற்கு முன்பாக எதுவுமே நிற்க முடியாது, புற்று நோயும்கூட' என்றதாம்.

இதற்குப்பின் பிரன்ஹாம் வெளிக்கூட்டங்களில் அதிகம் பங்குபெறலானார். இவரின் வெளிநாட்டு ஊழியம் வளர்ந்தது. இதர சபை மக்களும் ஏன், பெந்தெகொஸ்தே ஊழியம் செய்வோரும் இவரை நம்பலாயினர். இந்தியானாவிலுள்ள (Indiana) ஜெ.்.பர்சன்னிலிருந்த இவரின் சிறிய சபையே இவரைக் குறித்து பறைசாற்றும் முதல் சபையாக இருந்தது.

வெளிக்கூட்டங்களில் பிரன்ஹாம் அதிக கவனம் செலுத்தலானார். கூட்டத்தில் கலந்துகொள்ளும் மக்கள் வியாதியுற்றவர்களானால், அவர்களை சுகப்படுத்தும் வரத்தோடு இவர் செயல்பட்டார். கூட்டத்தில் வியாதி உள்ளவர்கள் யாராவது இருந்தால் மேடையில் நிற்கும் இவருடைய கைகளில் அதிர்வு உண்டாகி, கை வீங்கிவிடுமாம். அப்போது பிணியாளிகள் கூட்டத்தில் வந்திருக்கிறார்கள் என்பதை இவர் உணர்ந்துகொள்வாராம். கூட்டத்தில் வந்திருக்கும் அந்த வியாதிக்காரரின் பெயர், உடை, முகவரி எல்லாவற்றையும்கூட பிரன்ஹாம் மேடையிலிருந்தே தீர்க்கதரிசனமாய் கூறுவாராம்.

சில சமயங்களில் அக்கினி ஸ்தம்பம் போன்றதொரு பொருள், கூட்டம் நடக்கும் இடம் முழுவதும் அசைந்து வருமாம். இந்த ஸ்தம்பம் கூட்டத்திலிருக்கும் மக்களில் யார் மீது அமர்கின்றதோ, அவருக்கு சுகம் கிடைத்துவிடுமாம். 1965-ம் ஆண்டு நடந்த பிரன்ஹாம் கூட்டத்தில் அவ்வித அக்கினி ஸ்தம்பம் உண்டானபோது, பிரன்ஹாம் இதைத் தெரிவித்தார். ஆனால் இதைக்குறித்து மக்கள் ஒரு மறுப்பும் தெரிவிக்கவில்லையாம்.

ஆப்பிரிக்காவில் டர்பனில் நடந்த கூட்டத்தில் சுமார் 1,00,000 பேர் கலந்துகொண்டனர். இதில் 30,000 பேர் இரட்சிக்கப்பட்டதாயும், 25,000 பேர் சுகம் பெற்றதாயும் கூறப்படுகின்றது. இந்தியாவில் பம்பாய் நகரில் நடந்த கூட்டத்தில் 4,00,000 பேர் கலந்து கொண்டதாகக் கூறப்படுகின்றது. அதேபோல 1950-ல் ஜனவரியில் டெக்சாஸிலுள்ள ஹவுஸ்டனிலும், கலிபோர்னியாவிலும் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

1956-ம் ஆண்டு ஜனவரி மாதம் டெக்ஸாஸிலுள்ள ஹவுஸ்டன் என்னுமிடத்தில் பிரன்ஹாமின் தலைக்கு மேலே ஒரு அக்கினிப் பிழம்பு காணப்பட்டதாம். இந்த அக்கினிப்பிழம்பு இவரின் பிறப்பிலிருந்தே இவருடன் கூடவேயிருந்து வருகிறதாம். இதற்கு முன்பே 1933-ம் ஆண்டின் இந்தியானாவிலுள்ள ஜெபர்சன்னில் நடந்த ஒரு ஞானஸ்நான ஆராதனையில் இந்த அக்கினிப்பிழம்பு, இவருக்கு முன் தோன்றி கிறிஸ்துவின் முதலாம் வருகைக்கு யோவான் ஸ்நானன் முன்னோடியாய் இருந்ததுபோல, அவருடைய இரண்டாம் வருகைக்கு நீ முன்னோடியாய் இருப்பாய் என்று கூறியதாம்.

ஆரம்ப நாட்களில் பாப்திஸ்டு மிஷனெரிகளோடு ஐக்கியம் வைத்திருந்த பிரன்ஹாம் பின்நாட்களில் 'யேகோவா சாட்சிகள்' கூட்டத்தைச் சேர்ந்த மனிதர்களோடும் உறவு வைத்துக் கொள்ளலானார். இதனால் மற்ற கெள்கைகளையும் படித்து தவறான உபதேசங்களையும் ஏற்றுக்கொள்ளலானார்கள். மட்டுமல்லாது தேவனுடைய சரியான உபதேசத்தை இவர் கற்றுத் தேறவில்லை. குறைவான இறையியல் பயிற்சிகூட இல்லாத இவர் தரிசனத்திற்குப் பின்னும், தேவதூதனின் பின்னும் சென்றதால், வசனத்தின் மையத்தையும் மூல செய்தியையும் விட்டு விலகலானார்.

இவர் தனது செய்திகளில் 'கர்த்தர் உரைக்கிறதாவது' என்ற வார்த்தையை அதிகம் பயன்படுத்தினார். ஆனால் உண்மையிலேயே அவைகள் கர்த்தரால் உரைக்கப்பட்ட வார்த்தைகளா? என்ற சந்தேகத்தை அது எழுப்பியது. இவரது செய்திகள் வேத அடிப்படையை மீறியதாலும், இயேசு கிறிஸ்துவின் நாமத்தை சரிவர பயன்படுத்தாததினாலும் இவர் கேள்விக் குறியானார். மற்ற ஊழியர்கள் இவரை எச்சரித்தும் கண்டித்தும் வந்தனர். இவரின் போதனைகள் அத்தனை தெளிவானதாய் இல்லாதபடியால் இவரே சந்தேகத்திற்கு ஆளானார்.

பிரன்ஹாம் திரித்துவத்தை நம்பாதவர். திரித்துவக் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளாது மறுத்துக் கூறினார். அதை மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் தவறானதென்றும் போதித்தார். இயேசுகிறிஸ்து தேவனால் சிருஷ்டிக்கப்பட்டவர். அவர் தேவனுடைய நித்திய குமாரன் அல்ல என்றும் கருதினார். அதை நாளடைவில் எழுத்திலும் செயலிலும் காட்டலானார்.

ஆதாம், ஏவாள் இவர்களைக் குறித்த வேதபோதனையில் ஏவாளுக்கும் சர்ப்பத்திற்கும் தவறான உறவு இருந்தது. காயின், ஏவாளுக்கும் சர்ப்பத்திற்கும் இருந்த தவறான உறவால் பிறந்தவன், ஆபேல் ஆதாமிற்கும் ஏவாளுக்கும் பிறந்தவன் என்று இவர் கூறினார்.

இவரது தீர்க்கதரிசனங்கள் அடங்கிய புத்தகமான 'ஏழுசபையின் காலங்கள்' என்பதில் 1977-ம் ஆண்டுதான் ஆயிரம் வருடத்தின் முதலாம் ஆண்டு என்று கூறியிருக்கிறார். பாவிகள் அக்கினிக் கடலில் தள்ளப்படுவார்கள். அப்படிப்பட்ட அக்கினிக்கடல் உண்டென்பதை இவர் துல்லியமாக ஒத்துக்கொண்டபோதிலும், அக்கினிக்கடல் ஒழிந்துபோகும் என்று கூறியிருக்கிறார்.

லவோதிக்கேயா காலத்து தீர்க்கதரிசி, தூதன் என்று வேதப்பூர்வமாக முற்றிலும் உறுதிப்படுத்தப்பட்ட அத்தகைய தூதன் இன்று உலகில் இருக்கிறார். வேதத்தில் உரைக்கப்பட்ட தகுதி அனைத்தும் அவரில் காணப்படுகின்றது. அவரது ஊழியத்தின் ஒரு பாகம் ஏற்றுக்கொள்ளப்படாமல் புறக்கணிக்கப்பட்டு வருகிறது. அவருடைய பிறப்பு, வளர்ந்த முறை படிப்பு, பிரசங்கம், போதகம், ஆவியில் ஊழியம் செய்தல் ஆகிய அனைத்துமே வேதப்பிரகாரமாக தகுதியைப் பெற்றுள்ளது. எனவே இவை அனைத்தும் பிரன்ஹாமை உறுதிப்படுத்துகின்றன என்று இவரது கூட்டத்தார் கூறுகின்றார்.

பரிசுத்தாவியை இவர் ஒரு ஆள்தத்துவமாகக் கருதவில்லை. மாறாக ஒரு காற்று சக்தியாக நினைத்தார். பிரன்ஹாமின் பிறப்பும் இயேசுவின் பிறப்பும், பிரன்ஹாமின் வளர்ப்பும் இயேசுவின் வளர்ப்பும், பிரன்ஹாமின் ஊழியமும் இயேசுவின் ஊழியமும் சமமாய் இருப்பது போலவே இவ்வியக்கத்தார் ஒற்றுமைப்படுத்திக் கூறுகிறார்கள்.

இவரே கடைசி காலத்து தீர்க்கனான எலியா என்று இவரது கூட்டத்தாரால் கூறப்பட்டு வந்தது. ஆனால் தற்போது இவ்வியக்கத்து மக்கள் இவரைக் கடைசி

காலத்தில் வரப்போகிற கிறிஸ்து பிரன்ஹாம் என்று கூறி வருகின்றனர். பெரிய பெரிய சுவர்களில் கிறிஸ்து பிரன்ஹாம் வருகிறார் என்று எழுதுகின்றனர், கைப்பிரதிகளைக் கொடுக்கின்றனர், இலவசமாக புத்தகங்களைத் தருகின்றனர். இவரின் புகைப்படத்தில் இவர் தலைக்குமேல் ஒரு வட்டத்தையும் போடுகின்றனர் (தலையின் மேல் வரையும் வட்டம் கடவுள் தன்மையைக் குறிப்பதாகும்).

இரட்சிக்கப்படுவதற்கு இயேசு கிறிஸ்துவின் நாமமேயல்லாமல் வேறே நாமம் வானத்திலும் வானத்தின் கீழும் பூமியின் மேலும் கிடையாது. இரட்சிக்கப்படுவதற்கு அவரின் நாமமும் பாவங்கள் கழுவப்படுவதற்கு அவரின் இரத்தமுமேயன்றி வேறே பரிகாரம் இல்லை. அப்படியிருக்கும்போது பிரன்ஹாமைக் கிறிஸ்து என்று இவ்வியக்கத்தார் கூறுவது, இன்னொரு புதிய நாமத்தை அறிமுகப்படுத்துவதாகும். இப்படிப்பட்ட புதிய நாமத்தை தேவனோ, வேத வசனமோ அங்கீகரிப்பதில்லை. இதுவொரு தவறான வழிநடத்துதல்.

பிரன்ஹாம் தன் வாழ்வின் பெரும்பகுதியை இந்தியானாவிலுள்ள ஜெபர்சன் என்னுமிடத்தில் கழித்தார். பிறகு அரிசோனாவிலுள்ள டூசான் என்னுமிடத்தில் வாழ்ந்து வந்தார். முடிவில் 1965-ம் ஆண்டு ஒரு கார் விபத்தில் அகால மரணமடைந்தார். இவரின் மரணத்திற்குப் பின் இவரைத் தெய்வீகத்தன்மை கொண்டவரான கிறிஸ்து என்று அப்பலாச்சியாவின் (Appalachia) உள்காடு துவங்கி, சாஸ்கெட்கவானிலுள்ள (Saskatchewan) பரந்த புல்வெளி வரை இவரைப் பின்பற்றும் கூட்டத்தினர் கூறுகின்றனர்.

இவர் நடத்தி வந்த சங்கம், பிரன்ஹாம் இறந்த பின் 'இயேசு மட்டும் (Jesus only Movement) இயக்கத்தைச் சார்ந்த சிலரால் இந்த மனிதனின் பெயர் சீக்கிரமே மறைந்து விடுமென்று கருதப்பட்டது. மாறாக உலகின் எல்லா நாடுகளிலும் இந்த துர்உபதேசத்தின் கூட்டம் பரவிக்கொண்டேயிருக்கின்றது.

இவர்களது இலக்கிய ஊழியம் துரிதமாக நடக்கின்றது. பிரன்ஹாமின் செய்திகளடங்கிய 162 புத்தகங்கள் (உரைக்கப்பட்ட வார்த்தை) தமிழிலும் அச்சிடப்பட்டிருக்கிறது. அவை அனைத்தும் ஆங்கிலப் புத்தகங்களிலிருந்து இதர மொழிகளுக்கு மொழி பெயர்ப்பும் செய்யப்பட்டிருக்கின்றன. இவ்வியக்கத்தினர் 6 வகையான கைப்பிரதிகளை அச்சடித்துக் கொடுக்கின்றனர். இவையனைத்தும் இலவசமாகவே கொடுக்கப்படுகின்றன. இவர்கள் புத்தகம் அனைத்திலும் ஒரு பெரிய கழுகு பறந்து இறங்குவது போன்ற சின்னம் பொறிக்கப்பட்டிருக்கும்.

பிரன்ஹாம் ஒரு கிறிஸ்து என்று இவ்வியக்க மக்கள் இவரைக் குறித்து கூறுவதால், ஆண்டவராகிய இயேசு சொன்ன கடைசிக்கால கள்ளத் தீர்க்கதரிசிகளின் வரிசையில் இவர்கள் அடங்கி விடுகின்றனர். எனவே இவர்களோடு எவ்வித உறவோ ஐக்கியமோ வைத்துக்கொள்வது மகா ஆபத்தும் வேதத்திற்கு எதிரான குற்றமுமாகும்.

Branham Good News Society-யின் நிறுவனத்திலிருந்து வரும் எந்தப் புத்தகத்தையும் கிறிஸ்தவ விசுவாசிகளாகிய நாம் பெற்றுக்கொள்ளுதல் கூடாது. மற்றும் இக்கூட்டத்தைச் சேர்ந்த மக்களோடு எவ்விதத் தொடர்பும் வைத்துக் கொள்ளுதல் நமக்கு உகந்ததல்ல. இந்த துர்உபதேசத்திற்கு விலகி வாழ்வோம். இந்த கூட்டத்தைச் சார்ந்தவர்கள் இப்போது தமிழ்நாட்டில் இருக்கிறார்கள் என்பது உண்மையான காரியம்.

அடுத்ததாக இன்னொரு தவறான உபதேச கூட்டத்தாரைப் பற்றி நாம் கற்றுக்கொள்ளப்போகிறோம்.

## CHILDREN OF GOD (FAMILY OF LOVE)
## கடவுளின் பிள்ளைகள் (அன்பின் குடும்பம்)

கடவுளின் பிள்ளைகள் என்றும், அன்பின் குடும்பம் என்றும் அழைக்கப்படும் இந்த இயக்கம் உலகின் பெரும்பான்மையான நாடுகளில் இரகசியமாகவும் விறுவிறுப்பாகவும் வளர்ந்து வரும் இயக்கமாகும்.

இந்த இயக்கம் வேத அடிப்படையில்லாதது. எனினும் கிறிஸ்தவத்தோடு தொடர்பு வைத்து துர்வசனத்தை தவறான கொள்கைகளோடு பரப்பிக் கொண்டிருக்கிறது. இந்த இயக்கத்தை நிறுவியவர் டேவிட் பிராண்ட் பர்க் (David Brand Berg) என்பவராவார். இவர் 1919-ம் ஆண்டு பிப்ரவரி 18-ம் நாள் வட அமெரிக்காவில் கலிபோர்னியாவிலுள்ள ஆக்லண்ட (Oakland) என்னுமிடத்தில் பிறந்தவர்.

டேவிட் பர்க்குடைய பெற்றோராகிய ஜால்மர் (Hjalmer), வர்ஜினியா (Virgenia) என்பவர்கள் இருவரும் நல்ல உண்மையான கிறிஸ்தவர்கள். தேவனுக்காய் உண்மையாகவும், உத்தமமாகவும் ஊழியம் செய்து வந்தனர். இந்தத் தம்பதிகள் கிறிஸ்தவ மிஷனெரி கூட்டு சபை (Christian and Missionary Alliance Church) என்னும் ஊழியத்தை செய்து வந்தனர். தந்தை ஜால்மர் போதகராகவும், கிறிஸ்தவக் கல்லூரி ஆசிரியராகவும் இருந்தார். தாய் வர்ஜினியா வானொலியில் பேசும் சுவிசேஷகியாக செயல்பட்டார். எனவே ஜால்மரை விட வர்ஜினியா மிகவும் பிரபலமானவராக இருந்தார்.

ஊழியம் செய்யும் பெற்றோரின் மகனான டேவிட் பர்க் கிறிஸ்தவ மிஷனெரி கூட்டு சபையின் போதகராக 1940-க்குப் பிறகு ஊழியத்திற்கு வந்தார். பின்பு 1944-ல் ஜேன் (Jane) என்னும் பெண்ணைத் திருமணம் செய்தார். 1944-க்குப் பிறகு டேவிட் தீவிரமான சுவிசேஷ வேலைகளில் இறங்கலானார். 1949-ல் அரிசோனாவில் (Arizona) தலைமைப் போதகராக பொறுப்பேற்றார். ஆனால் 1950-க்குப் பிறகு தன் வாழ்வில் நடந்த வீழ்ச்சியின் காரணமாக சபையின் தலைமைப் பொறுப்பைவிட்டு வெளியேறிவிட்டார்.

தன்னுடைய தனி வாழ்வில் ஏற்பட்ட வீழ்ச்சியால் உண்மையையும், பரிசுத்தத்தையும் இழந்தார். ஆனால் இந்தத் தோல்வியையும், வீழ்ச்சியையும் வெளிக்காட்டிக் கொள்ளாது, தன்னுடைய பழைய ஊழிய அனுபவத்தை வைத்துக்கொண்டு புதிய இயக்கத்தை ஆரம்பிக்க முற்பட்டார். தேவன் தனக்கு ஒரு புது ஊழியத்தையும், புது யுகத்தையும், புது இயக்கத்தையும் கொடுத்தார் என்று சொல்லி வந்தார்.

1968-ம் ஆண்டில் டேவிட் பர்க் தன்னுடைய மனைவி மற்றும் நான்கு பிள்ளைகளோடு கலிபோர்னியாவுக்கு குடிபெயர்ந்தார். கலிபோர்னியாவிலுள்ள ஹன்டிங்டன் கடற்கரையில் (Huntington Beach) பல்வேறு கலாச்சாரப் பின்னணியிலுள்ள மக்களைச் சேர்த்து தன் கொள்கைக்காக ஒரு குழுவை உண்டாக்கினார். அந்த ஆண்டில் ஒரு பொது அறிக்கையை வெளியிட்டார். 'ஒழுங்கு முறையின் மேல் யுத்தம்" (The War of the System) என்றழைக்கப்படும் இந்த அறிக்கை கல்வி முறை, திருச்சபை முறை, உற்பத்தி முறைகளைக் குறை கூறியது. இது அன்றைய செய்தித்தாள்களிலும் வெளிவந்தது.

1969-ல் 'கலிபோர்னியா நகரம் வெகுசீக்கிரத்தில் பூகம்பத்தால் சரிந்து பசிபிக் கடலில் தள்ளுண்டு அழிந்து போகும்' என்று தீர்க்கதரிசனம் கூறினார். டேவிட் சொன்ன வார்த்தைகளாலும், இவர் நல்ல சபைகளில் நடந்த தொழுகைகளைக் குறைகூறுவதாலும், அங்கிருந்த சபைகளின் மேல் சொன்ன தவறான குற்றங்களுக்காகவும், ஜனங்களைக் குழப்பியதற்காகவும் இவர் கலிபோர்னியாவிலிருந்து வெளியேறும்படி கேட்டுக் கொள்ளப்பட்டார்.

டேவிட் பர்கும் இவரோ 50 பேரும் கலிபோர்னியாவிலிருந்து வெளியேறி அரிசோனாவில் குடியேறினார்கள். இவர்கள் அவ்விடத்தில் தங்கி தங்களின் கொள்கைகளுக்காக உழைத்தனர். அப்போது இக்குழுவில் 75 பேர் உறுப்பினர்கள். இவர்கள் அமெரிக்கா, கனடா போன்ற பகுதிகளுக்குச் சென்று பிரச்சாரம் செய்தனர். அதிலிருந்து இந்தக் குழுவிற்குக் 'கடவுளின் பிள்ளைகள்' (Children of God) என்று பெயர் சூட்டப்பட்டது.

சில நாட்களுக்குப் பின் டேவிட் பர்க் தன்னுடைய பெயரை 'மோசஸ் டேவிட்' என்றும் 'மூ' என்று மாற்றிக் கொண்டார். இவரின் குழுவில் இறந்தவர்களுக்கு பழைய ஏற்பாட்டின் கோத்திரத் தலைவர்களுக்கிருந்த பெயர்களையும் வைத்தார். ஒவ்வொருவரும் மறுபிறப்படைந்ததற்கு அடையாளமாக தங்களின் பெயர்களை மாற்றி, வேதாகமத்திலிருக்கும் பெயரை வைத்துக்கொள்ள வேண்டும். பெயர் மாற்றமே புதுவாழ்வுக்கு (New Birth) அடையாளம் என்று கூறினார்.

டேவிட் பர்க்கின் மனைவிக்கு 'அன்னை ஏவாள்' (Mother Eve) என்று பெயர் மாற்றப்பட்டது. ஆனால் இவருக்கு தன் கணவர் பர்க்கோடு வாழ்வதற்கு சில சட்டங்கள் போடப்பட்டது. எனவே சில நாட்களுக்குப் பின்பு, பர்க்கின் மனைவி தன் கணவனின் நடத்தை பிடிக்காது, அவர்கள் குழுவை விட்டு வெளியேறினார். இதனைத் தொடர்ந்து டேவிட் பர்க்கின் வாழ்வில் நடந்த சம்பவங்களை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

1. டேவிட் பர்க் தன்னுடைய இயக்கத்தில் இருப்பவர்களை சிறு சிறு குழுக்களாகப் பிரித்து பல நாடுகளுக்கும் அனுப்பினார். இயேசு கிறிஸ்து எப்படி 12 சீஷர்களை அனுப்பி ஊழியம் செய்யச் சொன்னாரோ, அப்படியே தானும் செய்வதாக இவர் கூறினார்.
2. தான் இந்த தலைமுறையின் உண்மையான தீர்க்கதரிசி என்று எங்கும் சொல்லி வந்தார். இவரோடு இருந்தவர்கள் அனைவரும் தந்தை மோசஸ் டேவிட்டின் மூலமே தேவனுடைய உண்மையான சத்தியம் வெளிப்படுகிறது என்று கூறினார்கள். டேவிட்டின் செய்திகள் 'மூ கடிதங்கள்' (MO Letters) என்று அழைக்கப்படுகின்றன. இந்தக் கடிதத்தில் சொல்லப்பட்டவைகள் பரிசுத்த வேதாகமத்திற்கு இணையானவைகள் என்று அவ்வியக்கத்தினர் அதைப் பாதுகாத்து படிக்கின்றனர். (இப்புத்தகத்தை அவர்கள் வெளியரங்கமாய் படிப்பதில்லை. அப்புத்தகத்தில் இருப்பதை எவரும் வெளிப்படையாகவும் சொல்வதுமில்லை).
3. டேவிட் பர்க் தான் தேவனுடைய உண்மையான தீர்க்கதரிசி என்றும் இவருக்கென தேவன் விசேஷமான வெளிப்பாடுகளைக் கொடுத்தார் என்றும் கூறினார். இவரது தனிப்பட்ட ஊழியத்திற்கென தேவன் கொடுத்த முதலாவது தீர்க்கதரிசனத்தை இவ்விதமாக இவர் கூறுகின்றார்.
4. 'சீயோனிலே நிர்விசாரமாக தலையணைகளின் மேல் சாய்ந்து கொண்டிருப்பவர்களை சிதறடிக்க உன்னைக் கூர்மையான பற்களுள்ள இயந்திரமாக்குவேன். நீ மலைகளைப் பதராக மாற்றுவதுபோல் அவர்களை நொறுக்குவாய்' என்று தேவன் உரைத்தாராம் (Moses David. The Disciple Revolution, London. The Chidlren of God, 1975. PP. 7, 8).
5. கடவுளின் பிள்ளைகள் இயக்கத்தில் முழு அதிகாரமும் படைத்தவர் டேவிட் பர்க். இவ்வியக்கத்தார் இவரை தந்தை மோசே என அழைக்கின்றனர். இந்தத் தலைமுறைக்கு தேவனால் அனுப்பப்பட்ட தீர்க்கதரிசி இவர் எனவும், இவர் மூலம் இவ்வியக்கத்தார் சத்தியத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் நம்புகின்றனர்.
6. 'கடவுளின் பிள்ளைகள் இயக்கத்தின் பேர் இயேசு கிறிஸ்து, அதன் அடித்தண்டு தீர்க்கதரிசியும் இராஜாவுமான டேவிட் பர்க். இந்தத் தண்டில் பாயும் ஜீவரத்தம் கடவுளின் வார்த்தையே என்கின்றனர் (The New Leadership. Revolution London. The Children of God, 1975, P.2).

7. டேவிட் பர்க் தனது சீஷர்களோடு 'மூ கடிதங்கள்' மூலமே தொடர்புகொள்கிறார். அவைகள் அதிகாரப்பூர்வமானவை என கருதப்படுகின்றன. பரலோகக் கட்டளைகளையும், கற்பனைகளையும் தாங்கி வரும் 'மூ' (MO கடிதங்களே 'கடவுளின் பிள்ளைகள்' இயக்கத்தின் மூலக்கொள்கை என கருதப்படுகின்றது. ஏனெனில் அவைகள் கடவுளிடமிருந்து தீர்க்கதரிசி டேவிட் பர்க்கிற்கு நேரடியாகக் கொடுக்கப்படுகின்றது. அதிகாரமுடைய அந்த 'மூ' கடிதங்களையே இயக்கத்தினரை நடத்திச் செல்கிறது. (Father David Pioneering, Popularity and Persecution, London. Children of God Trust, Oct.25, 1975, Do# 20, P.5).
8. இவர்களுக்கென்று குறிப்பிடத்தக்க கொள்கைகள் எதுவும் இல்லை. வேதத்தில் தெளிவற்றவர்களாய் சில தவறான வியாக்கியானங்களைக் கொடுத்து வேதத்தைத் தவறாக அர்த்தப்படுத்துகின்றனரேயொழிய திட்டமான கொள்கைகள் எதுவும் இவ்வியக்கத்திற்கென இல்லை.
9. இயேசு கிறிஸ்து கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டவர். அவர் கன்னியிடத்தில் பிறந்திருந்தால் எப்படி தேவகுமாரனாக இருக்க முடியும்?
10. 'இருந்தாலும், தேவனால் எதை சிருஷ்டிக்க முடியுமோ அதைத்தான் அவர் சிருஷ்டித்தார். வேறு வார்த்தையில் சொன்னால் இயேசு தேவனால் சிருஷ்டிக்கப்பட்டவர். இவர் திரித்துவத்தின் மீது நம்பிக்கை இல்லாதவர், இயேசுவின் தெய்வீகத்தை மறுக்கிறவர்.
11. இந்த இயக்கம் குடும்பத்தை மையமாக வைத்து இயங்குகிறது. இயேசுவுக்காக எல்லாவற்றையும் கொடுக்கும்படி அழைக்கிறது. தங்களின் வீடுகளையும் சொத்துக்களையும் விற்று இயக்கத்திற்குக் கொடுக்கவும், குடும்பத்திலிருக்கும் பிள்ளைகளை தங்களின் இயக்கத்தில் சேர்க்கவும் இவ்வியக்கத்தார் அதிகமாக வற்புறுத்துகின்றனர்.

ஒரு மனிதன் தன் ஒரே மனைவியுடன் தான் வாழவேண்டுமென்று வேதம் தெளிவாய்ச் சொல்லுகிறது. ஆனால் டேவிட் பர்க்கின் எழுத்துக்களில் ஆங்காங்கே தாராள உடலுறவை (Free Sex) ஆதரித்து எழுதியிருக்கின்றார்.

கிறிஸ்தவ உலகில் மிகவும் பிரபலமான மாத இதழான 'கிறிஸ்டியானிட்டி டுடே' (Christianity Today) 1977 பிப்ரவரி 18-ம் நாள், இவ்வியக்கத்தின் மூத்த தலைவர்களில் இருவராக ஜாக் மற்றும் டேவிட் ஜாக் இருவரிடமும் ஒரு நேர்காணல் (Interview) நடத்தியது. அந்த நேர்காணலில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு கொடுக்கப்பட்ட பதில்கள் பெரும்பான்மையானோரை வியப்பில் ஆழத்தியது.

**கேள்வி:** (COG) Children of God-ஐக் குறித்தும் இந்த இயக்கத்தில் நடக்கும் தவறான நடத்தையைக் குறித்தும் பலர் பல விதங்களில் பேசிக்கொள்கிறார்களே அது

உண்மையா? பொதுவாக பாலியலைக் குறித்து உங்கள் இயக்கம் சொல்லும் கருத்துக்கள் என்ன?

**பதில்:** அவர்கள் சொல்வது உண்மையாக இருக்கலாம். வேதத்தின்படி ஆபிரகாம், சாலொமோன், தாவீது போன்றவர்கள் பல மனைவிகளையும், வைப்பாட்டிகளையும் வைத்திருந்தார்கள். ஆகவே எங்கள் இயக்கத்தின் தலைவர்களும் பல இளம் பெண்களோடு உடலுறவு வைத்துக் கொள்கிறார்கள். அலிகள்கூட திருமணமாகும் வரை எங்களோடே கூட இருப்பார்கள்.

திருமணமான தம்பதிகளும் இவ்வியக்கத்தில் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஆரம்பத்திலேயே தலைமைத்துவப் பயிற்சி (Leadership Training) கொடுக்கப்படும். அதில் இது குறித்து தெளிவாகப் போதிக்கப்படும். 'அவர்கள் சகலத்தையும் பொதுவாக வைத்து அனுபவித்தார்கள்' (அப்.2:44) என்பது இதையே குறிக்கிறது. கணவன், மனைவி இருவரும் தங்களின் விருப்பம்போல் மாறிக்கொள்வதைக் குறித்து MO கடிதம் தவறென்று சொல்லவில்லை என்று அந்தப் பேட்டியில் கூறினார்கள்.

டேவிட் பர்க்கின் நடத்தையின் காரணமாக அவரது மனைவி மற்றும் பிள்ளைகள் இந்த இயக்கத்தை விட்டு ஒருவர் பின் ஒருவராய் வெளியேறினார்கள். இவ்வியக்கத்தில் திருமணமான தம்பதிகள் குழுவாக இணைந்து வஸ்திரமின்றி நீச்சலுக்கு உற்சாகப்படுத்தப்பட்டார்கள் (Skinny Dipping). இப்படிப் பங்கு பெறுவது புரட்சிகரமானது என நாங்கள் கருதுகிறோம் என்கின்றனர்.

கடவுளின் பிள்ளைகள் இயக்கம் உருவான ஆரம்ப நாட்களில் மாலைநேர தலைமைத்துவப் பயிற்சிக்கு அனைத்து திருமணமான தம்பதிகளும் TSC-க்கு (Texas Soul Clinic) அழைக்கப்படுவர். டேவிட் பர்க் இந்த மாலைக் கூட்டத்தை நடத்துவார். எந்த கருத்தைக் குறித்து அவர்கள் பேசும்படி கூடினாலும் இறுதியான பேச்சு பாலியல் உறவு பற்றியதாகவே இருக்கும். பின்நாட்களில் இந்த துர்உபதேசம் குறிப்பிட்ட சில தலைவர்களுக்கு மட்டுமென நிர்ணயிக்கப்பட்டது. இவர்களது தவறான இந்த உபதேசத்திற்கு அப்போஸ்தலர் 2:44-ல் உள்ள 'விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து சகலத்தையும் பொதுவாய் வைத்து அனுபவித்தார்கள்' என்னும் வசனத்தை மேற்க்கோள் காட்டுகின்றனர். சகலத்தையும் என்ற வரிசையில் கணவன் மனைவியைக்கூட இவர்கள் வரிசைப்படுத்திக் காட்டுவது இவர்களது உபதேசம், துர் உபதேசம் என்பதை அப்பட்டமாக நமக்கு தெரிவிக்கிறதல்லவா?

1. 'Flirty Fishing' (FFing) என்ற வார்த்தையை இந்த விதமான தவறான பாலியல் உறவுகளுக்கு இவர்கள் பயன்படுத்துகிறார்கள்.
2. தங்களுக்கு நன்கொடை அளிப்பவர்களுக்கு இவர்களது இலக்கிய நூல்களைக் கொடுப்பதை 'Litnessing' என அழைக்கின்றனர்.

3. இவர்களது செய்திகளடங்கிய பத்திரிக்கை 'The New Nation News' என அழைக்கப்படுகின்றது.

இந்தக் கூட்டம் வேதத்திற்குப் புறம்பானது. வேதத்தைவிட 'மூ கடிதங்களை' அதிகம் முக்கியத்துவப்படுத்துகிறது. எனவே இந்த தவறான உபதேசம் தனி ஒருவனால் எவ்வித ஆவிக்குரிய நோக்கமுமின்றி கற்பனைக்கும், மூளை அறிவிற்கும் ஏற்றதாய் மாம்சீகப் பசியைத் தீர்த்துக்கொள்ளும் வசதிக்காக இவர்களுக்கென்று ஏற்படுத்தப்பட்டதாகும். ஆனால் இவர்கள் பேசுவதும் எழுதுவதும் வாக்குவாதம் செய்வதும் வேத அடிப்படைபோல் தோன்றும்படி செய்கிறார்கள்.

டேவிட் பர்க்கின் வாழ்வில் விசுவாசம், பரிசுத்தம் ஆகியவற்றைக் காணுவது அரிதாயிருந்தது. அவர் இயேசுவின் தெய்வீகத்தையும் திரித்துவத்தையும் கன்னிப்பிறப்பையும் மறுதலித்தார். இவருக்கு பெண்கள் உறவு அதிகம். பலரோடு உடலுறவை ஊக்குவித்துப் பேசினார், எழுதினார். வேத வசனத்தை இதற்கென ஆதாரமாகக் கூறி தவறான முறையில் விளக்கினார்.

இவ்வியக்கத்தின் தலைமைத்துவம் மிகவும் பலமானது. இவர்கள் அலுவலக வேலைகள் வெகு நன்றாக இராணுவம்போல் நடக்கும். பயங்கர இரகசியங்களை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருப்பார்கள். இவ்வியக்கம் எங்கு செயல்படுகிறதென்பதைக் கண்டுபிடிப்பதுகூட கடினம். எந்த இடத்தில் தங்கியிருக்கிறார்கள்? எந்த முகவரியில் வேலை செய்கிறார்கள்? யார் யாரோடு தங்கியிருக்கிறார்கள்? என்பதைத் தெரிந்து கொள்வது சுலபமல்ல. வெகு இரகசியமான இயக்கமாய் செயல்பட்டு, ஆடுகளைப் பிடிக்கும் இவ்வியக்கத்தின் பலம் என்று சொல்லப்படுவது பணமும் இரகசியங்களை கட்டிக் காக்கும் திறமையுமே ஆகும். இவர்கள் தங்கி வேலை செய்ய ஒரு நிரந்தரமான இடத்தை இவர்கள் வைத்துக்கொள்வதில்லை. 'கடவுளின் பிள்ளைகள்' (Children of God) என்றும் 'அன்பின் குடும்பம்' (Family of Love) என்றும் இவ்வியக்கம் அழைக்கப்படுகிறது. அடிக்கடி குழுவின் பெயரை மாற்றிக்கொண்டு வேலை செய்யும் இவர்கள், இந்தியாவில் பெங்களூர், ஹைதராபாத், கோவா, பம்பாய், கல்கத்தா, சென்னை போன்ற நகரங்களிலும் இருக்கிறார்கள்.

எனவே நாங்கள் கடவுளின் பிள்ளைகள் என்று சொல்லிக்கொண்டு யாராவது உங்களிடம் வந்தார்கள் என்றால், அவர்களை நம்பவேண்டாம். வேத வசனத்தை அடிப்படையாகவே வைத்து வசனத்தை திரித்து தவறான வியாக்கியானம் கொடுத்து திசைதிருப்ப முயற்சிக்கிற ஒரு கூட்டத்தாராய் இருக்கிறார்கள். நாம் இவர்களை அறிந்துகொண்டு, இவர்களுக்கு விலகி வாழ வேண்டியது அவசியமான ஒன்றாக இருக்கிறது. கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பராக! ஆமென்!!

**<u>கேள்விகள்:</u>**

1) பிரன்ஹாம் அவர்கள் தாமாகவும் ஜனங்களாலும் கிறிஸ்து பிரன்ஹாம் என்று தவறாக அழைக்கப்படுவதை குறித்து சற்று விளக்கமாக கூறுக.
2) பிரன்ஹாம் என்பவர் குறித்து சிறுகுறிப்பு தருக.
3) பிரன்ஹாம் தான் கண்டதாக கூறுகிற 7 தரிசனங்களையும், அதனுடைய தன்மைகளையும் குறித்து சற்று விளக்கமாக கூறுக.
4) பிரன்ஹாமின் வெளியரங்கமான ஊழியங்களுக்கு தூண்டுதலாக இருந்ததாக கூறப்படுகிற தரிசனத்தை குறித்தும் அவருடைய வெளியரங்கமான ஊழியங்களின் தன்மைகளை குறித்தும் விளக்கமாக கூறுக.
5) பிரன்ஹாமின் நட்பு வட்டாரங்கள் குறித்தும் அதன் தன்மைகள் குறித்தும் சற்று விளக்கமாக கூறுக.
6) பிரன்ஹாம் மற்றவர்களின் சந்தேகத்திற்கு உள்ளானதற்கான காரணங்களை சற்று விளக்கமாக கூறுக.
7) திரித்துவம் மற்றும் இயேசுகிறிஸ்துவைக் குறித்து பிரன்ஹாமின் தவறான கருத்துக்களை கூறுக.
8) பிரன்ஹாம் எழுதிய தீர்க்கதரிசனங்கள் அடங்கிய 7 சபைகளின் காலம் என்கிற புத்தகத்தின் தன்மைகள் குறித்தும் பிரன்ஹாம் குறித்தும், அவரது கூட்டத்தினரின் புரிந்துகொள்ளுதல் குறித்தும், அதனால் உண்டான தவறான நடக்கைகள் குறித்தும் விளக்கமாக கூறுக.
9) பிரன்ஹாம் எழுதிய புத்தகங்களுக்கும் அவரைக் குறித்த கைப்பிரதிகள் மற்றும் அவரது கூட்டத்தார்களுக்கு ஏன்? எவ்வாறு? ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்பதனைக் குறித்தும் சற்று விளக்கமாக கூறுக.
10) கடவுளின் பிள்ளைகள் அல்லது அன்பின் குடும்பம் என்கிற இயக்கத்தின் காரணர் டேவிட் பர்க் என்பவரின் குடும்பம் மற்றும் ஆரம்பகால ஊழிய ஆரம்பகால ஊழிய அனுபவங்களைக் குறித்து சற்று விளக்கமாக கூறுக.
11) கடவுளின் பிள்ளைகள் அல்லது அன்பின் குடும்பம் என்கிற இயக்கம் டேவிட் பர்க்கினால் எவ்வாறு உருவானது என்பதனைக் குறித்தும் அதன் நடக்கைகள் குறித்தும் விளக்கமாக கூறுக.
12) கடவுளின் பிள்ளைகள் அல்லது அன்பின் குடும்பம் என்கிற இயக்கத்தின் கொள்கைகளின் தன்மைகளைக் குறித்து சற்று விளக்கமாக கூறுக.

# நவீனகால தவறான உபதேசங்கள்

## பாடம் - 9

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் அன்பின் வாழ்த்துக்கள். இந்த பாடத்தில் நாம் கற்றுக் கொள்ள இருப்பது, மோர்மோனிசம் பிற்கால பரிசுத்தவான்கள் என்கிற கூட்டத்தார்களின் நம்பிக்கைகள் மற்றும் போதனைகளாகும். இவர்களும் ஒரு தவறான உபதேசக் கொள்கையைச் சார்ந்தவர்கள்.

## மோர்மோனிசம் (பிற்கால பரிசுத்தர்கள்)

நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல் நாங்களாவது வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷசத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன் என்னும் வார்த்தையை பவுல் கலாத்தியருக்குச் சொன்னதின் பொருள் "நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷதையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்." அப்பொழுது புரிந்ததோ, இல்லையோ இப்பொழுது எல்லாருக்கும் புரியும்.

நடந்தவைகள் எல்லாம் உண்மைகளா? கூறுவதெல்லாம் பொய்களா? என்று சந்தேகங்கள் எழுப்பும் கூற்றுகள் இவைகள். ஒரு தரிசனக் கதையில் துவங்கி சண்டையில் வளர்ந்து, சோகத்தில் முடிந்த நிகழ்ச்சிகளைக் கொண்ட இயக்கமே மோர்மோனிசம். 18-ம் நூற்றாண்டின் துவக்கத்தில் பிறந்த ஒரு மனிதனால் சொல்லப்பட்ட தவறான நிகழ்வுகளை, வேதத்தோடும் கிறிஸ்தவத்தோடும் சம்பந்தப்படுத்தி போதிப்பதால் இவ்வியக்கமும் இவ்வியக்கத்தைச் சார்ந்தவர்களும் துர்உபதேச வரிசையில் வருகின்றனர். தேவதூதர்கள் தேவனுடைய மக்களுக்கு தரிசனமாவது என்பது கிறிஸ்தவத்தோடு சம்பந்தப்பட்டது. அது வேதவசனத்திற்குட்பட்டது. ஆனால் தரிசனங்கள் எங்கிருந்து வருகின்றன? எப்படி வருகின்றன? என்பது முக்கியமோ, அப்படியே யாரால் வருகின்றது என்பதும் முக்கியம், இவையெல்லாவற்றையும்விட தரிசனம் என்ன சொல்லுகின்றது? என்பது மிக முக்கியம். வேத வசனத்திற்கு ஒவ்வாத, தேவனால் அனுமதிக்கப்படாத தரிசனங்களும் வர வாய்ப்புகள் உண்டு. அவைகள் சாத்தானுடையவைகள், ஒளியின் தூதனுடையவைகள். இதற்கு ஒரு உதாரணமாக மோர்மோனிச இயக்கம் காணப்படுகிறது.

### இயக்கத்தின் தோற்றம்:

வெர்மோன்ட் (Vermont) என்னும் தேசத்தில் ஷரான் (shorn) என்னும் பட்டணத்தில் ஜோசப் என்பவரும் அவரது மனைவி லூசி மேக் ஸ்மித் என்பவரும்

தங்கள் 10 பிள்ளைகளோடு குடும்பமாய் வசித்து வந்தார்கள். இந்த 10 பிள்ளைகளில் 4-ம் மகனே ஜோசப் ஸ்மித். கி.பி.1805-ம் ஆண்டு டிசம்பர் 23-ல் ஜோசப் ஸ்மித் பிறந்தார். ஜோசப் ஸ்மித்தின் குடும்பம் 1817-ல் நியூயார்க் நகரில் உள்ள பால்மிரா (Palmyra) என்னும் நகருக்கு குடிபெயர்ந்தார்கள். ஜோசப் ஸ்மித்தின் குடும்பம் பால்மிராவுக்குப் போனதும் அங்கேயிருக்கும் பிரஸ்பைடிரியன் திருச்சபையில் குடும்பமாக அங்கத்தினரானார்கள். ஆனால் ஜோசப் ஸ்மித் அவர்களோடு சேரவில்லை. மற்ற சபைகளுக்கும் போகவில்லை. வாலிபனான ஜோசப் ஸ்மித் எல்லா சபைகளைக் குறித்தும் சபைப் பிரிவுகளைக் குறித்தும் விசாரித்து, கேள்விகள் கேட்டு எது சரியான சபை என்னும் ஆராய்ச்சியில் இருந்தான்.

1820-ல் அவரது 15-ம் வயதில் ஜோசப் ஸ்மித்திற்கு தரிசனத்தில் இரண்டு பிரகாசமான நபர்கள் தோன்றினார்களாம். அவர்கள் பிதாவான தேவனும் இயேசு கிறிஸ்துவுமாம். இப்பொழுதிருக்கும் எந்த சமயக் கூட்டத்திலும் நீ சேராதே. எல்லாம் தேவனுடைய பார்வைக்கு அருவருப்பாய் இருக்கிறது என்று அவர்கள் கட்டளையிட்டார்களாம். ஜோசப் ஸ்மித் இந்த அறிவிப்பின்படி மற்ற எல்லா சபைகளும் சரியில்லை என்று நினைத்து சரியான ஒரு நல்ல சபைக்காக காத்திருந்தாராம். ˙1823-ல் செப்டம்பர் 21-ம் தேதி ஒரு தூதன் தரிசனமானான். அவனுக்கு மோரோனி(Moroni) என்று பெயர். தொடர்ந்து அவன் மூன்று முறை தரிசனமானான். தரிசனமாகும் ஒவ்வொரு முறையும் ஒரே காரியத்தையே திரும்பத்திரும்ப சொன்னான்' என்றும் ஜோசப் ஸ்மித் கூறுகின்றார். மோரோனி தூதன் 'நான் தேவனால் அனுப்பப்பட்டு, அமெரிக்காவில் வசிப்பவர்களின் வரலாற்றைச் செல்லும் பழம்பெரும் தங்கத் தட்டுகளான (Golden Plates) கல்வெட்டை வெளிப்படுத்தவே வந்தேன். அந்தத் தங்கத்தட்டுகளோடு இரண்டு கற்களும் இருக்கும். அவைகள் தங்கத்தட்டுகளில் எழுதப்பட்டிருப்பவைகளை மொழிபெயர்க்க உதவும். ஆனால் நீ தகுதியுள்ளவனாகும்போதுதான் அவைகள் உன்னிடத்தில் கொடுக்கப்படும்' என்று சொன்னானாம். தூதன் சொன்ன அடுத்த நாளே ஜோசப் ஸ்மித் ஒரு குன்றின் பக்கம் புதைக்கப்பட்டிருக்கும் தட்டுகளைப் பார்த்தாராம்.

இவைகளுக்கிடையே ஸ்மித், நியூயார்க்கில் தீர்க்கதரிசனக்கல் என்ற கல் வியாபாரம் செய்யத் துவங்கினார். தீர்க்கதரிசனக்கல் (Seer Stone) மூலம் 'புதைந்த செல்வம்' என்று சொல்லி வியாபாரம் செய்தபோது, 1826 மார்ச் 20-ம் தேதி இவர் ஏமாற்றுகிறவர், மக்களை வஞ்சிக்கிறவர் என்று வாடிக்கையாளர்கள் கண்டறிந்து பொய்க்காரன் என்று இவரைக் குற்றம் சாட்டினார்கள். அன்றொரு நாள் தூதன் சொன்னதுபோல் 1827 செப்டம்பர் 27-ல் அந்த இடத்தைத் தோண்டி கல்லைக் கொண்டு வந்தார். இந்த வேலைகளுக்கு உதவியாளராக சரியான ஒருவரைத் தேடிக்கொண்டிருந்தார். அப்பொழுது 1829 ஏப்ரல் 7-ம் தேதி ஒலிவர் கௌடேரி என்பவரைத் தன் பக்கம் சேர்த்துக்கொண்டார். ஜோசப் ஸ்மித் மொழிபெயர்த்துச்

சொல்லச்சொல்ல, ஒலிவர் எழுதிக்கொண்டே வந்தார். இந்தப் புத்தகமே முடிவில் மோர்மோன் புத்தகம் (Book of Mormon) என்றழைக்கப்பட்டது.

இந்தத் தங்கத்தட்டுகளுக்கும் தீர்க்கதரிசனக் கற்களுக்கும் சாட்சிகள் வேண்டுமென்று ஒலிவர் கௌடேரி, மார்டின் ஹரிஸ், டேவிட் விட்மர் ஆகியோரை ஸ்மித் கூட்டுச் சேர்த்துக்கொண்டார். சில நாட்களுக்குப் பிறகு மூன்று பேரில் ஒருவர் இந்தக் கூட்டத்தை விட்டுப்போய்விட்டார். ஸ்மித் ஏமாற்றுகிறார் என்று காரணம் காட்டி தங்கத்தட்டுகளை நான் பார்க்கவேயில்லை என்று சொல்லி அவர் போய்விட்டார். 1829-க்குப் பின் அல்லது 1830-க்கு முன் ஒருநாள் பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகிய மூவரும் திடீரென்று ஜோசப் ஸ்மித்துக்கும் ஒலிவர் கௌடேரிக்கும் தரிசனமாகி 'மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவத்தை' இவர்களுக்குத் திரும்பக் கொடுப்பதாய் சொன்னார்களாம். அவர்கள் மூவரும் சொன்னதாய் ஸ்மித் புதிய திட்டங்களைத் தொடங்கினார். தனக்கு புதிய அதிகாரம் கிடைத்ததாய் 1830 ஏப்ரல் 6-ம் தேதி, ஒரு புதிய சபையை ஆரம்பித்தார். அது இயேசு கிறிஸ்துவின் சபை என்று அழைக்கப்பட்டது. அதன்பின் இச்சபை 'பிற்கால பரிசுத்தர்களின் இயேசு கிறிஸ்துவின் சபை' (Church of Jesus Christ of Latter-day Saints) என்று பெயர் மாற்றி அழைக்கப்பட்டது.

1830-ம் ஆண்டு இவர்களுக்குரிய புத்தகமான 'மோர்மோன் புத்தகம்' வெளியிடப்பட்டது. இதற்கு மறுபெயர் 'இயேசு கிறிஸ்துவின் அடுத்த ஏற்பாடு' (Another Testament of Jesus Christ) என்பதாகும். இந்தப்புத்தகம் மோர்மோன் கூட்டத்தின் விசுவாசப் புத்தகம் எனப்படுகிறது. இதனோடு 'உபதேசங்களும் உடன்படிக்கைகளும்' (Doctrines and Covenants) 'விலையுயர்ந்த முத்து' (The pearl of great price) என்னும் புத்தகங்களையும் ஸ்மித் எழுதினார். இதற்குள் கிளை சபைகள் உண்டாக்கப்பட்டன. ஒஹியோ (Ohio) என்னுமிடத்தில் ஒரு சபை உண்டாக்கப்பட்டு அதற்கு 'ஏனோக்கின் ஐக்கிய வரிசை' (The United order of Enoch) என்று பெயர் வைக்கப்பட்டது. இவர்கள் மக்களுக்குப் போதனை செய்வதில், அதிகமான உபதேசப் பளுவைக் கொடுக்கவில்லை. பீடி, சிகரெட் பிடிக்கக்கூடாது, மது அருந்தக்கூடாது, சூடான பானங்கள் அருந்தக்கூடாது என்று தேவன் ஜோசப் ஸ்மித்திற்கு வெளிப்பாட்டில் சொன்னதாய் இவர்கள் போதித்தார்கள். இவைகள் மக்களைக் கவருவதற்காக சொல்லப்பட்டவைகள். 1836-ல் இவர்களுக்குரிய முதல் தேவாலயம் திறக்கப்பட்டது. நாளடைவில் பிரச்சனைகளும் வளரத்தொடங்கியது.

ஸ்மித்திற்கும் பிரிங்ஹாமுக்கும் ஒவ்வொரு நாளும் கருத்து வேறுபாடும் ஒற்றுமைக் குலைச்சலும் வளரத் துவங்கியது. இயக்கத்திற்குள் பூசல்களும் பெருகின. ஒருவரையொருவர் கடிந்துகொண்டனர். இயக்கத்தின் வெளியேயும் இவர்களுக்கு எதிர்ப்புகள் இருந்தன.

1. பிற்கால பரிசுத்தர்களுடைய இயேசு கிறிஸ்துவின் சபை (Church of Jesus Christ of Latter-day Saints) இது 1847 ஜூலை 24 முதல் சால்ட் லேக் நகரில் 28 மாடிக் கட்டிடத்தை தலைமைச் செயலகமாக வைத்து இயங்கியது.
2. மறு அமைப்பு பிற்கால பரிசுத்தர்களுடைய இயேசு கிறிஸ்துவின் சபை (The Re-organized Church of Jesus Christ of Latter day Saints) இதன் தலைமையகம் அமெரிக்காவிலுள்ள மிசௌரியில் உள்ளது.

மோர்மோனிச இயக்கத்தில் உள்ளவர்களின் சமுதாய வாழ்வு மற்றவர்களால் குற்றம் கண்டுபிடிக்க இயலாத அளவு இருப்பதால் வெளிப்படையாக இவ்வியக்கத்தைக் காணும் எவரும் எளிதில் இதன் பக்கம் ஈர்க்கப்பட்டு விடுவர். சரீரத்தை மிகவும் ஆரோக்கியமாகவும், பரிசுத்தமாகவும் வைத்துக்கொள்ள வேண்டும் என இவர்கள் வலியுறுத்துவதால் இவ்வியக்கத்தினர் புகையிலை, மதுபானங்கள் போன்றவற்றை முற்றிலுமாக ஒதுக்கி விடுகின்றனர். காபி, தேனீர், கொக்கோ கோலா போன்ற பானங்களைகூட இவர்கள் அருந்துவதில்லை.

பழைய ஏற்பாட்டுப் பிரமாணமான தசமபாகம் செலுத்துவதை கட்டாயப்படுத்துவதால் இவ்வியக்கத்தின் அனைத்து உறுப்பினர்களும் தசமபாகத்தை தவறாமல் செலுத்தி வருகின்றனர். இதன் பலனாக இச்சிறிய இயக்கத்தின் வருமானம் உயர்ந்தது ஆச்சரியப்படத்தக்கதே.

## இவர்களின் போதனைகள்

1) ஆதாமே கடவுள். நமது பிதாவாகிய ஆதாம் ஏதேன் தோட்டத்திற்கு வரும்போது ஒரு விண்ணுலக சரீரத்தில் வந்தார். தனது மனைவிகளில் ஒருவளான ஏவாளையும் தன்னோடு அழைத்து வந்தார். அவரே நம்முடைய தகப்பன், நமது கடவுள் (Journal of Discourses. Vol. 1, P.50).
2) நாங்கள் பல கடவுள்கள் கொள்கையை நம்புகின்றோம் (Mormon Doctrine of Deit. P.11).
3) நாம் நமது பிள்ளைகளை உண்டாக்குவது போலவே கடவுளும் மனிதனை சிருஷ்டித்தார். ஏனெனில் சிருஷ்டிப்பிற்கு அதைத் தவிர வேறு வழி இல்லையே (Journal of Discourses. Vol.11, P.112).
4) பிதாவாகிய தேவனுக்கும், குமாரனாகிய இயேசுவுக்கும் நம்மைப்போலவே எலும்பும் சதையும் உண்டு. பரிசுத்த ஆவி என்பது அப்படியல்ல, அது ஆவித்துவம் உடையது.
5) நம் எல்லோருக்கும் பிதாவாகிய தேவன் (ஆதாம்) உங்களைப்போல, என்னைப்போல ஒரு மனிதனாகவே பூமியில் வாழ்ந்தார். ஆனால் அவர் பூமி என்னும் பள்ளியில் நாளுக்கு நாள் வளர்க்கப்பட்டு ஒருநாள் நித்தியத்தை அடைந்தார் (Journal of Discourses. 1:123).

6) பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்ற மூன்று கடவுள்கள் இருக்கின்றார்கள். ஆள்தத்துவத்தில் அவர்கள் வேறுபட்ட தனித்தனி நபர்கள். ஆனால் ஒரே நோக்கம், திட்டம் உடையவர்கள் (Mormon Doctrine P.270).

7) பிதா சர்வவியாபி (Omnipresent) அல்ல. அவர் எலும்பும் சதையும் கொண்டவர். அவரால் ஒரு நேரத்தில் ஒரே இடத்தில்தான் இருக்க இயலும். எங்கும் நிறைந்திருக்கும் தன்மை அவருக்குக் கிடையாது (Talmage Dc.P.48). கடவுள் நித்திய நித்தியமாக கடவுளாக இருக்கவில்லை.

8) இப்போது கடவுள் இருப்பதுபோல ஒருநாள் மனிதன் மாறுவான் (KFD P.9). நாம் கடவுளைப்போல மாற முயற்சி செய்வதன் மூலம் கடவுளாக மாறலாம். இதற்கு முன்பு மனிதனாக வாழ்ந்து கடவுளாக மாறிய அனைவருமே அப்படியே செய்தனர் (KFD. PP.8-10).

9) ஆதியிலே கடவுள்களின் தலைவர் கடவுள்களின் ஆலோசனை சங்கத்தைக் கூட்டி உலகையும் மக்களையும் படைக்க திட்டம் தீட்டினார் (Journal of Discourse. 6:6). அதுபோலவே அவர்கள் இறங்கி வந்து வானங்களையும், பூமியையும் படைத்தனர் (Abraham 4:1).

10) நாம் எல்லோரும் ஒரு காலத்தில் ஆவி உலகில் கடவுளின் பிள்ளைகளாகவே இருந்தோம்.

11) ஆதாம் கடவுளே, பூமிக்கு வந்த முதல் மனிதன். மற்ற கடவுள்களின் உதவியோடு அவர் பூமியை உண்டாக்கினார்.

12) முழு அண்டசராசரத்திலும் பலவிதமான கடவுள்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்கு அநேக ஆவிக்குரிய குழந்தைகள் பிறந்தன.

13) இயேசுகிறிஸ்து என்ற யேகோவா ஏலோயியின் ஆவிக்குரிய, சரீரப் பிரகாரமான குமாரன். எழுத்தின்படி இயேசுகிறிஸ்துவின் ஆவிக்கும், சரீரத்திற்கும் ஏலோயிமே தகப்பன் (Jesus the Christ. Chapter IV PP.48, 466, 467).

14) பரலோக மகிமையைக் கொண்டு ஆளும் தன்மை கொண்ட ஒவ்வொரு மனிதனும் அவனது ஆளுகைக்குள் ஒரு கடவுளே (Mccconkie. M.D..P.322).

15) ஒவ்வொரு கடவுளும் தத்தம் மனைவி அல்லது மனைவிகள் மூலம் குமாரரர்களையும் குமாரத்திகளையும் உடைய எண்ணமுடியாத குடும்பங்களை எழுப்புகிறார்கள் (The Seer 1, No.3. P.37).

16) கடவுள்களும், உலகங்களும் இல்லாத ஒரு காலம் இருந்ததேயில்லை (Young Discourses PP. 22-23).

17) மோர்மோன் சபை மாத்திரமே மீட்கப்பட்ட ஒரே மெய்யான சபை.

18) 'பிற்காலப் பரிசுத்தர்களின் இயேசு கிறிஸ்து (Jesus Christ of Latter-Day Saints) சபைக்கு வெளியே இரட்சிப்பே இல்லை (Mormon Doctrine P.670).

19) ஜோசப் ஸ்மித்தின் கொள்கையை ஏற்றுக்கொள்ளாதவர்களுக்கு இரட்சிப்பும் இல்லை, பரலோகமும் இல்லை (Doctrines of Salvation . PP.189-190).

20) பிற்கால பரிசுத்தர்களின் சபையே மெய்யான சபை. இந்த உலகிலுள்ள மற்ற அனைத்து சபைகளும் பொய்யான சபைகளே.

கடந்த ஐந்து நூற்றாண்டுகளாக சுவிசேஷத்தை பிரசங்கித்த ஜஸ்டின், ஐரேனியஸ், ஜெரோம், ஈசுபியஸ், அத்தனேஸியஸ், கிறிஸாஸ்டம், தாமஸ் ஹஸ், லுத்தர், கால்வின், டின்டேல், விக்களி.ப் வெஸ்லி, வொய்ட்பீல்ட் போன்ற அனைவருமே தவறான சுவிசேஷத்தைப் பிரசங்கித்து தோற்றுப் போனவர்கள். ஜோசப் ஸ்மித் மாத்திரமே சரியான சுவிசேஷத்தை உலகிற்கு அறிவித்தவர்.

'பரிசுத்த வேதாகமம்', 'மோர்மோன் புத்தகம்', உபதேசமும் உடன்படிக்கைகளும், விலையேறப்பெற்ற முத்து' இந்த நான்கு புத்தகங்கள் மாத்திரமே புனித நூல்கள் என்ற அதிகாரம் பெற்றவை. மற்ற அனைத்தும் ஒன்றுமில்லை என்கிறார்கள்.

கத்தோலிக்க சபையார் வேதாகமத்திலுள்ள பல முக்கியமான பகுதிகளை எடுத்துவிட்டனர். விலையேறப்பெற்ற தெளிவான பல பகுதிகளை வேதத்திலிருந்து அவர்கள் நீக்கிவிட்டதாலும், வேதத்தை மொழியாக்கம் செய்யாததாலும் வேதப்புத்தகம் காலாகாலமாய் மாற்றப்பட்டு, பல பகுதிகள் நீக்கப்பட்டு, கறைபடுத்தப்பட்ட ஒரு குறையுள்ள புத்தகமாகவே நமது கையிலிருக்கிறது. ஆகவே நாங்கள் எங்கள் கையிலுள்ள வேதபுத்தகத்தை விட மற்ற மூன்று புனித நூல்களை அதிகமாக நம்புகின்றோம். ஏனெனில் அவைகள் மாற்றப்படாமல், கறைப்படுத்தப்படாமல் முழுமையாக எங்கள் கரங்களில் இருக்கிறது என்கிறார்கள் (See-Answer Here's life Publishers. 1980, PP.4-6).

## மோர்மோன் புத்தகங்கள்:

1. **Book of Mormon** – **மோர்மோன் புத்தகம்:** 138 வெளிப்பாடுகளும் மோர்மோன் உபதேசங்களும் அடங்கிய புத்தகம் இது. மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம் எடுத்தல் என்ற உபதேசமும் இதில் உண்டு. இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த பிறகு அமெரிக்காவில் வசித்த முன்னோர்களுக்கு தரிசனமாகி உரைத்த புனித நூலே 'மோர்மோன் புத்தகம்' நாங்கள் அதையும் கடவுளின் வார்த்தை என்றே நம்புகின்றோம் (Articles of Faith, Section 8)
2. **PEARL OF GREAT PRICE – விலையேறப்பெற்ற முத்து:** இதில் ஆதியாகமத்தின் முதல் 6 அதிகாரங்களுக்கு இணையாக எழுதப்பட்ட 'மோசேயின் புத்தகம், 'ஆபிரகாமின் புத்தகம்', ஜோசப் ஸ்மித்தால் மொழியாக்கம் செய்யப்பட்ட சில வேதபகுதிகள், ஜோசப் ஸ்மித்தின் வாழ்க்கை வரலாற்றின் சில பகுதிகள், 'விசுவாசக் கருப்பொருள்' ஆகியவை அடங்கும்.

3. **LIVING PROPHETS – ஜீவிக்கும் தீர்க்கதரிசிகள்:** தங்கள் சபையின் தலைவர்களை உயிருள்ள அல்லது 'ஜீவிக்கும் தீர்க்கதரிசிகள்' என இவர்கள் அழைக்கின்றனர். அவர்கள் சொல்லும் வாக்கு, தேவவாக்கு என்றும், அவர்கள் வரையும் திட்டம் தேவதிட்டம் என்றும், அவர்கள் காட்டும் வழி தெய்வீக வழி என்றும் இதைத்தவிர வேறு பாதுகாப்பு, சபை மக்களுக்கு இல்லை என்றும் ஆணித்தரமாக நம்புகின்றனர்.

அடுத்ததாக இவர்கள் 3 வானங்களைப்பற்றிய தங்களது நம்பிக்கையையும் குறிப்பிடுகிறார்கள். அவைகள் பின்வருமாறு:

1) **கீழ்வானம்** (Telestial Heaven)

அஞ்ஞான மார்க்கத்தினர்களுக்கும், சுவிசேஷத்தைப் புறக்கணித்தவர்களுக்கும் கடைசியாக நடக்கும் உயிர்த்தெழுதலுக்கென வைக்கப்பட்டு, நரகத்தில் வேதனைப்படுகிறவர்களுக்கும் இவ்வானம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

2) **இரண்டாம் வானம்** (Terrestial Heaven)

மோர்மோனிய கொள்கைகளை ஏற்றுக்கொள்ளாத கிறிஸ்தவர்களுக்கும், மோர்மோனிய சபைக்கட்டுப்பாட்டின்படி வாழாத மோர்மோனியர்களுக்கும் மற்ற மதங்களில் நற்பெயர்பெற்று மோர்மோனிய வெளிப்பாட்டைப் புறக்கணித்த மனிதர்களுக்கும் இவ்வானம் உருவாக்கப்பட்டுள்ளது.

3) **மூன்றாம் வானம்** (Delestial Heaven)

பூமியில் வரும்போது விண்ணகத் திருமண நியமனங்களின்படி முத்தரிக்கப்பட்டு மோர்மோனிய ஆலயங்களில் ஆசாரியத்துவ முறைப்படி திருமணம் செய்து கொண்டவர்களுக்கென இந்த மகிமையின் வானம் உண்டாக்கப்பட்டிருக்கிறது. இந்த விண்ணக அரசாங்கத்தில்கூட கடவுளாக மாறுவது மெதுவாக நடைபெறும் ஒரு செயலே. முடிவில் நல்வாழ்வு வாழ்ந்தவர்கள் அவர்களது குடும்பத்தோடு அவர்களுக்கென ஒரு தனிக்கோளில் (Planet) பலுகிப்பெருகி வாழ்வர்.

ஜோசப் ஸ்மித்தைப் பொறுத்தவரை உலகிலுள்ள எல்லா புத்தகங்களையும்விட உயர்ந்த சரியான புத்தகம் மோர்மோனிய புத்தகமே. ஆனால் 1830-ல் வெளியிடப்பட்ட அதன் மறுபதிப்பில் 3000 மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

இவர்கள் கூறிய பலவிதமான தீர்க்கதரிசனங்களும் நிறைவேறாமலே போய்விட்டன. பிற்கால பரிசுத்தர்கள் சீயோனில் தேவாலயம் கட்டுவார்கள். அது அசைக்கப்படாமல் இருக்கும் என்று உரைத்தார். உரைத்தபடி எந்த தேவாலயமும் சீயோனிலே கட்டப்படவில்லை. மாறாக மோர்மோனியர்கள் சீயோனைவிட்டு ஓடிப்போனார்கள். அவர்கள் அச்சகமும் இடிக்கப்பட்டது. பிற்கால பரிசுத்தர்கள் என்ற

பெயரை மக்கள் கேட்டதும் இது நல்லதோர் பூரண சுவிசேஷ சபை என்று நினைத்து விடுவார்கள். ஆனால் இவர்கள் வேதத்திற்கு விரோதமாய் போதிக்கும் துர்உபதேச மக்கள் என்று இவர்களோடு நெருங்க நெருங்கத்தான் தெரியும்,

மேலும் இவர்கள் வேறுசில கொள்கைகளையும் நம்புகின்றனர். அவைகளைத் தொடர்ந்து பார்ப்போம்.

- ✓ இவர்கள் பிதாவை குறித்து தவறாகவே போதனை செய்கிறவர்கள். பல கடவுள் கொள்கைகளை நம்புகிறவர்கள்.
- ✓ அதைப்போல குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்து தவறான கொள்கை உடையவர்கள் என்று பார்க்கிறோம். இயேசு கிறிஸ்துவின் மனித்தன்மை நம்மைப்போல வெகு சாதாரணமானதே என்று சொல்கிறார்கள்.
- ✓ தெய்வத்துவத்தின் ஒரு பகுதி நமக்குள் இருப்பதுபோல, அவர்களுக்குள்ளும் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள்.
- ✓ இயேசு கிறிஸ்து சாதாரணமாக இருந்தாலும், தனது பக்தியின் மூலமும், கீழ்படிதல் மூலமும் அறிவுத்திறனாலும் தேவனைப்போல மாறினார் என்றும் சொல்கிறார்கள். இப்படி இயேசு கிறிஸ்துவைக் குறித்து தவறான காரியங்களை அவர்கள் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள்.
- ✓ ஆவியானவரையும் அவர்கள் அசட்டை பண்ணுகிறார்கள். அவர் ஒரே நேரத்தில் ஒரே இடத்தில்தான் இருக்க முடியும். தெய்வீகத்தின் தூண்டுதலையும் கிறிஸ்துவின் ஒளியாகவும் அல்லது சத்தியத்தின் ஒளியாகவும் ஆவியானவர் இருக்கிறார் என்று சொல்லுகிறார்கள். பரிசுத்த ஆவியானவர் ஒரு திரவம் போன்று இருக்கிறார் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். இவர்கள் பரிசுத்த ஆவியைக்குறித்து தவறான அசட்டை கொண்டவர்களாக இருக்கிறார்கள்.
- ✓ இரட்சிப்பிலே இவர்களுக்கு ஒரு அவநம்பிக்கை உண்டு. மீட்கப்பட்ட அனைவரும் உன்னத மகிமைக்கு உயர்த்தப்படுவதில்லை. மீறுதலுக்குரிய தண்டனையை பெறும் வரை ஒருவரும் இரட்சிக்கப்பட முடியாது.
- ✓ அடுத்ததாக உலக முடிவைக்குறித்தும் இவர்கள் தவறான கருத்துடையவர்களாக இருக்கிறார்கள். நித்திய தண்டனை என்பது கிடையாது என்று இவர்கள் சொல்லுகிறார்கள்.
- ✓ அடுத்ததாக இவர்கள் தேவனுடைய நியாயத்தீர்ப்பை மறுக்கிறவர்களாக இருக்கிறார்கள். ஏனென்றால் வேதவசனத்தை விட மோர்கன் புத்தகமே அதிகம் என்று சொல்லுகிறார்கள்.

இப்படி வேதத்திற்கு புறம்பான ஒவ்வொரு உபதேசத்தையும் மக்கள் மனதில் அழுத்தி இக்கூட்டம் போதித்து வருகிறது. உலகின் பல பகுதிகளில் மிகவும் வளர்ந்து வரும் இக்கூட்டத்தினர், தங்களின் ஆலயத்தின் மேல் ஒரு எக்காளத்தைப் பிடித்திருக்கும் உருவத்தை தங்களுக்கு சின்னமாக பயன்படுத்துகிறார்கள். இந்தியாவில் மும்பை

மாநகரை தலைமையிடமாகக்கொண்டு இவர்கள் செயல்படுகிறார்கள். அதுபோலவே சென்னையிலே இவர்களுடைய ஆலயம் இருக்கிறது. முக்கியமான நகரங்களிலும் தமிழ்நாட்டிலும் கூட இவர்கள் ஆலயங்களை பார்க்க முடியும். எனவே பிற்கால பரிசுத்தவான்கள் என்று பெயர் பலகையோடு கூட இருக்கிற சபைகளுக்கு நாம் உள்ளே போவதைக் குறித்தும், அங்குள்ள ஆராதனையில் கலந்து கொள்வதைக் குறித்தும், அவர்களுடைய வழிபாட்டு முறைமைகளை குறித்தும், அவர்களுடைய போதனைகளைக் குறித்தும் நாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். பிற்கால பரிசுத்தவான்கள் என்று அழைக்கப்படுவதினாலே அவர்கள் ரொம்ப நல்லவர்கள், பரிசுத்தவான்கள் என்று நம்பி நாம் அங்கே போகக்கூடாது. ஏனென்றால் அவர்கள் பிதாவாகிய தேவனை குறித்து தவறான கருத்துடையவர்கள். குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை குறித்து தவறான கருத்துடையவர்கள், அதை விசுவாசிக்காதவர்கள். முக்கியமாக பரிசுத்த ஆவியை அவர்கள் நம்பாதவர்கள். சொல்லப்போனால் திரித்துவத்தை அவர்கள் ஏற்றுக் கொள்ளாதவர்கள் என்று தான் நாம் பார்க்கிறோம்.

அவர்களிடம் உள்ள மூன்று புத்தகத்தை மட்டும் நம்புகிறவர்கள், அதாவது அந்த மோர்மோன் புத்தகம் விலையேறப்பெற்ற முத்து. பிற்கால பரிசுத்தவான்கள் இதைதான் அதிகமாக நம்புகிறார்கள். நம் தமிழ்நாட்டில் அவர்களுடைய சபை இருக்கிறது. சபையின் வெளியே உள்ள மதில் சுவரில்கூட வேத வசனங்கள் தான் இருக்கும். அதைப் பார்த்து நாம் ஏமாந்துவிடக் கூடாது. எனவே அந்த பகுதிகளிலே நாம் சிக்கி விடாதவாறு நம்மை நாமே காத்துக்கொள்ள வேண்டும். இந்த எச்சரிப்பு எப்போதும் நமக்கு இருக்க வேண்டும். எனவே மோர்மோன் கூட்டத்தார் என்பவர்கள் ஒரு தவறான உபதேச கூட்டத்தார், அதை மனதிலே வைத்து நாமும் அங்கே இருக்கிறவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிக்க வேண்டும். அதேவேளையிலே நாம் அந்த இயக்கத்தோடு கூட அவர்களை அறிந்துகொண்டு, அவர்களோடு எந்த தொடர்பும் இல்லாதவாறு நாம் வேதவசனத்தின் அடிப்படையைக்கொண்டே, உபதேசத்தையும் அதன் வாழ்வையுமே நாம் பார்க்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. கர்த்தர் தாமே உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பராக! ஆமென்!!

## <u>கேள்விகள்</u>

1) பிற்கால பரிசுத்தவான்கள் (மோர்மோனிசம்) இயக்கத்தினர் எதனடிப்படையில் தவறான உபதேச கூட்டத்தார் என்று அழைக்கப்படுகிறார்கள் என்பதனை குறித்து சற்று விளக்கமாக கூறுக?
2) ஜோசப் ஸ்மித் என்பவரால், பிற்கால பரிசுத்தவான்கள் இயக்கம் உருவான விதம் குறித்தும் அதன் வளர்ச்சிகள் குறித்தும் சற்று விளக்கமாக கூறுக?
3) பிற்கால பரிசுத்தவான்கள் இயக்கத்தின் போதனைகளை தொகுத்து விளக்கமாக கூறுக?

4) பிற்கால பரிசுத்தவான்கள் இயக்கத்தினரால் புனித நூல்கள் என்று அடையாளம் பெற்றிருக்கிற நான்கு புத்தகங்களின் பெயர்களை கூறுக?
5) பிற்கால பரிசுத்தவான்கள் இயக்கத்தினரால், வேதாகமத்திற்கு மேலாக கருதப்படுகிற மூன்று புத்தகங்களை குறித்தும், இவ்வியக்கத்தினர் குறிப்பிடுகிற மூன்று வானங்களை குறித்தும் விளக்கமாக கூறுக?
6) பிதாவாகிய தேவன் இயேசுகிறிஸ்து மற்றும் பரிசுத்த ஆவியானவர் குறித்து பிற்கால பரிசுத்தவான்கள் இயக்கத்தினரின் தவறான கருத்துக்கள் என்னென்ன என்பதனை கூறுக?
7) இரட்சிப்பு, உலகத்தின் முடிவு மற்றும் நியாயத்தீர்ப்பு ஆகியவைகளை குறித்து பிற்கால பரிசுத்தவான்கள் இயக்கத்தின் தவறான கருத்துக்களை சற்று விளக்கமாக கூறுக?

# நவீனகால தவறான உபதேசங்கள்

## பாடம் - 10

கிறிஸ்துவுக்குள் அன்பான உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே அன்பின் வாழ்த்துக்கள். இந்த பாடத்தில் நாம் கற்றுக் கொள்ள இருக்கிற இன்னொரு உபதேசம் என்னவென்று சொன்னால் Hyper Grace, மிகைப்படுத்தப்பட்ட கிருபை என்பதாகும். அளவு கடந்த, உயர்நிலைபடுத்திய என்ற வார்த்தையை நாம் இந்த Hyper Grace என்ற வார்த்தைக்கு அர்த்தம்கொள்ள பயன்படுத்தலாம்.

இவர்களும் சொல்லப்போனால் ஒரு வகையிலே ஒரு தவறான துர்உபதேசகாரர்கள் தான். இப்பொழுது வேதாகமம் கிருபையைக் குறித்து போதிக்கிறது என்ன? அதை நாம் கொஞ்சம் பார்த்து விட்டு, அதற்கு பின்பாக இந்த Hyper Grace, மிகைப்படுத்தப்பட்ட கிருபையை பேசுகிறவர்களுடைய போதனைகள் எப்படி இருக்கிறது என்று நாம் கற்றுக்கொள்ள இருக்கிறோம். முதலாவது கிருபையைக் குறித்து வேதாகமம் என்ன போதிக்கிறது? கிருபை என்று சொன்னாலே Unmerrited Favour என்பதாகும், அதாவது, தகுதியில்லாத ஒருவருக்கு கொடுக்கப்படுகிற ஈவு. ***பால்சால்க்*** என்கிற ஒரு தேவ மனிதன் கிருபையை குறித்து இவ்விதமாக சொல்கிறார்: Grace is Uncontional love toward a person who does not deserve it. அதாவது தேவனுடைய அளவில்லாத ஒரு அன்புதான் கிருபை என்று அவர் சொல்கிறார். கிருபையென்றாலே தகுதியில்லாதவர்களுக்கு கொடுக்கப்படுகிற ஈவு, தகுதியில்லாதவர்களுக்கு தேவன் பராட்டுகிற ஒரு தகுதி வரம் என்று கூட சொல்லலாம்.

எபேசியர் 2:8-9 "கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள், இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு. ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு கிருபையினாலேயே நாம் தேவன் மீது வைத்திருந்த விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டிருக்கிறோம், அது தேவன் கொடுத்த ஒரு ஈவாக இருக்கிறது. அந்த கிருபை என்பது தேவன் கொடுத்த ஈவு, அந்த கிருபை எல்லா காலத்திற்கும் உரியது தான். கிருபையை நாம் தள்ளிவிட முடியாது. ஒரு நேரத்தில் நாம் ஆண்டவரை ஏற்றுக்கொண்டோம், இரட்சிக்கப்பட்டிருக்கிறோம், தேவன் நம்முடைய பாவத்தை மன்னித்திருக்கிறார். அது நம்முடைய நிலை, தேவன் நம்மை அந்த இடத்திலே வைத்திருக்கிறார். அதே வேளையிலே மத்தேயு 24:17-ல் வாசிக்கிறோம். "முடிவு பரியந்தம் நிலை நிற்பவனே இரட்சிக்கப்படுவான்" என்றும் தேவனுடைய வார்த்தை சொல்லுகிறது. எனவே நாம் பெற்றுக் கொண்ட இரட்சிப்பை நாம் முடிவுபரியந்தம் காத்து கொள்கிறவர்களாய் காணப்பட வேண்டும். கிருபை என்றாலே தேவனுடைய ஈவு. இந்த கிருபை சில ஆசீர்வாதங்களையும் நமக்கு கொண்டு

வருகிறது. இதை நாம் ரோமர் 5-ம் அதிகாரத்தில் பார்க்கிறோம். இந்த 5-ம் அதிகாரத்தை நாம் முழுமையாக வாசித்துப் பார்த்தால் விளங்கும். இந்த கிருபை நம்மை நீதிமான்களாக மாற்றி இருக்கிறது, நாம் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம், நித்திய ஜீவனை நாம் அடைந்திருக்கிறோம், ஜீவனை ஆண்டவர் கொடுத்திருக்கிறார் என்று மிகவும் அழகாக ரோமர் 5-ம் அதிகாரத்தில் பவுல் விளக்குகிறார்.

அடுத்ததாக அதே ரோமர் 8-ம் அதிகாரத்திலே பவுல் சொல்கிறார், ஆவியின் பிரமாணத்தின்படி கிருபை நம்மை வாழ வைக்கிறது. நியாயப்பிரமாணம் அல்ல, ஆவியின் பிரமாணம். இந்த ஆவியின் பிரமாணம் ஆவிக்குரியவைகளையே சிந்திக்க வைக்கிறது, நியாயப்பிரமாணப்படி வாழவைக்கவில்லை. அது ஆவியின் பிரமாணப்படி நம்மை வாழ வைக்கிறதாக இருக்கிறது. நாம் கிருபையினாலே இரட்சிக்கப்பட்டிருக்கிறோம், அந்த கிருபை தேவனுடைய ஈவு, அந்த கிருபை நம்மை நீதிமானாய் மாற்றியிருக்கிறது, இரட்சிப்படைய உதவி செய்திருக்கிறது. நாம் நித்திய ஜீவனைப்பெற உதவி செய்திருக்கிறது, நம்மை ஆவியின்படி வாழ நமக்கு உதவி செய்திருக்கிறது. இது தான் தேவனுடைய கிருபை.

Hyper Grace என்று சொல்லப்படுகிற உபதேசத்தை செய்கிற கூட்டத்தார் என்ன சொல்ல வருகிறார்கள் என்றால், ஒரு எல்லையை தாண்டி செல்லுகிறார்கள். அளவு கடந்து மிகைப்படுத்தி ஒன்றைப்பற்றி பேசுவது என்பது நம்மை ஆபத்தை நோக்கி எடுத்துச்செல்லும். எப்போதும் நாம் ஒரு மிஞ்சின எல்லைக்கு அல்லது நிலைக்கு கொண்டு போகக்கூடாது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இந்த Hyper Grace பற்றி பேசுகிற இவர்கள் என்ன போதிக்கிறார்கள்? இவர்கள் போதனையின் முக்கியமான ஆறு காரியங்களை நாம் கற்றுக்கொள்ளப்போகிறோம்.

முதலாவதாக இவர்கள் என்ன சொல்கிறார்கள்?

**1. <u>பாவத்தை அறிக்கை செய்ய தேவையில்லை</u>:** All sins done by us in the Past, Present, and future has Already been forgiven. So there is no need for a beliver to ever confess it. அதாவது தேவன் நம்முடைய கடந்த கால, நிகழ்கால எதிர்கால பாவங்களையும் மன்னித்து விட்டார். எனவே விசுவாசிகள் ஒரு போதும் பாவங்களை அறிக்கை செய்ய தேவையில்லை என்று இவர்கள் சொல்லுகிறார்கள். அதாவது தேவன் கடந்த காலத்திலே நாம் செய்த பாவங்கள், நிகழ்காலத்திலே செய்து கொண்டிருக்கிற பாவங்கள், எதிர் காலத்திலே செய்யப் போகிற பாவங்களையும் அவர் மன்னிக்கிறார் என்பது உண்மைதான். அதே வேளையிலே நாம் செய்கிற பாவத்தை அறிக்கை செய்வது தேவையில்லை என்று ஒருபோதும் சொல்லக்கூடாது. அதுதான் தவறான ஒரு காரியத்தில் கொண்டுபோய் அவர்களை விட்டுவிடும். *1 யோவான் 1:7-10*

"சகோதரரே, நான் உங்களுக்குப் புதிய கற்பனையை அல்ல, ஆதிமுதல் நீங்கள் பெற்றிருக்கிற பழைய கற்பனையையே எழுதுகிறேன். அந்தப் பழைய கற்பனை நீங்கள் ஆதிமுதல் கேட்டிருக்கிற வசனந்தானே.

மேலும், நான் புதிய கற்பனையையும் உங்களுக்கு எழுதுகிறேன், இது அவருக்குள்ளும் உங்களுக்குள்ளும் மெய்யாயிருக்கிறது, ஏனென்றால், இருள் நீங்கிப்போகிறது, மெய்யான ஒளி இப்பொழுது பிரகாசிக்கிறது.

ஒளியிலே இருக்கிறேன் என்று சொல்லியும் தன் சகோதரனைப் பகைக்கிறவன் இதுவரைக்கும் இருளிலே இருக்கிறான்.

தன் சகோதரனிடத்தில் அன்புகூருகிறவன் ஒளியிலே நிலைகொண்டிருக்கிறான், அவனிடத்தில் இடறல் ஒன்றுமில்லை."

மிகவும் தெளிவாக யோவான் அப்போஸ்தலன் எழுதி வைத்திருக்கிறார். தேவனிடத்தில் நாம் நம்முடைய பாவங்களை அறிக்கையிட வேண்டும். அப்படி அறிக்கையிடும்பொழுது நமக்கு மன்னிப்பு கிடைக்கிறது, அவர் நம்மை சுத்திகரிப்பார் என்று அவர் தெளிவாக எழுதி வைத்திருக்கிறார். ஆனால் இந்த உபதேசக்காரர்கள் என்ன சொல்கிறார்கள்? நாம் பாவத்தை அறிக்கை செய்ய தேவையில்லை, ஏனென்றால் நாம் எதிர்காலத்தில் செய்யக்கூடிய பாவத்தைக்கூட அவர் மன்னிக்கிறார், அதனால் அதை அறிக்கை செய்ய வேண்டாம் என்று இவர்கள் கூறுகிறார்கள். ஆனால் வேதம் கூறுவது, அறிக்கை செய்யாத பாவங்கள் மன்னிக்கப்பட முடியாது என்பதாகும்.

பிரியமானவர்களே "தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான், அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்" நீதிமொழிகள் *28:12.* பாவத்தை நாம் அறிக்கை செய்ய வேண்டும், அதை விட்டுவிட வேண்டும். தேவன் எதிர்காலத்திலே செய்யப் போகிறதையும் மன்னிப்பார், அதனாலேயே நான் செய்வேன் என்கிற துணிகரம் இருக்கக்கூடாது. யோவான் *8:11* "அதற்கு அவள் இல்லை ஆண்டவரே என்றாள். இயேசு அவளை நோக்கி நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை. நீ போ இனிப் பாவஞ்செய்யாதே" தேவன் மன்னிக்கிறார், அதே வேளையிலே இனி அதை செய்யக் கூடாது என்றும் அவர் சொல்லுகிறார்.

## 2. மனந்திரும்புதல் அவசியமில்லை:

அடுத்ததாக இந்த உபதேசத்தார் இன்னொரு காரியத்தையும் சொல்கிறார்கள், என்னவென்றால் மனந்திரும்புதல் அவசியமில்லை என்பதுதான். இவர்கள் மறுபடியும் மறுபடியும் என்ன சொல்கிறார்கள் என்றால், இந்த ஒரு வார்த்தையைத்தான் குறிப்பிட்டு பேசுகிறார்கள். எதிர்காலம், கடந்த காலம், நிகழ்காலம் மூன்று காலங்களில் இருக்கிற பாவங்களை ஆண்டவர் மன்னித்துவிட்டார். எனவே மனந்திரும்புதல் அவசியமில்லை

என்று சொல்லி வரும்போது, இதைக் கேட்கிற அநேக வாலிபர்களுக்கு பாவம் செய்கிற ஒரு துணிவு வருகிறது. பாருங்கள் வேதம் தெளிவாக சொல்கிறது *2* கொரி. *5:10* "ஏனென்றால் சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்" வெளிப்படுத்தல் *2:4* "ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதை காதுள்ளவன் கேட்கக்கடவன்: ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கக் கொடுப்பேன் என்றெழுது."

பாவம் என்றால் என்ன? Missing the Mark குறிதவறுதல். இரண்டு வகையிலே பாவம் இருக்கிறது, Sins of omission and Sins of Comission. அதாவது செய்ய வேண்டியவைகளை செய்யாமலிருப்பது, செய்யக் கூடாதவைகளை செய்வது, இது இரண்டுமே பாவம் தான். செய்ய வேண்டியதை செய்யாமலிருப்பதும் பாவம் செய்ய கூடாததை செய்கிறதும் பாவமாகத்தான் இருக்கிறது. மனந்திரும்புதல் மிகவும் அவசியம். மனந்திரும்பி நாம் தேவனை ஏற்றுக்கொள்ள வேண்டும், மனந்திரும்ப வேண்டும், தேவன் அதை விரும்புகிறார். இந்த உபதேச கூட்டத்தார் என்ன சொல்கிறார்கள்? மனந்திரும்புதல் அவசியமே இல்லை, There is no need for a Repentance என்று சொல்லுகிறார்கள்.

**3. <u>விசுவாசிகள் செய்யும் பாவத்திற்கு அவர்கள் பொறுப்பல்ல:</u>**

இன்னொரு காரியம் என்ன என்று சொன்னால், தேவன் இரட்சிக்கப்பட்ட ஒருவனை நீதிமானாக, பரிசுத்தவானாக பார்க்கிறார் என்று சொல்கிறார்கள். When God looks us, he sees only as a holy and righteous People என்று தான் ஆண்டவர் நம்மை பார்க்கிறார். அதை சொல்லிவிட்டு என்ன சொல்கிறார்கள் என்றால், எனவே நீங்கள் செய்யப்போகிற பாவங்களை அவர் பார்க்க மாட்டார். Believers are not responsible for their sin என்று சொல்கிறார்கள். அதாவது அவர்கள் விசுவாசிகளாக இருக்கட்டும், அவர்கள் செய்யும் அந்த பாவத்திற்கு அவர்கள் பொறுப்பு கிடையாது. இது ஒரு பெரிய வஞ்சகமான வார்தையாக இருக்கிறது. மறுபடியும் என்ன சொல்ல வருகிறார்கள், தேவன் பாவத்தை மன்னித்துவிட்டார், அதனால் பாவம் செய் என்று சொல்லாமல் சொல்ல வருகிறார்கள். அது தான் இவர்கள் சொல்வது. தேவன் பாவத்தை பார்க்கமாட்டாத சுத்தக்கண்ணனாக இருக்கிறார். ஆபகூக் *1:13* "தீமையைப் பார்க்கமாட்டாத சுத்தக் கண்ணனே, அநியாயத்தை நோக்கிக் கொண்டிருக்கமாட்டீரே, பின்னை துரோகிகளை நீர் நோக்கிக் கொண்டிருக்கிறதென்ன? துன்மார்க்கன் தன்னைப் பார்க்கிலும் நீதிமானை விழுங்கும்போது நீர் மௌனமாயிருக்கிறதென்ன?' தேவன் பாவத்தை விரும்பமாட்டார், தேவன் பாவம் செய்கிறதை வெறுக்கிறார் என்றுதான் அர்த்தம். எனவே நாம் செய்கிற பாவத்திற்கு நாம் பொறுப்பு கிடையாது. தேவன்

நம்மை ஒருமுறை இரட்சித்து நீதிமானாக்கிவிட்டால், பரிசுத்தவானாகத்தான் பார்க்கிறார், பாவியாக பார்க்கிறதில்லை. நாம் செய்கிற பாவத்திற்கு நாம் பொறுப்பில்லை என்று சொன்னால், அது ஏற்றுக்கொள்ள முடியாத காரியமாக இருக்கிறது.

**4. பழைய ஏற்பாட்டு பிரமாணங்கள், புதிய ஏற்பாட்டிற்கு பொருந்தாது:**

அடுத்ததாக இவர்கள் மிகைப்படுத்தி பேசுவது என்னவென்றால், உயிர்த்தெழுந்ததற்கு முன்பு இயேசு பேசியவைகள் பழைய ஏற்பாட்டு பிரமாணங்கள். அது புதிய ஏற்பாட்டுக்கு பொருந்தாது என்கிறார்கள். We are not bound by Jesus teachings, even as we are not under the law that believers are not responsible for their sin. Anyone who disagrees is the Paracycle legalist என்று சொல்கிறார்கள். அதாவது உயிர்த்தெழுதலுக்கு முன்பாக இயேசு பேசியவைகள் பழைய ஏற்பாடு, அந்த பழைய ஏற்பாட்டு பிரமாணங்கள், புதிய ஏற்பாட்டுக்கு பொருந்தாது, அது பொருத்தமற்றது, அது இன்றைய காலத்தினுடைய வாழ்க்கையில் செயல்படுத்த முடியாதது என்று சொல்லுகிறார்கள். அதே வேளையில் அதை யார் ஏற்றுக் கொள்கிறார்களோ, அவர்கள் சுயநீதியை பேசுகிறார்கள் என்றும் சொல்லுகிறார்கள். இயேசு பேசின வார்த்தைகள் பழைய ஏற்பாடு, இவர்கள் பழைய ஏற்பாட்டை முழுவதும் ஒதுக்குகிறதை இந்த வார்த்தைகள் மூலம் பார்க்க முடியும். நாம் ஏற்கனவே பார்த்ததுபோல, கிருபை நம்மை நியாயபிரமாணத்தின்படி வாழ வைக்காமல், ஆவியின் பிரமாணப்படி வாழ வைக்கிறது. புதிய ஏற்பாடு மிகவும் முக்கியம், அதே வேளையிலே பழைய ஏற்பாடும் வேதத்தின் ஒரு பகுதியாக இருக்கிறது என்பதை மறந்து போகக்கூடாது. மாற்கு *13:31* "அந்த நாளையும் அந்த நாழிகையையும் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான், பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள், குமாரனும் அறியார்."

*2* தீமோ. *3:16-17* வசனங்கள், "வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படி,

அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது"

வேதவாக்கியங்கள் எல்லாம் (புதிய ஏற்பாடும்) தேவனுடைய ஆவியினால் கொடுக்கப்பட்டது, All scripture is given by the inspiration of God. பழைய ஏற்பாட்டை ஒதுக்குவது தவறான ஒரு காரியம். பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் சேர்ந்தது தான் வேதாகமம். பழைய ஏற்பாடும் வேதாகமத்தின் ஒரு பகுதி என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது.

**5. யோவான் நிரூபங்கள் திருச்சபைக்குு எழுதப்பட்டது அல்ல:**

அடுத்ததாக இவர்கள் சொல்லுகிற இன்னொரு காரியம் *1* யோவான் *1:9*-ம் வசனம், 'நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்'.இந்த வசனத்தைக் குறித்து இவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால், இது திருச்சபைக்கு எழுதப்பட்டது அல்ல, இரட்சிக்கப்படாத உலகத்திற்கு எழுதப்பட்டது. John's letter are not written for the believer என்று சொல்லுகிறார்கள். நாம் பாவத்தை அறிக்கையிட வேண்டும், விட்டுவிட வேண்டும், அதில் நிலை நிற்க முடியாது. இவர்கள் சொல்வது இந்த வசனம் சபைக்கே எழுதப்பட்டது அல்ல என்பதாகும். நிருபங்கள் சபைக்கு எழுதப்பட்டது என்பதை நாம் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். ரோமர் *6:1* "ஆகையால் என்ன சொல்லுவோம்? கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலைநிற்கலாம் என்று சொல்லுவோமா? கூடாதே." Certainly not. அப்போ கூடாது என்று தான் பவுல் சொல்லுகிறார். கிருபை பெருகுகையில், பாவத்தில் நிலை நிற்கலாமா? என்றால் கூடாது, நிலை நிற்க முடியாது. பாவத்தை அறிக்கை செய்து விட்டுவிட வேண்டும். இந்த வசனத்தை இவர்கள் மறுதலிக்கிறார்கள், மறுதலிக்கும்போதே பாவ அறிக்கையை மறுதலிக்கிறார்கள் என்று பார்க்கிறோம். அதாவது மிகைப்படுத்தப்பட்ட கிருபையை பேசுகிற இந்த கூட்டத்தார் சத்தியத்தோடு கூட கொஞ்சம் களையையும் கொஞ்சம் கலந்து விடுகிறார்கள். தவறான காரியத்தையும் சொல்லி மக்களை திசை திருப்புகிறார்கள்.

**6. ஆவியானவர் பாவத்தை கண்டித்து உணர்த்த மாட்டார்:**

அடுத்ததாக அவர்கள் சொல்லுகிற இன்னொரு காரியம் Holy spirit will never convict Christians of their sins. பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளை அவர்கள் பாவத்தைக் குறித்து உணர்த்தமாட்டார் என்கிற வார்த்தையை அவர்கள் சொல்லுகிறார்கள். யோவான் *16:8*-ம் வசனம், "அவர் வந்து, பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக்குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்."

*1* கொரி. *6:9-10* வசனங்கள்:

அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள்' வேசிமார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை."

எனவே நாம் செய்கிற பாவத்தை ஆவியானவர் உணர்த்துகிறார், மனந்திரும்ப வேண்டியது அவசியமாக இருக்கிறது. ஆனால் அவர் அதை செய்யவில்லை என்று அவர்கள் சொல்லுகிறார்கள். அதுவும் ஒரு வகையிலே தவறான ஒரு காரியம். இவர்கள் சொல்வது என்ன? பாவத்தை அறிக்கை செய்ய தேவையில்லை, மனந்திரும்புகிறது அவசியம் இல்லை, தேவன் ஒரு முறை நம்மை நீதிமானாய் பார்க்கிறதினால், நாம் செய்கிற பாவங்களுக்கு நாம் பொறுப்பு கிடையாது. இயேசு உயிர்த்தெழுவதற்கு முன்புவரை அவர் பேசியது பழைய ஏற்பாடு, அது பொருந்தாது என்கிற காரியத்தை அவர்கள் சொல்லுகிறார்கள்.

அடுத்ததாக அவர்கள் சொல்வது *1* யோவான் *1:9*-ம் வசனம், 'நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்'. யோவான் நிருபங்கள் எல்லாமே திருச்சபைக்கு எழுதப்பட்டது அல்ல என்று சொல்லுகிறார்கள். ஆவியானவர் பாவத்தைக் குறித்து கண்டித்து உணர்த்தமாட்டார் என்றும் சொல்கிறார்கள். இப்படி இந்த 6 காரியங்களை இவர்கள் பிரதானமான காரியங்களாக, மிகைப்படுத்தப்பட்ட கிருபையை பேசுகிற கூட்டத்தார் சொல்கிறார்கள். இதற்குரிய வசனங்களையும் நாம் ஆதாரத்தின் அடிப்படையில் பார்த்தோம். இது ஒரு தவறான போதனையாக இருக்கிறது.

## இவர்களை நாம் எப்படி அடையாளம் கண்டு கொள்வது?

அடுத்ததாக இவர்களை நாம் எப்படி அடையாளம் கண்டு கொள்வது? இவர்கள் சத்தியத்தை பேசுகிறது போலவே பேசி, நஞ்சை கலக்குகிற கூட்டமாக இருக்கிறார்கள். இதைப் பேசுகிற பிரசங்கிமார்கள் பாவத்திற்கு எதிராக பேசுவது இல்லை. அதை வைத்தே இவர்களை நாம் இனம் கண்டு கொள்ளலாம். The preacher never speaks against sin பாவத்திற்கு விரோதமாக அவர்கள் பேசவே மாட்டார்கள். அடுத்ததாக இவர்கள் பழைய ஏற்பாட்டை முற்றிலும் புறக்கணிப்பார்கள் The old Testment almost totally is ignored. இதை வைத்து இவர்களை எளிதாக அடையாளம் கண்டு கொள்ள முடியும். இவர்கள் ஸ்தாபனங்களுள்ள சபைகளுக்கு (Institutional churches) எதிராகத்தான் பேசுவார்கள். எப்போதும் நேர்மறையான பேச்சுகளும், ஊக்கமளிக்கிற பேச்சுக்கள் மட்டும் இவர்கள் பிரசங்கத்தில் எப்போதும் காணப்படும் (Possitive and Motivational words). தேவன் நமக்கு கிருபையை கொடுத்தது பரிசுத்தமாகவும், வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வு வாழ்வதற்கும் கொடுக்கப்பட்டதாகும். தேவனுடைய சித்தத்தின்படி வாழ்வதற்கு ஆண்டவர் தேவகிருபையை கொடுத்திருக்கிறார். கிருபை என்பது பாவம் செய்வதற்குரிய உரிமை கிடையாது.

இன்னொரு காரியத்தையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும், இரண்டு வகையான கூட்டத்தார் இருக்கிறார்கள். இரட்சிக்கப்பட்ட பிறகு நாம் பாவம் செய்தால், நமக்கு

நரகம் என்று ஒரு கூட்டத்தார் சொல்கிறார்கள். அடுத்த கூட்டத்தார் இரட்சிக்கப்பட்ட பிறகு பாவம் செய்தாலும் கர்த்தர் நம்மை மன்னிக்கிறார், நேசிக்கிறார், கிருபையாக அன்பாக இருக்கிறார் என்றும் சொல்கிறார்கள். அதுவும் முழுவதுமாக தவறு என்று தான் சொல்ல வேண்டும். *1* பேதுரு *1:4-7* வரையான வசனங்களை வாசிப்போம்:

"அவர், இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்.

கடைசிக்காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக் கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்தரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

இதிலே நீங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறீர்கள் என்றாலும், துன்பப்படவேண்டியது அவசியமானதால், இப்பொழுது கொஞ்சக்காலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள்.

அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும், அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது, உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்."

வேதம் நமக்கு தெளிவுப்பட போதிக்கிறது, நாம் ஒரு நேரத்தில் பாவியாக இருந்தோம், தேவனுடைய சுவிசேஷத்தை கேட்டோம், அவரை விசுவாசித்தோம், கிருபையைக் கொண்டு இரட்சிக்கப்பட்டோம். நாம் பாவிகளாயிருக்கிறோம், தேவனுடைய சுவிசேஷம் நமக்கு அறிவிக்கிப்படுகிறதை நாம் விசுவாசித்து, இயேசுவை ஏற்றுக்கொண்டு, தேவன் தம் கிருபையை நம்மீது பொழிகிறதினாலே நாம் இரட்சிக்கப்படுகிறோம் என்று நாம் பார்க்கிறோம். ஆனால் நாம் இரட்சிக்கப்பட்ட பிறகு, ஒருவேளை நம் வாழ்வில் ஏற்படும் பாவத்தினாலே நாம் சறுக்குகிறவர்களாய் இருந்தால், இரட்சிப்பிலே இந்த பாவம் கை வைக்க முடியாது. அதற்கு காரணமாயிருக்கிற கிருபையின் மீதும் கை வைக்காது, ஆனால் அந்த கிருபைக்கு காரணமாயிருக்கிற விசுவாசத்தின் மீது அது கை வைக்கிறதாக இருக்கிறது. அதனால் தான் நாம் விசுவாசத்தைக் கொண்டு கிருபையினால் இரட்சிக்கப்படுகிறோம். அப்படியானால் ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் பாவம் வரவர அங்கே விசுவாச பிரச்சனை ஏற்படும். விசுவாசத்திலே அங்கு தளர்வு காணப்படும், விசுவாசம் குறையும், விசுவாசம் குறையும்போது, தேவனுக்கு பிரியமாக வாழ முடியாது. எனவே விசுவாசத்தை அதிகமாக காத்துக்கொள்ள வேண்டும். விசுவாசத்தை காத்துக் கொண்டிருக்கிற மனுஷன் பரிசுத்தத்தை காத்துக் கொள்ளுவான். பரிசுத்தத்தை காத்துக் கொண்டிருக்கும்பொழுது, நம் வாழ்வில் இன்னும் அவர் கிருபை பெருகிக் கொண்டுதான் இருக்கும். அந்த

கிருபை பெருக, பெருக நாம் நீதிமான்களாய் தேவனுக்கு பிரியமுள்ளவர்களாய் வாழ்ந்துகொண்டே இருப்போம்.

பிரியமானவர்களே நாம் நம்முடைய விசுவாசத்தை காத்துக்கொள்ள வேண்டும். விசுவாசம் ஒரு மனிதனுக்கு குறையும்போது, அவன் வாழ்வில் தடுமாற்றங்கள் ஏற்பட ஆரம்பிக்கும். கிருபை நல்லது, அதே வேளையில் இந்த மிகைப்படுத்தபட்ட கிருபையை பேசுகிற இந்த கூட்டத்தார் சொல்கிற காரியங்களை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. நாம் பாவத்தை அறிக்கை செய்ய வேண்டும், அறிக்கை செய்து அதை விட்டுவிடவும் வேண்டும். மனந்திரும்புதல் அவசியமில்லை என்று சொல்லுகிற ஒரு தவறான காரியமும், நாம் செய்கிற பாவங்களுக்கு நாம் பொறுப்பாக முடியாது என்று சொல்கிற வார்த்தையும் தவறான வார்த்தையாக இருக்கிறது. எனவே இந்த கூட்டத்தாரிடமிருந்து நாம் கவனமுடனும், எச்சரிக்கையுடனும் காணப்பட வேண்டியது அவசியமாக இருக்கிறது. தேவன் கிருபையுள்ளவர், கிருபையினால் மாத்திரமே நம் விசுவாசத்தை கொண்டு இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். அதில் எந்த மாற்றமும் இல்லை. அதே வேளையிலே நாம் நம் விசுவாசத்தை காத்துக் கொள்கிறவர்களாய் காணப்பட வேண்டும். விசுவாசம் தளரும்பொழுது நம் ஆவிக்குரிய வாழ்க்கையும் தடுமாற ஆரம்பித்துவிடும். தேவன் மீது வைத்திருக்கிற விசுவாசத்தின் அளவு குறையாது, தேவனுடைய கிருபையை நாம் வீணடிக்காதவர்களாய் காணப்பட வேண்டும்.

இந்த தவறான உபதேசங்கள் என்கிறதான பாடத்திலே நாம் இந்த தவறான உபதேசத்தார் எப்படி உருவானார்கள்? இவர்களில் என்னென்ன உபதேசங்கள் இருக்கிறது? என்று ஒரு சில குறிப்பிட்ட உபதேசங்களை மாத்திரம் கற்றுக்கொள்ள ஆண்டவர் நமக்கு உதவி செய்தார். தேவன் நமக்கு கொடுத்திருக்கிற கடமை என்ன? இவர்களுக்கு எதிராக நம்மை எப்படி காத்துக்கொள்ள வேண்டும்? என்பதைக் குறித்த ஒரு சில காரியங்களை கற்றுக்கொள்ள இருக்கிறோம்.

## நம்முடைய கடமை என்ன?

இவ்வளவு ஆபத்தான கொள்ளைகளைக் கொண்ட இயக்கங்கள் மத்தியில் தேவனுடைய விசுவாசி என்று தன்னை அழைத்துக் கொள்ளும் ஒருவர் தேவபிள்ளையாக, ஒரு நல்ல விசுவாசியாக, கிறிஸ்தவனாக விசுவாசத்தையே தன் உயிர் மூச்சாகக் கொண்டுள்ள திருச்சபையின் உறுப்பினராக எவ்விதம் ஜீவிக்க வேண்டும்? ஆட்டுத்தோல்களைப் போர்த்திக்கொண்டு சுற்றித்திரியும் இப்படிப்பட்ட ஓநாய்களுக்கு மத்தியில் மெய்க்கிறிஸ்தவர்கள் எப்படி தப்பித்து வாழ முடியும்? இவைகள் சாத்தானுடைய கிரியைகளா? மனிதனுடைய வேலையா? சாத்தானுடைய கிரியையெனில், தேவன் இவர்களுக்கு என்ன செய்வார்? மனிதனுடைய வேலையெனில் இதற்கு கிறிஸ்தவர்கள் என்ன செய்ய வேண்டும்? ஆவிகளை பகுத்தறிய வேண்டும்.

**இவர்களுக்கு எச்சரிக்கையாய் இருங்கள்:**

தம்முடைய பிரபலமான மலைப்பிரசங்கத்தில் இயேசு கிறிஸ்து இப்படிச் சொன்னார்: கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாய் இருங்கள், அவர்கள் ஆட்டுத் தோலைப் போர்த்துக் கொண்டு உங்களிடத்தில் வருவார்கள், உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள். அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள் முட்செடிகள் திராட்சைப் பழங்களையும் முட்பூண்டுகளில் அத்திப்பழங்களையும் பறிக்கிறீர்களா? அப்படியே நல்ல மரமெல்லாம் நல்ல கனிகளைக் கொடுக்கும், கெட்ட மரமோ கெட்ட கனிகளைக் கொடுக்கும். நல்ல மரம் கெட்ட கனிகளைக் கொடுக்க மாட்டாது, கெட்ட மரம் நல்ல கனிகளைக் கொடுக்க மாட்டாது. நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும். ஆதலால் அவர்களுடைய கனிகளாலே அவர்களை அறிவீர்கள் *(மத்தேயு 7:15-20)*

இயேசு கிறிஸ்து சொன்ன இவ்வார்த்தையில் கவனத்திற்குரிய வார்த்தை 'எச்சரிக்கையாக இருங்கள்' Be careful என்பதே. ஒவ்வொரு கிறிஸ்தவனும் இவ்விதக்கூட்ட மக்களுக்கு எச்சரிக்கையாக இருக்க வேண்டியதே ஆண்டவர் இயேசுவின் அறிவுரை

**எப்படி எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்:**

ஒரு விசுவாசியினிடத்தில் புதிதாக வரும் ஒரு நபர், ஆண்டவரைக் குறித்து பேசும் போது நபர் யார், அவரது விலாசம் என்ன? அவர் எங்கேயிருந்து வருகிறார்? எந்த சபையோடு ஐக்கியம் வைத்திருக்கிறார்? என்ன ஊழியம் செய்கிறார்? என்றெல்லாம் தெளிவாக அறிந்து கொள்ளுதல் வேண்டும். பொதுவாகவே எல்லா துர்உபதேசக் கூட்டத்தைச் சேர்ந்தவர்களும் தங்களின் முதல் இலக்காக கிறிஸ்தவர்களையும், விசுவாசிகளையுமே குறிவைக்கிறார்கள். எனவே இவர்கள் குறியிலிருந்து தப்ப நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

1. **துர் உபதேசக் கூட்டத்தில் இருப்பவர் எவரும் ஆவியின் கனியுள்ளவராய் இருக்கமாட்டார்கள்.**

இதை மிகவும் எளிதாய்ச் சொன்னால், துர் உபதேசக் கூட்டத்தில் இருப்பவர் எவரும் ஆவியின் கனியுள்ளவராய் இருக்கமாட்டார்கள். வேதவசனத்திற்கு ஏற்றபடி அவர்களின் வாழ்க்கையில் கனி இருக்காது. அப்படி கனி இருப்பதுபோல நடித்தாலும், அந்த நடிப்பு நீண்ட நாட்கள் பலன் தராது. ஆகவே ஆவியின் கனியின்றி ஒரு நபர் உங்களிடம் வந்தால், அப்படிப்பட்ட நபரிடம் நீங்கள் எச்சரிக்கையாய் இருங்கள். அவரோடு எந்தத் தொடர்பும், உறவும், ஐக்கியமும் வைத்தால் அந்த நபர் உங்களை வஞ்சித்து உங்கள் விசுவாசத்தை சீர்குலைத்துவிடுவது உறுதி.

ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். அநேகர் வந்து என் நாமத்தைக் கொண்டு நானே கிறிஸ்து என்று சொல்லி அநேகரை வஞ்சிப்பார்கள்.

"இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்.

"ஏனெனில் அநேகர் வந்து, என் நாமத்தைக்கொண்டு: நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள்."

வேதத்தின் உபதேசத்துக்கு மனித உபதேசம் வரும்போது, அதற்கு ஒத்துப்போகக் கூடாது.

**2. <u>இவர்களின் செய்திகளுக்கு செவி சாய்க்காதீர்கள்:</u>**

ஆகிலும், ஆவியானவர் வெளிப்படையாக சொல்கிறபடி, பிற்காலங்களிலே மனச்சாட்சியிலே சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கு பிசாசிகளின் உபதேசங்களுக்கு செவிகொடுத்து விசுவாசத்தை விட்டு விலகிப் போவார்கள் *(1 தீமோ. 4:1)*. விசுவாசி என்னும் ஒரு கிறிஸ்தவர், ஆவியானவர் சொல்லும் காரியங்களுக்கு செவி கொடுக்காது, வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுப்பதால், அந்த விசுவாசி விசுவாசத்தை விட்டு விலகிப் போய்விடுவார்.

இவ்வித துர்உபதேசக் கூட்டத்தினர் மனச்சாட்சி இல்லாதவர்கள், பொய் சொல்பவர்கள், மாயம் பண்ணுகிறவர்கள், வஞ்சிக்கும் ஆவியுடையவர்கள், பிசாசுகளின் உபதேசங்களைப் பிரசங்கிப்பவர்கள். இப்படிப்பட்ட செயல்களையுடையவர்கள், திருச்சபையின் விசுவாசியோடு பழகி உறவாடி தங்களின் ஐக்கியத்தை வளர்த்துக் கொள்வார்கள். பின்பு தங்களின் கொள்கைகளையும், ஐக்கியத்தையும் வளர்த்துக் கொள்வார்கள். பின்பு தங்களின் கொள்கைகளையும், இயக்கத்தின் வெளிப்பாடுகளையும் பகிர்ந்து கொள்வார்கள். இப்படிப் பகிர்ந்து கொள்ளும் செய்தியைக் கேட்டதும், மெய் விசுவாசிக்கு எல்லாமே நியாயம்போல் தோன்றும். பிறகு வேதத்தின் மேலிருந்த பரிசுத்தமான விசுவாசம் குறைந்து, குறைந்து புதிய உபதேசமான அந்தக் கள்ள உபதேசத்தின் மேல் கவனம் திரும்பும்.

எனவே எந்தச் செய்தியையும் கேட்பதில் அதிக கவனமாகவும், ஜாக்கிரதையாகவும் நீங்கள் இருக்க வேண்டும். நாம் எதைக் கேட்கிறோமோ அதையே செய்ய முயலுவோம். வெளிப்படுத்தின விசேஷத்தில், ஆவியானவர் "காதுள்ளவன் கேட்கக்கடவன்" என்று சொல்லுகிறார். ஒவ்வொருவரும் ஆவியானவர் சொல்வதை மட்டுமே கேட்க வேண்டுமென்பது மிக முக்கிய கடமையாகும். பரிசுத்த ஆவியை உதாசீனப்படுத்தம் எந்த ஒரு ஊழியரின் செய்திகளையும் செவி கொடுத்துக் கேட்கக் கூடாது. காரணம், துர்உபதேசக் கூட்டத்திலிருக்கும் அனைவரும் பரிசுத்த ஆவியை

உதாசீனப்படுத்துகிறவர்கள், வஞ்சக ஆவி மூலம் பேசுகிறார்கள். தேவனுடைய பிள்ளை என்று சொல்லும் விசுவாசி, தேவனுடைய பரிசுத்தவான்களால் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் செய்திகளையும் செவி கொடுத்துக் கேட்கலாம். மற்ற எந்த புதிய உபதேச ஆலோசனைகளையும் கேட்கவே கூடாது.

**3. இவ்வித மக்களின் வாழ்க்கையை சோதித்து அறிய வேண்டும்:**

பிரியமானவர்களே, உலகத்தில் அநேக கள்ளத் தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால் நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள் - என்று வேதம் நமக்கு போதிக்கிறது *(1 யோவான் 4:1)*. விசுவாசிகளின் கடமையில் ஆவிகளை சோதித்தல் அவசியமான கடமையாகும். இரட்சிக்கப்பட்டபின் நாம் வாழ்வது ஆவிக்குரிய வாழ்க்கை எனப்படுகிறது. எனவே ஆவிகளை சோதித்தறிவது என்பது நம்மோடு சம்பந்தப்பட்ட விஷயமாகும். வேதத்தின்படி பார்த்தால், உலகில் பொல்லாத ஆவி, அசுத்த ஆவி, விபச்சார ஆவி, விக்கிரக ஆராதனையின் ஆவி, பெருமையின் ஆவி போன்ற பல ஆவிகள் இருக்கின்றன. இவைகள் இவ்வுலகில் இன்றும் கிரியை செய்து கொண்டிருக்கின்றன.

தேவபிள்ளைகள் அனைவரும் கர்த்தரின் ஆவி என்று சொல்லப்படும் பரிசுத்த ஆவியை அறிந்தவர்களாய் இருக்க வேண்டும். தூய ஆவியின் துணையைக் கொண்டு மற்ற ஆவிகளிலிருக்கிற வித்தியாசங்களைக் கண்டுகொள்ள வேண்டும். பிசாசின் ஆவியையும், கள்ளத் தீர்க்கத்தரிசியின் ஆவியையும், அந்திக் கிறிஸ்துவின் ஆவியையும் சோதித்தறிய வேண்டுமென்றால், நீங்கள் தேவ ஆவியை உடையவர்களாய் இருப்பது அவசியம். அப்போது மற்ற ஆவிகளை சோதித்து இனம் கண்டு கொண்டு எச்சரிக்கையாய் இருக்க முடியும். எந்த ஒரு ஆவியும் உங்களை வஞ்சித்துவிடக் கூடாது, அதற்கு நீங்கள் தான் கவனமாய் இருத்தல் அவசியம். மேலும் ஆவிகளையே சோதனை செய்து கொண்டிருப்பது உங்களது முழு நேர ஊழியமல்ல. அவைகள் என்ன ஆவிகள் என்று அறிந்ததும் நீங்கள் விலகி வந்துவிட வேண்டும், அவைகளோடு ஐக்கியப்படக் கூடாது. எந்த துர்உபதேச ஆவியாலும் நாம் ஏமாற்றப்படக் கூடாதென்றும், நம்மைச் சூழ்ந்துள்ள ஆவிகளைச் சோதிக்கும்படியும் வேதம் நமக்கு போதிக்கின்றது. அப்படிப்பட்ட சோதனைகளின்போது, நம்மையும் நம்மேல் இருக்கும் தேவ ஆவியையும் நாம் காத்துக்கொள்ள வேண்டும்.

**4. உங்களது விசுவாசத்தில் உறுதியாயிருத்தல்:**

ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களும் செவி கொடுத்து விசுவாசத்தை விட்டு விலகிப் போவார்கள் *(1 தீமோ. 4:1)*.

இங்கே சொல்லப்பட்டிருக்கும் வசனத்தில் விசுவாசத்தை விட்டு விலகிப்போவது என்னும் வார்த்தை பின்மாற்றத்தைக் குறிக்கும் அபாய வார்த்தை. விசுவாசத்தை விட்டு விலகுவது என்பது திடீரென்றோ, ஒரே நாளிலோ நடப்பதல்ல, இது மழையில் கரையும் மண்சுவர்போல் மெல்ல மெல்ல நடக்கும் மாற்றமாகும். இந்த விசுவாச மாற்றம் எப்படி நடக்கிறது? விசுவாசி என்று அழைக்கப்படும் ஒருவர் துர் உபதேசக் கூட்டத்தோடு சேர்ந்து பழகி, அதிகம் உறவாடி, ஐக்கியம் வைத்துக்கொள்ளும்போது, விசுவாசியின் உண்மையான விசுவாசம் குறைந்து, துர்வசனத்தின் மேல் நாட்டம் வரும். அப்பொழுதிலிருந்தே விசுவாசம் மங்கி மறையத் துவங்கும்.

எந்த ஒரு மனிதனின் விசுவாசம் மெல்ல குறைந்து கொண்டு வருகிறதோ, அவன் விசுவாசத்தில் நிற்பது கடினம், நமக்குள்ளிருக்கும் விசுவாசத்தை வைத்தே நமது விசுவாசச் செயலும் நிர்ணயிக்கப்படுகிறது. விசுவாசம் குறையும்போது, தேவனிடம் ஜெபிக்க முடியாது, விசுவாசிகள் ஐக்கியம் அதிகம் ருசிக்காது. வேத வசன நம்பிக்கை மங்கும், ஆவிக்குரிய வாழ்வு வெறுப்பாகி விடும். இந்த நேரத்தில் துர் உபதேசக் கூட்டத்தார் இப்படிப்பட்ட ஆத்துமாக்களை இழுத்துக் கொள்வார்கள். எனவே ஒவ்வொரு விசுவாசியும் தனது விசுவாசத்தை காத்துக் கொள்ளுதல் அவசியம்.

**5. இயேசுவை அறிக்கையிடுங்கள்:-**

மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கைபண்ணுகிற எந்த ஆவியும் தேவனால் உண்டாயிருக்கிறது. மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கை பண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல. வருமென்று நீங்கள் கேள்விப்பட்ட அந்திக் கிறிஸ்துவினுடைய ஆவி அதுவே. அது இப்பொழுது உலகத்தில் இருக்கிறது *(1 யோவான் 4:2-3)*. இயேசுவை அறிக்கையிடவேண்டும், இயேசு கிறிஸ்துவை அறிக்கைசெய்வதே கிறிஸ்தவனுக்கு அடையாளம். அவர் இயேசு என்ற இரட்சகர், கிறிஸ்து என்ற மேசியா, அவர் பாவிகளை மீட்கும் இரட்சகர், மீட்ட பாவிகளை அபிஷேகிக்கும் மேசியா.

நீங்கள் "என் நாமத்தினாலே" எதை கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக அதைச் செய்வேன். *(யோவான் 14:13)*

"என் நாமத்தினாலே" எதை கேட்டாலும் அதை நான் செய்வேன் *(யோவான் 14:14)*

"என் நாமத்தினாலே" பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார் *(யோவா. 14:26)*. அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை *(அப். 4:12)*.

கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய் *(ரோமர் 10:9)*.

இவ்வசனங்கள் இயேசு கிறிஸ்துவை அறிக்கை பண்ணுவதால் கிடைக்கும் இரட்சிப்பைக் குறிக்கிறது. வானத்தில் அநேக நாமங்கள் இருக்கின்றன. பூமியில் ஆயிரக்கணக்கில் துறவிகளும், யோகிகளும், மதத்தலைவர்களும் இருக்கின்றனர். இவர்கள் எல்லாருடைய நாமத்திற்கும் மேலான நாமம் இயேசுவின் நாமம். மனிதன் இரட்சிப்படைய இவரின் நாமத்தை அறிக்கையிட்டால் போதும். இரண்டு பேராவது மூன்று பேராவது "என் நாமத்தினாலே" எங்கே கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்கள் நடுவில் இருக்கிறேன் *(மத்தேயு 18:20)*.

ஜெபம் செய்வதாயிருந்தாலும், பிரசங்கமானாலும், சபைக் கூடுகையாயிருந்தாலும், வெளி ஊழியம் செய்வதாயிருந்தாலும் இயேசு கிறிஸ்து என்னும் திருநாமத்தை அறிக்கையிட்டு செய்ய வேண்டும். இயேசுவின் நாமம் சொல்லப்படாத எந்தக் காரியமானாலும் அது கிறிஸ்தவத்திற்கு சொந்தமானது கிடையாது. அப்படி அறிக்கைபண்ணாத எந்தச் செயலும் வேதத்திற்குப் புறம்பானது. துர்உபதேச இயக்கத்தைச் சேர்ந்த அனைவரும் இவைகளுக்கு எதிரானவர்கள். அவர்கள் இயேசுவின் நாமத்தை அறிக்கை செய்வதில்லை. "அவரின் நாமத்தினால் ஜெபிப்பதும், இரட்சிக்கப்படுவதும், சபை கூடி வருவதும், பிசாசுகளைத் துரத்துவதும், ஊழியம் செய்வதும் கிடையாது. எனவே அவர்கள் கள்ள உபதேசிகள் என்றும், கள்ளப்போதகர்கள் என்றும், கள்ளத்தீர்க்கர்கள் என்றும் அழைக்கப்படுகின்றனர். அப்படிப்பட்டோர் அந்திக்கிறிஸ்துவைச் சேர்ந்தவர்கள். எனவே கிறிஸ்தவர்கள் எவரும் இயேசு என்னும் திருநாமத்தை எப்போதும் அறிக்கை செய்கிறவர்களாக இருக்க வேண்டும். எங்கும், எதிலும் எனதச் செய்தாலும் அவர் நாமத்திலேயே செய்ய வேண்டும். இது அதிக முக்கியம்.

**<u>6. துர்உபதேசங்களுக்கு துணிச்சலான எதிர்ப்பு தெரிவியுங்கள்:</u>**

விசுவாசத்திலே ஆரோக்கியமுள்ளவர்களாயிருக்கும்படி நீ அவர்களைக் கண்டிப்பாய் கடிந்து கொள் *(தீத்து 1:4)*

"பிரியமானவர்களே, பொதுவான இரட்சிப்பைக் குறித்து உங்களுக்கு எழுதும்படி நான் மிகவும் கருத்துள்ளவனாயிருக்கையில், பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய் போராட வேண்டுமென்று உங்களுக்கு எழுதி உணர்த்துவது எனக்கு அவசியமாய்க் கண்டது *(யூதா 3)*.

உங்கள் விசுவாசத்தைக் காத்துக் கொள்ள நீங்கள் போராட வேண்டும். போராட்டம் என்று இங்கு சொல்லப்படுவது, உங்களை நாடி வரும் துர்உபதேச இயக்கத்துக் கொள்கைகளை துணிச்சலாக எதிர்த்து நிற்கும் தைரியத்தையே குறிக்கிறது.

இந்த எதிர்ப்பை வன்முறையினாலோ, சண்டையிட்டு வாதாடி போராடுவதினாலோ காட்ட வேண்டுவதில்லை. அப்படிக் காட்டுவது கிறிஸ்தவ ஒழுங்கும் அல்ல. கள்ள உபதேச மக்கள் உங்களை நாடி வந்து பேசும்போது, நீங்கள் அவர்களோடு முகங்கொடுத்து பேசக்கூடாது, அவர்களோடு கை குலுக்கவும் கூடாது. அந்த இயக்கத்தைச் சார்ந்தவர்கள் உங்களுக்குத் தரும் இலவசப் புத்தகங்களை வாங்கக் கூடாது. அப்படிப்பட்ட புத்தகங்களைப் படிக்கவும் கூடாது. அவர்களிடமிருந்து மாதப் பத்திரிக்கைகளோ, கைப்பிரதிகளோ கேட்காமலே உங்கள் வீட்டிற்கு வரும். நீங்கள் அறியாத அந்த புது இதழ் உங்களைக் கவர்ந்திழுக்க அலங்காரமாய் இருக்கும். அப்படிப்பட்ட தபால்களைத் தடுத்து திருப்பிவிடுங்கள். அதையும் மீறிவந்தால் அவைகளைப் பிரிக்காது எரித்து விடுங்கள். உங்கள் தேவைக்குப் பணம் கொடுத்தோ, உங்கள் ஊழியத்திற்குக் கடன் கொடுத்தோ உதவினால் அவர்களிடமிருந்து எந்த பண உதவியையும் பெறக்கூடாது. நீங்கள் பல விஷயங்களில் கள்ள உபதேசக் கூட்டத்தினருக்கு நேரடியான எதிர்ப்பு தெரிவிப்பது மிக அவசியமானது.

இந்த இயக்கத்தின் மக்கள் தாங்கள் செய்வது இன்னதென்று அறிந்தே செய்கிறார்கள். துணிகரத்தோடும், உதாசீனத்தோடும் செய்கிறார்கள். ஆகவே அவர்களை தேவன் தவிர மனிதர்களால் மாற்ற முடியாது. அவர்களைத் திருத்த முயற்சி செய்து நீங்கள் ஏன் கெட்டு விட வேண்டும்? பயிர்களுக்குத் தடையாய் இருக்கும் களைகளை தேவன் பிடுங்கிப்போட ஒரு நாளை வைத்திருக்கிறார். அந்நாள் வரை, களைகளை அவர் ஒன்றும் செய்யார். அவரின் நேரம் வரும்போது அவைகளைப் பிடுங்கி அக்கினியில் எறிவார். இயேசுவே கடவுள் என்று தெரியாத கோடான கோடி மக்கள் இன்னும் இரட்சிக்கப்படாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு நாம் ஊழியம் செய்து ஆத்துமாக்களை தேவ இராஜ்யத்தில் இணைக்க நேரத்தை செலவிடுவோம். இவ்வளவு பயங்கர கொடிய ஓநாய்களின் மத்தியில், ஒவ்வொரு விசுவாசியும் பயத்தோடும், கவனத்தோடும் தேவனைப் பின்பற்ற வேண்டும். ஜெபத்தோடும் வேத வசனத்தோடும் பரிசுத்தாவியின் துணையோடும் அனுதினமும் வளர வேண்டும். அவரவர் ஆத்துமாவுக்கு அவரவரே பொறுப்பு, உங்கள் ஆத்துமாவை நீங்கள்தான் காத்துக்கொள்ள வேண்டும். ஆகவே எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக் கொள் (நீதி. 4:23).

கர்த்தர் உன்னைக் காக்கிறவர். கர்த்தர் உன் வலது பக்கத்திலே உனக்கு நிழலாயிருக்கிறவர். கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார். அவர் உன் ஆத்துமாவைக் காப்பார் (சங். 121:5, 7).

## 7. Equipe Yourself - உங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்:

அதிகமாக வசனத்தை வாசிக்க வேண்டும், தியானிக்க வேண்டும், அதை ஆராய வேண்டியது அவசியமாக இருக்கிறது

Read the Scripure, Meditate the Scripure, and Research the Scripure.

'நீ தேறுகிறது யாவருக்கும் விளங்கும்படி', என்று பவுல் சொல்லுகிறது போல, ஒவ்வொரு நாளும் நாம் வசனத்திலே தேறிக் கொண்டே இருக்க வேண்டும். அது எல்லாருக்கும் தெரிய வேண்டும். அதிகமாக தேவனோடு கூட, அவர் வார்த்தையோடு கூட நம் நேரங்களை அதிகமாக செலவிட வேண்டியது அவசியமாக இருக்கிறது.

**8. தீமோ 2:1 Speak sound Doctrine - ஆரோக்கியமான உபதேசம் பேசு:**

நாம் ஆரோக்கியமான உபதேசம் பேச அழைக்கப்பட்டிருக்கிறோம் 2 தீமோ. 2:1 "ஆதலால் என், குமாரனே, நீ கிறிஸ்து இயேசுவிலுள்ள கிருபையில் பலப்படு" எனவே வசனத்தை, ஆரோக்கியமான உபதேசத்தை பேச நாம் எப்போதும் ஆயத்தமாக இருக்க வேண்டும்.

**9. Separate Yourelf : உங்களை அவர்களிடமிருந்து ஒதுக்கிக் கொள்ளுங்கள்:**

**10. Don't encourage them:** இவர்களை ஊக்கப்படுத்த வேண்டாம். அவர்களோடு பேசி காரியங்களை விளக்க வேண்டாம். அவர்கள் தெரிந்தே தான் செய்கிறார்கள், அவர்கள் துணிகரமாக இதை செய்து கொண்டு இருக்கிறார்கள். இவர்களுக்கு நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். எல்லா காவலோடும் இருதயத்தை காத்துக்கொள்ள வேண்டியது அவசியம். இந்த தவறான உபதேசங்களை நீங்கள் கற்றுக் கொண்டு தெரிந்து கொள்வது என்னவென்றால், இந்த வகையான கூட்டத்தாரையெல்லாம் நீங்கள் பார்க்கும்பொழுது அவர்களிடமிருந்து உங்களையும், உங்கள் சபையையும், உங்கள் ஊழியங்களையும் நீங்கள் காத்துக்கொள்ள வேண்டியது அவசியமாயிருக்கிறது. வேதத்தில் நிலைத்திருந்து, விசுவாசத்தில் நிலைத்திருந்து, பரிசுத்த ஆவிக்குள் எப்பொழுதும் ஜெபித்து, ஆவியானவரை எப்பொழுதும் சார்ந்திருந்து, நாம் போகும்பொழுது நம்முடைய சபை, குடும்பம், தனிப்பட்ட வாழ்க்கை, ஊழியங்கள் இவைகள் எல்லாமே இவ்விதமான ஓநாய்களிடமிருந்து நாம் விலகி தேவனுக்காய் உண்மையாய் விசுவாசத்திலே வளர்வதை உறுதி செய்யும்.

எனவே பிரியமானவர்களே, உங்களை நீங்களே காத்துக்கொள்ள வேண்டியது அவசியமாக இருக்கிறது. இந்த பாடங்கள் உங்களுக்கு மிகவும் பிரயோஜனமாயிருந்திருக்கும். நீங்கள் இப்படியெல்லாம் செய்யும்போது, கர்த்தர் உங்களுக்கு தேவையான கிருபைகளையும், உங்களுக்கு தேவையான பெலனையும், ஆவிகளை பகுத்தறியக்கூடிய கிருபைகளையும் அதிகமாக அவர் நிச்சயம் தந்தருளுவார். இந்த உபதேங்களை எல்லாம் நீங்கள் கற்றுக் கொண்டாலும், உங்கள் வாழ்க்கையிலும் எப்போதும் நீங்கள் ஆவியானவரை சார்ந்து வேதத்தின் வெளிச்சத்தோடு கூட ஒவ்வொரு வசனத்தை பிரசங்கிக்கும்பொழுதும், ஒவ்வொரு பிரசங்கத்தை நீங்கள் செய்யும்பொழுது, ஒரு சில சத்தியங்களை நீங்கள் பேசும்பொழுதும் கூட, முழு வேத வெளிச்சத்தோடு கூட நீங்கள் காரியங்களை பேசுங்கள். அதற்குத்தான் நாம் வேதாகம கல்லூரிகளை வைத்திருக்கிறோம். தவறான உபதேசம் வந்துவிடக் கூடாது. சத்தியத்தை

சத்தியமாகவே போதிக்க வேண்டும் என்பதை வெளிப்படுத்துவதற்காகத்தான் இப்படிப்பட்ட ஊழியத்தை நாங்கள் செய்து கொண்டு இருக்கிறோம்.

எனவே நீங்கள் இங்கு படிப்பது, தேவனுக்குள்ளே உங்களை காத்துக் கொள்ளவும், உங்கள் ஊழியம் தேவனுக்குள்ளிருந்து தேவனுடைய சித்தத்தின்படி போகவும் அது உங்களுக்கு உதவியாய் இருக்கும். பிரியமானவர்களே நீங்கள் அதை செய்யும்பொழுது, நீங்கள் இவ்விதமான கூட்டத்தாருக்கு விலகிக் கொள்ளுவீர்கள். உங்களை நீங்கள் காத்துக்கொள்வீர்கள். உங்களுக்குள் இருக்கிற ஆவியானவரை நீங்கள் வெளிப்படுத்த ஆரம்பிப்பீர்கள். உங்கள் ஊழியமும் தேவனுக்கு பிரியமானதாய், தேவன் எதைச்செய்ய விரும்புகிறாரோ, வசனம் எதை அடிப்படையாக வைத்து பேசுகிறதோ, அதையே நீங்களும் பேசுங்கள்.

தேவன் தாமே உங்கள் ஒவ்வொருவருக்கும் கிருபைகளையும் பெலனையும் தந்து உங்களை நடத்துவாராக! உங்களுக்காக நாங்களும் ஜெபிப்போம், நீங்களும் ஜெபித்து ஆவியானவரை சார்ந்து, உங்கள் ஒவ்வொரு காரியங்களையும் போதனைகளையும் வேத வசனத்தையே ஆதாரமாக வைத்து, நாம் பாடங்களிலே கற்றுக்கொண்டதுபோல் வசனத்தை விளக்குவது வசனம் தான் (Scripture interpret the Scripture). எனவே எல்லா வசனத்தையும் ஆராயுங்கள், அதனால் உங்களுக்கு ஜீவன் உண்டாகும். கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயதுமுதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும்.

"வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படி,

அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது *(2 தீமோ. 3:15-17).*

எனவே தேவ ஆவியானால் அருளப்பட்ட இந்த வேத வாக்கியங்கள் உங்களுடைய உபதேசங்களுக்கு பிரயோஜனமுள்ளதாய் காணப்படும். கர்த்தர் தாமே உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பராக! ஆமென்!!

**<u>கேள்விகள்:</u>**

1) வேதாகமம் கிருபையை குறித்து போதிக்கின்றவைகளை சற்று விளக்கமாக கூறுக.

2) Hyper Grace உபதேசகாரர்களின் முக்கியமான 6 தவறான உபதேசங்களையும் அதற்கான வேதாகம பதில்களையும் விளக்கமாக கூறுக.

3) Hyper Grace உபதேசகாரர்களை நாம் எப்படி அடையாளம் கண்டு கொள்ள முடியும் என்பதனை குறித்து சற்று விளக்கமாக கூறுக?

4) தவறான உபதேசகாரர்களுக்கும் அவர்களின் உபதேசங்களுக்கும் நாம் நம்மை காத்து கொள்வதற்கு செய்ய வேண்டிய முக்கியமான கடமைகளை வரிசைப்படுத்தி விளக்கமாக கூறுக.